# தேவ ஜெயம்



- அரசகேசரி விநாயகர் தேவஸ்தானம்
நீர்வேலி

நீர்வை

சாம்பசதாசிவ

சோமதேவ சிவாச்சாரியார் - ஜெயந்தி

தம்பதியரின்

## மணிவிழா மலர்

## ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி வைபவம்

# மணிவிழா

நீர்வேலி

அருள்மிகு ஸ்ரீ அரசகேசரிப்பிள்ளையார் கோயில்

ஸ்தானீக சிவாச்சாரியார்

சிவாகமசாகரம், பிரதிஷ்டாசாகரம்

ஆகமகலாசூரி, சிவாகமகிரியா ஞானபானு

கிரியாஞான வித்தகர், பிரதிஷ்டா கிரியா வித்தகர், சிவாகமரத்னா

சிவஸ்ரீ

## சா. சோமதேவ சிவாச்சாரியார்

ஜெயந்தி தம்பதிகளின்

## 60ஆவது

## அகவை பூர்த்தி விழா - 2015

அரச கேசரிப் பிள்ளையார் கோயில் மூலவர்





விழா நாயகரின் பெற்றோர்

## விழா நாயகரின் குருமார்கள்











அஞ்ஞானத்தினால் குருடாயிருந்த கண்களை ஞானமெனும் மைதீட்டிய சலாகை கொண்டு திறந்து வைத்த குருவை நமஸ்கரிக்கின்றேன்.



மணிவிழாத் தம்பதிகள்

# பொருளடக்கம்

## ஆசியுரைகள்


| | | | |
|---|---|---|---|
| 1. | நகுலேஸ்வரக் குருக்கள் | – | 7 |
| 2. | சந்திரசேகரக் குருக்கள் | – | 8 |
| 3. | வித்யானந்த சிவாச்சாரியார் | – | 9 |
| 4. | சோமாஸ்கந்தக் குருக்கள் | – | 10 |
| 5. | மஹாதேவக் குருக்கள் | – | 12 |
| 6. | கோபால கிருஷ்ணஐயர் | – | 13 |
| 7. | தியாகராஜக் குருக்கள் | – | 15 |
| 8. | தியாகராஜ ஐயர் | – | 16 |
| 9. | கெங்காதரக் குருக்கள் | – | 17 |
| 10. | குமாரசதாசிவசர்மா | – | 18 |
| 11. | ஜெகதீஸ்வரக் குருக்கள் | – | 19 |
| 12. | ஜெ. நாகராஜக்குருக்கள் | – | 20 |
| 13. | சோமசுந்தரக்குருக்கள் | – | 21 |
| 14. | சி.சிவசரவணபவன் | – | 22 |
| 15. | சர்வேஸ்வரக் குருக்கள் | – | 23 |
| 16. | சிவானந்தசர்மா | – | 24 |


## வாழ்த்துரைகள்


| | | | |
|---|---|---|---|
| 17. | து.ஷ.இரத்தின சபாபதிக்குருக்கள் | – | 25 |
| 18. | இ. சுவாமிநாதக் குருக்கள் | – | 26 |
| 19. | சபா.வாஸுதேவக்குருக்கள் | – | 27 |
| 20. | ஸ்ரீவத்ஸாங்கக்குருக்கள் | – | 28 |
| 21. | பிரதேச செயலர் – கோப்பாய் | – | 29 |
| 22. | த.ந. பஞ்சாட்சரம் | – | 30 |
| 23. | ஆறு.திருமுருகன் | – | 31 |
| 24. | G.S. சண்முகவடிவேல் | – | 32 |
| 25. | G.S.. தயாபரன் | – | 33 |
| 26. | குமாரசுவாமி ஐயர் | – | 34 |

27. சிவசீலன் – 35
28. சரஸ்வதி நடேசன் – 37
29. சிவசுப்பிரமணியச் செட்டியார் – 38
30. க.தர்மலிங்கம் – 39
31. அரசகேசரிப்பிள்ளையார் பரிபாலன சபை – 40
32. சிறுப்பிட்டி ஞானவைரவர் பரிபாலன சபை – 41
33. நெல்லியடி விநாயகர் பரிபாலன சபை – 42
34. எள்ளுமுள்ளுக்கட்டை வைரவர் பரிபாலன சபை – 43
35. நீர்வேலி செல்லக் கதிர்காம பரிபாலன சபை – 44
36. பராசக்தி காளியம்பாள் பரிபாலன சபை – 45
37. நீர்வேலி மத்தி பூவரசடி வைரவர் பரிபாலன சபை – 46
38. மாலை வைரவர் ஆலய பரிபாலன சபை – 47
39. மாணிக்கப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபை – 48
40. முழக்கம்பிட்டி நாச்சிமார் ஆலய பரிபாலன சபை – 49
41. லலீசனின் நல்வாழ்த்துப்பா – 50
42. இளைஞர் சமூகத்தினர் – 51

### பதிவியல்

விழா நாயகர் குறித்தும் அவர்தம் மூதாதையர் குறித்தும் அவர்கள் பூஜித்த அரசகேசரிப் பிள்ளையார் கோவில் குறித்ததுமான விடயங்களின் தொகுப்பு

43. கும்பாபிஷேக விஞ்ஞாபனம் (1932) – 53
44. Arasakesari pillaiyar Temple, Neervely - 54
45. அரசகேசரி பிள்ளையார் ஆலய வரலாறு – 58
46. குருபரம்பரை – நடனசபாபதிசர்மா – 61
47. குருபரம்பரை வம்சாவழி – 66

### இறையியல்

கட்டுரையாசிரியர்களின் இறையியல் ஆன்மீகம் சார் கட்டுரைகளின் தொகுப்பு இயல்

48. கிரியையென மருவுமவை யாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்
– பேராசிரியர் கலாநிதி கோபாலகிருஷ்ணஐயர் – 67
49. சிவதீட்சை – தேசமான்ய பண்டிதர் கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் – 74

### ⅄ பொதுவியல்

கொழும்பு பிரம்மஸ்ரீ சிவசுப்பிரமணிய சர்மா (மகேஷ் அண்ணா) தொகுத்தளித்த அறிவியல், ஆன்மீகச் சார்புடைய கட்டுரைகளின் தொகுப்பியல்


| | | |
|---|---|---|
| 50. விநாயகர் தத்துவம் | – | 78 |
| 51. வியாகரண மண்டபம் | – | 88 |
| 52. வேதம் என்றால் என்ன? | – | 97 |
| 53. ஆலயமும் அர்ச்சகர்களும் | – | 101 |
| 54. அர்ச்சனையின் பெருமை | – | 105 |
| 55. எந்தெந்த யாகத்தால் என்ன பலன் கிடைக்கும்? | – | 107 |
| 56. ஆன்மீக உணர்வு என்றால் என்ன? | – | 108 |
| 57. எது பிரம்மஞானம்? | – | 111 |
| 58. உட்சபட்ஷ பரிகாரம் | – | 114 |
| 59. கும்பாபிஷேக வகைகள் | – | 118 |
| 60. சிவபெருமானின் அங்கங்களும் விளக்கங்களும் | – | 121 |
| 61. சாஸ்திரம் என்ன சொல்கிறது? | – | 123 |
| 62. கதிர்காமப் பண்பாடு – ஒரு காட்சி – நீர்வை தி. மயூரகிரி சர்மா | – | 125 |
| 63. உளவியல் – திருமதி மேனகா சிவாஸ்கரன் விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம் | – | 129 |
| 64. அவைதீக மதங்களில் விநாயகர் வழிபாடு – செல்வி சிவானதி செல்வநாயகம் B.A(Hons) | - | 132 |

# முன்னுரை

## வாழ்க அந்தணர்!

உலகின் உயர்வையே
வாழ்வின் நோக்கமாய் கொண்டது
அந்தணர் குலம்,
"லோகா சமஸ்தா சுகினோ பவந்து" என
உலகின் நலத்திற்காய்.
ஒவ்வொரு நாளும் இறைவனைத் தொழுது.
எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகுவதால்
அந்தணர் அறவோர் எனப்பட்டனர்.

இத்தகு ஏற்றம் கொண்ட அந்தணர் குல விருட்ச வேர்கள்
நம் ஈழ யாழகத்தும் விரவி ஏற்றமுற்று.
நிலைத்து நிமிர்ந்தன
அவர் தம் தொண்டின் தூய்மை பெரியது
ஒழுக்கமே உயிராய் கொண்ட
அவ்வந்தணர் மரபு சிறக்கவும்
வேதநெறி தழைத்தோங்கவும்
மிகுசைவத்துறை விளங்கவும்
தோன்றிய தூயரே நம் வணக்கத்திற்குரிய
பிரம்மஸ்ரீ சாம்பசதாசிவ சோமதேவக் குருக்கள்
இந்நல்லாரைத் தந்து நீர்வையூர் பெருமை பெற்றது

இவ்வற்புதத்திற்கு அகவை அறுபதாம்,
யார்தான் உள்ளம் களியார்.
அன்பினால் ஆட்பட்ட நெஞ்சமெல்லாம்.
அவர் அடி வணங்கி.
மண்மகிழ மணிவிழா எடுக்கின்றன.
அவ்வரிய விழா நோக்கி இம்மலரை வெளியிடுகின்றோம்.
ஜெய கோஷம் முழங்கும் அவாவாலும்
குருக்கள் தம் துணைவியார் நாமம்
ஜெயந்தி அம்மாள்
என்று ஆனதாலும். உண்மையானதாலும்.
இம்மலருக்கு

"தேவஜெயம்" என்று பெயரிட்டோம்
பெயர்ப்பொருத்தமும் அமைந்து பெருமகிழ்வூட்டிற்று
இம்மலரினை உங்கள் கை தந்து பணிகிறோம்.
பயன் கொள்க

"தேவ ஜெயம்" மலர் ஆக்கத்தில்
துணை நின்ற உள்ளங்கள்
பிரம்மஸ்ரீ சு. சிவராம கிருஷ்ண சர்மா (மகேஷ் மாமா)
பிரம்மஸ்ரீ தி. மயூரகிரிசர்மா
என்போர்க்கும்
குறுகிய காலத்தில் கோலமுற சுந்தரமாய்
பதிப்புச் செய்த அன்றா பதிப்பகத்தார்க்கும்
ஆக்கங்களும் வாழ்த்துக்களும் தந்த
அன்பு செய் பெரியோருக்கும். ஆலய பரிபாலகர்க்கும்
நன்றி சொல்லி எங்கள்
நமஸ்காரங்களை சமர்ப்பிக்கிறோம்
இன்பமே எந்நாளும்
துன்பம் இல்லை

*விழாக்குழுவினர்,*
*உறவினர்.*

# ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி வைபவ வாழ்த்துக்கள்

சிவஸ்ரீ சாம்பசதாசிவ சோமதேவ சிவாச்சாரியார் அவர்கள்

மாத்ரு தேவே பவ. பிதுர்தேவே பவ. குருவே தேவே பவ, என்ற வேதவாக்கியத்திற்கமையவும் அவர்களின் முன்னோர்களால் கையளிக்கப்பட்ட பரம்பொருளான ஆத்மார்த்த பூஜையில் உள்ள சுவாமிகளை ஸ்ரீ சிவாச்சார்யார் அவர்கள் இன்றும் பூஜை செய்து நித்திய அனுக்கிரகம் பூரணமாக பெற்று நடைபெறுகின்ற விழாவில் அவர்களே சிறப்பித்து அவர்களின் ஆசிகளை பெற்றால் எல்லோருக்கும் ஷேமம் உண்டாகும் என்பதில் ஐயமில்லை. சிவாச்சார்யார் தம்பதிகளின் புத்திரர்கள், புத்திரிகள் பேரப்பிள்ளைகள் எல்லோருமாக முன்னின்று இதனை நடத்துகிறார்கள். அவர்களுக்கும் சிவாச்சார்யார் அவர்களின் ஆசிகள். கிடைக்கப்பெற்று சகல செல்வங்களோடு வாழ வேண்டும் என்றும் தம்பதிகளுக்கு சதாபிஷேகம். சந்திரதரிசனம் போன்ற வைபவங்கள் நடைபெற இறைவனை பிரார்த்தித்து ஆசிகளோடு வாழ்த்துகின்றேன்.

**மஹா ராஜராஜ ஸ்ரீ நகுலேஸ்வரக்குருக்கள்**
**ஸ்ரீ நகுலாம்பிகா சமேத**
**நகுலேஸ்வரர் தேவஸ்தான**
**கீரிமலை.**

# ஆசியுரை

அருள்மிகு அரசகேசரி விநாயகர் தேவஸ்தான பாரம்பரிய சிவாச்சார்யராகவும் முதன்மை அர்ச்சகராகவும் விளங்குகின்ற பாரத்துவாஜகோத்ரம். ஆபஸ்தம்ப சூத்திரத்தில் வந்த பெருமதிப்புக்குரிய பிரம்ம ஸ்ரீ சாம்பசதாசிவக்குருக்கள் சோம தேவக் குருக்கள் தம்பதிகளுக்கு ஷஷ்டி அப்தபூர்த்தி விழா தெய்வானுக்கிரஹத்துடன் நடப்பதை இட்டு மகிழ்வடைகின்றேன்.

பெறுதற்கரியது மானிடப்பிறவி அதிலும் அந்தணர் குலத்தில் ஆண்மகவாகப் பிறப்பது பெரும் புண்ணியம். இதன் மகிமையை உணர்ந்து வாழ்வது முக்கியமானது. இவ்வாழ்வில் அவர்கள் செய்யும் அவர்களால் உண்டாகும் ஜீவனைப்பாதிக்கும் அதற்காக ஒரு ஜீவன் யாருடைய கர்ப்பத்தில் வாசம் பண்ணுகிறதோ. எந்த பிதாவால் உண்டாகின்றதோ அவர் அவர்களுடைய தோஷங்கள் அந்த ஜீவனுக்கு ஏற்படாமல் இருக்க ஸம்ஸ்காரங்கள் செய்யும்படி வைதிக ஸாஸ்திரங்களில் சொல்லப்பட்டுள்ளது.

பாவங்களைப் போக்கவும். கர்ப்பதோஷங்களைப் போக்கவும் புனிதப்படுத்தவும் செய்யும் வைதிக கிரியைகள் ஸம்ஸ்காரம் என்னும் பெயரால் வழங்கப்படுகின்றது. ஓர் ஆன்மாவுக்கு கர்ப்பத்திலிருந்து நாற்பது ஸம்ஸ்காரங்கள் சொல்லப்படுகின்றன. அதில் ஷஷ்டி அப்தபூர்த்தியும் ஒரு ஸம்ஸகாரம் ஒரு ஆன்மா பிறவியெடுத்து அந்த வருடத்தில் இருந்து அறுபதாவது ஆண்டில் அவரின் ஜென்ம நட்ஷத்திரம் வருந்தினத்தன்று ஷஷ்டி அப்தபூர்த்தி சாந்தி நடத்த ஸாஸ்திரங்களில் சொல்லப்பட்டுள்ளது. அவ்வேளையில் இவருடைய இராசி சக்கரம் சுழற்சி முறையில் திரும்பி வரும் பொழுது இதனை ஒரு மறுவாழ்வாக கருதலாம். இந்நாளில் முதல் தினமே மிருத்திஞ்ஜய பரமேஸ்வரர் முதலாக நூற்றி இருபத்தைந்து தேவர்களுக்கு கும்பங்கள் ஸ்தாபித்து பூஜைகள். ஜெபங்கள் செய்து மறுநாள் அதிகாலையில் திரும்ப பூஜைகள் செய்து எல்லா தேவதைகளுக்கும் அவ்வவ் திரவியங்களால் வேத மந்திரங்கள் சொன்ன கணக்கு சங்கியைப் படிசெய்து நிவேதன பூஜை, பிரதட்சண நமஸ்காரங்கள் செய்து பின்பு தேவர்களை யதாஸ்தானப்படுத்தி கும்ப புனித நீரால் தம்பதிகளுக்கு அபிஷேகஞ் செய்வது கிரமமாக சொல்லப்பட்டுள்ளது.

பின்பு ஆகுதிகள் செய்து விப்ரர்களை திருப்தி செய்து சுபலக்னத்தில் திருமாங்கல்யதாரணம் செய்து. தம்பதிபூஜைகளும் செய்வது சம்பிரதாயமாக நடக்கின்றது. பின்பு ஆசீர்வாதம் ஆரத்தி. மணி விழா தம்பதிகளின் புத்திர பௌத்திரர்கள். வயதுகுறைந்தோர் மணிவிழா தம்பதிகளிடம் ஆசீர்வாதம் பெற்றவுடன் போஜன உபசாரம் நடைபெறும்.

இப்படியான ஒரு ஷஷ்டி அப்தபூர்த்தி விழாவைக் காணும் சிரஞ்ஜீவி சோம தேவக்குருக்களையும் அவர் தர்மபத்தினி சௌபாக்கியவதி ஜெயந்தியையும் மனப்பூர்வமாக தீர்க்க ஆயுளுடன் பீமரத சாந்தி. சதாபிஷேகங் கண்டு களிக்க எல்லாம் வல்ல அரசகேசரி விநாயகரைப் பிரார்த்தித்து ஆசீர் வதிக்கின்றோம்.

ஆ.சந்திரசேகரக்குருக்கள் தம்பதிகள்
மூத்தவிநாயகர் தேவஸ்தானம், நீர்வேலி.

*யாழ்ப்பாணம், நீர்வேலி ஸ்ரீ அரசகேசரி விநாயகர் ஆலய சிவாச்சாரிய பாரம்பரிய வழித்தோன்றலும் அமரர் கார்த்திகேய ஐயர், தலைமைத்தமிழ்ப்பேராசிரியரின் பௌத்திரரும், அமரர் சிவஸ்ரீ ஸாம்பஸதாசிவக்குருக்கள் கௌரிஅம்மாதம்பதிகளின் த்விதீயபுத்திரரும் ஆகிய சிவஸ்ரீ ஸோமதேவக் குருக்களின் அறுபதாம் அகவை நிறைவு ஷஷ்டியப்தபூர்த்தி வைபவம் 2015 ஜனவரி 24ம் நாள் வழங்கும்*

# ஆசீர்வாத வாக்கியங்கள்.

அக்னிராயுஷ்மாந் ஸவநஸ்பதிபிராயுஷ்மாந் தேநத்வாயுஷா ஆயுஷ்மந்தங்கரோமி

ஸோமஆயுஷ்மாந் ஸஓஷதீபிராயுஷ்மாந் தேநத்வாயுஷா ஆயுஷ்மந்தங்கரோமி

யஜ்ஞஆயுஷ்மாந் ஸத்க்ஷிணாபிராயுஷ்மாந் தேநத்வாயுஷா ஆயுஷ்மந்தங்கரோமி

ப்ரஹ்மஆயுஷ்மதத்ப்ராஹ்மணைராயுஷ்மாந் தேநத்வாயுஷா ஆயுஷ்மந்தங்கரோமி

தேவா ஆயுஷ்மந்தஸ்ரம்ருதேநாயுஷ்மந்த்ஸ் தேநத்வாயுஷா ஆயுஷ்மந்தங்கரோமி

**ஜேர்மனியில் வாழும் வித்தியானந்த சர்மா (சிவாச்சார்யர்)**
**அவருடன் ஜேர்மனியில் நோய்வாய்ப்பட்டிருக்கும் தமையன் பாலசந்திர சர்மா**
**ஆசிகோருவோர் – மேற்படி தமையனாரின் குடும்பத்தவர்கள்**
**மாலினி + புத்திரரும் மனைவியும்**
**ஸ்ரீரீகரன் – வசுமதி.**

# நல்லாசியுரை

பார்க்குமிடமெங்கணும் நீக்கமற நிறைந்திருக்கும் தெய்வசக்தியை ஓர் விக்கிரகத்தில் அமைத்து அதற்கு ஓர் கோவில் கட்டி, காலங்காலமாகத் தமக்கும், தம்மைச் சுற்றி வாழ்கின்ற சகல ஜீவராசிகட்கும் வாழையடி வாழையாக அடுத்த தலைமுறைக்கும் அருள்பாலிக்க வேண்டுமென்றெண்ணியே நம்முன்னோர்கள் கோவில்கள் கட்டி வைத்தார்கள். வழிபாடுகள் செய்தார்கள். இத்தகைய கோவில் களில் நித்திய, நைமித்திய வழிபாடுகள் குறைவின்றி நடந்தால்தான் நம்மைச் சுற்றியுள்ள ஊரும், உலகும் சுபீட்சமடையும்.

வேதங்களையும், ஸ்மிருதிகளையும் ஆதாரமாகக் கொண்டு தார்மீகமான வாழ்வைச் செப்பனிட்டு மனித சமூகத்தினை ஓர் கட்டுப்பாட்டினுள் வைத்து அவர்களை நல்வழியில் ஒழுக ஆஸ்வலாயனர், போதாயனர், ஆபஸ்தம்பர் போன்ற மஹரிஷிகள் தொகுத்த தர்ம சூத்திரங்களும், க்ருஹ்ய, ச்ரௌத சூத்திரங்களும் பிரமாண நூல்களாக வளர்ந்தன. இந்த நூல்களின் வழியிலேயே பிராமண சமூகம் இன்றும் செயலாற்றி வருவதும் ஓர் தனிச் சிறப்பாகும். ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் எனும் ஆறு கர்மாக்களை பிராமணன் செய்ய வேண்டுமென வேதத்தில் விதிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறு பிராமணர்கள் செய்வதாலேயே இன்றும் இச்சமூகம் பல சவால்களுக்கு மத்தியிலும் தனித்து நின்று தத்தம் கடமைகளை ஆற்றிவர இறைவனது அனுக்கிரகமும் இவர்கட்கு அனுசரணையாக அமைந்திருக்கின்றது.

பிரம்மச்சரிய வாழ்வோடு பிராமணர்களது ஆச்சிரமசேவை ஆரம்பமாகிறது. அந்தந்த நிலை களில் அவர்கள் ஆற்றும் ஜபம், தவம், அக்னிகார்யம், அனுஷ்டானம் அனைத்தும் உலக மக்களது ஷேமங்களுக்காகவே அர்ப்பணமாகின்றது. சமுதாய நலனுக்காகவே வாழும் பிராமண சமுதாயம் வர்ணாச்சிரம ஒழுங்குகளது செயற்பாட்டுக்கே தம்மை அர்ப்பணிப்பதால் அவர்கள் அந்தணர்களாகப் போற்றப்பட்டு ஈற்றில் ஆச்சார்யர்களாக மதிக்கப்படுகின்றார்கள்.

இந்த வகையில் விக்கினங்களைத் தீர்க்கும் வேழமுகத்தவனாம் அரசகேசரி விநாயகனை சந்ததி சந்ததியாக முப்போதும் திருமேனி தீண்டும் பெரும் பேறு பெற்றவர் பாரத்வாஜ கோத்திர வழித்தோன்றல் சிவஸ்ரீ சோமதேவக் குருக்களாவர். தனது முன்னோர்களின் வழியிலேயே நின்று அரசகேசரி விநாயகனுக்கு பணி செய்வதே தன் கடமையெனத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

விநாயகப் பெருமானின் அருளினாலும், தமது பூர்வ புண்ணியத்தினாலும் இல்லற வாழ்வில் மக்கட் செல்வங்களெல்லாம் பெற்று சீரும் சிறப்புமாக வாழ்ந்து வருகின்றார். குருக்களுடைய பக்தி யையும், பூஜையையும் விநாயகப் பெருமான் ஏற்று அடியார்களுக்கெல்லாம் திருவருள் பாலிக்கின்றார்.

குருக்கள் ஐயா அவர்கள் இன்று தமது அறுபது வயதைப் பூர்த்தி செய்து ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி விழாவைக் கொண்டாடுகிறார். இந்தச் ஷஷ்டியப்த பூர்த்தி விழாவில் பல சாந்தி கர்மாக்கள்

இடம்பெறுகின்றன. இச் சாந்தி கர்மாக்களில் பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், சப்தசிரஞ்ஜீவிகள், திக்பாலகர்கள், சப்தரிஷிகள், சம்வத்சர தேவதைகள் நக்ஷத்திர தேவதைகள், மார்க்கண்டேயர், ஆயுள் தேவதை, நவக்கிரஹங்கள் எல்லாம் பூஜிக்கப் பெற்று அக்னியில் அவர்கட்கு நல்லாசிகள் வழங்கப்பெற்று ப்ரத்யக்ஷ தெய்வமாகிய சூரிய வழிபாடு, அஸ்வத்த வழிபாடுகளும் நடைபெற்று எல்லாத் தேவதைகளினதும் அனுக்கிரகங்களைப் பெறுகின்றார். பந்து மித்திரர்கள், புதல்வர்கள் முன்னிலையில் தசவிதமான மங்களத் திரவ்யங்களால் மங்கள ஸ்நானஞ் செய்து பூஜித்த கலசங்க ளினாலும் அபிஷேகிக்கப்படுகின்றார். புதல்வர்கள், சுற்றத்தவர்கள் சூழ தனது இல்லத்தரசிக்கு இரண் டாவது தடவையாக மாங்கல்ய தாரணமும் செய்து பல வகையான தானங்களையும் செய்து தனது பிறவிப்பயனை அடைகின்றார்.

விழா நாயகர் அவர்கள் தமது விழா ஞாபகார்த்தமாக தேவஜெயம் எனும் நூலினை எல்லோ ர்க்கும் பயன் பெறும் வண்ணம் வழங்க முன்வந்துள்ளார். இந்நூலினைக் கணினியிற் பதித்து உரு வாக்குபவர் சமஸ்கிருத நூற்பதிப்பாளர், எல்லோர்க்கும் பரிச்சயமான, கலாபூஷணம் சிவாநந்த சர்மா (கோப்பாய் சிவம்) ஆவர். அவருக்கு எமது பாராட்டுக்கள்.

ஷஷ்டியப்த பூர்த்தி விழாவைக் கொண்டாடும் சோமதேவ சர்மா தம்பதிகள், சுகதேகியாக மேன் மேலும் சிறப்புற்று வாழ்ந்து சதாபிஷேகமும், கனகாபிஷேகமும் செய்யப்பெற்று விநாயகப் பெருமா னுக்குத் தொடர்ந்தும் தொண்டாற்றி பாரினில் நீடூழி வாழ்கவென ஆனைமுகனைப் பணிந்து வாழ்த்துகின்றேன்.

ஷ.சோமாஸ்கந்த குரு
மயிலணி

# வாழ்த்துரை

நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோவில் பாரம்பர்ய பெருமைமிக்க தேவஸ்தானமாகும். தமக்கே உரித்தான பாரம்பரிய கிரியாமுறைகளை அதன் ஸ்தானிகசிவாசார்ய மகன் அனுஷ்டித்து வருகிறார்கள். இந்த ஆலயத்தின் முன்னைய சிவாசார்யர் சிவஸ்ரீ சாம்பசதாசிவக் குருக்களுடைய மகன் சோமதேவக் குருக்கள் தன்னுடைய 60 ஆண்டு வயது பூர்த்தியை ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி செய்து மாங்கல்யதாரணம் தானங்கள் முதலிய விசேசங்களை நடாத்தி இருக்கிறார். இவ்வைபவம் சிறப்புற நடைபெற இறைவன் திருவருள் கிடைக்க இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**சிவஸ்ரீ கா.மகாதேவக்குருக்கள்**
**அதிபர்,**
**தர்மசாஸ்தா குருகுலம்,**
**காயத்திரி பீடம்,**
**இணுவில்.**

# ஆசியுரை

யாழ்ப்பாணத்தில் நீர்வேலி எனும் ஊர் பல்வேறு சிறப்பம்சங்களுடன் கூடியது. சைவமும் தமிழும் காலங்காலமாக வளம் பெற்று இவ்வூருக்குப் பெருமை தந்து கொண்டிருக்கின்றன. சைவ நல்லறிஞர் நீர்வேலி சங்கர பண்டிதர், சிவப்பிரகாச பண்டிதர் போன்றோர் தமது அர்ப்பணிப்புமிக்க அரிய சமயப்பணிகளால் இவ்வூருக்குப் பெருமை தேடித்தந்துள்ளனர். இவ்வூரின் மத்திய நாடியாக விளங்குவது வரலாற்றுப்புகழ்மிக்க அரசகேசரி விநாயகர் ஆலயமாகும். இங்கு எழுந்தருளி அருள்பாலிக்கும் விநாயகப் பெருமான் மீது அடியார்கள் அளவற்ற பக்தி பூண்டவர்கள். விநாயகப் பெருமானின் திருவருளுக்குப் பாத்திரராகி மக்கள் நற்பேறு பெற்று வருகின்றமை ஒரு சிறப்பம்சமாகும். இவ்வாலயத்தைச் சிறந்ததொரு குருபாரம்பரியத்தைச் சார்ந்த சிவாச்சாரியர்கள் நன்கு பரிபாலித்து வருகின்றமை குறிப்பிடற்பாலது. ஆலய அறங்காவற் சபையினரும் ஆலயத்தை நன்கு நிர்வகித்து வருகின்றமையினால் இக்குருபாரம்பரியம் இவ்வாலயத்தில் சிறப்புப் பெற்று வருகின்றது. இத்தகைய சிறப்புமிக்க இவ்வாலயத்தில் ஸ்தானீக சிவாச்சாரியராக விளங்கும் பாரத்துவாஜ கோத்ரத்திற்குரிய சிவஸ்ரீ சாம்பசதாசிவ சோமதேவ சிவாச்சாரியருக்கு ஷஷ்டியப்த பூர்த்தி வைபவம் விநாயகப் பெருமானின் திருவருளால் 24.01.2015ஆம் நாளன்று நடைபெறவிருப்பது அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றோம். மணிவிழா தம்பதியர்க்கு எமது சார்பிலும் அவர்களது அன்பிற்கும் அபிமானத்திற்குமுரிய நீர்வேலி தி. நடனசபாபதி சர்மா குடும்பத்தினர் சார்பிலும் உளமார்ந்த நல்லாசிகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

சிவஸ்ரீ சோமதேவ சிவாச்சாரியார் சிறந்ததொரு சிவாச்சாரிய பாரம்பரியத்தைச் சேர்ந்தவர். இவ்வூரைச் சேர்ந்தவரும் தற்பொழுது பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்து வருபவரும் எமது மாமனாருமாகிய பிரம்மஸ்ரீ தி. நடன சபாபதி சர்மா அவர்கள் மணிவிழா நாயகரது தந்தையாரின் விழா மலரொன்றில் எழுதிய "பிரம்மஸ்ரீ சாம்பசதாசிவக் குருக்கள் அவர்களின் குரு பரம்பரை" என்ற கட்டுரையில் அவர் தென்னிந்தியாவில் திருவுத்தர கோச மங்கை எனும் தலத்தோடு தொடர்புடைய குருபரம்பரையைச் சேர்ந்தவரெனக் குறிப்பிட்டுள்ளார். மங்களேசுவரக் குருக்கள் அவர்களே சிவஸ்ரீ சாம்பசதாசிவக் குருக்களின் முற்சந்ததியினரில் முதன்முதல் இந்நாட்டிற்கு வந்தவராவர் என்பது குறிப்பிடற்பாலது. மங்களேசுவரக் குருக்களின் ஐந்தாவது சந்ததிகளில் வந்த சுப்பிரமணியக் குருக்கள் என்பவரது ஐந்தாவது சந்ததியைச் சேர்ந்தவரே சிவஸ்ரீ சாம்பசதாசிவக் குருக்களின் தந்தையாரும் கோப்பாய் நாவலர் பாடசாலையில் அதிபராகப் பணியாற்றியவருமாகிய பிரம்மஸ்ரீ சுப்பிரமணியக் குருக்கள் கார்த்திகேய ஐயர் அவர்களாவர். இத்தகைய சிறந்த குருபாரம்பரியத்திற்குரியவரே மணிவிழா காணும் சிவஸ்ரீ சோமதேவசிவாச்சாரியார் ஆவார். இவர் தமது குருமரபிற்கேற்ப சிறந்த பண்பாளர். அமைதியான சுபாவமிக்கவர். எவருடனும் அன்புடனும் இனிமையாகவும் பேசிப்பழகும் வகையால் அனைவரது அன்பிற்கும் அபிமானத்திற்கும் உரியவர். வரலாற்றுப் புகழ்மிக்க நீர்வேலி அரசகேசரி விநாயகர் ஆலயத்தில் தமது தந்தையார் சிவஸ்ரீ சாம்பசதாசிவ குருக்கள் வழியில் சிவப்பணியாற்றி வருபவர். சிவாச்சாரியப்பணியில் புலமைத்துவமும் அனுபவமும் கூடியவர். தமது பாடசாலைக்

கல்வியுடன் யாழ்ப்பாணத்தில் சமஸ்கிருத நல்லறிஞர் நியாயசிரோமணி பிரம்மஸ்ரீ கி.சுப்ரமண்ய சாஸ்திரிகளிடம் சமஸ்கிருதக் கல்வி மற்றும் சிவாச்சாரியப்பயிற்சி ஆகியவற்றைக் குருகுலமுறையில் கற்றுத் தேர்ந்தவர். மட்டுவில் சமஸ்கிருத பண்டிதர் பிரம்மஸ்ரீ கி.சதாசிவ சர்மா அவர்களது மாணவனாக விளங்கியவர்.

சிவஸ்ரீ சோமதேவக் குருக்கள் தாம் பெற்ற கல்வியை இளந்தலைமுறையினரும் பெற்றுப் பயனடைய வேண்டுமென்ற நோக்கில் நீர்வேலி பிரம்மஸ்ரீ தி.நடனசபாபதி சர்மா அவர்களைக் கொண்டு 1991ஆம் ஆண்டு நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் தேவஸ்தானத்தின் சார்பில் சமஸ்கிருத முதலாம் புத்தகமாகிய "கிரந்தாக்ஷர மாலா" என்ற நூலை வெளியிட்ட பெருமைக்குரியவர்.

சிவஸ்ரீ சோமதேவக் குருக்கள் தமது சிவாச்சாரியர் பணியில் சிறக்க அவருக்குப் பெரிதும் உறுதுணையாக விளங்கியவர் அவரது துணைவியார் ஸ்ரீமதி ஜெயந்தி அவர்களாவர். இத்தம்பதியர் செய்த தவப்பயனாய் தமது இல்லற வாழ்வில் ஆறு மக்கட் செல்வங்களைப் பெற்று மகிழ்ந்து அவர்களது நல்வாழ்வுக்கு உறுதுணையாக விளங்கிவருகின்றனர். இவர்களது மூத்த புதல்வராகிய பிரம்மஸ்ரீ வரப்பிரதசர்மா இந்தியாவில் கல்விகற்று கணனித் துறையில் உத்தியோகம் பார்த்து வருகின்றார். இரண்டாம் புதல்வர் தமது தந்தையின் வழியில் அவரது ஆலயத்திலேயே சிவாச்சாரியராக விளங்கி தமது தந்தைக்கு உதவி வருகின்றார். இவர்களது ஏனைய இரு புதல்வர்களும் இரு புதல்வியரும் பாடசாலையில் கல்வி கற்று வருகின்றனர். இவ்வாறு இறையருளால் நல்லதொரு குடும்பத்திற்குரியவராகி அதனைப் பராமரிப்பதோடு விநாயகப் பெருமானின் ஆலயப் பணியை சிவப்பணியெனக் கொண்டு மணிவிழா காணும் சிவஸ்ரீ சோமதேவ சிவாச்சாரிய தம்பதியர் அனைவரதும் பாராட்டிற்குரியவராகத் திகழ்கின்றனர்.

சிவஸ்ரீ சோமதேவ சிவாச்சாரிய தம்பதிகள் சகல வளங்களும் நலன்களும் பெற்று நல்ல தேக சுகத்துடன் சீருடனும் சிறப்புடனும் தமது குடும்பத்தினர் உள்ளிட்ட சுற்றம் சூழ பல்லாண்டு காலம் இனிதே வாழவும் தம் இறை பணியைத் தொடரவும் அரசகேசரி விநாயகப் பெருமானின் திருவருள் பொலிக என மனதார வாழ்த்தி எமது நல்லாசிகளைத் தெரிவிக்கின்றோம். சிவஸ்ரீ சோமதேவக் குருக்கள் எமது பிரதேச சிவாச்சாரிய மரபுக்குப் பெருமை சேர்த்துள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது. மணிவிழா சகலநிலைகளிலும் சிறக்க எம் நல்வாழ்த்துக்கள்.

**பேராசிரியர் இலக்கிய கலாநிதி**
**பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஷ்ண ஐயர்**
வாழ்நாள் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# வாழ்த்துச் செய்தி

திருவுத்தரகோச மங்கையை பூர்வீகமாக கொண்ட பாரம்பரிய செழுமைமிக்க பாரத்வாஜ ஹோத்திர சிவாச்சார்ய வழியில், அரசகேசரி விநாயக ஸ்தானீக குருவாக விளங்குபவர் சிவஸ்ரீ. சாம்பசதாசிவ சோமதேவக்குருக்கள்.

இவரது பாட்டனாரான கார்த்திகேய ஐயரவர்கள் கோப்பாய் நாவலர் பாடசாலையில் தலைமை யாசிரியராக (அதிபர்) விளங்கியவர். தந்தையார் ஆச்சார மரபுகளை மீறாத சிவாச்சார்யராக புகழ் பெற்றவர். இத்தகு செழுமை தோய்ந்த மரபினரான சோமதேவக்குருக்கள் வேதாகமம் கற்றவர்.

சிவாகம விசாரம் மிக்க இக் குருக்கள் அவர்கள் அநேக கும்பாபிஷேகங்களை தலைமையேற்று செய்தவர். பல மஹோத்ஸவங்களை ஆற்றியவர். இன்னும் ஆற்றி வருபவர். இவ்வாறு விளங்கும் குருக்கள் அறுபது அகவை கண்டிருக்கிறார் என்பது வியப்பாகவும் ஆச்சர்யமாக உள்ளது.

நம் மருகரான இவரது மேம்பாட்டில் இவரது தர்மபத்தினியான ஜெயந்தி அம்பாளின் பங்கும் உயர்வானது. உறவுகளை உன்னதமாக பேணுவதிலும், உரிய பொழுதில் எல்லோருக்கும் உதவுவ திலும் விருந்தோம்புவதிலும் குருக்கள் அவர்களின் மனையாள் பெரும் சிறப்பிற்குரியவராகிறார்.

இவ்வாறான பெருமையோடு துலங்கும் தேவர் ஐயா தம்பதிகள் ஷஷ்டியப்த பூர்த்தி வைபவம் கண்டு மணி விழா காண்கின்றனர். புத்திர புத்திரிகளை பெற்று பௌத்திரனாக ஹரிசாஹித்யனையும் கண்ட தேவர் ஐயா பல்துறை ஆற்றலோடு விளங்கி நீர்வைக்கு பெருமை சேர்க்கின்ற ஒருவர். இவ்வாறு திகழும் குருக்கள் தம்பதிகள் இன்னும் உயர்வோடு வாழ்ந்து பணியாற்றி. சதாபிஷேகமும் காண வேண்டும் என்று நம் நீர்வை செல்லக்கதிர்காம செவ்வேள் திருவடிகளை வழிபட்டு வாழ்த்தி மகிழ்கிறோம்.

தம் தாய் தந்தையரது மணிவிழாவை சிறப்பாக முன்னெடுக்கும் புதல்வர்களான வரப்பிரதன், சிவஜெயன், நிதர்சனன், சிந்துகேயன் மற்றும் மனுப்பிரியா, சாருகேசினிக்கும் நம் அன்பும் ஆசிகளும் உரியதாகும்.

மீண்டும் ஷஷ்டி தம அப்த பூர்த்தி நாயகரான குருக்களுக்கும் அவர் தம் இல்லத்தம்மாளுக்கும் எம் அன்பு கலந்த வாழ்த்தையும், ஆசிகளையும் தெரிவித்து கொள்கிறோம்.

"தர்மோ ரக்ஷதி ரக்ஷித"

சிவஸ்ரீ. கு. தியாகராஜக் குருக்கள்
நீர்வை மணி, நீர்வேலி.

# அருளாசிச் செய்தி

ஒருவன் மனிதனாகப் பிறந்து தனது வாழ்க்கையில் பல படிகளைத் தாண்டி இறுதியில் சந்நியாசம் என்னும் கோலத்தை அடைகிறான். ஒருவருடைய வாழ்வில் மழலைப் பருவம். இளமைப்பருவம். இல்லற வாழ்க்கை. முதுமைப் பருவம் என நான்கு படிகள் உள்ளன. இதில் முதல் இரண்டையும் தாண்டி இல்லற வாழ்க்கையை அனுபவிக்கும் பொழுதுதான் தனது அறுபதாவது வயது முடிவில் (ஷஷ்டியப்த பூர்த்தி) விழா முதலாவதாக வருகின்றது. இரண்டாவதாக எழுபது வயதில் பீமரதசாந்திவிழா மூன்றாவதாக எண்பது வயதில் சதாபிஷேக விழா எனும் விழாக்கள் கொண்டாடப்படுகின்றது. இவ்விழா தனது வாழ்வில் அறுபது வயதைப் பூர்த்தி செய்து ஷஷ்டியப்த பூர்த்தி விழாவை நீர்வை சிவஸ்ரீ சோமதேவக் குருக்கள் அவர்கள் தைத்திங்கள் 10ம் நாள் (24.01.2015) சனிக்கிழமை நடாத்த எல்லாம் வல்ல ஸ்ரீ அரசகேசரி பிள்ளையாரின் அருளுடன் இதே ஆலய மண்டபத்தில் சிறப்புற நடைபெற எண்ணியது அவரின் மிகப் பெரும் புண்ணியமாகும்.

நீர்வேலி மத்தியில் வாழ்ந்தவரான சிவஸ்ரீ சாம்பசதாசிவக்குருக்கள் கௌரியம்மா தம்பதிகளின் இரண்டாவது புதல்வராக உதித்த சிவஸ்ரீ சோமதேவக் குருக்கள் அவர்கள்தான் இவ்விழாவின் கதாநாயகராகத் திகழ்கிறார். இவரோடு உடன் பிறந்தவர்கள் இவருடைய அண்ணா பாலச்சந்திர சர்மா. கோபால சர்மா. பவானி அம்மா. காத்தியாயினி அம்மா. சிவபால சர்மா ஆகியோராவர். இவர்களில் துவிதீய புத்திரனாக உதித்த சிவஸ்ரீ சோமதேவக் குருக்கள் அவர்கள் தனது கல்வியில் A/L தரத்தைப் பூர்த்தி செய்த பின் ஆசிரியர் தொழிலில் சிலகாலம் கடமை புரிந்தார். இவர் தமிழில் பாண்டித்தியம் பெற்ற பண்டிதருமாவார். இதன்பின் தன் பிதாவின் குலத்தொழிலில் பிரவேசித்து நீர்வேலி ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் ஆலயத்தின் ஸ்தானீக சிவாச்சாரியாராக பொறுப்பேற்றுக் கொண்டார். மேலும் பல கோவில் கும்பாபிஷேக விழாக்களையும் கொடியேற்ற விழாக்களையும் ஊர்ப்பு ரோகித காரியங்களையும் கவனித்து வருகின்றார்.

ஐயா அவர்கள் தன் வாழ்வில் இல்லத்துணைவியாக இந்தியா ஸ்ரீ மாணிக்க ஐயர் தம்பதிகளின் ஏக புத்திரியான ஜெயந்தி அம்மா அவர்களை 1985ம் ஆண்டு கரம்பிடித்தார். இவர்களுக்கு ஆறு செல்வங்களாக வரப்பிரதன். சிவஜெயன். நிதர்சனன். சிந்துகேயன். மனுப்பிரியா. சாருகேசினி ஆகியோர் ஐயா குடும்பத்துடன் வாழ்ந்து வருகின்றார்கள். இவருடைய புத்திரர்கள் இவருக்கு உறுதுணையாக தமது தொழிலில் கவனம் செலுத்தி வருகிறார்கள். இவரின் ஆசார்யபிஷேகத்தை (குருத்துவம்) 1990ம் ஆண்டு சிவஸ்ரீ கைலாசநாதக் குருக்கள் இரஜேந்திரக்குருக்கள் தலைமையில் சிறப்பாக நடாத்தி வைத்தார்கள். வாழ்க்கைச் சுழற்சியில் அறுபது வருடங்களை பூர்த்தி செய்து மேலும் ஒரு தசாப்த காலத்தைக் கடந்து பீமரத சாந்தி விழாவையும். அடுத்த தசாப்தகாலம் கடந்து சதாபிஷேக விழாவையும் கண்டு அவரது வாழ்க்கையில் மேலும் சிறப்புற நடைபெற எல்லாம் வல்ல இறைவன் இத் தம்பதியர் தன் குடும்பத்தாருடன் நீடூழிவாழ வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.

"ஸர்வேஜனா சுகினோபவந்து"

தியாகராஜ ஐயர் குடும்பம்

கொழும்பு

# நெறிமுறை தவறாத குருவழி தொடரட்டும்

ஈழத்தின் தலைசிறந்த சிவாசார்ய மரபில் சிவாச்சார்ய பாரம்பரியத்தில் வாழ்ந்து 60வயது காணும் சோமதேவக்குருக்களுக்கு அரசகேசரியானின் திருவருளால் அவருக்கு ஆலய பாரம்பரியத்தைக் காக்கும் தகுதியும் முன்பும் கட்டுக்கோப்பாக கடமை ஆற்றிய மூதாதையரின் ஆசியும் கிடைத்துக் கொண்டு இருக்கின்றது. காரணம் உலக சுற்றுவட்டத்தில் எந்த ஒருமனிதனும் 60வயதை அடையும் போது தடங்கல், தாமதம், வயதை பூர்த்தி செய்ய முடியாத நிகழ்வுகளும் இடம்பெறுவதை காணக்கூடியதாக இருக்கும்.

இன்று மணி விழாக்காணும் குருக்கள் சகலவிதத்திலும் சகலரின் ஆசியைப் பெற்ற மனிதராவர். தர்மசாஸ்தா குருகுலகல்வியை கற்கும்போது தர்மசாஸ்தா அதிபர் தானுமகாதேவக்குருக்கள் இவரை தலைசிறந்த மாணாக்கராக ஏற்றுக்கொண்ட பெருமை இவரையே சாரும். இவர் செய்யும் மஹோற்சவம் கும்பாபிஷேகங்களில் அவரை அழைத்து ஆசி பெறுவதையும் நீங்கள் காணலாம்.

இவர் நீர்வேலி கிராமத்துடன் நின்றுவிடாது அயல்கிராமமாகிய அச்செழு சிறுப்பிட்டி மக்களின் ஆலயங்களில் குருத்துவப்பணியை நிறைவு செய்து அன்புக்குப்பாத்திரமானவர். இவர்களை தேவரையா என அழைத்தும் மதிப்பை கொடுப்பார். சிறுப்பிட்டி வைரவர் ஆலயத்தை சேர்ந்த சபாரத்தினம் என்பர் கூறினார். தங்கள் ஆலயத்தில் தமது பணியை நிறைவு செய்து காசு பணம் எதிர்பாராது சேவை செய்து எம்மிடம் அன்பாக பழகுவார். பொறுமைசாலி அந்த மனுஷன் காசை கூட கோயிலடியில் வைத்துவிட்டு போடுவார். நாங்கள் எடுத்து கொடுத்தால் வைரவர் கடமையை செய்வேன் காசு பெரிசல்ல என்று கூறுவது எமக்கு திகைப்பை தந்தது என்றார்.

பலர் அவரிடம் சோதிடம் பார்க்கும்போது கொடுப்பதை வாங்கும் பழக்கம் இவருக்குண்டு. மக்கள் சேவை மாதவன் சேவையாக மதிப்பவர். அதுமட்டுமல்ல சிவாச்சாரியருக்கு உரிய பொலிவும் குருலட்சணத்துக்குரிய முகப்பொலிவு. வசீகரிக்கும் தெய்வீகம் கலந்த பேச்சுத்தன்மை. கிரிகைகளை செய்யும் திறமை. ஆகம கிரிகைகளை அலசி ஆராயும் பாங்கு மற்றும் குருமாரை மதித்தல் வயது முதிர்ந்த குருமாரை வணங்கும் செயல்பாடு யாவரையும் கவர்ந்துள்ளது. இவர் தமது பரம்பரை ஆசிக்காத மூதாதையர் போல் வைநாயக ம் விக்கினேஸ்வர பிரதிஷ்டை போன்ற பெரிய நூல்கள் குருத்துவ பரம்பரைக்காக அர்ப்பணித்துள்ளது எமது கரங்களில் இன்றும் தவழ்கின்றது.

இவர் தமது 3 பிள்ளைகளையும் குருத்துவபணிக்கு அர்ப்பணித்து சைவ உலகுக்கு பெருத்த அன்பளிப்பாகும். இன்று 60வயதை பூர்த்தி செய்யும் குருக்கள் அவர்கள் தமது ஆண்பிள்ளைகள் பெண்பிள்ளைகள் சேர்ந்து இன்பமாக வாழ்ந்து வந்த தம்பதியினர். ஆகவே அவர்கட்கு ஆசி கூறுவதில் பெருமை அடைவது மட்டுமல்லாமல் மேலும் அவர் குடும்பத்துடன் வாழ்ந்து எழுபது வயது பீமரத சாந்தியையும் எண்பதில் சதாபிஷேகத்தையும் சிறப்புடன் கொண்டாட பிள்ளையாரை பிரார்த்திக்கின்றோம்.

கலாநிதி தியாக கெங்காதர குருக்கள் J.P
ஈவினை பிள்ளையார் ஆலயம்
புன்னாலைக்கட்டுவன்

## ஷஷ்டியப்த பூர்த்தி காணும் சிவஸ்ரீ. சாம்பசதாசிவ சோமதேவ சிவாச்சாரியருக்கு எமது

# வாழ்த்துக்கள்

சீர்மேவும் இலங்கையின் வடபகுதியாம் யாழ்ப்பாண நகரின் வடக்குப் பக்கத்திலே நீர்வேலி நகரின் மத்தியிலே வீற்றிருந்து அருள்பாலிக்கும் அரசகேசரிப்பிள்ளையார கோவிலிலே பரம்பரையாகப் பூஜை செய்து வரும் குடும்பத்தில் உதித்தவர் சாம்பசதாசிவ சோமதேவ சிவாச்சாரியார்.

இவர் கண்ணும் கருத்துமாக பிள்ளையாருக்கு பூஜை அனுஷ்டானங்கள் செய்து வருபவர். இவருக்கு ஷஷ்டியப்த பூர்த்தி விழாவை அதாவது மணிவிழாவை வெகுசிறப்பாகக் கொண்டாடு கின்றார்கள். இவர் அடியார்களின் மனம் கோணாது யார் வந்து கேட்டாலும் நேரம் இல்லை என்ற சொல்லாமல் பூஜை கருமங்களைச் செய்பவர். இவரது பூஜைக் கருமங்களைச் செய்வதில் இவரின் பாரியாரும் உறுதுணையாக உள்ளார். இவருக்கு நான்கு ஆண்பிள்ளைகளும் இரு பெண்பிள்ளைகளும் ஒரு பேரப்பிள்ளையும் இருக்கிறார்கள். அவர் சிவபூஜையில் கண்ணும் கருத்துமாக இருப்பார். அத்தோடு எத்தனையோ கோயில்களுக்கு கும்பாபிஷேகம். மஹோற்சவம் போன்றவற்றையும் சிறப்பாக நடாத்தி வைத்துள்ளார். மேலும் என்னுடன் நின்று இராஜராஜேஸ்வரி அம்மன் கோயில். ஒல்லை ஞான வைரவர் கோயில். மகாமாரி அம்மன் கோயில் போன்றவற்றிற்கும் கும்பாபிஷேகங்களை நடாத்தி வைத்துள்ளார். அரசகேசரி பிள்ளையார் மீது மிகவும் பக்தி கொண்டவர்.

இவரது ஷஷ்டியப்த பூர்த்தி விழாவானது சிறப்பாக அமையவும் இவர் இன்று போல் பல்லாண்டு காலம் வாழவும் எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வேண்டிக் கொண்டு அமைகின்றேன்.

தி.குமாரசதாசிவசர்மா
ஒய்வுநிலை புகையிரத நிலைய அதிபர்,
ஒல்லை வைரவர் கோயில்
வீரபத்திரர் கோயில்,
நீர்வேலி.

ஜெகதீஸ்வரக் குருக்களின்

# ஆசிச் செய்தி

நீர்வேலி அருள்மிகு அரசகேசரிப்பிள்ளையார் கூடவே சிவனையும் பூசிக்கும் பெறும் பேறு பெற்றவர். பாரம்பரிய பரம்பரைக் குருவாகவும் "விப்ர சிரேஷ்டராகவும்" சிவபூஜாதுரந்தரராகவும் விளங்கும் சிவஸ்ரீ சாம்பசிவ சோமதேவ சிவாச்சாரியார். சிவாச்சார்ய திலகமாகத் திகழும் இவர் பெருமதிப்பிற்குரியவர். பல கும்பாபிஷேகங்களை தனித்துவமாக தெய்வீக அருள் பொலிவுடன் செய்தவர் . உலகறிந்த பெரியவர். தமது ஆலயமாக நீர்வேலி பிள்ளையார் ஆலயம் அவை சார்ந்து தன் தெய்வீகப் பணிகளுக்கு உட்பட்ட ஆலய வளர்ச்சிகளிலும், திருப்பணிகளிலும் ஈடுபாடு கொண்டு நிறைவு செய்து கும்பாபிஷேக விழாக்கள், மகோற்சவங்களையும் முறைமையுடன் செய்து சிறப்பித்து அப்பணிகளால் மன நிறைவுகள் கண்டுகொண்டிருப்பவர். வேத ஆகமங்களில் மாத்திரமல்லாது சோதிட ஆய்வாளராகவும் கூட, நிரம்பிய தேறிய அறிவும் உள்ளவர்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக சிறந்த பௌராணிகருமாவார். கந்தபுராணம், பெரிய புராணம், திருவாதவூரடிகள் புராணம் போன்றவற்றுக்கு புராணபடனமும் விருத்தியுரையும் சொல்லும் திறனுள்ளவர். இவற்றின் தெய்வீகப் பணிக்கு உறுதுணையாக இவர் தம் பாரியாரும் பிள்ளைகளும் விளங்குகின்றனர். சிவாச்சார்யருக்குரிய சகல சிறப்புக்களுடனும் வாழும் நம் "சிவாகமதிலகம்" சிவஸ்ரீ சாம்பசிவ சோமதேவக் குருக்களுக்கு அறுபதாவது அகவை நிறைவும், சஷ்டியப்தப் பூர்த்தியும் நிகழ்வுற்று அவை சார்ந்து சிறப்பு மலரும் வெளிவரும் செய்தி மனமகிழ்வு தருகின்றது.

குருக்களின் பணிகள் இன்னும் பல ஆண்டுகள் தொடரவும், அவர் ஆசிகள் என்றும் கிட்டவும் சிவனை வேண்டி பிரார்த்தித்து மணிவிழா மலரும் சிறப்புற அருள் மணம் வீசி, குருக்கள் பெருமை களுடனும், சைவத்தின் பெரும் கருத்துக்களுடனும் வெளிவர விநாயகரைப் பிரார்த்திக்கின்றேன்.

கலாநிதி. து. கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் J.P
"தேசமான்ய", "பண்டிதர்"
அறங்காவலர் - மீனாட்சியம்பாள் திருக்கோயில்
மதுரையம்பதி - ஈவினை
புன்னாலைக்கட்டுவன்.

# ஆசியுரை

ஆண்டுகள் அறுபது என்பது வருடங்களின் தொகையாகும். பூமி சூரியனைச் சுற்றி வருவது போல மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் அறுபது ஆண்டுகளையும் சுற்றி வரும் பொழுது முழுமையடைகின்றான். மனிதருடைய வாழ்க்கையிலே பாலர். கௌமாரம். யௌவனம். விருத் தாக்கியம் எனும் நான்கு பருவங்கள் உள்ளன. அதிலே பாலர் பருவம் நீங்கியதும் அறிவு ஆற்றலைப் பெருக்கும் கௌமாரப் பருவம் ஆரம்பமாகிறது.அதன் பின்னர் யௌவனப் பருவத்திலே ஒரு மங்கைக்கு மாங்கல்யம் அணிந்து இல்வாழ்வில் ஈடுபடுகின்றான்.

இல்வாழ்வின் பயனாக மக்கட் செல்வத்தினை அடைந்து குடும்பம் எனும் பார வண்டியை அறுபது வயது வரை இழுத்துச் செல்கின்றான். அந்த வயதிலே மனம் அமைதியையும் ஓய்வையும் தேடுகின்றது. மக்கள். மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன் கொஞ்சிக் குலாவி. ஓய்வெடுக்க மனம் விளைகின்றது. அறுபதாவது வயதின் மேல் வரும் விருத்த பருவத்தின் ஆரம்பத்தில் சாந்திகள். தானங்கள். ஹோமங்கள் செய்து. இனிவரப் போகும் கஷ்டங்களைக் குறைத்துக் கொள்வதற்காக ஷஷ்டியப்த பூர்த்தி என்ற மாபெரும் மணிவிழா நடைபெறுகின்றது. இந்த விழாவினை முக்கியமாக அவர்களுடைய பிள்ளைகளே நடாத்தி வைப்பர்.

இத்தகைய பெரும் பேற்றினை பாரத்துவாய கோத்திரத்தில் உதித்த சிவஸ்ரீ சாம்பசதாசிவ சோமதேவ சிவாச்சாரியார் ஜெயந்தி தம்பதிகள் பெறுகின்றனர். பரம்பரையாக வழிபட்டு வந்த நீர்வேலி அரசகேசரி விநாயகர் தேவஸ்தான ஸ்தானிக சிவாச்சாரியார் அவர்கள் அன்பின் அணிகலனாகத் திகழ்கின்றார். பண்பின் சிகரமாகிய இவர் தம்மைத் தேடி வருவோருக்கு செய்யும் உதவிகள் அளப்பரியதாகும். இல்வாழ்வில் இணைந்த திருமதி ஜெயந்தி அம்மாள் குருக்கள் ஐயாவை விட ஒரு படி மிஞ்சியவர் எனக் கூறலாம். தனக்கில்லாவிட்டாலும் தன் உணவை பிறருக்கு கொடுக்கும் பண்புடையவர். நான்கு ஆண் பிள்ளைகளையும் இரண்டு பெண் பிள்ளைகளையும் பெற்ற தம்பதிகள் நோய் நொடியின்றி ஆயிரம் பிறை காண பம்பலப்பிட்டி புதிய கதிர் வேலாயுத சுவாமியையும் அரச கேசரி விநாயகப் பெருமானையும் வேண்டி ஆசி கூறுகின்றேன்.

குலமணமும் தமிழ் மணமும் தழைத்தோங்க
குழலிசையும் யாழிசையும் ஒலியெழுப்ப
பண்பாடும் நன்நெறியும் படர்ந்திருக்க
ஈழத் திருநாட்டின் யாழ் மண்ணிலே
- வந்துதித்த
அந்தணப் பெருமகனே! நீடு வாழ்க!
நீடு வாழ்க! - உன் குலம்
தழைக்க வைத்த பத்தினியும்
பிள்ளைகளும் நீடூழி வாழ்கவே!

**சிவஸ்ரீ.ஜெகன்நாத ஐயர் நாகராஜக் குருக்கள் (J.P)**
பிரதமகுரு, புதிய கதிரேசன் கோவில்,
பம்பலப்பிட்டி, கொழும்பு.

*சோமசுந்தரக் குருக்களின்*

# வாழ்த்துச் செய்தி

எமது மனித வாழ்க்கையில் அறுபது ஆண்டுகள் இக வாழ்வில் வாழ்வாங்கு வாழ வேண்டிய ஒரு காலப்பகுதியாகும். அந்தணப் பெருமக்களுக்குரிய அறுதொழில்களான கற்றல், கற்பித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்பனவற்றை இக்காலப்பகுதியில் ஆற்றுவார்கள். அறுபதாவது வயதை ஷஷ்டியப்த பூர்த்தி என்பர். இல்லறவாழ்வில் நன்மக்களை பெற்று, அவர்களை கல்வியில் சிறப்புறச் செய்து அவர்களையும் இல்லற வாழ்வில் ஈடுபடுத்தும் போது அவர்கள் தாய், தந்தையரைப் போற்றி அவர்களுக்கு ஷஷ்டியப்த பூர்த்தி விழாவை செய்கின்றனர்.

இவ்வகையில் நீர்வேலிப்பதியில் பாரம்பரிய மிக்க குரு பரம்பரையில் வந்த சோமதேவக் குருக்கள், ஜெயந்தி அம்மா தம்பதியருக்கு இவ்விழா நடைபெறுவது சாலச் சிறந்ததாகும். அண்ணா அவர்கள் எப்பொழுதும் சாந்தம், பொறுமை, வித்துவத் திறமைமிக்கவராக விளங்குபவர்.

அந்தணர்களுக்கு தேவையான பல நூல்களை வெளிநாட்டில் வசிக்கும் சகோதரர் மூலமாகவும் தனது சொந்த முயற்சியாகவும் வெளிவரச் செய்துள்ளார்கள். சோதிடத்திலும் வல்லவராகவும் தமிழ், சமஸ்கிருதமொழிகளில் சிறந்தவராகவும் விளங்கிய போதும் அவரது வித்துவத்திறமை குடத்தில் இட்ட விளக்காகவே உள்ளது. இந்த விழாவில் விநாயகர், சிவன், அம்மன் நவகண்ட ஸ்பர்பகுதி என்னும் நூல்களை வெளியிட்டு அந்தணப் பெருமக்களுக்கு பேருதவி புரிகின்றார். அத்தம்பதியர் நூற்றாண்டு காலம் சகல நலங்களும் பெற்று வாழ எல்லாம்வல்ல இறையருளை வேண்டுவதுடன் இப்பெற்றோருக்கு ஷஷ்டியப்தப் பூர்த்தி விழாவை முன்னெடுத்து செய்யும் நன்மக்களுக்கு பதினாறு பேறுகளும் கிடைக்க வாழ்த்துகின்றேன்.

**பிரம்ம ஸ்ரீ க.மு. சோமசுந்தரக்குருக்கள்**
**பர்வதவர்த்தனி அம்மன் கோவில்,**
**உரும்பிராய்.**

# வாழ்த்துச் செய்தி

வரலாற்றுப் புகழ்மிக்கதும் யாழ்ப்பாண மன்னர் பரம்பரையைச் சேர்ந்த அரசகேசரியுடன் இணைந்ததுமான நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் தேவஸ்தானப் பிரதம சிவாச்சார்யார் சிவஸ்ரீ சோமதேவக் குருக்கள் அவர்களின் சஷ்டியப்த விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஓதல். ஓதுவித்தல். வேட்டல். வேட்பித்தல். ஈதல். ஏற்றல் ஆகியவை அந்தணர்கள் ஆற்ற வேண்டிய ஆற்றி வருகின்ற அறுவகைக் கடமைகளாகும். நுட்பமாக நோக்கினால். ஓதல். வேட்டல். ஈதல் ஆகியவை தன் ஆன்மீகப் பயணத்திற்குத் தன்னைத் தகுதியாக்கவும் தன்னைப் புதுப்பித்துப் புனிதப்படுத்திக் கொள்ளவும் ஒருவர் செய்ய வேண்டிய கடமைகளாகும். ஏனையோரின் ஆன்மீக மேம்பாட்டிற்கு ஒருவர் செய்யவேண்டிய உதவி. பங்களிப்பு ஆகியவை ஏனைய மூன்றுமாகும்.

தமிழ். சமஸ்கிருத மொழிகளில் வல்லுனரான தந்தை பாரத்வாஜி சாம்பசதாசிவக் குருக்கள் அவர்களின் நேரடிக் கண்காணிப்பிலும் வழிகாட்டலிலும் மிகச் சிறுவயதிலிருந்தே அந்தணர்க்குரிய கல்வி. ஒழுக்கம். கோவில் கிரியைகள் ஆகியவற்றில் ஈடுபாட்டுடன் பயின்று தந்தையின் கடமைகளுக்கு உதவியும் வந்த ஸ்ரீ சோமதேவர், தந்தையின் பின் தேவஸ்தானத்தின் பிரதம சிவாச்சார்யர் ஆனார். கோவிலின் நித்திய நைமித்திகங்களைச் சிறப்பாகச் செய்ததுடன் யாழ்ப்பாணத்திலுள்ள சிறந்த கோவில்களில் கும்பாபிஷேகங்களிலும் கலந்து கொண்டார். சொந்த ஆன்ம ஈடேற்றத்திற்குரிய கிரியைகளை அவ்வக் காலங்களில் தவறாது செய்து இன்று சஷ்டியப்த பூர்த்தியையும் சிறப்பாகக் கொண்டாடுகின்றார். அவருடைய ஆன்மீகப் பணிகள் மேன்மேலும் சிறக்கவும் மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் நிறைவான வாழ்வு வாழவும் எல்லாம் வல்ல அரசகேசரிப்பிள்ளையாரின் ஆசி கோரிப் பிரார்த்திக்கின்றேன்.

தந்திமுகத் தான். தந்தை சார்ந்து தெய் வங்கள் வாழ்த்த
அந்தணர் அறவோர் மேலாம் அறிஞர்கள் சேர்ந்து வாழ்த்த
செந்தமிழ்க் கவிஞர் ஊரார் சொந்தபந் தங்கள் வாழ்த்த
சுந்தரச் சோமதேவர் - ஜெயந்தி தம் பதியர் வாழ்க

சி.சிவசரவணபவன் (சிறி)
கந்தரோடை.

# இளமையான அன்புள்ளத்திற்கு அறுபது

இலங்கையில் புகழ்பூத்த சிவாச்சாரியார்கள், கல்வியாளர்கள் நிறைந்த கிராமம் நீர்வேலியாகும். நீண்டகால சிறந்த சிவாச்சாரிய பாரம்பரியம் இங்குண்டு. அந்த மரபுச் சிறப்பில் எமது பெருமதிப்பிற்கும் வணக்கத்திற்கும் உரியவர் சிவஸ்ரீ சாம்பசதாசிவக் குருக்கள் ஐயா அவர்கள். தமது குல தெய்வமான பிள்ளையாரின் கடமைகளுடன் அவரது புத்திரனாகவும் மாணவனாகவும் திகழ்ந்து இலங்கையின் பல பாகங்களிலும் மஹோற்சவம், கும்பாபிஷேகம் முதலியவற்றைப் பக்தி சிரத்தையுடன் செய்து வருபவர் பேரன்பிற்கும் மதிப்பிற்குமுரிய சிவஸ்ரீசோமதேவக்குருக்கள் அவர்கள். தந்தையாரின் வழி காட்டலின் சிறப்பாலும் நிறைந்த பண்பியல்பாலும் எல்லோரிடமும் மிகுந்த அன்புடமையுடன் பழகும் இனியவராகினார். அவரது தர்மபத்தினியாகிய ஜெயந்தி அம்மாவும் விருந்திற்கும் உபசரிப்பிற்கும் ஒரு எடுத்துக்காட்டாகிய இல்லத்தரசியாராவார்.

அபிஜித் நட்சத்திரத்தின் சிரஞ்சீவி தேவர்களின் அனுக்கிரகம் கிடைக்கப்பெற்று பிள்ளைகள் குடும்பத்தவர்கள் புடைசூழ நிகழ்வதே "ஷஷ்டியப்த பூர்த்தியாகும்" நல்ல பண்புகளும் சிறப்பும் பெற்ற பிள்ளைகளின் பாக்கியமும், பேரப்பிள்ளைப் பேறும் பெற்ற தேவண்ணா அவர்களுக்கு இன்று அறுபதாண்டாகி சஷ்டியப்த பூர்த்தி நடைபெறுவதன் மூலம் நீண்ட ஆயுளும் சகல சிறப்புக்களும் பெற்று அவரது விழா பொன்னாக முத்தாக பவளமாக விரிந்து குலதெய்வத்தின் அருளாலும் பெரியவர்களின் ஆசியாலும் அவரும் குடும்பத்தவர்களும் நீடூழி வாழ பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

சிவஸ்ரீ.நா. சர்வேஸ்வரக்குருக்கள்
ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானம்
சுன்னாகம்.

# வாழ்த்துரை

இலங்கையின் சரித்திரப் பிரசித்தி பெற்ற திருக்கோவில்களில் நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவிலும் ஒன்றாகும். இக்கோவிலின் சிவாச்சார்யராக இருப்பவர் சிவஸ்ரீ சா. சோமதேவக் குருக்கள் அவர்கள். தென்னிந்தியா திருவுத்தரகோச மங்கைத் தலத்தைப் பூர்வீகமாகக் கொண்ட பாரம்பரிய பெருமை மிக்க சிவாச்சார்ய மரபில் வந்த இவரது முன்னோர், பரம்பரைக் குருத்துவத்தை இவ்வாலயத்தில் பேணி வந்திருக்கிறார்கள்.

இவ்வாலயத்தில் மட்டுமல்லாமல் ஈழத்தின் பல்வேறு பாகங்களிலுள்ள பல ஆலயங்களில் மஹோற்சவங்கள், கும்பாபிஷேகங்கள் எனக் குருத்துவ சேவையாற்றிவரும் சோமதேவக் குருக்கள் அவர்கள் வேத சிவாகமம் கல்வியைப் பெற்றுக் கிரியைமரபில் நல்ல பயிற்சிகளையும் பெற்று அனுபவம் மிக்க சிறந்த ஒரு சிவாச்சாரியராகத் திகழுகின்றார்.


தமிழிலும் வடமொழியிலும் புலமை மிக்கவரான இவர் நூல் வெளியீட்டுத் துறையிலும் நல்ல சேவைகளை ஆற்றி அந்தணர் மட்டுமல்லாமல் சைவப் பெருமக்கள் அனைவரிடமுமே நன்மதிப்புப் பெற்றவர். அடியார்களுடன் - ஆலய நிர்வாகிகளுடன் - ஊர் மக்களுடன் மென்போக்குடன் நல்லுறவைப் பேணிவருபவர். எளிமையும் அடக்கமும் மிக்கவர். உறவினர்கள் அனைவரையும் அன்புடன் பண்புடன் அரவணைத்து மகிழ்பவர்.

இத்தகைய இவரது நற்பண்புகளுக்கும் நற் செயல்களுக்கும் இவரது தந்தை சிவஸ்ரீ சாம்பசதாசிவக் குருக்களும் பாட்டனார் சிவஸ்ரீ கார்த்திகேயக் குருக்களும் முக்கிய காரணர்கள் என்பது ஒருபுறம் இருக்க, இவரது வாழ்க்கைத் துணைநலமாகிய ஜெயந்தியும், இவரது பிள்ளைகளும் இவருக்கு உறுதுணையாகவும், ஊக்குவிப்பாகவும் இருந்து வருவதும் இன்னொரு புறத்தில் சிறப்புக் காரணமாக அமைகிறது.

சிவஸ்ரீ சோமதேவக் குருக்கள் - ஜெயந்தி தம்பதிகள் இன்று மணிவிழாக் கொண்டாடுவது மகிழ்ச்சி தருகிறது. ஷஷ்டியப்தபூர்த்தி என்பது அந்தணர்கள் வாழ்வில் மிக முக்கிய நிகழ்வு. இவர்களது ஷஷ்டியப்த பூர்த்தி விழாவை சிரத்தையுடனும், ஆர்வத்துடனும் சிறப்பாகச் செய்ய முனைந்து நிற்கின்ற இவரது பிள்ளைகளை முதற்கண் பாராட்டி ஆசீர்வதிக்க விழைகின்றேன். இவ்விழாவின்போது மணிவிழா மலர் ஒன்றையும் சமஸ்கிருத நூல்கள் இரண்டினையும் இவர்கள் வெளியிட்டு வைக்கின்றார்கள். இது போற்றத்தக்க செயலாகும்.

விழாவும் வெளியீடுகளும் சிறப்புறவேண்டுமெனவும், சிவஸ்ரீ சா. சோமதேவக் குருக்கள் குடும்பத்தினர் எல்லா நலன்களும் பெற்று இன்னுமின்னும் இறைபணியாற்றி நீண்டகாலம் இனிது வாழவேண்டுமென இறையருளைப் பிரார்த்தித்து வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன். நன்றி.

**சிவானந்தசர்மா**
(கோப்பாய் சிவம்)



விழா நாயகரின் பேரனார்
கார்த்திகேய ஐயர், தலைமை ஆசிரியர்
கோப்பாய் நாவலர் வித்தியாசாலை



ஆலய பரிபாலகர் அப்பா சுவாமி ஐயர்
அவர்களின் துணைவியார்





துணைவியாரின் தாய் தந்தையர்



விழா நாயகரின் தந்தையாரின்
மணிவிழாவின் போது



வீட்டில் நடைபெற்ற
வைதீக கிரியை



தாயாரின் 80 ஆவது வயது
நிகழ்வின் போது



பேரனிடம்
ஆசீர்வாதம் பெறுதல்

# வாழ்த்துச் செய்தி

நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோயில் ஸ்தானீக சிவாச்சார்யார் தம்பதிகள் பாரத்வாஜ கோத்திரம் ப்ரம்ம ஸ்ரீ சாம்பசதாசிவ சோமதேவ சிவாச்சாரியார் ஜெயந்தி தம்பதிகள் இன்று ஷஷ்டியப்தப் பூர்த்தி சாந்தி வைபவத்தை விமரிசையாகக் கொண்டாடும் இவ்வேளையில் எல்லாம் வல்ல அருள் மிகு மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமியார் திருவருள் அபரிமிதமாகக் கிடைக்கப்பெற்று மேலும் அவர் தம் கடமைகளை சைவசமயத்திற்கு செய்து சைவம் தமிழ் வளர அயராது சேவைகள் புரிய வேண்டியும் நோயற்ற நீண்ட வாழ்வு பெற வேண்டுமெனவும் மாவை ஆதீனப் பேரரசு ஆதீனக் கர்த்தாக்களின் ஆசியும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

**மஹாராஜஸ்ரீ து.ஷ. இரத்தினசபாபதிக் குருக்கள்**

**ஆதீனகர்த்தா**

**அருள்மிகு மாவிட்டபுரம் ஸ்ரீ**

**கந்தசுவாமி கோவில்**

# வாழ்த்துரை

நீர்வேலி அரசகேசரி விநாயகர் தேவஸ்தான பிரதம சிவாச்சார்யார் சிவஸ்ரீ. சாம்பசதாசிவ சோமதேவக் குருக்கள் ஜெயந்தி தம்பதியர் ஷஷ்டியப்த பூர்த்தி விழா காண்பது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. ஊரவர்கள் யாவரும் "தேவர் ஐயா" என்று அன்போடும் மரியாதையோடும் போற்றும் குருக்களவர்கள் அபாரமான திறமை உடையவர் அறிவாற்றல்களில் சிறந்தவர்.

இது மட்டுமன்றி குருக்கள் குடும்பத்தாரும் நம் குடும்பமும் பல தலைமுறைகளாக உறவு பூண்டது. சோமதேவக் குருக்களின் பாட்டனார் கோப்பாய் நாவலர் வித்தியாலய தலைமையாசிரியராக விளங்கியவர். மாமனார் ஸ்ரீ மாணிக்க ஐயரவர்கள் நம் தந்தையுடன் மிக நெருக்கமாக இருந்தவர்.

இவ்வளவு அன்றி. தேவர் ஐயா அவர்களும் நம்மோடு நீண்ட ஈடுபாடும் உறவும் கொண்டவர். எங்களுடைய தந்தையாரிடம் பல வருடங்கள் நல்லுறவு பூண்டு , அவரிடம் பல விடயங்களையும் பயின்றவர். நம் எல்லோரையும் சகோதரர்களாகவே பாவித்து அன்பு செலுத்துபவர்.

அவர்தம் மனைவியாக வாய்த்த ஸ்ரீமதி ஜெயந்தி அம்மாளின் குடும்பமும் எம் குடும்பத்தோடு நீண்ட உறவு உடையது. எனவே இவர்களின் விழா எம்மெல்லோருக்கும் மனநிறைவு கொண்டதாய் உள்ளது.

எல்லாம் வல்ல நீர்வை கந்தப் பெருமானுடைய திருவடிகளை வணங்கி, சோமதேவக் குருக்கள் அண்ணா தம்பதியரையும் நமஸ்கரித்து, ஆசி வேண்டி வாழ்த்தி மகிழ்கிறோம்.


சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக் குருக்கள்
பிரதமகுரு,
நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தானம்.

# ஷஷ்டியப்த பூர்த்தி நல்வாழ்த்துக்கள்

ஜய வருடம் தைத் திங்கள் 10ம் நாள் (24.01.2015) சனிக்கிழமை ஷஷ்டியப்த பூர்த்தி விழாக்காணும் ஶ்ரீ.ஶ்ரீமதி சோமதேவ சிவாச்சாரியார் ஜெயந்தி அம்மா தம்பதிகளுக்கு சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் சார்பில் சிவஶ்ரீ.சபா. வாசுதேவக் குருக்கள் அவர்கள் வழங்கிய

## வாழ்த்துப்பா

வேதங்கள் கற்றுணர்ந்த சாம்பசிவகுரு தந்த வித்தகரே
வெண்ணிற பட்டாடையும் வெண்ணீற்றுப் பூச்சுடனும்
விளங்கு பெரு புகழுடனே வாழும் சோமதேவபெரும் குருவே
பெண்ணில்நல்லாள் ஜெயந்தி அம்மையோடு
பெருந்தகையாயிருந்தே சைவத்தமிழ் வளர்க்கும் சிவாச்சாரியாரே
ஆனந்தமாய் மகோற்சவங்கள் குடமுழுக்குப் பெருவிழாக்கள் பூஜைகள் பல செய்து
அருள் சொரிய ஆனைமுகனை அனுதினமும் பூச்சொரிந்து
சாந்தமாய் அமர்ந்து சாஸ்வதமாய் பதிலளிக்கும் அந்தணப் பெருமகனே
குருமார்கள் நலம் பேண பல வழியில் எம்முடன் இணைந்து நின்று
குருமார் ஒன்றியத்தினை வளம்படுத்திய பெரும் குருவே
சைவத்தமிழ் மிளிரும் நீர்வேலித்திருநகரின்
சிவமைந்தன் அரசாளும் அரசகேசரி பதிதன்னில்
சந்தோஷமாய் மணிவிழாவை கொண்டாட அன்பான வாழ்த்துக்கள்
வேதவேதியர் சோமதேவ தம்பதியரே வாழி! வாழி!
பேர்பூத்த வெற்றிதிருமுகமுடை அம்மையோடு மங்காபுகழுடனே வாழி! வாழி!
நீண்ட ஆயுளும் நோயற்ற நல்வாழ்வும் பெற்று தம்பதியரே வாழி! வாழி!
வற்றாசெல்வங்களுடனும் தம்பதியரே பல்லாண்டு பல்லாண்டு வாழி! வாழி!

வாழ்த்தும்

சிவஶ்ரீ.சபா. வாசுதேவக்குருக்கள்
தலைவர், சர்வதேச இந்துமதகுருமார் ஒன்றியம்
(சிவன் தேவஸ்தானம் சித்தன்கேணி)
21.12.2014

# வாழ்த்துரை

நீர்வேலி ராஜ கேசர மகாகணபதியின் பாதசேவை செய்யும் பாரம்பரியத்திலே உத்தம குருவாயும் உன்னத சாந்த சைவத்தாளுபவராயும் வேத ஆகமநெறி வழுவாது தன்னை விநாயகருக்கு அர்ப்பித்து தன் புண்ணியங்களை அர்ப்பித்து தன் புண்ணியங்களை எல்லாம் நீர்வேலி வாழ்மக்கட்கு பகிர்ந்தளித்து ரங்கமத்தாரோடு சங்கமத்தாரை விளங்கி எல்லோரையும் வாழ்த்தி ஆசிகூறும் எமது சிவஸ்ரீ சோமதேவ சிவாச்சார்யார் ஜெயந்தி அம்மா தம்பதிகளின் ஷஷ்டியப்த பூர்த்தி விழா சிறக்க தர்ம சாஸ்த்தா. குருகுல மாணவர்கள், ஆசிரியர்கள் உவகை வாழ்த்துக்களை நல்கின்றோம்.



**தர்மசாஸ்த்தா குரு**
**மாணவர்கள்**
**ம.ஸ்ரீவத்சாங்கக் குருக்கள்**
**இணுவில் மேற்கு,**
**தர்மசாஸ்த்தா குருக்கள்**

*கோப்பாய் பிரதேச செயலரின்*

# வாழ்த்துச் செய்தி

மணிவிழாக் காணும் சிவஸ்ரீ சாம்பசதாசிவ சோமதேவ சிவாச்சாரியார் அவர்களுக்கு ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி வைபவ விழா கொண்டாடப்படுவதையிட்டும் அதனையொட்டி மலர் வெளியீடு செய்யப்படுவதையிட்டும் மகிழ்ச்சியடைகின்றேன்.

வலிகாமம் கிழக்கு - கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள வரலாற்றுப் பெருமைமிக்க நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவிலின் பிரதம குருவாக தன்னுடைய இறைபணியை ஆற்றிப் பெருமைப்படுத்திக் கொண்டிருப்பவர் சிவஸ்ரீ சாம்பசதாசிவ சோமதேவ சிவாச்சாரியார்.

யாழ்ப்பாணத்தின் புகழ்பூத்த பல சைவ ஆலயங்களில் மஹோற்சவ கிரியைகளையும் கும்பாபிஷேகக் கிரியைகளையும் நடாத்துவதில் சிறப்புத் தேர்ச்சி வாய்ந்தவராக காணப்படுவதுடன் ஆன்மாக்கள் இறைவனுடன் லயப்படுகின்ற இடமாக ஆலயத்தை சமூகத்திற்கு ஏற்ற வகையிலே வளர்த்தெடுப்பதிலே தன்னுடைய காத்திரமான பங்களிப்பினையும் வழங்குபவர்.

பரம்பரை பரம்பரையாக மேற்படி ஆலயத்திலே தொடர்ச்சியாக கிரியைகளை மேற்கொண்டு வருவதனால் ஆலயத்திற்கும் சமூகத்திற்குமிடையே நல்ல தொடர்பினை பேணுவதில் சிவாச்சாரியார் தன்னுடைய பங்களிப்பினை வழங்கிவருகின்றார்.

சைவசமயத்தினுடைய வளர்ச்சியிலும் அதனுடைய நிலைபேற்றிலும் அக்கறை கொண்ட சிவாச்சாரியார் சமயம் சார்ந்த புலமையை வளர்ப்பதிலும் நூல்களை வெளியிடுவதிலும் தன்னுடைய பங்களிப்பினை வழங்கிவருவதுடன் சைவர்கள் அதிகம் வாழும் பிரதேசமான நீர்வளமும் நிலவளமும் மிக்க நீர்வேலிப் பகுதியில் சமயப் பணியாற்றி வருகின்றமை பெருமைக்குரிய விடயமாகும்.

சிவாச்சாரியரின் சைவப் பணி தொடர்ந்து வளரவும் உடல். உள ஆரோக்கியத்துடன் நீண்ட நெடுங்காலம் வாழவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவதுடன் எமது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. மகேதலிங்கம் பிரதீபன்
பிரதேச செயலர்,
வலிகாமம் கிழக்கு,
கோப்பாய்.

# வாழையடி வாழையென வந்த குருபரம்பரை

சிவ வழி சென்று சிவப்பணியாற்றும் அந்தணர் வரிசையில் - பூட்டன். பாட்டன் பிதாவழி பற்றித் தூய அறப்பணியும் பொதுப்பணியும் ஆற்றி மக்கள் மனத்திரையில் தமக்கென தனியிடம் வகிக்கும் சிவப்பிராமண வழி வந்தவர்க்கே இன்று மணிவிழா! வாழ்த்தி வணங்குகின்றோம்! அவரே பலர் போற்றும் ஸ்ரீ சோமதேவ குரு.

சிவஸ்ரீ சாம்பசதாசிவக்குரு ஸ்ரீ சோமதேவக் குருக்கள் இளமைத் தோற்றத்துடனே பலரும் போற்றும் பக்குவம் நிறை பண்பாளரும் ஆவார். அவர் பணி காண்பதில் நாமும் மட்டற்ற மகிழ்ச்சி யடைகின்றோம். வளர்க அவர் பணி! மணிவிழா சிறப்புறுக!

தந்தையார் மறைவின் பின் அவர் வழி நின்று குருக்கள் ஆற்றும் பலதரப் பணிகளை பலரும் அறிந்ததே. விநாயகப்பெருமான் பெரும் கிருபையால் நித்திய நைமித்திய பணிகள் யாதுமோர் குறைவின்றி. தளர்வின்றி. நிகழ்வதற்கு குருக்களுக்குப் பெருந்துணையாக பாரியாரும். பிள்ளைகளும் பேருதவி புரிவது விநாயகரின் பேரருள் என்பதைப் பலரும் அறிவர். தொடர்க அவர் பணி! வாழ்த்துக்கள்.

குருக்கள் அவர்கள் அன்று போல் இன்றும். இன்று போல் என்றும், சகல சிறப்புக்களையும் பெற்று பல்லாண்டு வாழ வேண்டுமென வரம் நல்கும் விக்கினேஸ்வரப் பெருமானை கரம் கூப்பி. தலைவணங்கி வேண்டுகின்றோம்.

குருக்களின் மணிவிழா சிறப்புற எம் உளமார்ந்த பிரார்த்தனைகள் வாழ்த்துக்கள்! குருக்களின் சமய. சமூக. ஆலயப் பணிகள் மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

த.ந. பஞ்சாட்சரம்
விநாயக அடியான்
குருக்களின் அபிமானி
நீர்வேலி.

*செஞ்சொற்செல்வரின்*

# வாழ்த்துரை

சைவத் தமிழர்களின் வரலாற்றில் நீர்வேலித் திருவூர் தனித்துவம் பெறுகிறது. தமிழ் வேந்தர் காலத்தில் தோன்றிய அரசகேசரிப்பிள்ளையார் கோவில் வரலாறு இவ்வூரின் மேன்மைக்கு சான்றாக விளங்குகிறது. இத்திருக்கோவிலில் பாரம்பரிய குருபரம்பரையில் உதித்த சிவஸ்ரீ. சாம்பசதாசிவ சோமதேவ சிவாச்சாரியார் அவர்களின் மணிவிழாக் குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்த மடைகின்றேன்.

என் தந்தைவழித் திருவூர் நீர்வேலி. இத்திருவூரிலுள்ள சிவாச்சாரியார் பெருமக்கள் அனைவரது சிறப்பும் யான் அறிவேன். மணிவிழாக்காணும் குருக்கள் அவர்களின் தந்தையார் மிக உயர்ந்த பண்பாளர். அவரது வழியில் தன்பணியைத் தளர்வில்லாமல் நிறைவேற்றிவரும் மணிவிழா நாயகர் குடும்ப சமேதரராக பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு நிறைவாக வாழ வாழ்த்தி அமைகின்றேன்.

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
**தலைவர்,**
**ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**

*நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயில் பிரதம குருக்கள் சிவஸ்ரீ.சாம்பசதா சிவக்குருக்கள் சோமதேவக்குருக்கள் அவர்களின் சஷ்டியப்த பூர்த்திவிழா சிறப்பு மலருக்கு கிராம அலுவலர் திரு.சு.சண்முகவடிவேல் அவர்கள் வழங்கும்*

# வாழ்த்துச் செய்தி

மேற்படி சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி எழுதும் வாய்ப்புக் கிடைத்ததையிட்டு பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன். நீர்வேலியில் புராதனம் மிக்க அரசகேசரிப் பிள்ளையார் கோயில் குருக்கள் சிவஸ்ரீ சாம்பசதாசிவக்குருக்கள் சோமதேவக்குருக்கள் அவர்கள் 24.01.2015 அன்று சஷ்டியப்த பூர்த்தி விழாக் காண்பதையிட்டு பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

வேத நெறி தழைத்தோங்க, மிகுசைவத் துறை விளங்க தங்கள் மூதாதையர்களான பூட்டனார் கார்த்திகேயக் குருக்கள், தந்தையார் சாம்பசதாசிவக்குருக்கள் (நடராசக் குருக்கள்) வழிநின்று பரம்பரைக் குருவாக முப்போதும் திருமேனி தீண்டி புராதனம் மிக்க அரசகேசரிப் பிள்ளையார் ஆலயக் குருத்துவப் பணியை ஆகம நெறி காத்து ஆற்றி வரும் செயற்பாடுகளைப் பெரிதும் பாராட்டுகிறேன்.

முப்பத்தைந்தாவது வயதில் பிரமோ தூத ஆண்டு (1990) வருடாந்த மஹோற்சவ குருவாக முதன்முதலில் (துவஷாரோகணம்) கொடியேற்றி குருத்துவப்பணியைப் பணிவுடன் ஏற்று தொடர்ந்து அப்பணியைச் செய்துவருவது பெருமைக்குரியதே. குருத்துவப் பணியின் வெள்ளிவிழா ஆண்டாக அமைந்திருப்பதும் சிறப்பிற்குரியதே.

குருக்கள் ஐயா அரசகேசரிப் பிள்ளையார் கோவில் மட்டுமன்றி கிராமத்தின் ஏனைய ஆலயங்களிலும், அயற்கிராமங்களின் ஆலயங்களிலும் கும்பாபிஷேகம், மஹோற்சவம் என்பன சிறப்போடு செய்து பெருமை பெற்றது சிறப்பிற்குரியதே.

அடக்கமான வாழ்க்கை முறை, சமய அநுட்டானங்களைப் பேணும் ஒழுங்கு என்பன வழிபடுவோரை இறைவன்பால் ஈர்க்கும் வழிகாட்டல்களாகும்.

"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்"

என்னும் குறட்பாவுக்கமைய செந்தண்மை பூண்ட குருவாக நீடு காலம் வாழ்ந்து இறைபணி, சமயப் பணி செய்ய அருள்புரியவேண்டுமென அரசகேசரியான் பாதம் பணிந்து வாழ்த்தி அமைவோமாக

சு.சண்முகவடிவேல்
கிராம அலுவலர்

*நீர்வேலி தெற்கு கிராம அலுவலர்*

*திரு.சி.தயாபரன் அவர்கள் வழங்கிய*

# வாழ்த்துச் செய்தி

வரலாற்றுச் சிறப்பு மிக்க நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவிலின் பிரதம குரு சிவஸ்ரீ சாம்பசதாசிவ சோமதேவக் குருக்கள் அகவை அறுபது எய்தி மணிவிழாக் காண்பதையிட்டு மகிழ்வடைகின்றேன்.

நீர்வேலி என்றவுடன் வரலாற்றுத் தொன்மையுடன் கூடிய அரசகேசரிப் பிள்ளையாரது ஞாபகம் மனக்கண் முன் விரிவது இயல்பானது. யாழ்ப்பாண அரசர் காலத்திற்குரிய கோவில் என்ற பெருமை அதில் முக்கியமானது.

நீர்வேலிக்குரிய குருத்துவப் பாரம்பரியமும் சிறப்பானது. இங்குள்ள சிவாச்சாரியப் பெருமக்கள் வேதாகம அறிவு நிரம்பியவர்கள் என்ற பொதுவான அபிப்பிராயம் உள்ளது. அந்தப் பெருமை மிக்க சிவாச்சாரிய மரபின் வழித்தோன்றலாக சிவஸ்ரீ.சாம்பசதாசிவ. சோமதேவக் குருக்கள் திகழ்கின்றார். குருக்கள் அவர்கள் தன்னுடைய பிள்ளைகளைத் தன் வழியில் குருத்துவத்திற்கு இணைத்தமை சைவத்தின் மீது இவர் கொண்டுள்ள பற்றுதலையும் குருத்துவத்தின் மீது இவர் கொண்டுள்ள அபிமானத்தையும் எடுத்துக்காட்டுகின்றன.

கிராமத்தில் நடக்கும் சமூக நிகழ்வுகளிலும் குருக்களின் பங்களிப்பு இருப்பதைக் கண்ணுற்றி ருக்கின்றேன். நீர்வேலியில் இடம்பெறும் சமூக விழாக்களில் கலந்து சிறப்பிப்பதோடு ஆசி நல்கி விழாக்கள் மாண்படைய பங்களித்து வருகின்றார்.

குருக்கள் அவர்களின் சோதிட அறிவை மக்கள் தமக்கான ஆற்றுப்படுத்தலாகக் கொண்டுள்ளனர். இதனால் திருமணப் பொருத்தம், வீட்டு நிலையம் எடுத்தல் முதலிய செயற்பாடுகளுக்கு இவரது ஆசிகளையும் ஆலோசனைகளையும் பெறுகின்றனர். இன்னும் திருமணம், வாஸ்து சாந்தி முதலிய இன்னோரன்ன செயற்பாடுகளையும் சிறப்புடன் ஆற்றி வருகின்றார்.

குருக்கள் அவர்களின் வாழ்வு சிறப்படையவும் அவரது பெருமை இன்னும் ஓங்கி வளரவும் விநாயகப் பெருமானின் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றேன். அவரது மணிவிழாச் சிறப்படைய எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*நீர்வேலி அருள்மிகு அரசகேசரிப்பிள்ளையார் தேவஸ்தான*

*பிரதம சிவாச்சாரியார் "கிரியாஞானவித்தகர்" குருமணி சிவஸ்ரீ சா.சோமதேவக்குருக்கள் ஐயா அவர்களின்*

# ஷஷ்டி அப்த பூர்த்தி விழா

நீர்வையம்பதி எனும் புனிதக்ஷேத்திரத்தில் எழுந்தருளி அருளாட்சி புரியும் அருள்மிகு அரச கேசரிப்பிள்ளையாரின் திருவருளை நிறைவாகப் பெற்று அவ்வாலயத்தின் பிரதம சிவாச்சாரியாராக விளங்கும் நாம் போற்றும் குருமணியாக விளங்கும், கிரியாஞான வித்தகர் சிவஸ்ரீ சா. சோம தேவக்குருக்கள் ஐயா அவர்களுக்கு எதிர்வரும் 24.01.2015 இல் ஷஷ்டி அப்த பூர்த்தி விழா நிகழ விருப்பதை அறிந்து பக்தியுடன் கூடிய மகிழ்வையெய்துகின்றோம்.

வேதசிவாகமங்களை மிக நுணுக்கமாகக் கற்று மிகுந்த தேர்ச்சி பெற்று எள்ளளவும் பிசகாத பக்தியுடன் கிரியைகளைப் பக்குவமாக ஆற்றி கிரியாஞான வித்தகர் என்ற பட்டத்தைத் தனதாக்கிக் கொண்டவர். இத்துடன் மட்டும் நின்றுவிடாது "அந்தணர் என்போர் அறவோர் மற்று எவ்வுயிர்க்கும், செந்தண்மை பூண்டு ஒழுகுவான்" என்ற வள்ளுவர் வாக்குக்கிணங்க வாழும் பிராம ணோத் தமராவார்.

யாம் ஐயா அவர்கள் ஆலயங்களில் ஆற்றும் கும்பாபிஷேகம் சங்காபிஷேகம் மஹோற்சவம் போன்றவற்றை நேரில் தரிசிக்கும் பாக்கியம் பெற்றவன். ஐயா அவர்கள் ஆன்மீக நெறி நலிவுற்றிருக்கும் சைவமக்கள் மத்தியில் சென்று அவர்களை ஆன்மீக நெறிப்படுத்தி ஆற்றிவரும் சேவைகளைச் சைவ உலகம் என்றும் மறக்கமுடியாது அத்துடன் நில்லாது ஆலய அறங்காவலர்களுடனும் உபயகாரர்களுடனும் வழிபடும் அடியார்களுடனும் அன்பு பண்பாகப் பழகுவது மிகச் சிறப்பானது.

ஐயா அவர்கள் ஆயிரம் பிறைகள் கண்டவராக சதாபிஷேகம் கண்டு அதற்கு மேலாகவும் பல ஆண்டுகள் இப்பிரபஞ்சத்தில் சகலஐஸ்வரியங்களையும் பெற்று வாழ்ந்து சைவ உலகுக்கு அருந் தொண்டாற்ற வேண்டுமெனவும் குருநாதருக்கு அருள்மிகு செல்வச்சந்நிதி வேலவனை மனதாரப் பிரார்த்திக்கின்றோம்.

**சிவானந்தவாரிதி**
**சிவத்திரு வ.குமாரசாமி ஐயர்**
**(இன்னிசைச் சொற்பொழிவாளர்)**

மயிலணி
சுன்னாகம்
12.02.2015.

# வாழ்த்துரை

சிவபூமி என திருமூலரால் போற்றப்பட்ட ஈழத்தின் சிரமென மிளிரும் யாழ்ப்பாணத்தின் இயற்கை வளங்கள், செழித்தோங்கும் பதிகளில் ஒன்று நீர்வேலி. இனிய நல்வாழைகளும், இன்பந்தரும் சோலைகளும், புகழ்பெற்ற ஆலயங்களும் அமையப் பெற்று தெய்வசாந்நித்தியம் நின்று நிலவும் இப்பதியிலே இல்லறம் என்னும் நல்லறவழியில் உயர்வாக வாழ்ந்து இன்று தனது வயது அறுபதில் தன் அன்பு மனைவி, பிள்ளைகள், மருமகள், பேரப்பிள்ளையுடன் ஷஷ்டியப்த பூர்த்தி விழாவை கொண்டாடும் பிரம்மஸ்ரீ கார்த்திகேய சாம்பசதாசிவ சோமதேவக்குருக்கள் அவர்களை வாழ்த்தி வெளியிடப்படும் விழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

நீர்வேலியில் அமைந்துள்ள முப்பெரும் கோயில்களில் நடுநாயகமாக விளங்கும் எமது அரசகேசரி விநாயகப் பெருமானின் நித்திய, நைமித்திய கிரியைகளை, இளம் வயது முதல் ஆற்றி வருகின்ற பேறுபெற்றவர் ஆவார். அயலவர், ஊரார், அடியவர்கள் அனைவரையும் அன்பாக அரவணைத்து நன்கு பழகி அவர்களது தேவைகளை நிறைவேற்ற தவறாதவர்.

இனிய சுபாவம், இன்சொல், சாதுரியம், கருணை, தயவு, தாட்சண்யம், கடவுள் பக்தி நிறைவாகக் கொண்ட இவர் தனது குருத்துவத்தை தவிர சோதிடம், வாஸ்துசாஸ்திர கலையையும் நிறைவாகக் கற்று தேர்ச்சி கொண்டதன் மூலம் பிரதியுபகாரம் நோக்காது, நேரகாலம் பாராது தன்னிடம் வரும் மக்களுக்கு பெரும் சேவையாற்றி வருகின்றார். அவ்வப்போது அவரது ஆக்கங்கள் பல எமது பத்திரிகைகளில் வருவதை கண்டுள்ளேன். அவரால் தொகுத்து வெளியிடப்பெற்ற நூல்களில் சில காஞ்சிமா முனிவர், வினைதீர்க்கும் விநாயகர், வாரிவழங்கிய வாரியார் மற்றும் வடமொழியில் விக்னேஸ்வர பிரதிஷ்டாவிதி, வைரவ பிரதிஷ்டாவிதி, வைநாயகம், கிரந்த அஷ்ர மாலா, சிவபூஜா கிரமம், சிவன் 33 குண்ட பூஜை ஆகும்.

கந்தபுராணம், பெரியபுராணம் ஆகியவற்றை கற்றுத்தேர்ந்தவராயினும் திருவாதவூரடிகள் புராணத்துக்கு உரை கூறுவதில் வல்லவர் ஆவார்.

பாரம்பரியமாக எமது ஆலயத்தில் பல தசாப்தங்களாக கிரியைகள் ஆற்றி வரும் குருக்கள் ஐயா அவர்கள் 1990ம் ஆண்டில் இருந்து எமது ஆலய பிரதமகுரு பதவியை அவரது தந்தையாரின் மறைவிற்குப் பின்பு ஏற்று தன் பணியை சிறப்புடன் ஆற்றி வருகின்றார். இவர் தன் இளம்வயதிலேயே தந்தையாருடனும் பெயர் பெற்ற பல்வேறு சிவாச்சாரியாருடனும் சேர்ந்து பயிற்சி பெற்று தேறி, பல ஆலயங்களினது கும்பாபிஷேக விழாக்களை தானே முன்னின்று நடாத்திவருவது பெருமைக்குரியதும், போற்றத்தக்கதுமான விடயமாகும்.

மேலும் ஐயா அவர்கள் ஐயப்பன் மீது மிகுந்த பக்தி கொண்டவர். அவர் பல முறை சபரீசமலைக்கு சென்று மகரஜோதி தர்சனம் கண்டு அருள்பெற்ற பெருமைக்கு உரியவர். ஐயா அவர்களை பல்வேறு நிறுவனங்களும், ஆலயங்களும் கௌரவ பட்டம், மற்றும் விருதுகள் வழங்கி கௌரவித்துள்ளார்கள் அவற்றில் சில

| | | |
|---|---|---|
| பிரதிஷ்டா சாகரம் | - | இந்துகுருமார் ஒன்றியம் |
| சிவாகம சாகரம் | - | நயினை நாகபூஷணி அம்மன் ஆலயம் |
| சிவாகமரத்னா | - | நீர்வை செல்லக்கதிர்காமசுவாமி கோயில் |
| கிரியா வித்தகர் | - | போயிட்டி மாணிக்கப்பிள்ளையார் ஆலயம் |
| ஆகமகலாசூரி | - | கும்பிளான் சோதிவளவுப்பிள்ளையார்கோயில் |

இன்றைய விழாவின் நாயகராகிய குருக்கள் ஐயா அவர்களின் மகன் சிவஜெயக் குருக்கள் இந்தியாவில் கற்று தற்போது ஜேர்மனியில் மயூரா முருகன் சிவாலயத்தில் குருத்துவப் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவர்க்கும்
செந்தண்மை பூண்டொழுகலால்" என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க வாழ்கின்ற குருக்கள் ஐயா அவர்கள் நீண்ட ஆயுள் பெற்று குடும்பத்தாருடன் இன்புற வாழ வேண்டும் என விநாயகப் பெருமானை வேண்டுகின்றேன்.

**ந.சிவசீலன் சமாதான நீதவான்** (J.P)
**ஓய்வு நிலை விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி,**
**நீர்வேலி வடக்கு, நீர்வேலி.**

# பெரியர் அந்தணர்

கரிய மாலினும் கண்ணுதலானிலும்
உரிய தாமரை மேலுறைவானிலும்
விரியும் பூதமோர் ஐந்தினும் மெய்யிலும்
பெரியர் அந்தணர் பேணுதி உள்ளத்தால்

-கம்பராமாயணம்

எமது இந்து சமயத்தின் கொள்கைகளை விளக்கி கூறும் புராண, இதிகாசம் போன்ற நூல்களையும், சமயத்தை வளர்த்த மகான்களின் வாழ்க்கைச் சுவடுகளையும் உற்று நோக்கும் போது அந்தணர்களை முதன்மைப்படுத்தி பேணிப்பாதுகாத்ததை காணக் கூடியதாக உள்ளது. எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அறவோறாகிய இந்த அந்தணப் பெருமக்களை திருஞானசம்பந்தப் பெருமானும் "வாழ்க அந்தணர்" என்று வாழ்த்தினார்.

இந்த வகையில் அரசகேசரி விநாயகரின் பேரருளால் தமது 60வது அகவையில் தடம் பதிக்கும் குருக்கள் ஐயா அவர்கள் அற்புதமானவர். விநாயகப் பெருமானிடம் வரும் அடியார்களின் குறைகளைக் கேட்டறிந்து சாந்திப்படுத்துவதிலும் அடியார்களின் திருப்தியிலும் மகிழ்ச்சியிலும் தானும் பூரிப்படைவதிலும் தவறமாட்டார். காணும் யாவரிடமும் அன்பும் பண்புமாக பழகுவதிலும் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர். இவரின் சிறுபராயம் முதலே அடியேனுக்கு இவரைப் பார்த்துப் பழகும் பாக்கியம் கிடைத்தது. இவரைப் பெற்று இவருடைய நல்லொழுக்கமும் பண்பும் இருந்தன.

இவருக்கு வாழ்க்கைத் துணையாக வாய்த்த ஜெயந்தி அம்மா அவர்களும் நற்குணங்களெல்லாம் அமையப் பெற்ற உத்தம மங்கையே. இல்லற தர்மத்தை நிலைநாட்டுவதில் பதிக்கேற்ற பதிவிரதையே. இந்த மணிவிழா நன்னாளில் குருக்கள் தம்பதியினர் நோய்நொடிகள் ஏதுமின்றி சகல செல்வங்களும் பெற்று பல்லாண்டுகள் வாழ வேண்டி அந்த பல்லாண்டு என்னும் பதம் கடந்த பெருமானை உளமார பிரார்த்திக்கிறேன்.

மேலும் இவரைப் பெற்றெடுத்த பெருமைக்குரிய தாயார் உடல் ஆரோக்கியம் பெற்று உள அமைதி பெறவும் மற்றும் புத்திரர்கள், புத்திரிமார், பாலகனான பேரப்பிள்ளை, மருமக்கள் யாவரும் எல்லா வளங்களும் பெற்று இன்பமாய் வாழவும் வாழையடிவாழையாக வந்த திருக்கூட்டமென விளங்கவும் அரசகேசரி விநாயகப் பெருமானை வணங்கி குருக்கள் ஐயாவின் தந்தையார் அமரர் வணக்கத்திற்குரிய சாம்பசதாசிவக்குருக்கள் அவர்களை நினைத்து அஞ்சலித்து நிறைவு செய்கின்றோம்.

வாழ்க, வாழ்க வளமுடன்

திருமதி. சரஸ்வதி நடேசன் குடும்பம்
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

# வாழ்த்துரை

நீர்வை அரசகேசரி விநாயகர் தேவஸ்தான பிரதமகுருவாக விளங்கும் சிவஸ்ரீ சாம்பசதாசிவ சோம தேவக்குருக்கள் ஜெயந்தி அம்மாள் தம்பதிகள் அறுபது அகவை நிறைந்து. ஷஷ்டியப்த பூர்த்தி வைபவம் காண்பது அறிந்து மகிழ்கிறோம்.

எமது திருமண மண்டபத்தில் நிகழும் அனைத்து சுப வைபவங்களையும் முன்னின்று நடாத்தும் குருக்கள் ஐயா எமது குடும்பத்தோடு நீண்ட உறவு பூண்டவர்.

சிறந்த பண்பு நலமும் இறை பக்தியும் கொண்ட தேவர் ஐயாவை அறியாதோர் இல்லை. தேவர் ஐயாவுடன் பேசினால் அவரது அறிவாற்றலை அறியலாம்.

தமிழறிவு கொண்ட ஐயா ஒரு நல்லாசிரியர். பல கோவில்களில் பிரதமகுருவாக மஹா கும்பாபிஷேகம் செய்தவர்.

மிகச் சிறியவயது முதல் ஐயாவை நாம் அறிந்துள்ளோம். இளமைத்துடிப்புள்ள ஐயாவுக்கு அறுபது வயதாகியது என்பதை நம்பவே முடியவில்லை. மகிழ்ச்சியாக உள்ளது.

தேவர் ஐயா அவர்களும் ஜெயந்தி அம்மாவும் இன்னும் பல நலனும் பெற்றுச் சிறப்புற வாழவும் ஷஷ்டியப்த பூர்த்தி விழா சிறப்புறவும் வாழ்த்துகின்றோம். ஐயாவின் ஆசீர்வாதங்களை வேண்டுகின்றோம்.

**திருமுருகன் சிவசுப்பிரமணியம் செட்டியார்**
(உரிமையாளர், திருமுருகன்
திருமண மண்டபம், நீர்வேலி
அவர்களும்
US.Hotel & Restaurant,. Jaffna
சமூகத்தவரும்.

# வாழ்த்துச் செய்தி

தேவ ஐயா" என அன்புடன் நாம் அழைக்கும் மதிப்பிற்குரிய சோமதேவக் குருக்கள் அவர்கள் எமது சமயத்திற்கும், சமுதாயத்திற்கும் நிறைவான பணியை ஓய்வின்றி மிகுந்த அக்கறையுடன் ஆற்றிக்கொண்டிருப்பவர். இவரது எளிமையான பேச்சும், கவர்ச்சியான புன்சிரிப்பும், கம்பீரமான தோற்றமும் அனைவரையும் அன்புடன் நேசித்து அரவணைக்கும் மாண்பும் என்னை மிகவும் கவர்ந்தவை. அன்பு, பண்பு, சமூகப்பற்று, பிறர் சொல்வதை அக்கறையுடன் செவிமடுக்கும் பண்பு என்கின்ற உன்னத இயல்புகளைக் கொண்ட இந்த அந்தணப் பெருந்தகையை வாழ்த்துவது வாழ்த்துபவர்களிற்கே பெருமை சேர்க்கும். நீர்வேலிக் கிராமத்தினதும் அரசகேசரிப் பிள்ளையார் ஆலய வரலாற்றிலும் இவரது பெயர் என்றென்றும் உச்சரிக்கப்படும்.

மணிவிழாக்காணும் இப்பெரியாரை கௌரவப்படுத்தி கிராம மக்கள் ஒன்றிணைந்து பெரு விழாவினை எடுப்பதனையிட்டு நாம் எல்லோரும் மிக்க மகிழ்ச்சியடைவதோடு, அவர் நல்ல தேகாரோக்கியத்துடன் பல்லாண்டு காலம் வாழ்ந்து எமது இந்து சமூகத்திற்குச் சேவையாற்ற வேண்டு மென எல்லாம் வல்ல அரசகேசரிப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

க.தர்மலிங்கம் J.P
உபதலைவர்,
வலி.கிழக்கு பிரதேச சபை,
புத்தூர்.

*நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் ஆலய பரிபாலன சபையினர்*

# வழங்கிய வாழ்த்துச் செய்தி

வரலாற்றுச் சிறப்புமிக்க நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோவிலில் வீற்றிருக்கும் ராஜசிம்ம கணபதியையும் வைத்தீஸ்வரப் பெருமான் உள்ளிட்ட பரிவார மூர்த்தங்களையும் மெய்தீண்டிப் பூசிக்கும் பாக்கியம் பெற்ற எமது பிரதம குரு சிவஸ்ரீ.சோமதேவக் குருக்கள் அகவை அறுபது எய்தி மணி விழாக் காண்பதையிட்டு மட்டற்ற மகிழ்வடைகின்றோம்.

அறுபது வயது ஒரு மனிதனின் வாழ்வில் ஒரு சுற்றுப் பூர்த்தியை அடையாளப்படுத்துகின்றது. எங்கள் பிரதம குரு பிறப்பு முதல் எமது ஆலயத்துடன் பிணைக்கப்பட்டவர். இவரது தந்தையார் அமரர் சாம்பசதாசிவக் குருக்களைத் தொடர்ந்து பிரதம குருத்துவப் பணியை 1990 ஆம் ஆண்டு தொடக்கம் ஏற்றுக் கொண்டு செவ்வனே மேற்கொண்டு வருகின்றார்.

கோவில் பணியோடு மாத்திரம் நிற்காது சோதிடம். வாஸ்து சாத்திரம். உளவியல் ஆற்றுப்படுத்தல் எனப் பலதிறப்பட்ட தளங்களில் எம் பிரதேச மக்களுக்கு சேவை நல்கி வருகிறார். எமது குருக்கள் கொண்டுள்ள தமிழ் மற்றும் சமஸ்கிருத அறிவும் எமது ஆலயத்திற்குப் பெருமையைத் தேடித் தருகின்றது. அவர் எம்பெருமானுக்கு மேற்கொள்ளும் பூசைக் கிரமங்கள் தனித்துவம் வாய்ந்தவை. எமது கிராமத்தவர்களிற் பலர் தமது நாளை எமது ஆலய வழிபாட்டுடனேயே ஆரம்பிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இத்தகைய ஈர்ப்பிற்கு விநாயகருடைய திருவருளும் எமது குருக்களின் குருவருளும் காரணமாக அமைந்துள்ளன எனலாம்.

சிவஸ்ரீ.சா.சோமதேவக் குருக்களின் வழியில் அவரது வாரிசுகள் உருவாக வேண்டும் என்ற வேணவா எமக்கு என்றும் உண்டு. எல்லாம் வல்ல விநாயகர் திருவருள் எங்கள் குருக்களின் நல்லெண்ண ஈடேற்றத்திற்கு வழிகாட்டவும். அவர் சகல செல்வ யோகம் மிக்க பெருவாழ்வு எய்தவும் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலன சபை,
ஸ்ரீ அரச கேசரிப்பிள்ளையார் கோவில்,
நீர்வேலி.

*சிறுப்பிட்டி மேற்கு ஞானவைரவர் ஆலயத்தின்*

# வாழ்த்துரை

நீர்வளம் நிலவளம் கொஞ்சும் நீர்வேலிப்பதியில் அரசகேசரிப்பிள்ளையார் ஆலய பரம்பரை வழி வந்து தற்போது பிரதம குருக்களாக சைவ நெறி காக்கும் தொண்டனாக சிவஸ்ரீ சோமதேவக் குருக்கள் அவர்கள் சேவையாற்றி வருவது யாவரும் அறிந்ததே.

இவர் எமது சிறுப்பிட்டி மேற்கு ஞான வைரவர் ஆலயத்தின் பூசகராக இவரது மாமனார் அமரர் வி. மாணிக்க ஐயா அவர்களின் மறைவிற்கும் பின்பு அவரின் கடமையை பொறுப்பேற்று மேற்கொண்டு வந்தார். அமரர் மாணிக்க ஐயா அவர்களின் காலத்திலேயே இவரின் தந்தையார் அமரர் கார்த்திகேய சாம்பசதாசிவக் குருக்கள் எமது ஆலய குருத்துவம் பணியை மேற்கொண்டு வந்ததும் குறிப்பிடத்தக்கது.

சில காலம் இவர் இவரது மருமகனிடம் எமது ஆலய பூசையை ஒப்படைத்த போதும் ஆலய உற்சவ காலங்களிலும் கும்பாபிஷேக காலங்களிலும் தமது குருத்துவப் பணியை எமக்கு வழங்குவது மட்டுமன்றி ஆலய வளர்ச்சிக்காக தமது ஆலோசனையையும் அவ்வப்போது வழங்கி வருவார். அத்துடன் தற்போது கடந்த ஐந்து வருடங்களாக மீண்டும் எமது ஆலய பூசையை பொறுப்பேற்று தனது மகனான சிந்துகேய சர்மா அவர்களிடம் ஆலய பூசையை ஒப்படைத்ததுடன் ஆலய குருத்துவப் பணியை தானே முன்னின்று மேற்கொண்டு வருவது நாம் செய்த பாக்யமாகும். அவர் சைவ சமய பண்புகளைக் காக்கும் குருத்துவப் பணியுடன் நின்று விடாது சோதிடக் கலையிலும் தேர்ந்து எமது கிராம மக்களுக்கு தமது சேவையை வழங்கி வருவதும் குறிப்பிட வேண்டியதொன்றாகும்.

தனது மனையாள் ஜெயந்தி அம்மா அவர்களுடன் இல்வாழ்க்கையில் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ்ந்து இன்று (24.01.2015)ல் தமது ஷஷ்டியப்த பூர்த்தி விழாவைக் கொண்டாடும் சிவஸ்ரீ சோமதேவக் குருக்கள் - ஜெயந்தியம்மா தம்பதிகள் எமது சமயத்தைக் காக்கும் குருத்துவப் பணியை தொடர்ந்து எல்லோருக்கும் வழிகாட்டியாகத் திகழ்ந்து சைவப் பண்பை வளர்க்கும் தம்பதிகளாக மேலும் பல்லாண்டு காலம் நோய் நொடியின்றி வாழ வேண்டுமென எல்லாம் வல்ல ஞானவைரவப் பெருமானை வேண்டி மனமார வாழ்த்துகின்றோம்.

**நிர்வாகம்**
**சிறுப்பிட்டி மேற்கு,**
**ஞானவைரவர் ஆலயம்.**

# உளமார வாழ்த்துகிறோம்

எமது ஆலயத்தை வழிநடாத்திச் செல்கின்ற பிரதம சிவாச்சாரியார் சோமதேவக் குருக்களின் அறுபதாவது அகவையை முன்னிட்டு வெளிவருகின்ற இந்நூலில் பரிபாலன சபைத்தலைவர் என்ற வகையில் வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெரும் உவகையடைகின்றேன். “கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்” “ஆலயந்தொழுவது சாலவும் நன்று” என்பது ஆன்றோர் வாக்கு. இறைவன் இருக்கின்ற இடம் பக்தர்களின் ஆன்மா லயிக்கின்ற இடம் என்று ஆலயத்திற்கு பொருள் கூறுவார்கள் .இவ்வாறு ஆன்மா இறைவனோடு லயிக்கச் செய்வதில் சிவாச்சாரியார்களின் பங்கு அளப்பரியது. அறிவும் அனுபவமும் கொண்ட சிவாச்சாரியார்கள் வரிசையிலே யாழ்மாவட்டத்தில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒருவர் சோமதேவக்குருக்கள் அவர்கள் எந்த ஒரு மனிதனுக்கும் துறைசார்ந்த அறிவும் அனுபவமும் அதிகரிக்கின்றபோது அவரின் ஆற்றல் மேம்படுகின்றது. இதைவிட ஒருவருடைய பண்பும் அவற்றிற்கு மெருகூட்டுகின்றது.

சோமதேவக்குருக்களின் அறிவாற்றல், அனுபவமுதிர்ச்சி, கனிவான பேச்சு, தோற்றப் பொலிவு போன்றன அவருடைய ஆளுமையைக் காட்டி நிற்கின்றன. ஒரு ஆலயம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு அதன் மகா கும்பாபிஷேக கிரியைகளை சிறப்பாக வழிநடாத்துவது அவருக்கு கைவந்த கலை. யாழ் மாவட்டத்தில் பல ஆலயங்களை சிறப்பாக வழிநடாத்துகின்ற கைங்கரியத்தையும் அவர் மேற்கொள்கின்றார். ஒரு கிராமத்தின் வளர்ச்சி அவ்வூரில் அமைந்துள்ள ஆலயத்தோடு தொடர்புபட்டது. இதனை எமது கிராமத்திலே கண்கூடாக காணமுடிகின்றது. எமது ஆலயம் குருக்கள் அவர்களினால் கும்பாபிஷேகம் செய்யப்பட்டு பூசைகள் வழிபாடுகள் சிறப்புற நடைபெறுகின்றது. அதன் பின்னால் எமது கிராமத்தில் கல்வி பொருளாதாரம் என்பன படிப்படியாக உயர்வடைவதை காணக்கூடியதாக உள்ளது.

குருக்கள் அவர்கள் ஒரு சிறந்த பேச்சாளர். அறநெறிக்கருத்துக்களை மக்கள் மத்தியில் எளிமை யாகவும் தெளிவாகவும் சொல்லக்கூடியவர். இதனூடாக சைவசமயக்கருத்துக்களை மக்கள் மத்தியில் விதைத்து நன்நெறியில் வாழ்வதற்கான நிலையை ஏற்படுத்தினார். அவரும் அவருடைய குடும் பமும் நோய்நொடியின்றி சீரும் சிறப்புமாக வாழ இறைவனைப் பிரார்த்திப்பதோடு ஆசி வேண்டி நிற்கின்றேன்.


Dr.V.**கமலநாதன்**

**தலைவர்,**

ஆலய பரிபாலனசபை,

**ஸ்ரீ விநாயகர் தேவஸ்தானம், புதுத்தோட்டம்,**

**நெல்லியடி கிழக்கு.**

# மணிவிழா வாழ்த்துச் செய்தி

பரமனை மதித்திடாப் பங்கையாசனன்
ஒரு தலை கிள்ளியே ஒழிந்த வானவர்
குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமும்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்

எமது நீர்வேலி மேற்கு எள்ளு முள்ளுக்கட்டை ஸ்ரீ ஞானவைரவர் ஆலய நித்திய நைமித்திய குருவாக விளங்குபவர் சிவஸ்ரீ சோமதேவ சிவாச்சார்யார் ஆவார்.

மிகுந்த அறிவுத்தேட்டமும் ஆளுமையும் கொண்ட சிவாச்சார்யார் அவர்களும் அவர் தம் கனிஷ்ட புதல்வன் சிந்துகேய சர்மா அவர்களும் சிறப்பான முறையில் எமது ஆலய பூஜா கர்மாங்களை ஆற்றி வருகிறார்கள்.

நாம் அறிந்த வகையில் இவரது முன்னோர்கள் யாவரும் பிராம்மணோத்தமர்களாக நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையாருக்கு வழிவழியாக திருமேனி தீண்டிப் பூஜிக்கும் தகைமை பெற்று, அறிவுக்கடலாக விளங்கினார்.

இத்தகு மரபுச் செழுமையோடு மாறாத புன்னகையோடு சிவப்பணிச் செம்மலாக விளங்கும் சிவார்சார்யர் அவர்கள் எமது ஆலயம் உள்ளிட்ட பல்வேறு திருக்கோவில்களில் பிரதமகுருவாக பல மஹாகும்பாபிஷேகங்களைச் செய்தவர்.

இவருடைய பணிகட்கு எல்லாம் துணைவியார் ஜெயந்தி அம்மாள் பெருந்துணையாக பணி செய்கிறார். இவர்களுடைய மணிவிழாவில் எமக்கு வாழ்த்துவதற்கு கிடைத்த வாய்ப்பு மகிழ்ச்சி தருகிறது.

எமது இனிய நல்வாழ்த்துக்களை கூறி வாழ்த்துகின்றோம். அவர்களின் மேலான குரு ஆசி வேண்டுகின்றோம்.

**ஸ்ரீ ஞான வைரவ சுவாமி தேவஸ்தானம்**
**எள்ளு முள்ளுக்கட்டை**
**நீர்வேலி மேற்கு,**
**நீர்வேலி.**

# வாழ்த்துரை

நீர்வேலி அரசகேசரி விநாயகர் தேவஸ்தான ஸ்தானீக சிவாச்சாரியர் தேவர்ஜயா தம்பதியருக்கு ஷஷ்டியப்த பூர்த்தி விழா நடப்பது அறிந்து மகிழ்கிறோம்.

தேவர்ஜயாவை நாம் பல்லாண்டுகளாக அறிவோம். பண்பும் அறிவு நலனும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற செழுமைமிக்க சிவாச்சாரியார் இவர்.

அதுமட்டுமன்றி, எம்முடைய ஆலய சிவாச்சாரியரின் மருகர். நெருங்கிய உறவினர். இதனாலும் இன்னும் நீர்வேலியோடு இருக்கிற பிணைப்பாலும் எம் ஆலய பணிகளிலும் கைகொடுப்பவர்.

உயர்நிகழ்வாக எம் கோவிலில் நடந்த இரண்டு மகா கும்பாபிஷேகங்களை பிரதிஷ்டா பிரதம குருவாக ஆற்றி கதிர்காம முருகனின் கருணைக்குப் பாத்திரமானவர்.

இன்றைக்கு புத்திர பௌத்திரர்களுடன் பொலிவோடு திகழும் சோமதேவக் குருக்களின் தர்மபத்தினி ஜெயந்தி அம்மையாரும் நம் முருகன் பேரில் பக்திபூண்டவர்.

இத்தகு நிறைசிவக் குடும்பத்தினரின் விழாவில் வாழ்த்த கிடைத்தது சந்தோஷம் அளிக்கிறது.

நீர்வை செல்லக்கதிர்காமத்து உறையும் ஷண்முகநாதன் திருவருளை மீண்டும் வழுத்தி எமது அன்பையும் வாழ்த்தையும் தெரிவித்து குரு ஆசி வேண்டி நிற்கின்றோம்.

அல்லல் அகற்றிடுவான் ஆறுமுகன் குமரன்
நல்லவளங்கொழிக்கும் நீர்வைப்பதி வேலன்
எல்லோர்க்கும் வாழ்வளிக்க இதயத்திருந்திடுவான்
செல்லக்கதிர்காமமெனச் சிறப்புற கோவில் கொண்டோன்

**நீர்வேலி செல்லக்கதிர்காம ஸ்வாமி தேவஸ்தானத்தினர்**

# வாழ்த்துச் செய்தி

சைவமும் தமிழும் நீடு நின்று வாழும் யாழ்ப்பாணத்தின் சீர்மிகு ஊர்களில் ஒன்றான நீர்வேலியின் வடபால் பகுதியில் எழுந்தருளியிருந்து யாவருக்கும் திருவருள் பாலித்துவரும் சிவன் பாகமாய் அமர்ந்த கருணைக் கடலாம் அருள்மிகு ஸ்ரீ பராசக்தி காளி அம்மன் தேவஸ்தானத்தின் பிரதம குருவாய் இருந்து, தெய்வகாரியங்கள் யாவற்றையும் நெறிமுறை நின்று பக்தி விசுவாசத்தோடு நிறைவேற்றிவரும், எங்கள் பெருமதிப்பிற்கும் பக்திக்கும் அன்பிற்கும் பணிவுக்கும் பாத்திரமாக இருந்து வரும் பிரம்மஸ்ரீ சோமதேவக் குருக்கள் ஐயாவின் சஷ்டியப்த பூர்த்தி வைபவ நன்னாளில் அன்னாரையும் அன்னவர்தம் பத்தினியாய் அமைந்த மாதர்குலமணியாம் ஜெயந்தி அம்மா அவர்களையும், இன்றுபோல என்றும் இன்பமொடும் நலமொடும் வாழ்க என வாழ்த்துவதில் பெருமகிழ்வு கொள்கிறோம். இறைபக்தியும் இறைபணியில் ஈடுபாடும் அடியவர் அயலவர் மற்றவர் என அனைவர்பாலும் அன்பும் கொண்ட எங்கள் குருக்கள் ஐயாவும் அம்மாவும் அவர்தம் குடும்பமும் பல்லாண்டு பல்லாண்டு வாழ வேண்டுமென வாழ்த்துவதில் நான் பெருமைகொள்கிறேன்.

வாழ்வு பெருக்கும் மதியே சக்தி,
மானிலங்காக்கும் மதியே சக்தி
தாழ்வு தடுக்கும் சதிரே சக்தி
சஞ்சலம் நீக்குந் தவமே சக்தி.
வீழ்வு தடுக்கும் விறலே சக்தி.
விண்ணையளக்கும் விரிவே சக்தி
ஊழ்வினை நீக்கும் உயர்வே சக்தி
உள்ளத்தொளிரும் விளக்கே சக்தி

பாரதி-

**பராசக்தி கோவில் தர்மகர்த்தா**
**நீர்வேலி வடக்கு,**
**நீர்வேலி.**

# வாழ்த்துரை

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் தேவஸ்தான பிரதம குருக்களும், எமது ஆலய சிவாச்சாரியருமாகிய பிரம்ம ஸ்ரீ நடராஜக் குருக்கள் சோம தேவக்குருக்கள் 2015ம் ஆண்டு தைத் திங்கள் 24ஆம் நாளன்று அகவை அறுபதையெய்தும் இத்தினத்தில் எமது ஆலயம் சார்பாகவும் ஆலய அடியார்கள் சார்பாகவும் வாழ்த்துவதில் பெருமிதமடைகின்றோம்.

எமது ஆலயத்திலும் நீர்வையம்பதி தேவஸ்தானங்களிலும் இவரது சிவப்பணிகள் தொடர்ந்து பல்லாண்டு காலம் சிறப்புற்று விளங்குவதற்கும் இவர் தேக ஆரோக்கியத்துடன் சீரும் சிறப்புடன் நீடூழி வாழ்வதற்கும் எல்லாம் வல்ல ஞான வைரவர் துணை கொண்டு வாழ்த்தி நிற்கின்றோம்.

வாழிய நீடூழி! வளர்க உம் இறைபணி!

**நீர்வேலி மத்தி பூவரசடி**
**ஞான வைரவர் தேவஸ்தானம்**
**நீர்வேலி.**

# வாழ்த்துச் செய்தி

பிரதிஷ்டா பிரதம குரு சிவஸ்ரீ சா.சோமதேவக்குருக்கள் அவர்களின் 60 ஆவது திருக் கலியாணம்.

நீர்வேலி மேற்கு ஸ்ரீ மாலை வைரவர் பெருமான் கோவிலின் 01.02.2013 இல் நடைபெற்ற மகா கும்பாபிஷேகம் திருவிழாக்களிலும் பிரதம குருவாகவும் விளங்கிய அவர்கள் ஆலயங்களில் நடைபெறுகின்ற, நித்திய நைமித்திய காமிக பூசைகள் நடைபெறும்போது அங்கே வருகின்ற அடியார்கள் கூட்டத்திற்கும் குறிப்பாக இளஞ் சமுதாயத்தினருக்கும் ஆலய பிரதம குருவாக ஒரு சிறு நேரமாவது சமய ஒழுக்கலாறுகளைப் பற்றி உபந்நியாசம் செய்தும் திருவிழாக் காலங்களில் விசேட உரையாற்றி மக்களை நல்வழிப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டும் வருவதை நாம் மறப்பதற்கில்லை. எனவே இன்றைய காலகட்டத்தில் ஆலய சமூகத்திற்கு மாபெரும் பணியாற்றி வருகின்ற சிவஸ்ரீ சா.சோமதேவக்குருக்கள் ஐயா அவர்களின் 60ஆவது திருக்கலியாண நாளிலே சகல சௌபாக்கியங்களுடன் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

நன்றி.

**பரிபாலன சபையினர்**
**ஸ்ரீ மாலை வைரவர் கோவில்**
**நீர்வேலி மேற்கு.**

*அருள்மிகு அரசகேசரிப்பிள்ளையார் தேவஸ்தான பிரதம சிவாச்சாரியார்*

*கிரியா ஞான வித்தகர் சிவஸ்ரீ சா. சோமதேவக் குருக்கள் ஐயா அவர்களின்*

# அகவை அறுபதில் தடம் பதிக்கும் ஷஷ்டி அப்த பூர்த்திவிழா

தேவஸ்தான பிரதம சிவாச்சாரியார் ஐயா அவர்களுக்கு 24.01.2015ல் ஷஷ்டி அப்த பூர்த்தி விழா நடைபெற இருப்பதைச் செவியுற்று மிகுந்த மகிழ்ச்சியடைகின்றோம். ஐயா அவர்கள் வேத சிவாக மங்களை மிகச் செம்மையாகக் கற்று அவ்வழியொழுகி பல கும்பாபிஷேகங்களையும் உற்சவங் களையும் ஆற்றிச் சைவமக்களின் உள்ளத்தில் நிலையான இடத்தைப் பெற்றுக்கொண்டவர்.

எமது கிராமமாகிய போயிட்டி நீர்வேலி வினோபாஜி கிராமத்தில் எழுந்தருளி அருளாட்சி புரியும் அருள்மிகு ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தை ஸ்தாபிப்பதில் பெரும்பங்கு கொண்டு அவ்வாலய வளர்ச்சிக்கு அயராது உழைத்துக் கொண்டிருக்கும் ஐயா அவர்களின் சேவையை நாம் என்றும் மறக்க முடியாது. எமது ஆலயத்தின் பிரதம குருவாக விளங்கி. நித்திய நைமித்திய கிரியைகளைச் சிறப்பாக ஆற்றியும் அவ்வப்போது ஆலயம் சம்பந்தமாக பல ஆலோசனைகளையும் வழங்கி எமது சமூகத்துக்கு அருந்தொண்டாற்றி வருவது நாம் செய்த பாக்கியமாகும்.

ஐயா அவர்கள் நூற்றாண்டுகளுக்கு மேலாக வாழ்ந்தும் இன்னும் பல கும்பாபிஷேகங்க ளையும் மஹோற்சவங்களையும் ஆற்றி சைவ உலகத்துக்கு அருந்தொண்டு புரிந்து சகல சிறப்புக் களுடனும் வாழ வேண்டுமென்று எல்லாம் வல்ல அருள்மிகு மாணிக்கப்பிள்ளையாரை மனதார வேண்டுகின்றோம்.

ஸ்ரீமாணிக்கப்பிள்ளையார் ஆலயம்,
தர்மகர்த்தா சபையும் உபயக்காரர்களும்,
வினோபாஜி கிராமம் போயிட்டி,
நீர்வேலி.

# உளமார வாழ்த்துகிறோம்

நீர்வையம்பதியின் வரலாற்றுச் சிறப்புமிக்க அரசகேசரி விநாயகர் ஆலயத்தின் பிரதமகுரு சிவ.ஸ்ரீ. சோமதேவக் குருக்கள் அவர்கள் தமது 60வது அகவையில் காலடி பதிக்கும் இன்றைய இந்த நல்ல நாளிலே, நீர்வேலி கிழக்கு முழக்கப்பிட்டி நாச்சிமார் அன்னையின் கும்பாபிஷேக புனருத்தாரண பணிகளை தன் மனமுவந்து செவ்வனே நிறைவேற்றியது மாத்திரமன்றி வருடா வருடம் நடைபெறுகின்ற அலங்கார உற்சவம், வைகாசி விசாகப் பொங்கல் உற்சவம் மற்றும் நித்திய கிரியைகளையும் சிறப்பாக ஆற்றி அன்னையின் அடியவர்க்கு அருள்நிதியாக ஒளி விளக்காக விளங்கும் சிவஸ்ரீ.சோமதேவக் குருக்கள் அவர்கள் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் பெற்று அவர்தம் குடும்பத்தினரோடு பல்லாண்டு வாழ நாச்சிமார் அன்னையின் பாதம் பணிந்து உளமார வாழ்த்துகிறோம்.

நீர்வேலி முழக்கப்பிட்டி
நாச்சிமார் ஆலய
நிர்வாக சபையினர்.

*கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி அதிபர்*

*செந்தமிழ்ச் சொல்லருவி ச. லலீசன் அவர்கள் நல்கிய*

# நல்வாழ்த்துப் பா

(நேரிசை வெண்பா)

தன்னலமே நோக்காது தரணியில் நீர்வேலி
நன்மை பெறவெண்ணி நாளும்வாழ் - பொன்மனமார்
தூயவராம் சோமதே வக்குரு மண்மகிழ
ஆய மணிவிழாக் காண்க

கல்விக் கலையழகும் காவியச் சொல்லழகும்
செல்வமாய் வேதா கமவழகும் - தொல்புகழாய்
வாய்த்த குருமணியை வாயார வாழ்த்துவோம்
பூத்த மலரெடுத்து நாம்

பன்னரும் பாங்குடன் பூசனை ஆற்றியும்
சொன்னயத்தால் சோதிடங் கூறியும் - எண்ணரும்
கும்பா பிஷேகங்கள் பண்ணிய பேராளர்
நம்மவராம் தேவகுரு வாழ்க

செங்கை குவித்துநல் சீரிய மந்திரங்கள்
பொங்கும் பாவமுடன் காண்பவர்கள் - தங்கை
குவித்தெங்கள் தேவரையே தொழு திடுவர்
நவிலுவர் 'பிள்ளையார்' தான்

பல்லாண்டு வாழ்க பணிநலம் ஓங்கிநிதம்
சொல்லால் மலரெடுத்துச் சேவித்தேன் - வல்லவரே
எங்கள்மண் ஏந்தலே நீர்வைப் புகழ்சேரப்
பொங்கு மணிவிழாக் காண்க

# வாழ்த்துச் செய்தி

நீர்வேலி அரசகேசரி விநாகயர் தேவஸ்தான பிரதம குருவாகிய சிவஸ்ரீ சாம்பசதாசிவ சோமதேவ சிவாச்சாரியார் ஜெயந்தி தம்பதிகளின் ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி வைபவ நிகழ்விற்கு வாழ்த்துகின்றோம். எமது ஆலயத்தில் ஆகம கிரியைகள், திருவிழாக்கள், விசேட பூஜைகள், நித்திய நைவேத்திய கிரியைகள் அனைத்தையும் திறம்பட நடாத்தி இளைஞர்கள், பெரியோர்கள், சிறுவர்கள் அனைவரையும் சரியான முறையில் நெறிப்படுத்தி சிறந்த ஆலோசகராகவும் ஒரு வழிகாட்டியாகவும் திகழ்ந்து வருகிறார். இவரது மணிவிழா சிறப்பாக நடைபெறுவதற்கு வாழ்த்துகின்றோம். மேலும் இவர் தனது சமூக சேவைகளை தொடர்ந்து மேற்கொண்டு அரசகேசரி விநாயக பெருமானின் ஆசியுடன் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி வாழ இளைஞர்களாகிய நாங்கள் மனதார வாழ்த்துகின்றோம்.

**நீர்வேலி அரசகேசரி பிள்ளையார் கோவில்,**
**இளைஞர் சமூகத்தினர்.**

உ
ஸ்ரீ ராம ஜெயம்

# ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி வைபவ அழைப்பிதழ்

## (மணிவிழா)

அன்புடையீர்!

நிகழும் ஸர்வ மங்களம் பொருந்திய ஜய வருடம் தைத்திங்கள் 10ஆம் நாள் (24.01.2015) சனிக்கிழமை பூர்ப்பாதி நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் முற்பகல் 7.00 மணிக்குமேல் வரும் சுபமுகூர்த்த சுபவேளையில் எமது பெற்றோர்

"பாரத்துவாஜ ஹோத்திரம்"

சிவஸ்ரீ சாம்பசதாசிவ சோமதேவ சிவாச்சாரியார் ஜெயந்தி தம்பதிகளின்

(ஸ்தானிக சிவாச்சாரியார், நீர்வேலி அரசகேசரி விநாயகர் தேவஸ்தானம்)

**ஷஷ்டியப்த பூர்த்தி வைபவம் நீர்வேலி அரசகேசரி விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெற சங்கராச்சாரிய சுவாமிகளின் குருவருளுடனும் அரசகேசரி விநாயகரின் திருவருளும் கைகூடியுள்ளது.**

23.01.2015 வெள்ளிக்கிழமை காலை விசேட கணபதி ஹோமம், மாலை உதகசாந்தி ஜப ஹோமம்
24.01.2015 சனிக்கிழமை காலை ஷஷ்டியப்த பூர்த்தி, மாங்கல்ய தாரணம் நடைபெறும்.

எனவே அத்தருணம் தங்கள் இஷ்ட மித்திர பந்துக்களுடன் குடும்ப சமேதராக வருகைதந்து விழா தம்பதிகளை கௌரவிக்குமாறும், தொடர்ந்து விருந்துபசாரத்திலும் கலந்துகொண்டு எங்களையும் மகிழ்விக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அரசகேசரிப் பிள்ளையார் கோவிலடி,
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.
தொலைபேசி : 021 2230578

ஸுபம்

இங்ஙனம் தங்கள் நல்வரவை இன்றே விரும்பும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள் மற்றும் உறவினர், நண்பர்கள்.





திருமணத்தின் போது







விழா நாயகன் அரச கேசரிப் பிள்ளையார்
கோவிலில் முதன் முதல் கொடியேற்றல்



விழா நாயகரின் பாராட்டு விழா

# நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவில் சம்புரோக்ஷண கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

சிவநேயச் செல்வர்களே!

நிகழும் ஆங்கீரச ஸ்ரீ ஆவணி மீ 23ந் உ(07.09.1932) புதன்கிழமை காலை உதயம் 6 மணிக்கு மேல் சிங்கலக்கின சுபமுகூர்த்தத்தில், குறித்த அரசகேசரிப் பிள்ளையாருக்குச் சம்புரோக்ஷண கும்பாபிஷேகம் நடைபெறும்.

**கிரியா கால அட்டவணை**

ஆங்கீரச ஸ்ரீ ஆவணி மீ

18ந் தேதி வெள்ளிக்கிழமை பகல், கர்மாரம்பம், அனுஞ்ஞை, இரவு, கிராம சாந்தி, வாஸ்துசாந்தி

19ந் தேதி சனிக்கிழமை பகல் நவக்கிரகசாந்தி, மிருத்சங்கிரகணம், இரவு அங்குரம்

20ந் தேதி ஞாயிற்றுக்கிழமை ரக்ஷாபந்தனம், இரவு யாகாரம்பம்

21ந் தேதி திங்கட்கிழமை காலை அஷ்டபந்தனம், எண்ணெய் சாத்துதல்

23ந் தேதி புதன்கிழமை உதயம் கும்பாபிஷேகம்

அன்று முதல் பதினைந்து தினம் வரை அலங்கார உற்சவம் நடைபெறும்.

**சு. இராமசாமிக் குருக்கள்**

**கோயில் ஆதீனகர்த்தர்**

# Arasakesari Pillaiyar Temple
# Neervely Jaffna

This temple is situated about a mile to the west of the sixth mile post on the Jaffna – Pt. pedro road. It bears the name of a distinguished person of the court of pararajasekaram. King of Jaffna (1478 – 1519). Pararajasekaram was one of the most successful Kings of Jaffna and during his reign art, learning and culture flourished. The King's brother Segarajasekeram, an eminent scholar, invited poets and learned people from India and held discourses. Arasakesari, a nephew of the king was an eminent Sanskrit scholar who translated Kalidasa's Sanskrit classic entitled "Raguwamsam" into Tamil. He is said to have done this, sitting on the banks of the Nayan Mar Kaddu Kulam in Nallur, There was yet another Arasakesari who ruled as regent (from 1615 to 1617) but met with an untimely death.

A publication made by one A.S.Cumaraswamy, copy of which is available with the chief priest Sri Samba Sathasiva Kurukkal of the temple, relates how this temple became to be founded. During the era mentioned above, when the Nallur – Neervely region enjoyed its golden age, it was revealed in a dream that there was a spring situated on the "Rasa Veethy" the waters of which were a very sacred theertham. The King had the "Rasa Veethy" a roadway running from Nallur North – wards to be examined and the sacred spring was located,and a "theertham" was built. By the side, of course a Vinayaka temple was founded. But the celebrated Arasekesari Pillaiyar Kovil of that era which enjoyed Royal patronage has all been lost, due to domolition by foreign invaders in the seventeenth century.

However, subsequently, in 1800, it is said, that one Kadirgamar Iyampillai took the initiative to build a shrine of some sort which later in 1873, Sri Cumarasamy Kurukkal, grandfather of the present Kurukkal made into a proper agamic Vinayakar Kovil. A Board of Trustees took charge of the temple in 1949 and have made several improvements and additions, An elaborate ornamental Gopura Vasal, found at the entrance, was constructed in 1959, The temple is often referred to as just "Sempaddu pillaiyar Kovil"

Apart from the moolasthana Vinayaka Moorthy, there are shrines of the sacred Sivalingam and Ambal. Subramaniyar, Navakgrahams and also of course of vairavar.

The temple is well administered today and regular pujas and other obser vances are made and monthly Sathurthi festivals held. The annual festival commences with the avany sathurthy in August and continues for 12 days.

A notable feature is that the above "theertham" occupies the sixth place in a long list of sacred theerthams of the Island.

Arumugam.S "Ancient Hindu Temples of Sri lanka"

Colombo – 1980

**Ancient Hindu Temples in Ceylon**

For lack of space many old temples of Jaffna have not been marked in the map. Besides there may be several other temples in Ceylon that ought to find a place in the map. but only those whose antiquity is definitely known are mentioned. Except No 45 all the rest in the list are more than four hundred years old or shrines once flourished and late went to ruin.

There are innumerable devales in Sinhalese areas dedicated to Vishnu, Skanda, Aiyanar and Pattini. They are not included in this list. Each village has its devale and therefore it is impossible to mark all of them in map of this size. As the Vishnu temple at Dondra is a popular one, and as the rites and ceremonies at the temple until its destruction by the portuguese were in accordance with Hindu Agamic Principles, it has been included in the list.

| | | | |
|---|---|---|---|
| 1. | Kandaswamy Temple | - | Mavittapuram |
| 2. | Naguleswaram or Thiruthambaleswaram | - | Keerimalai |
| 3. | Sambeswaram | - | Mathagal (Little trace) |
| 4. | Vishnu Temple | - | Ponnalai |
| 5. | Nagapooshany Amman Temple | - | Nainativu |
| 6. | Arasakesari Pillaiyar Temple | - | Neervely |
| 7. | Anganamai Kadavai | - | Kanterodai |
| 8. | Kailaya Nathar Temple | - | Nallur |
| 9. | Kandaswamy Temple | - | Nallur |
| 10. | Varivanaeswaram | - | Chavakachcheri |
| 11. | Vishnu Temple | - | Vallipuram |
| 12. | Nagathambiran | - | Nagarkovil |
| 13. | Uruthirapurieswaram | - | Urithirapuram |
| 14. | Thanthontryeswaram I | - | Odduchuddan |
| 15. | Kannakai Amman Temple | - | Vattapalai |
| 16. | Kumarapuram | - | Mullaitivu |
| 17. | Temple to Iswara | - | Kachchilai Madu |
| 18. | Kovil Kaadu | - | Vavunikkulam (Ruins) |
| 19. | Temple to Iswara | - | Panangamam (Ruins) |
| 20. | Temple to Ganesha | - | South of Kalmunai |

| | | | |
|---|---|---|---|
| 21. | Aiyanar Temple | - | Vellankulam |
| 22. | Rajaraja Isvarattu Mahadevan Kovil | - | Matota |
| 23. | Tiruvirameswaran Udaiyar Mahadevan Kovil | - | Matota (No trace) |
| 24. | Kandaswamy Malai (Girikanda cetjya ) | - | Tiriyay |
| 25. | Pillaiyar Temple | - | Omantai |
| 26. | Temple to Iswara | - | Padawiya (Ruins) |
| 27. | Santhirasegaram II | - | Cheddikulam |
| 28. | Asuvagiri | - | Kudiramalai (Ruins) |
| 29. | Temple to Iswara | - | Anuradhapura (Ruins) |
| 30. | do do | - | do (Ruins |
| 31. | Thenkailasam | - | Kantalai |
| 32. | Temple to Lord Konesar | - | Tambalagamam |
| 33. | Koneswaram Temple | - | Trincomalee |
| 34. | Nagara Kali | - | Trincomalee |
| 35. | Temple to Parameswara | - | Tirukarasai (Ruins) |
| 36. | Chitra Velauthaswamy | - | Verugal |
| 37. | Temple to Vishnu | - | Pomparippoo (Ruins) |
| 38. | Nachchiamman Kovil | - | Kalpitiya(Ruins) |
| 39. | Vikrama Cala - Mega - Iswara | - | Budumuttava (Ruins) |
| 40. | Manvari" Temple to Iswara | - | Northern bank of the Deduru Oya (Tottering state) |
| 41. | Munneswaram | - | Chilaw |
| 42. | Siva Devale No.1 | - | Polonnaruwa (Ruins) |
| 43. | do do No.2 | - | do |
| 44. | Temple to Lord Siva | - | Erakavilla (Eravur) Destroyed by mahasen |
| 45. | Thanthontryeswaram II | - | Kokkaddychcholai |

*Perhaps this is one of the Hindu temple destroyed by mahasen in the fourth century - on the temple sites he built viharas. Hence this confusion*

| | | | |
|---|---|---|---|
| 46. | Iswara Temple | - | Padawita, Matale South (Ruins) |
| 47. | Nanchundan (Iswara) | - | Negombo (No Trace) |
| 48. | Kamachchy ( Iswary) | - | Negombo (No Trace) |
| 49. | Temple to Lord Siva | - | Kotte (No Trace) |
| 50. | Berindi Kovil (To Lord Parameswara) | - | Sitawaka (Ruins) |
| 51. | Sivanolipadam (Sri Pada) | - | Adam's Peak |
| 52. | Temple to Lord Ganesha | - | North of kalutara (No trace) |
| 53. | Shrine to goddess kali | - | Bemtota |
| 54. | Temple to pillaiyar | - | Devinuvara (No Trace) |

55. Temple to Vishnu - Devinuvara
56. Temple to lord santhirasegaram In later times it was Know as Nagarisa - Dondra Head (Ruins)
57. Kathirgamam - Kataragama
58. Temple to Lord Skanda - Okanda (Okandamalai)
59. Temple to Iswara (Brahmanagama of ancient times) destroyed by mahasen in the fourth century.
60. Temple to Skanda - Tirukovil
61. Temple to lord siva - Amparai (No Trace)
62. Kandaswamy Temple - Mandur

***Ruins of hindu temples***

1. Komputukki
2. Mara-illuppai
3. Kuravil Kovil (Near Puthukkudiyiruppu)
4. Kanniya Kovil (Saptamarikas) Mannakandal
5. Pandarakulam
6. Madukanda
7. Karaitivu (Puttalam District)
8. Anuradhapura
9. Polonnaruwa

- *The pillar inscription that is in the amparai kachcheri reveals the existence of a temple to siva before 700 A.C. some derive the word amparai from ambal" (consort of siva)*

**Reference:**


- Navaratnam C.S. "A Short History of Hinduism in ceylon"
- Sri Sanmuganatha Press, Jaffna. 1964 (Page 87-89)

# அருள்மிகு ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் ஆலய வரலாறு

நாடெல்லாம் ஆலயம் அமைத்து, ஆன்மீக வாழ்விற்கு வழிகாட்டிச் சிறப்புடன் வாழ்ந்தனர் எம் முன்னோர். அவர்கள் எமக்கென விட்டுச் சென்ற பழம்பெரும் பாரம்பரியங்களை அருமையாகப் பேணிப் பொலிவுறக் காப்பது எம் தலையாய கடமை அன்றோ! இவ்வுணர்வினையே மகாகவி பாரதியாரும் தம் பாடல் ஒன்றில் :

"எந்தையும் தாயும் பிறந்து வளர்ந்து இருந்தது இந்நாடே:
அவர் முந்தையராயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்ததும் இந்நாடே
அவர் சிந்தையில் ஆயிரம் எண்ண மிளிர்ந்து சிறந்தும் இந்நாடே
அதை வந்தனை செய்து மனத்திலிருத்தி
என் வாயுற வாழ்த்தேனோ
இதை வந்தே மாதரம், வந்தே மாதரம்
என வாழ்த்தி வணங்கேனோ"

என எடுத்தியம்பியமை எம் உள்ளத்தை உருகவைக்கின்றது!

எம் கிராமத்தின் கண் நடுநாயகமாய் எழுந்தருளி அருள்பாலிக்கும் அருள்மிகு ஸ்ரீஅரசகேசரிப்பிள்ளையார் ஆலயமும் பழமை -பெருமை -புதுமைக் குரியது. இன்று அதன் புனித மகாகும்பாபிஷேகப் பெருவிழா கோலாகலமாக நடைபெறுகின்றது. இந் நூற்றாண்டில் இப்புண்ணிய நிகழ்வு நான்காவது முறையாக நிகழ்கின்றது. முன்னைய விழாக்கள் முறையே 1932, 1951, 1973 ஆகிய ஆண்டுகளில் இனிதே நிகழ்ந்தன.

எம் மானிலத்தின் தொன்மையான 12 சைவ ஆலயங்களில் இதுவு மொன் றெனத் தரமான வரலாற்று நூல்கள் சான்று பகருகின்றன. இதன் ஸ்தாபிதம் 16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அல்லது 17 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் அமையப்பட்டதென அறியப்படுகின்றது. மேலும் 1792இல் அன்றைய அரசினரின் பதிவேட்டில் இவ்வாலய விவரங்களும் உள. எது எவ்வாறாகவிருப்பினும், இவ் வாலயம் மிகத் தொன்மைமிக்கது, அற்புதமானது, அடியவர்க்கெல்லாம் கண் கண்ட தெய்வமாய், அன்னவர் குறை களைந்து அருள்சுரக்கும் 'கற்பகம்' ஆனது.

ஆலயத்தின் திருமஞ்சன தீர்த்தம் தான்தோன்றியானது. அவ்விசேடத்தை விளக்கும் வகையிலேயே பிள்ளையாரின் திருவுருவம் எழுந்தருளப்பட்டதாகும். தீர்த்தக்கிணற்றின் அமைப்பு, உருவம், ஆழம் நீரின் புனிதம் ஆகியவற்றினைப் பார்ப்போர், சுவைப்போர் வியந்தே நிற்பர்!

தமிழ் மன்னன் பரராசசேகரன் மைத்துனன் -மன்னன் பண்டாரத்தின் முதன்மந்திரி அரச கேசரிக்கும் இவ்வாலயத்திற்கும் ஏதோ ஒரு வகையில் இறுகிய தொடர்பின் காரணமாகவே இதனை ஸ்ரீ அரசகேசரிப்பிள்ளையார்' என அழைக்கப்பெற்றதென ஒரு கர்ணபரம்பரைக் கதையுமுண்டு.!

ஆலய பரிபாலனம் அதன் ஆரம்பம் முதல் 1879 வரை வழிபாடாற்றியோராலும், 1880-1893 வரை அமரர் ஸ்ரீ மான் கதிர்காமர் ஐயம்பிள்ளையென்ற சிவபுண்ய சீலராலும் 1894-1903 வரை அக்கால ஆலய குருவினாலும், 1904-1906 வரை எழுவர் கொண்ட அடியவர் குழுவினாலும், 1907-1949 வரை அப்பாசாமிக்குரு என மக்களால் பெரிதும் மதிக்கப்பட்ட ஆலயக்குரு, சிவஸ்ரீ சுவாமிநாத-இராமசுவாமிக் குருக்களாலும் பல்வேறு இடர்கள், தளர்வுகள், மத்தியிலும் பரிபாலிக்கப்பட்டு குருக்கள், அவர்கள் 1947இல் அமரரானதும், ஆலயப்பொறுப்பினை 1949இல் சட்டபூர்வமாக அமைக்கப்பட்ட அறங்காவல் சபையினரிடம் ஒப்படைக்கப்பெற்று, அன்று முதல் இன்று வரை காலத்திற்குக் காலம் தெரிவு செய்யப்படும் பரிபாலன சபையினரால் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. பரிபாலன சபையினர் ஆலயத்தின் பரிணாம வளர்ச்சியில் அதன் பழமை குன்றாது பல, பல, புனித புதிய பணிகளை சிறப்புடன் ஆற்றி வருவதைப் பலருமறிவார்.

சைவ ஆலயங்களில் நிகழும் சகல சிறப்பு விழாக்களுடன், வருடாந்த உற்சவம் ஆண்டு தோறும் ஆவணிச் சதுர்த்தியன்று கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் பெருவிழாக்கள் தொடர்ந்து நடைபெற்று பௌர்ணமி தினத்தில் தீர்த்தோற்சவத்துடன் இனிதே நிறைவு பெறும். ஆலயப் பிரதம சிவாச்சாரியராக சிவஸ்ரீ கார்த்திகேய சாம்பசதாசிவக் குருக்களும் அவரின் புத்திரர் சிவஸ்ரீ சோமதேவக்குருக்களும் தம் தந்தையாருக்குத் துணையாயுமிருந்து தம் அரனார் தொண்டினைப் பக்தி சிரத்தையுடன் ஆற்றி வருகின்றனர்.

இவ் அறப்பணிக்கு அடியார் திருக்கூட்டமும் கொடை வள்ளல்களும் மூல வேராக அமைந்து. காலந்தோறும் கண்துஞ்சாது கருமமே கண்ணாய் நின்று கணபதிக்கன்பு செய்து தொண்டாற்றிய வண்ணமிருக்கின்றனர்.

இவ்வேளை, சீலமிகு சீர்த் திருத்தொண்டாற்றி இறைபதமடைந்த இனியவர்களையும் நாம் நன்றி உணர்வுடன் நினைவு கொள்வோமாக. விநாயகர் திருத்தொண்டில் தம்மை முழுமையாக அர்ப்பணித்த முன்னைய முகாமையாளர்கள், அறங்காவல் உறுப்பினர்கள், அவர் தம் பணிகளை உளமார வாழ்த்திப் போற்றும் வேளை, ஆலயத்தின் பாரிய பணிகளில் அவற்றையெல்லாம் அசுர வேகத்தில் நீதி, நிதானம் தவறாது தன் அபார ஆளுமையுடன் 1959 இல் கோபுர மண்டபமமைத்தும், தென்னிந்திய சிற்பாசாரிகளைக் கொண்டு வியப்புமிகு சித்திரத்தேரினை 1967இல் உருவாக்கியும், நந்தவனமமைத்தும், பழைய வாகனங்களைப் புதுப்பித்தும், புதிய பல ஆக்கியும், மேலும் ஆலயத் தேர் மண்டபம் போன்ற பலதரப்பட்ட பணிகளை எவரும் ஏவாவண்ணம் உழைத்து இவற்றிற்கெல்லாம் வேண்டிய நிதியினைப் பெற இந்திய முன்னணிப் பாடகர்களை அழைத்து இலங்கையின் பல பாகங்களில் இன்னிசை நிகழ்வுகள் நடத்தி நிதி திரட்டியும்,பக்த கோடிகளின் அன்பளிப்புடனும்

குறிப்பாக கொடைவள்ளல், மலாயன் பென்சனர் அமரர் ஸ்ரீமான் காசிப்பிள்ளை செல்லையாவினதும் அவர் தம் தர்மபத்தினியார் அமரர் பொன்னம்மாவினதும் பாரிய நிதி உதவியுடனும் சித்திர வேலைப்பாடுகளுடன் கூடிய பிள்ளையாரின் இரதத்தைப் பலரும் வியக்கும் வகையில் அமைக்க உழைத்த அமரர் கனகசபாபதி வேலுப்பிள்ளை கனகரத்தினம், சமாதான நீதவான் போன்றவர்களின் தொண்டினை எம் சமூகம் என்றுமே போற்றக் கடைப்பாடுடையது.

அண்மையில் 1992 இல் முருகப் பெருமானுக்கும் இரதமொன்றினை அடியவர் பொருளுதவியுடன் தன் முழுநேரத்தையும் அர்ப்பணித்து அமைத்து முடித்த பெருமைக்குரிய, அறங்காவல் சபையின் செயலாளர், அமரர் வேலுப்பிள்ளை சின்னத்தம்பியின் தொண்டினையும் நன்றியுடன் நினைவு கூறுகின்றோம்.

ஆலயம் அருள் பொழிய, அடியவர்பால் அனுக்கிரகிக்க, முப்போதும் திருமேனி தீண்டி, நித்திய நைமித்திய தொண்டினைப் பக்தர்கள் பரவசமடையுமாறு தொண்டாற்றும் அந்தணப் பெரியோர்களையும், காலை, மாலை, உச்சி தோறும் தம்மை மறந்து தொண்டாற்றும் பக்தர்களையும் கரம் கூப்பி வணங்குவோமாக.

### குங்குமம் தரித்தல்

- சிவப்புநிறக் குங்குமத்தையே பெண்கள் இட்டுக் கொள்ளவேண்டும். மோதிரவிரலால் மட்டுமே குங்குமம் இட்டுக் கொள்வது சிறப்பு. திருமாங்கல்யம், நெற்றி, தலை வகிடின் ஆரம்பம் ஆகிய மூன்று இடங்களிலும் பெண்கள் குங்குமம் இட்டுக் கொள்ள வேண்டும். இந்த இடங்களே ஸ்ரீலட்சுமி உறையும் இடங்கள்.
- இடது நாசியிற் சுவாசம் இருக்கும்பொழுது பெண்கள் குங்குமம் இட்டுக்கொண்டால் மாங்கல்ய விருத்தி ஏற்படும். பெண்கள் சிறுவயது முதல் மஞ்சள் பூசி குளிப்பது ரோம வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும். ஆனால் அதிகமாகப் பூசினால் விரைவில் முதுமை ஸ்ரீயான தோற்றத்தைக் கொடுக்கும் எனவே அளவுடன் மஞ்சள் பூசிக் குளிக்க வேண்டும்.

# பிரம்மஸ்ரீ சாம்பசதாசிவக்குருக்கள் சோமதேவக்குருக்கள் அவர்களின் குரு பரம்பரை

பிரம்மஸ்ரீ கார்த்திகேசக் குருக்கள் சாம்பசதாசிவக் குருக்கள் அவர்கள் நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவிலின் நித்திய நைமித்தியக் கடமை களைப் பொறுப்பேற்று ஏறக்குறைய அரைநூற்றாண்டுகளுக்கு அண்மையாய் இருக்கும்.

கோபுர கலசத்தில் சூரியஒளி படரும் போது ஏற்படுகின்ற ஒளிப்பிரவாகம் போன்றது அன்னாரின் தேககாந்தி, தங்கநிறமும், தங்க விமானத்தில் நிலாக்காய்ந்ததையொத்த பிள்ளைச் சிரிப்பும் தண்ணளியான பேச்சும், அண்டியவரை அன்போடு உபசரிக்கும் பண்பும் சீரிய ஒழுக்கமும், உயர்ந்த பண்பும் அவரை ஒரு ஆதர்ச சிவாச்சாரியாராகக் காட்டப்போதுமானவை. அவரது உருவத்திலே சிவாச்சாரிய லட்சணங்கள் மண்டிக்கிடக்கின்றன. இந்த மாதிரியான சீரிய லட்சணங்கள் எல்லாம் தன்னகத்தே கொண்டிருந்தமையாலேயே அரசகேசரிப் பெருமான் அவரைத் தமக்கு அர்ச்சனை செய்யும் படி வைத்துக் கொண்டார்.

இவர் சிறுவயதிலே. மாயவரத்திலிருந்து இங்கு வந்தபோது கோப்பாயில் வசித்து வந்த பெருந்தகை, தெய்வத்திரு பிரம்மஸ்ரீ ஸ்ரீனிவாச சாஸ்திரிகளிடம் சமஸ்கிருத பாடமும் வேதாத்யயனமும் கற்றுக்கொண்டார். உரிய வயது வந்ததும் மணமுடித்து தமது மாதாமஹரான இராமசாமிக்குருக்கள் (அப்பாச் சாமிக் குருக்கள்) பார்த்து வந்த அரசகேசரிப் பிள்ளையாரின் பூஜா காரியங் களையும், ஊர்க்காரியங்களையும் பார்த்தது மட்டுமன்றி, நீர்வேலியின் சுற்று வட்டாரத்திலமைந்த அச்செழு, சிறுப்பிட்டி, புத்தூர், உரும்பிராய் போன்ற அயல் கிராமங்களில் கோயில் கும்பாபிஷேகம், துவஜாரோகணம் மற்றும் விசேஷ நைமித்தியக் கிரியைகள் யாவையும் பார்த்து வந்தார். இன்று அயல் கிராமங்களில் காணப்படும் கோயில்களில் பல இவரால் கும்பாபிஷேகம் பண்ணப்பட்ட ஆலயங்களேயாம். பிற்காலத்தில் இவரது இரண்டாவது புத்திரர் சோமதேவக் குருக்களுடைய உதவியும் வாய்த்த பின் இவரால் ஈடேற்றப்பட்ட கோயில் கைங்காரியங்கள் மிகப் பல. நீர்வேலியும் அதன் சுற்று வட்டாரமும் இவரது சமய சாம்ராச்சியமாய் விளங்கிற்றென்றால் மிகையாகாது.

ஒருவருக்கு அவரது கல்வி. ஞானம் தோற்றம் அழகு இவையெல்லாம் அவரவர் கர்மவினைகளுக்கேற்ப பிரதானமாக அவரவர் மூதாதையரிடம் இருந்து கிடைப்பனவே. இது மானிடவியலாளர் ஏற்றுக்கொண்ட உண்மை. நூலைப்போல சீலை: தாயைப்போல பிள்ளை என்று இதை சில சமயங்களில் கிராம வழக்காகக் கூறுவர். ஒரு மனிதனுடைய பண்புகளில் காணும் சிறப்புக்கள் ஒரே தலைமுறையில் கிடைப்பனவல்ல. அவை எத்தனையோ தலைமுறைகளில் சந்ததி வழியாகத் தேறித்தேறி வந்து சித்திப்பனவாகும்.

இப்படியெல்லாம் சிந்திக்கும் போது பிரம்ம ஸ்ரீ சாம்பசதாசிவக் குருக்களுடைய குருபரம்பரையைக் பற்றியறிய ஆவல் உண்டாவது இயல்பே. இவரது முன்னோர் யார்? அவர்கள் எங்கிருந்து வந்தவர்கள்? என்பன போன்றவற்றை அறிய யாவருமே விரும்புவர். அதிர்ஷ்டவசமாக வேறு எந்தக் குருபரம்பரையினருக்கும் கிடைக்காத வாய்ப்பு இவரது குருப்பரம்பரையினருக்கு அமைந்துவிட்டது. மேலும் இவரது குருபரம்பரைச் சரித்திரம் வாசிக்கும் பொழுது சுவாரஸ்யமாகவும் இருக்கின்றது.

மற்றவர்கட்கு கிடைக்கப்பெறாத வாய்ப்பு என்று கூறப்பட்டது என்னவெனில், இவரின் முன் னோர்களது வரலாறு செப்பேடுகளில் எழுதப்பட்ட சாசனங்களாக கிடைத்துள்ளமையாலேயே.

தென்னிந்தியாவில் திருவுத்தர கோசமங்கையெனும் ஒரு பழம்பெரும் தலமுண்டு. அங்கே மங்களேஸ்வர சுவாமி கோயில் கொண்டிருக்கிறார். அந்தக் கோயிலில் பூஜா காரியங்களை 32 குருக்கள் குடும்பத்தினர் வேதாக மோக்தமாக மிகவும் சிறப்புடன் நிகழ்த்தி வந்தனர். இதனை அவதானித்த அன்று அத்தேசத்திற்கு அரசனாயிருந்து இராச்சிய பரிபாலனம் செய்த சோமசுந்தர சேதுபதி மகாராசா மிகவும் மகிழ்ச்சிகொண்டு அவர்களின் சேவையினைப் பெரிதும் மெச்சி அவர்களுக்கு அந்தக் கோயிலின் பூசை உரிமைகளை சூரிய சந்திரர் உள்ளவரை அவர்களுக்கு உரிமையாக்கி, அவர்கள் வாழ்வதற்கு கிராமங்களையும் கொடுத்து. இவற்றையெல்லாம் அழியாது செப்பேட்டில் எழுதிச் சாசனஞ்செய்துவைத்தான். அந்தச் செப்பேட்டில் காணப்பட்ட சாசன வசனங்களை இக் கட்டுரையின் அடியில் கொடுக்கிறோம்.

சோமசுந்தர சேதுபதி மகாராசா இருந்தகாலம் தென்னகமெங்கும் சைவ மறுமலர்ச்சி தோன்றிப் பரவிய காலம். கறையான் புற்றினால் மூடுண்டு சிதம்பரத்தில் அழிந்து கொண்டிருந்த மூவர் தேவாரங்களையும் நம்பியாண்டார் நம்பி மீட்டு உலகுக்கு அளித்ததுவும் அவையெல்லாம் பன்னிரு திருமுறைகளாக வகுக்கப்பட்டதுவும் ஏறக்குறைய இந்தக் காலகட்டத்திலேயாம். நாயன் மார் காலத்தையடுத்து வந்த நூற்றாண்டுகளில் பழமையான ஆகமங்கள் எழுச்சிபெற்றன. தென்னிந் தியாவில் பலநூறு கோவில்கள் சிவாகம முறைப்படி கட்டிக் கும்பாபிஷேகஞ் செய்யப்பட்டன. சோழ பல்லவப் பேரரசர்களால் சைவம் பேணப்பட்டு. சைவமரபெல்லாம் பரந்துபட்டு தமிழகம் முழுவதும் ஒரு உன்னத நிலையில் இருந்தது.

திருவுத்தர கோச மங்கையில் மங்களேஸ்வர சுவாமிக்கு பூசைத் தொண்டு செய்தவர்களுள் காஞ்சிபுரம் கல்யாண சுந்தரக்குருக்களின் மகனான சிவசுப்பிரமணியக் குருக்கள் ஒருவர். ஒருநாள் இவரும் வேறு பல குருமாரும் அரசனைச் சந்திக்கச் சென்றபோது. சிவசுப்பிரமணியக் குருக்கள் அரசன்மேல் சம்ஸ்கிருத கீர்த்தனங்களைப் பாடினார். மற்றக் குருமாருக்கு இவ்வளவு பாண்டித்தியமிருக்கவில்லை. பெரிதும் மகிழ்ந்த மகாராசா சிவசுப்பிரமணியக்குருக்களை தலைமைக் குருக்களாக நியமித்தார்.

மேலே கூறப்பட்ட காஞ்சிக் கலியாண சுந்தரக் குருக்கள் சுப்பிரமணியக்குருக்களே சாம்பசதாசிவக் குருக்களின் முதலாவதாக அறியப்பட்ட மூதாதையராவர். சுப்பிரமணியக் குருக்கள் என்ற இந்தப் பெயரைப் பின்வந்த சந்ததியினர் பலரும் தம்மக்களுக்கு வைத்திருப்பதைக் காணலாம்.

இந்த முப்பத்திரண்டு குடும்பத்தைச் சேர்ந்த குருமாரும் இடைவிடாது பதினைந்து தலைமுறை காலமாக மங்களேஸ்வரப் பெருமானின் பூஜாகாரியங்களைத் தொடர்ந்து நடத்தி வந்தனர். இப்படியிருக்கும் நாளில் உள்நாட்டுக் கலகங்கள் தொடங்கின. எங்கு கலகம் ஏற்பட்டாலும் முதலில் பாதிக்கப்படுவது சான்றோரும் ஆலயங்களுமே! இது நாம் கண்டறிந்து பட்டறிந்த உண்மை! இந்தக் கலகங்களினால் கிராமங்களிலிருந்து கோவிலுக்கு சேகரிக்கப்படும் நெல்,தேங்காய், நெய் முதலிய சம்பாரங்களைச் சேமிக்க முடியாமலும் குருமார் நடமாட முடியாதவாறும் மற்றும் இயல்பான நடை முறைகள் பல பின்பற்றப்பட முடியாமலும் மங்களேஸ்வரப் பெருமானின் பூசைக்குத் தடங்கல் ஏற்பட்டு கொடுமைகள் குவிந்து எங்கும் சீர்குலைந்து அலங்கோலமான நிலைமை உருவானது.

மங்களேஸ்வரப் பெருமானுக்குக் குருத்துவத் தொண்டுகள் ஆற்றிவந்த பிராமணர்களுள் எம்பெருமானின் திருநாமத்தையே பெற்றோரினால் சூட்டப்பட்ட மங்களேஸ்வரக் குருக்கள் என்ற பெயருடைய பிராமணோத்தமர் ஒருவர் இருந்தார். நாட்டில் இவ்வாறாகக் கலகம் நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது. மங்களேஸ்வரக் குருக்களும் மற்றும் குருக்கள் மாரும் அரசனை அடைந்து நாட்டு நிலைமையையும், கோவில் கருமங்கள் செய்யமுடியாமல் ஏற்பட்ட நிலைபரங்களையும் எடுத்துக் கூறி கோவிலையும் குருக்கள் குடும்பங்களையும் காப்பாற்ற அரசனென்ற வகையில் அவனைத் தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி பலவாறு கேட்டும் மன்னன் குருக்கள்மார் கொடுத்த அபாயக்குரலைக் கேட்டும் மன்னனது கடமைப்படி அபயமளிக்காமல் வாழாவிருந்தான்.

மன்னனோ இந்தக் கலகங்களை அடக்கப் போதிய படைபலமற்றவனாய் திராணியற்றவனாய் குருமாருக்கு எவ்வித ஆறுதலுங் கூறாது தன்பாட்டிலே ஒன்றும் அறியாதவனாக இருந்தான்.

மங்களேஸ்வரக் குருக்கள் மனமுடைந்த நிலையில். மங்களேஸ்வரப் பெருமானுக்கு தான் செய்த சிவப்பணிக்கு தடையேற்பட்டதேயென மிகவருந்தி. மங்களேஸ்வர சுவாமியின் சந்நிதானத்தையடைந்து அழுது புலம்பி அவர் பாதங்களில் அடியற்ற மரம்போல் விழுந்து வணங்கி கண்ணில் வழிந்த கண்ணீரையோ மனத்தில் வந்த வேதனையையோ அடக்க முடியாமல் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக சுவாமியை விட்டுப் பிரிய மனமில்லாதவராய் உத்தரகோச மங்கையை விட்டு நீங்கினார். அப்பொழுது அவருடன் அவரது மனைவியரும் சுந்தரேஸ்வரக் குருக்கள் என்பவரும் வேறுமிரண்டு குருக்கள்மாரும் இவர்களுடன் உத்தர கோசமங்கையை விட்டு நீங்கினர். உத்தரகோச மங்கையில் இனித் தொடர்ந்து இருக்கமுடியாது என்பதை ஐயந்திரிபற ஆராய்ந்து. சிலகாலத்திற்கு கலகம் அடங்கும்வரை வேறெங்காவது போய் இருந்துவிட்டு கலகம் அடங்கியதும் திரும்பவும் உத்தரகோச மங்கைக்குத் திரும்பலாம் என்ற எண்ணத்தோடு. அங்கிருந்து புறப்பட்டு இராமேஸ்வரம் வந்தடைந்தனர்.

அங்குவந்து தங்கியிருந்த காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து வந்து அங்கே தங்கியிருந்த முத்துமாணிக்கச் செட்டியாரைச் சந்திக்க நேர்ந்தது. முத்துமாணிக்கச் செட்டியார் தான் குளக் கோட்டரசனால் காரைதீவு வியாவிலில் கட்டி முடிக்கப்பட்ட ஐயனார் கோயிலுக்கு குருக்கள் மாரைத் தேடி

இந்தியாவுக்கு பயணம் வந்த வழியில் இராமேஸ்வரத்தில் தங்கியிருப்பதாகக் கூறி மங்கேளேஸ்வரக் குருக்களது வரலாற்றையும் இன்னது என்று கேட்டறிந்து இது திருவருளின் செயல் எனத் தெளிந்து, மங்கேளேஸ்வரக் குருக்களைத் தன்னுடன் யாழ்ப்பாணத்திற்கு வரும்படி வருந்தியழைத்தார். மங்கேளேஸ்வரக்குருக்களும் அதற்கியைந்து காரைநகரையடைந்து வியாவில் ஐயனார் கோவில் கும்பாபிஷேகத்தை நிறைவேற்றி வைத்தார்.

இந்த மங்கேளேஸ்வரக் குருக்களே சாம்பசதாசிவக்குருக்களின் முற் சந்ததியினரில் முதன் முதலில் ஈழத்துக்கு வந்தவராவர்.

இந்த மங்கேளேஸ்வரக் குருக்களின் ஐந்தாவது சந்ததியில் வந்த சுப்பிரமணியக் குருக்கள் என்பவருடைய ஐந்தாவது சந்ததியைச் சேர்ந்தவரே சாம்பசதாசிவக்குருக்களின் தந்தையாரும், கோப்பாய் நாவலர் பாடசாலையின் அதிபராக நீண்டகாலம் ஆசிரியப் பணியாற்றிய பெருந்தகை பிரம்மஸ்ரீ. சுப்பிரமணியகுருக்கள் கார்த்திகேச ஐயர் அவர்கள். அந்தக் காலத்திலேயே அதாவது அந்தணர்கள் அரசசேவையில் நுழையாத மிகப்பழைய காலத்திலேயே ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்று வெகுவிரைவிலேயே அதிபராக உயர்ந்தார். இவர் தமிழ்,கணிதம், ஓவியம் இவற்றில் புலமை மிக்கவர், புராண படனத்தின் போது பயன் சொல்லும் திறமை மிக்கவர் இவர் உவாத்திமைப் பணியிலிருந்ததனால் ஒரு சிவாசாரியராக வராவிட்டாலும் சிவதீட்சை பெற்று சிவபூஜா துரந்தராக இருந்ததோடு, அரசகேசரிப் பிள்ளையார் ஆலயப் பூஜை காரியங்களில் பங்குபற்றி அதன் நிர்வாகத்திற்கு உதவிபுரிந்தவர். மேலும் தமது மூத்த மகனான சாம்பசதாசிவக் குருக்களையும் அந்தக் காலத்தில் அந்தண குடும்பங்களிலிருந்த அரசசேவை மாயையில் மூழ்கி அரசாங்க உத்தியோகத்திற்குப் படிப்பிக்காமல் அரசகேசரிப் பிள்ளையாரின் முழுநேரத் தொண்டுக்கு அர்ப்பணித்த பெருமையுடையவர். இவ்வாறான எழுச்சி மிக்கதும், பூர்வீகப் பெருமையும், பரம்பரை மகிமையும் சிறப்பும் வாய்ந்த இந்த அந்தணர் குலத்தில் வந்த எமது சாம்பசதாசிவக் குருக்கள் தம்மூதாதையர் போல் எல்லாப் பெருமைக்கும் உரியவர் என்பது வெள்ளிடைமலை. அவர் நீண்டகாலம் வாழ்ந்து இறைபணி இயற்ற எல்லாம் வல்ல இறைவன் அருளுவாராக.

**மகாராசாவினால் கொடுக்கப்பட்ட செப்புப்பட்டய சாசனம்**

திரு உத்தர கோசமங்கை யென்னுந் திருத்தலத்திலிருந்து மங்கேளேஸ்வர சுவாமிக்கு இப்போ பூசைசெய்கிறவர்கள் முப்பத்திரண்டு குருமார்கள். இந்த முப்பத்திரண்டு குருக்கள்மாருக்கும் சோமசுந்தர சேதுபதி மகாராசாவாகிய என்னால் குருக்கள்மார் முப்பத்திரண்டு பேருக்கும் ஒவ்வொரு செப்புப் பட்டயம் கொடுக்கப்படுகிறது. செப்புப்பட்டயத்திலெழுதப்படுகிற விஷயம் என்னவானால்:-

மங்கேளேசுவரர் துணை.

கலியப்தம் நாலாயிரத்து நானூறு. சாலிவாகன சகாப்தம் ஆயிரத்திருநூற்றைம்பத்தொன்று. பிரபாவதி வருஷம் முப்பத்திரண்டாவது விளம்பி வருஷம் சித்திரை மாதம் இருபத்தைந்தாந் திகதியும் திங்கட்கிழமையும் சோதிநட்சத்திரமும் பூருவபக்கத் திரயோதசியும் மிதுன லக்கினமும் கூடிய சுபமுகூர்த்தத்தில் எழுதப்படுகிற சாதனம்:-

திரு உத்தரகோசமங்கையென்னும் திருத்தலத்தில் எழுந்தருளி வீற்றிருக்கின்ற மங்கேளேஸ் சுவரசுவாமி கோயிலுக்கு இப்போ முதற்பூசைப் பங்காளராக இருக்கிற காஞ்சிபுரம் கல்யாணசுந்தரக்

குருக்கள் முதலாவது மகன் சிவசுப்பிரமணியக் குருக்கள், முதல் ஸ்தானிகராகவும் மற்றவர்கள் தங்கள் தங்கள் பூசைப் பங்கு முறைப்படி ஸ்தானிகர்களாகவும் மகா ராசாவாகிய என்னால் தத்துவங்கொடுக்கப்படுகிறது.

இன்று முதலாக சகலவிதமான காரியங்களையும் செய்யவும், செய்விக்கவும் தத்துவம் கொடுக்கப்படுகிறது. மேற்படி கோயிலிலேயுள்ள ஆபரணம் முதலாக சகலவிதமான சாமான்களும் கஜானாப் போக்கு முதலிய திறவுகோல்களும் மகாராசாவாகிய என்னாலேயே கொடுக்கப்படுகிறது. இன்று தொடக்கம் மேற்படி கோயிலிலே பணிவிடை செய்கிறவர்கள் எல்லோரும் பூசைசெய்கிறவர்களும் ஸ்தானிகர்களுமாயிருக்கிற குருக்கள்மார் கட்டளைப்படி நடக்க வேண்டும். மேற்படி கோயிலுக்குரிய பூமியும் இவர்களாலேயே செய்விக்கப்பட வேண்டும். இவர்களுக்கு மங்கள புக்களமென்னும் கிராமத்தை சீவியத்திற்காகக் கொடுக்கிறேன். இவர்களுக்குக் கோயிலிலே சம்பளம் கிடையாது. இவர்கள் மங்கள புக்களமென்னும் கிராமத்தை பூசைப்பங்கு ஸ்தானிகர் பங்குபோல முப்பத்திரண்டு பங்காகப் பகிர்ந்து கொள்ளவேண்டியது. இவர்களினால் ஒரு காலத்திலும் கிரயத்திற்குக்கொடுக்கப்படாது வாங்குகிறவர்களுக்கும் இராச சபையிலே தண்டம் விதிக்கப்படும், மற்றப் பணிவிடைகாரர்களுக்கும் இவர்களாலேயே சம்பளம் கொடுக்கப்பட வேண்டும்.

எப்பொழுதும் இவர்கள் மகாராசாவுக்கு விபூதிப் பிரசாதம் அனுப்பவேண்டியது. இந்தப் பட்டயத்தை சோமசுந்தர சேதுபதி மகாராசாவாகிய என்னாலும் என்னுடைய வம்சத்தினராலும் எந்தக் காலத்திலும் இராமநாதபுரத்தையும் திரு உத்தரகோசமங்கையையும் இராச்சிய பரிபாலனம் செய்கிற இராசாக்களாலும் இந்தப் பட்டயத்தை அழிக்கப்படாது மேற்படி கோயிலின் பூசைப் பங்காளராகவும் ஸ்தானிகர்களாகவும் தத்துவம் பெற்ற குருக்கள் மார்களுக்கு இந்தப் பட்டயமானது அவரவர்கள் சந்ததி உள்ளவரைக்கும் சூரிய சந்திரர் உள்ளவரைக்கும் விபூதி உருத்திராட்சம் அழியாமல் இருக்கும் வரைக்கும் இந்தப் பட்டயமானது அழியாமல் மகாராசாவாகிய என்னாலேயே கொடுக்கப்படுகிறது.

இந்தப்பட்டயத்தை ஒருவராலும் அழிக்கமுடியாது. இதிலே என்னுடைய கையெழுத்தும் வைக்கிறேன்.

இங்ஙனம்
சோமசுந்தர சேதுபதி மகாராசா

**தி.நடனசபாபதி சர்மா**

# குருபரம்பரை

## மா.மங்களேஸ்வரக்குருக்கள்

- மா.மங்களேஸ்வரக்குருக்கள்
  - சூரியநாராயணக்குருக்கள்
    - கனகசபாபதிக் குருக்கள்
      - தாமோதரஐயர்
        - கண்டோபபண்டிதஐயர்
        - சுப்பிரமணியக்குருக்கள் - சுன்னாகம்
          - கார்த்திகேயக் குருக்கள்
            - கோபாலஐயர்
              - சுப்பிரமணியக்குருக்கள் (சுப்பையர்)
                - கார்த்திகேயஐயர் (அதிபர், நாவலர் பாடசாலை, கோப்பாய்) + (குப்பும்மா)
                  - சாம்பசதாசிவக்குருக்கள் + (கௌரிஅம்மா)
                    - பாலச்சந்திரசர்மா + (மாலினி)
                      - சிறீகரன் + வசுமதி
                      - கிருஷ்ணவேணி
                    - **சோமதேவக்குருக்கள்** + (ஜெயந்தி)
                      - வரப்பிரதன்
                      - சிவஜெயன் — கணேசவாணி, ஹரிசாகித்தியன்
                      - நிதர்சனன்
                      - சிந்துகேயன்
                      - மனுப்பிரிஜா
                      - சாருகேசினி
                    - கோபாலசர்மா + (பவானி)
                      - ஹம்சத்தொனி + செந்தூரன்
                      - ரகுபரன்
                    - சிவபாலசர்மா + (விஜயலட்சுமி)
                      - சாம்பவி
                      - கார்த்திகன்
                    - பவாணி + (கு.ஹரிஹரசர்மா)
                      - ஹரிநிவாசினி
                    - காத்தியாயினி + (ச.ஜகதீஸ்வரன்)
                  - குகதாசசர்மா + (ஜகதாம்பிகை)
                  - பராபரை அம்மா + (ஐ.சோமசுந்தரஐயர்)
                - நாகம்மா + (பொன்னுத்துரைஐயர்)
                - பொன்னம்மா + (கார்த்திகேசஐயர்)
                - விசாலாட்சி அம்மா + (சிவகடாட்சகுருக்கள்)
              - இராமசாமிஐயர்
              - சபாபதிஐயர்
              - வெங்கடாசலஐயர்
              - இருபெண்கள்
            - சுப்பிரமணியக்குருக்கள்

# அரச கேசரிப் பிள்ளையாரின் 1995 இல் நடைபெற்ற கும்பாபிஷேகக் காட்சிகள்







## 2011ம் ஆண்டு அரச கேசரிப் பிள்ளையாரின் கும்பாபிஷேகத்தின் போது








# ஸ்ரீ செல்லக்கதிர்காம கோயில்
# கும்பாபிஷேக நிகழ்வின் போது









## பொது நிகழ்வில் விழா நாயகர்









அரச கேசரிப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபையினருடன்
விழா நாயகர்

# கிரியையென மருவுமவை யாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்

சமயமும் தத்துவமும் ஒன்றோடு ஒன்று இணைந்து காணப்படுவதே சைவ சித்தாந்தத்தின் சிறப்பம்சமாகும். இவ்விரு துறைகளிலும் எடுத்துக் கூறப்படும் கருத்துக்களுக்குச் சிறந்த நடைமுறை விளக்கமாக அமைவதே சிவாலயங்களில் பேணப்படும் கிரியை மரபும், கலை மரபும் எனில் மிகை இல்லை. இவ்விரு மரபுகளும் சைவ சித்தாந்தம் அமைத்துத் தந்த சீரிய சிந்தனைகளை எமது அனுபவத்திற்குக் கொண்டு வருவதில் பெரிதும் துணைபுரிவன.

இத்தகைய உயர் அனுபவத்தைப் பெற்ற நாம் உய்வதற்கு இப்பிறவியை நாம் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எண்ணற்ற பிறவிகளில் மானுடராய்ப் பிறத்தல் அரிது அரிது காண், இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ? யாது வருமோ? அறிகிலேன் என்பார் தாயுமானவர். மானுடராய்ப் பிறத்தல் மிக அருமையாகும். அவ் அருமையை நாம் ஆராய்ந்தால் சமுத்திரத்தைக் கையினால் நீந்திக் கரையேறும் நிலை போன்றதாகும். மானுடப்பிறப்பை நாம் பெற்றாலும், சாஸ்திரங்கள் வழங்காத தேசங்களில் பிறவாத சாஸ்திரங்களினால் வழக்கை உய்வுபெறத்தக்க வகையில் அவை வழங்கிவரும் தேசங்களில் பிறப்பது மிகுந்த புண்ணியம். "என்ன புண்ணியம் செய்தனம்" என்று நாம் இறையருளை வியக்கும் வண்ணம் சமய சாஸ்திரங்கள் எமக்கு உயரிய நெறி முறைகளை வகுத்துத் தந்துள்ளன. யாம் உய்ய ஆட்கொண்டருளும் இறைவனால் அருளப்பட்ட சிவாகமங்களே சைவாலயக் கிரியை மரபுக்கு அடித் தளமாக அமைகின்றன. "அவனருளாலே அவன் தாள் வணங்க" இச் சிவாகமங்கள் இறைவன் திருவருளினால் எமக்குக் கிட்டியுள்ளன. சிவனே பரமபதி எனத் தெளிந்து வழிபடும் சைவசமயத்தைச் சார்ந்து வாழ்தல் கூறலாற்றாத பெரும் புண்ணியமாகும்.

சிவஞான சித்தியார் கூறும்

வாழ்வெனு மையல் விட்டு வறுமையாஞ் சிறுமை தப்பித்
தாழ்வெனுந் தன்மை யோடுஞ் சைவமாஞ் சமயஞ் சாரு
மூழ்பெற லரிது சால வுயர் சிவ ஞானத் தாலே
போழிள மதியினானைப் போற்று வாரருள் பெற்றோரே,

இத்தகைய மிக அருமையாகப் பெற்ற மனிதப் பிறவியினால் வரும் பயன் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களிலும் நின்று சிவபெருமானை வழிபட்டு உயர்ந்த முத்தியை அடைதலேயாகும்.

சிவபுண்ணியத்தின் பயனாகிய முத்தியானது பதமுத்தி, பரமுத்தியென இரு வகைப்படும்.
பதமுத்தி- சாலோகம் -சாமீபம் -சாரூபம் என்பன.
பரமுத்தி சாயுச்சியமாகும்.

சரியை : அனுட்டித்தவர்கள் அகத்தொண்டருக்குரிய உரிமை போல சிவபெருமான் திருமேனி கொண்டிருக்கும் உலகத்துள் எவ்விடத்தும் தடையின்றிச் சஞ்சரித்து அவ்வுலகபோகங்களை அனுபவித்து வாழ்வர்.

கிரியை: அனுட்டித்தோர் புத்திரர்களுக்குரியதாகிய உரிமை போலச் சிவபெருமானுக்குச் சமீபமாக இருந்து அப்போகங்களை அனுபவித்து வாழ்வர்.

யோகம் : அனுட்டித்தோர் தோழர்களுக்குரித்தாகிய உரிமை போலச் சிவபெருமான் கொண்டருளுந் திருமேனியைப் பெற்று வாழ்வர்.

ஞானம்: அனுட்டித்தோர் சிவபெருமானுடைய திருவடியில் இரண்டறக் கலந்து நித்தியானந்தத்தை அனுபவித்து வாழ்தலாகிய பரமுக்தியடைவர்.

எனவே தான்:

"விரும்புஞ் சரியை முதல் மெய்ஞ்ஞான நான்கு
மரும்புமலர் காய்கனி போலன்றோ பராபரமே"
என்றார் தாயுமானவர்.

பதி,பசு,பாசம் மூன்றும் உள்பொருள்கள் என்றும், அவை அநாதியாகவே உள்ளன என்பதும் சைவ சித்தாந்தம் கூறும் கோட்பாடு. அவற்றுள் அறிவுடைப் பொருள் கடவுள் ஒருவரே அறிவிக்க அறிபவை எண்ணில்லாத ஆன்மாக்கள். அறியாமையை உடையவை பாசங்கள். இந்த அறியா மையிலிருந்து நீங்கி அறிவை அடைவதே ஆனந்தம். இக்கொள்கை என்றும் மாறாது. நாம் அக் கொள்கையினை வாழ்க்கை அனுபவத்திற்குக் கொண்டுவருவது என்பது எமது முயற்சியிலே தான் தங்கியுள்ளது.

இம்முயற்சியை மேற்கொள்ள மானுட ஆக்கையின் ஒவ்வொரு அங்கங்களும் இறைவனால் அருளப்பட்டுள்ளன என்பதை நாம் உணர வேண்டும். இறைவனை

தாழ்த்த சென்னியும்,
வாழ்த்த வாயும்
நினைக்க மடநெஞ்சும்
திருக்கோலயிலைச் சூழவர கால்களும் கூப்பித் தொழ கைகளும் தரப்பட்டுள்ளன.

இவற்றை எமக்குத் தந்த கருணாமூர்த்தி ஆகிய இறைவனுக்கு நன்றி செலுத்தும் வகையிலேயே அமைகின்றன. ஆலயத்தில் இடம்பெறும் கிரியைகள் சைவசித்தாந்த விளக்கத்துடன் கூடிய கிரியைகள் எமது உயிரையும் உள்ளத்தையும் வளமாக்கக் கூடியவை. மாறாக நிகழின் அவற்றால் பயனில்லை.

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா

உன்னடி என் மனத்தே

வழுவாதிருக்க வரந்தர வேண்டும்

இவ்வையகத்தே

என்பது அப்பரது வேண்டுகோள். எமது வாழ்வின் செயற்பாடுகளை இறைவனை நோக்கித் திருப்பிவிடுதல் வேண்டும் என்பதற்காக வகுக்கப்பட்டவையே ஆலயக் கிரியைகள், ஆலயத்திலுள்ள சிவாச்சாரியார், அறங்காவலர், அடியார் ஆகிய முத்திறத்தாருக்கும் இக்கிரியைகள் நல் வழிகாட்டுகின்றன.

கிரியைகளைத் தவறாது அனுட்டிப்பதற்கேற்ற வழிமுறைகள் ஒழுங்குகள் செய்து தரவேண்டியது அறங்காவலர் பொறுப்பு. அவரே ஆலய பரிபாலகர். கிரியைகளை ஆத்மார்த்த நிலையில் நிறைவேற்றி பரார்த்த நிலையில் உரியவாறு குறைவின்றி நிகழ்த்தும் பொறுப்பு சிவாச்சாரியாருடையது. நிகழும் கிரியைகளுக்கு ஏற்ற உதவிகள் வழங்கி அவற்றின் வழி பக்தி உணர்வைப் பெருக்கி பயன்பெறுதல் அடியார்கள் பொறுப்பாகும்.

எனவே எமது மனத்தை இறைவன்பால் திருப்ப ஏற்பட்ட சாதனையே கிரியைகள் என்பது பொருத்தமாக அமைகின்றது. இவற்றின் நோக்கம் தவறக்கூடாது.

பிறவியை மாண்பாக்கவும்

சிவ தரிசனத்தைக் காணவும்

சிவானந்தத்தில் திளைக்கவும்

கிரியைகள் துணைசெய்கின்றன. இக்கிரியைகளினால் எமக்குத் தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாக வேண்டும்.

ஆலயக் கிரியைகளில் ஈடுபடும் எத்திறத்தாரும் முதன் முதலில் தன்னைத் தான் ஆளும் திறமை பெறவேண்டும். இறைவனை பாரதி வேண்டுகின்றான்.

தன்னையாளுஞ் சமர்த்தெனக் கருள்வாய்

மணக்குள விநாயகா வான் மறைத் தலைவா

தனைத்தான் ஆளும் தன்மை நான் பெற்றிடில்

எல்லாம் பயன்களுந் தாமே வந்தெய்தும்.

எம்மை நாம் அறிந்து ஆளத் தெரிந்து இறைவழிபாட்டில் ஈடுபடும் பொழுதுதான் மரபு வழியாக வழங்கிவரும் ஆலயக் கிரியைகள் பயனுள்ளவையாக அமையும்.

சிவபெருமான் எங்கும் வியாபகமாய் இருப்பினும் ஆலயத்தில் சிவலிங்கம் முதலிய திருமேனிகளைக் கொண்டு அருள்புரியுமிடம் ஆலயமாகும். இங்கு அவர் ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டை ஏற்று அருள்புரிவார் என்ற நம்பிக்கை சைவர்களிடையே மேலோங்கியுள்ளது. சிவனை குரு லிங்க சங்கமம் ஆகிய இடங்களிலே வழிபட வாய்ப்புண்டு. ஆலய வழிபாடு நான்கு சாதனா முறைக ளின் படி நிகழத்தக்கதாகும். மல நீங்கிய சிவஞானிகளும், பூர்வ மலவாசனை தாக்காமை பொருட்டும் சிவானந்தம் மேன்மேலும் வளர்தற் பொருட்டும் சிவலிங்கத் திருமேனிகளை வழிபடுவர். ஆன்மாக்களை முத்தியாகிய கரையில் ஏற்றுவதற்காகவே மூர்த்தி-தலம்-தீர்த்தம் என்னும் மூன்று

வடிவாய்ச் சிவபெருமான் விளங்குகின்றார் என்பதை நாம் ஒவ்வொரு கணமும் உணர வேண்டும். சிவாலயத்தைச் சிவனெனவே கண்டு கிரியைகள் ஆற்றுவதும் வழிபடுவதும் இன்றியமையாதது. இத்தகைய இயல்பினரே சீவன் முத்தர் எனப்படுவர்.

ஆலய வழிபாட்டில் பெருமை சொல்லுந் தரமற்று ஆன்மாக்கள் அதன் பெருமையை உணரத் தக்க வகையில் உமாதேவியாருக்கு காஞ்சிபுரம், திருவானைக்கா, மாயூரம், திருமயிலாப்பூர் முதலிய தலங்களிலும் விநாயகருக்கு திருச்செங்காட்டான்குடி, திருநாரையூர், திருவெண்ணெய் நல்லூர் முதலிய தலங்களிலும் சுப்பிரமணியக் கடவுளிற்கு திருச்சேய்ஞலூர், திருப்பரங்குன்று, திருத்தணிகை பழனி முதலிய தலங்களிலும் "தென்னாடுடைய சிவனே போற்றி" எனக்கூறும் வகையில் சிவனுக்கு ஊரெங்கும் ஆலயம் அமைத்து ஆன்றோர்கள் பூசித்தார்கள் என்பது ஐதீகம். திருநந்திதேவர், அகத்திய முனிவர், வசிட்ட முனிவர், பிரம்மா விஷ்ணு, நவக்கிரகங்கள் ஏனைய முனிவர்கள், தேவர்கள், சமயாச்சாரியார் போன்றோர் ஆலய வழிபாட்டினால் பெரும் பயன் பெற்றமை பற்றி சமயவரலாறு கூறும். சிலந்திநாரை, கருக்குருவி, சர்ப்பம், யானை போன்றவையும் ஆலய வழிபாட்டினாலேயே முக்தி அடைந்தன என்பது ஐதீகங்களாக வழங்கி வருகின்றன.

கிரியைகளுக்கு முதலிடம் கொடுக்கும் சிவாலயங்கள் உள்ள ஊர்களே ஊர்களாம் என்பது அப்பர் தரும் விளக்கம். சிவாலயம் இல்லாத ஊர் பாழ், சிவனை பூசை செய்யாத பிறவி பாழ், சிவனைப் பற்றிக் கூறாத சாஸ்திரம் பாழ், என்ற ஓர் உபநிடத பாசியம் சிந்தனைக்குரியது.

சைவாலயங்களில் நித்திய பூசை, உற்சவம், பிரதிஸ்டை பிராயச்சித்தம் ஆகியவை யாவும் சிவபெருமான் ஆன்மாக்கள் பொருட்டு அருளிச் செய்த சிவாகம விதிப்படியே நடைபெறத்தக்கன. இதில் இரண்டாம் சிந்தனைக்கு இடமில்லை. ஐயங்கள் ஏற்படுமிடத்து கற்றோர் பலர் கூடி ஆராய்ந்து முடிவு எடுத்தல் நன்று.

ஆகம விதியால் உய்த்து மெய்வழிபாடு செய்து வேண்டியாங்கு அருள் பெறுவதே எமது மரபு. ஆகம வழிபாடு அகவழிபாடு, புறவழிபாடு என இருவகையாக அமையும். அகவழிபாடு அந்தர் யாகம் எனப்படும். உட்பூசை மானச பூசை என்றும் சொல்லப்படும். புறவழிபாடு புறப்பூசை என்றும் பகிர் யாகம் என்றும் சொல்லப்படும்.

புறவழிபாட்டிற்குள்ள ஆலயம் தூபம், தீபம், திருமஞ்சனம், நைவேத்தியம் முதலானவற்றை எல்லாம் அகத்தே மனத்தினாற் பொருந்தி செய்வதே அந்தரியாகப் பூசையாகும். அகத்தே மனத்தினாற் பொருந்தி செய்யும் அந்தர்யாகப் பூசை செய்தே பிறபூசை செய்ய வேண்டும் என்பதே ஆகம சித்தம். "அகத்தில் ஆன்மாவில் உறையும் சிவனை பூசனை செய்யாது மறந்து புறத்திற் பூசிப்பவர் பசுவின்பால் தன் உள்ளங்கையில் இருப்பதைக் கண்டும் புறக்கையை நக்குவோனே ஒப்பான்" என சிவதருமோத்திரம் கூறுகின்றது. இவ்வாறு சிவலிங்கப் பெருமானை அகத்தும் புறத்தும் வழிபடாதவர்கள் பிறப்பு இறப்புக்கு ஆளாகின்றனர்.

"திருநாம மஞ்செழுத்துஞ் செப்பா ராகிற்
தீவண்ணர் திறமொருகாற் பேசா ராகி
லொருகாலுந் திருக்கோயில் சூழாராகி
லுண் தன் முன் மலர் பறித்திட்டுண்ணா ராகில்

அரு நோய்கள் கெட வெண்ணீறணியா ராகில்
வலியற்றோர் பிறந்த வா றேதோ வென்னிற்
பெருநோய்கள் மிக நலியப் பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாக யிறக்கின் றாரே"

என்பது அப்பர் திருவாக்கு. எனவே ஆகம மரபிலே திருக்கோயிலும் அங்கே நடைபெறும் பூசை உற்சவம் முதலியனவும் அகவழிபாட்டின் உண்மையை விளக்கவும் ஞானத்தை உண்டாக்குவதற்கும் இன்றியமையாத கருவியாய் உள்ளன.

உமாபதி சிவாச்சாரியார் சிவப்பிரகாசத்தில்
"கிரியை யென மருவுமவை யாவும்
ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்"

எனக் கூறியதும் இக்காரணத்தினாலாகும். கிரியையென மருவுமவை யாவும் என்பதில் ஆலயக் கிரியைகள் தீட்சைக் கிரியைகள் யாவும் இவற்றுக்குச் சார்பான பிறவும் அடங்கும்.

கணித விடை படிப்படியே செய்கை முறையினால் கிடைக்கின்றது. கணித விடைக்கும் அதன் பொருட்டுச் செய்யப்படும் கிரியைக்கும் உள்ள தொடர்பில் வைத்த ஞானத்திற்கும் அது கிடைத்தற் பொருட்டுச் செய்யப்படும் கிரியைக்கும் உள்ள தொடர்பு சிந்தித்தற்பாலதாகும்.

திருவலகிடுதல் முதல் சிவார்ச்சனை வரையுள்ளவைகள் திருநந்தவனம் வைத்தல், பூக்கள் பத்திரங்கள் எடுத்தல், மாலை தொடுத்தல், சாத்துதல் என்ற இன்னோரன்னவைகள் பூசை உபகரணங்கள், அவற்றை ஆளும் முறைகள், நிவேதனங்கள், ஆலய அமைப்பு, மகோற்சவம், பிரதிஷ்டை யாவும் ஞானம் நிமிர்த்தம் என்பது ஆழ்ந்த சிந்தனைக்குரியது. எனவே ஆலயக் கிரியைகள் ஞானத்தைப் பெற காரணமாக அமைகின்றன.

கிரியை என மருவுமவை யாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம் என்பதை கோயிற் சிவாச்சாரியாரும், வழிபடுவோரும் அறங்காவலர்களும் எந்நேரமும் மனதிற் பதியச் செய்து கொள்ள வேண்டும். இவ்விடயத்தில் கோயில் பரிபாலகர்களும் அர்ச்சகர்களும் ஒத்துழைப்பதோடு சிரத்தை உடையவர்களாக இருக்க வேண்டும் என்பதைப் பலவாறு பலமுறை நாவலர் வற்புறுத்திக் கூறியுள்ளார்.

எனவே திருக்கோயிலும் அங்கே நடைபெறும் பூசை உற்சவம் ஆகியனவும் அகவழிபாட்டின் உண்மையை விளக்கி ஞானத்தை உண்டாக்குவதற்கு இன்றியமையாக் கருவியாயுள்ளன. மலநோயை நீக்கும் பரம்பொருள் ஆலயங்களையும், பூசை உற்சவம் முதலியவற்றையும் செய்யுமாறு விதித்திருத்தல் ஆன்மாக்களது உய்வுக்காகவே. அப்புறவழிபாடு காரணமாக ஆன்மாக்கள் அகப்பூசையின் உண்மையை உணர்ந்து அதில் ஈடுபடுமிடத்து சிவஞானம் கைகூடி அத்துவித முத்தியிற் சேரும் பெரும் பேறு கிட்டுகின்றது. இந்த உண்மை சிவாலயங்களில் அமைக்கப்பட்டுள்ள மண்டபங்கள், தூபி, கோபுரம், பிரகாரம் முதலியவற்றாலும் உணரப்படும். சரீரத்தில் ஆறு ஆதாரங்கள் காணப்படுவது போல் புறத்தே காணப்படும் ஆலயத்திலும் கருப்பக்கிருகம் முதலிய மண்டபங்கள் ஆறாதார வடிவாய் விளங்குகின்றன. இறைவனது திருவடிவத்தை சூழ்ந்து இருக்கும் திருவாசி

பிரணவ வடிவம். "ஓங்காரமே நற்றிருவாசி யுற்ற தனி னீங்கா வெழுத்தே நிறை சுடராம்" என்பது உண்மை விளக்கம்.

தூபி கோபுரம்-தூலலிங்கம்
விமானத்தில் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கம்
-சூக்குமலிங்கம்

முன்னுள்ள பலிபீடம்- பத்திரலிங்கம் சிவலிங்கம் -நந்தி -பலிபீடம் அமைப்பிலும் தத்துவ உண்மை உள்ளது. சிவலிங்கம் -பதி, நந்தி-பசு, பலிபீடம்- பாசம் இவை மூன்றும் நேராக அமைந்துள்ளன. அவை அவ்வாறு தாபிக்கப்பட்டிருத்தலால் அவை அநாதி நித்தியமாகவுள்ளது என்ற உண்மை உணரப்படும். திரைச்சீலை காட்டிநிற்கும் தத்துவமும் உணரற்பாலது. மாயையாகிய திரையை நீக்கி சிவனது திருவருள் துணைகொண்டு ஞானம் பெற வேண்டும் என்பதே அதன் உட்பொருள்.

சைவர்களாக பிறந்தவர்கள் சைவ சித்தாந்த அனுபவத்தைப் பெறுவதே வாழ்க்கையின் குறிக்கோளாக கொண்டிருத்தல் வேண்டுமென்பது பன்நெடுங்காலம் ஆகவே ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்துள்ளது. சிவ புண்ணியச் செயல்கள் அனைத்திற்கும் சிகரமாக அமைவது பூஜையாகும். விநாயகர், முருகன், அம்பிகை, திருமால் யாவரும் சிவபூஜை செய்திருத்தல் பற்றிய ஐதீகங்களினால் சிவமகிமை நன்குணரற்பாலதாய் உள்ளது. சைவபத்ததிகளில் கண்டவாறு பூஜைக் கிரமங்களுட் பொதிந்து கிடக்கும் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் அளவு கடந்தவை. செய்பவனும் செய்விப்பவனும் சிரத்தையுடன் கிரியைகளில் ஈடுபடும் போதுதான் உண்மையான சைவசித்தாந்த ஞானம் உதிக்கும். கிரியை கூறும் வழியாக ஆத்மீக நன்மைகளையும் உலகில் சுபீட்சமான வாழ்வையும் பெறுவதற்குச் சைவசித்தாந்தம் ஒரு சிறந்த கருவூலம் எனக் கூறுவது எல்லா வகையிலும் பொருத்தமான கருத்தாகும். கிரியைகளினால் ஒருவருக்குக் கிடைக்கும் பயன் மன அமைதி, பக்தி, சமயப் பற்று ஆகியவையே.

உயிரானது தன்னோடு உடனாயுள்ள பரம்பொருளை அறிந்து அதனோடு ஒன்றுபட்டு அதனால் வாய்க்கும் இன்ப அனுபவ நிலைதான் வாழ்க்கையின் முடிவான பேறு என்றும் ஆத்ம லாபம் என்றும் முத்தியின்பம் என்றும் ஏற்றுக்கொள்ளப்படுமானால் அந்த உயர்ந்த நிலையைப் பெறும் விடயம் அநாயாசமாகக் கைகூடி விடாது. அந்நிலை நாடுபவர் எவராயினும் அதற்குரிய முழுத் தகுதியும் பெறத்தக்கவராவர். அத்தகுதி அகநிலை, புறநிலை ஆகிய இரு நிலைகளிலும் ஏற்பட வேண்டும். அதற்குரிய சாதனையே சைவசமயத்தில் சிறப்பாக ஆலயங்களில் இடம்பெற்று வருகின்றன. கடவுளை முன்னிலையாகக் கொண்டு கடவுள் தந்த உடம்பையும் உடற்கருவிகளையும் மனம் முதலிய மற்றுங் கருவிகளையும் ஒருமுகப்படுத்தி, பூவும் நீரும் தூபமும் தீபமும் கொண்டு பூசை செய்து அதன் மூலம் கடவுள் அனுபவப் பேற்றைப் பெறுவது சைவங்கண்ட சாதனையாகும். சைவங்கண்ட இச்சாதனையே மனிதரின் தேக இயல்பு, மனஇயல்பு, விவேக இயல்பு, உயிரியல்பு என்ற நால்வகை இயல்புகளுக்கும் உடன்படக்கூடிய ஆத்ம சாதனை என்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே ஆலயங்களில் நிகழும் பூசை முறை ஆகிய சாதனை சைவத்தினதும் ஆலய வழிபாட்டினதும் சிறப்பியல்புகளில் முதன்மை பெறுகின்றது. சைவ சமய மரபில் இச்சாதனை கைகூடுவதற்குரிய ஏற்பாடுகள் மிகவும் தொன்மையான காலத்திலிருந்து செய்யப்பட்டுள்ளன. மிகப் பெரிய ஆலயங்கள் மன்னர்களாலும் எழுதப்பட்டதன் நோக்கம் இச்சாதனையை மேற்கொள்வதற்கே ஆகும். பூசித்தற்குரிய தெய்வ மூர்த்தங்களும்

கலை எழிலோடும் தெய்வீகப் பொலிவோடும் வார்த்து வைக்கப்பட்டுள்ளன. பூசைக்கு வேண்டிய உபகரணங்கள் யாவும் அவ்வவ்போது அருமையாகத் தேடியும், உருவாக்கியும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. பூசை செய்வதற்குரிய விதிமுறைகள் பற்றி விரிவான விளக்கங்களைத் தரும் நூல்களும் பெருமளவும் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன. இவற்றை உரியவாறு பேணுவதும் அவற்றை உரிய முறையில் கையாளுவதும் சைவ சமயத்தின் பெரும் பேறு அடைவதற்கு இன்றியமையாதவையாகும். சைவ சாதனையில் உயர்ந்ததான ஆலய பூசை முறையில் அனைவரும் ஈடுபாடு கொள்ள வேண்டும் என்ற குறிப்பை ஆலயங்கள் உணர்த்தி வருகின்றன. இதனை முறையாக விளங்கிச் செயற்படுவதே ஆலய வழிபாட்டின் தர்மமாகும்.

ஆலய வழிபாட்டிலே சைவ சித்தாந்த மரபை அடிப்படையாகக் கொண்ட சமய தத்துவ ஞான இணைப்பு சிறப்பாக உள்ளது. நமக்குரிய சமயம் சைவம், நமக்குரிய தத்துவஞானம் சைவ சித்தாந்தம். கடவுள் அருளைப் பெறுதலை முன்னிட்டு மக்கள் அனுசரிக்கும் ஆசார அனுட்டானங்களும் பக்தி முறையான வழிபாடுகளும் சமயம் என்ற பெயரில் அடங்கும். கடவுள், உயிர், உலகம் என்ற உண்மைப் பொருள்களைப் பற்றிய அறிவு ஆராய்ச்சியும் விசாரணைகளும் தர்க்க ரீதியான வாதப் பிரதி வாதங்களும் தத்துவஞானம் என்ற பெயரில் அடங்கும் உலகில் மற்றைய மதங்களைப் பொறுத்த வரையில் சமயமும் தத்துவஞானமும் அனைத்து நிலைகளிலும் ஒத்துப் போகும் அமைப்பும் பெரும்பாலும் இல்லை. சைவத்திற்கு இந்தப் பொருந்தாப் போக்கு கிடையாது. ஒரு சிற்றளவு வேற்றுமைகூடக் கிடையாது. சைவசித்தாந்தத்தில் நாம் என்னென்ன பேசுகின்றோமோ அந்தந்தக் கருத்துக்களுக்குச் சமமான அனுசரணை சைவசமய பூஜை முறையில் இருக்கின்றது. எனவே சிலர் கருதுவது போன்ற ஆலய பூஜை முறை தனியாகச் சமயம் என்று ஒதுக்கப்பட முடியாதது சைவசித்தாந்த நூல்கள் தனியாகத் தத்துவநூல்கள் என்று ஒதுக்கப்படும் நிலையும் வராது. பூஜைமுறை தத்துவ ஞானப் பின்னணியில் தான் நடைபெறுகின்றது. தத்துவ ஞானம் பூசை அனுசரணையில் அனுபவப் பேறாகத்தான் அடையப்படுகிறது. பூஜை காரியங்களுக்குக் கிரியை என்றொரு பெயருண்டு. தத்துவ சாஸ்திர அறிவுக்கு ஞானம் என்ற என்ற ஒரு பெயருண்டு. கிரியையும் ஞானமும் கைகோர்த்துத் திளைக்கும் காட்சி சைவாலயத்தில் நிகழும் பூஜைக்குரிய தனிப்பெருஞ் சிறப்பாகும். இந்த இணைப் பான நிலையை சிவாச்சாரிய பரம்பரை பேணிவர அறிஞருலகும் அதனை வெகுவாகப் பாராட்டி வருகின்றது. சமயத்திற்குரிய இப்பண்பு மிக உயர்ந்த பண்பாக கணித்துள்ளனர். சைவ ஆலயப் பூஜை முறை எமக்குத் தேடித் தந்த பெருமைகளுள் உயர்வானது இது.

எனவே ஆலயக் கிரியை மரபு ஒழுங்காகப் பேணப்படுவதும் அதனால் உரிய பயன்களைப் பெறு வதும் சைவர்களது பிறப்பின் கடமைகளாக அமைந்து உள்ளன. காலந்தோறும் சிறப்ப டைந்த ஆலய வழிபாட்டு விதிமுறைகள் தவறாமல் நடைபெற வைக்கவேண்டுமென்பது அனை வராலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய உண்மையாகும். இதனை உறுதி செய்து ஒழுங்காக நடை முறைப்படுத்துவதில் சிவாச்சாரியர்களது பங்கு அளப்பரியது.

**பேராசிரியர் இலக்கிய கலாநிதி**
**பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஷ்ண ஐயர்**
**வாழ்நாள் பேராசிரியர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

# சிவ தீட்சை

மங்களங்களை எல்லாம் அளிக்கும் பரம புருஷனுக்குத்தான் சிவன் என்று பெயர். சிவனைத் தொழுதிருந்து, அவனை முழுமுதற்கடவுளாகப் போற்றி வாழ்ந்திருப்பவர்களே சைவர்கள். சிவத்யாநம் மூலம் ஞானம் பெற்று முக்தியாம் மங்கள நிலையை எய்துவதே ஒவ்வொரு சைவனின் குறிக்கோள். மும்மலம் அகற்றி நல்ல வகையில் பரந்த இறை ஞானத்தை அளிக்கவல்ல ஸம்ஸ்காரமே சிவதீட்சை. எனவே எல்லோருமே சிவதீட்சை உடையவர்களாக இருத்தல் சிறந்தது.

ஜாதகர்மா, நாமகரணம், உபநயனம், விவாஹம் போன்ற ஸம்ஸ்காரங்கள் சரீரம் சம்பந்தப்பட்ட புறத்தூய்மைக்கும் வாழ்க்கை நெறிக்கும் முக்கியத்துவம் அளிக்கும் கிரியைகள். சிவதீட்சைக் கிரியைகள் ஆன்ம பரிசுத்தியோடு சம்பந்தப்பட்டவை. அநாதியான ஆன்மா, பசுவாம், ஜீவராசிகளுள் இருந்து கொண்டு, பாசத்தால் தாக்கப்பட்டு மலங்களால் அலைக்கழியும்போது அது பதியாம் இறைவனிடம் சென்றடைய அதாவது சிவஸாயுஜ்யம் பெற தடைகள் பலவற்றைக் கடக்க வேண்டியுள்ளது. இதற்குத் துணை நிற்பதே ஆசார்யன் சிஷ்யனுக்குச் செய்து வைக்கும் சிவதீட்சை ஸம்ஸ்காரங்கள்.

இந்த சிவதீட்சையை சிவாச்சாரியார்கள் மட்டுமே செய்து கொள்ளக்கூடும் என்பது தவறு. ஆகமங்களின்படி நான்கு வர்ணத்தாருக்கும் பக்குவத்துக்கு ஏற்றபடி சிவதீட்சை பெற உரிமை உண்டு. தீட்சை பெற்றவர்களுக்கு அதற்கேற்ற பெயர்களும் உண்டு. தீட்சை பெற்ற பிறகே அவர்கள் ஆத்மார்த்த சிவபூஜை செய்யத் தகுதியுடையவர்கள் ஆகிறார்கள். ஆத்மார்த்த பூஜைக்குத் தகுதிபெற்று அனுஷ்டானம் செய்து வருபவர்களே, பரார்த்த பூஜை செய்து வைக்கும் தகுதி பெறக்கூடும். அதிலும், ஆகம ஞானம் உள்ள, முதல்நிலை தீட்சையானது செய்து கொண்ட சிவாச்சாரியார்களே ஆலயங்களில் பரார்த்த பூஜைகளில் பங்குபற்றலாம் என்பது ஆகமவிதி.

பிராமணனாகப் பிறந்தவனுக்கும் உபநயன ஸம்ஸ்காரம் ஆனபிறகே காயத்ரீ மந்த்ர ஜபம் செய்யவும் வேதம் ஓதுவதற்கும் அதிகாரம் உண்டு. .அதேபோல் எந்த வர்ணத்தாருக்கும் சிவதீட்சையின்றி சிவாகம படனம், ஆத்மார்த்த சிவபூஜை இவைகளில் அதிகாரம் இல்லை.

சிவனுடைய திருவுருவத்திலே இருந்து தோன்றிய கௌசிகாதி ரிஷிகள் வழி வந்த சிவாச்சார்யர்கள் ஆலயங்களில் பரார்த்த பூஜைசெய்வதற்கென்றே தோற்றுவிக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு சிவதீட்சை தேவையா என்று கேட்பவர்

உண்டு. சிவதீட்சை இல்லாதவர்கள் சிவனைத் தீண்டினால் ஸிம்ஹத்தைக் கண்ட யானைபோல் அந்த இடத்திலிருந்து இறைவனுடைய சக்தியானது மறைந்து விடுகிறது என்பது ஆகம வாக்கியம் எனவே சிவாச்சார்யார்களுக்கும் சிவதீட்சை அவசியம் என்பது புலனாகின்றது.

சிவாச்சார்யர் மரபில் தோன்றிய ஒருவன், லௌகீக பள்ளிப் படிப்புக்குச் செல்லும் மாணவனாக இருந்தாலும், அவன் தன் தந்தைக்கு உதவியாக ஆலயப் பணிகளில் பங்குகொள்ள வாய்ப்புகளும் அத்தியாவசியங்களும் நிறைய உண்டென்பதைக் காண்கின்றோம். எனவே, அந்த மாணவன் சிவ தீட்சை இன்றி இருக்கலாமா?

இதையெல்லாம் நோக்கும் போது, மற்றவர்களைக் காட்டிலும் சிவாச்சார்யார் மரபில் வருபவர் களுக்கு அவர்கள் ஆலயப் பணியில் ஈடுபட்டு இருந்தாலும் இல்லை என்றாலும், சிவதீட்சை அவசியம் என்பது பெறப்படுகின்றது. இப்பொழுது பல சிவாகம பாடசாலைகளில் சமய, விசேஷ தீட்சைகள் நடத்தி வைப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம்.

சிவதீட்சைகள் மூன்று நிலைகளாக அமைந்தவை. சமயதீட்சை, விசேஷ தீட்சை, நிர்வாண தீட்சை. ஆகமங்களை சர்வணம் செய்யவும், படனம் செய்யவும், சரியாபாத காரியங்களில் (மடைப் பள்ளி, பூஜைப் பொருள்களைத் தயார் செய்தல் போன்ற கைங்கர்யங்கள்) பங்கேற்கவும், சைவானு ஷ்டானத்திற்கும் (சைவ ஸந்தியாவந்தனம்) சமய தீட்சை அதிகாரம் அளிக்கின்றது.

ஆகம ரீதியான ஆத்மார்த்த பூஜை செய்து கொள்வதற்கும், ஆலயங்களில் சிவாச்சார்யார்கள் தினப்படி பரார்த்த பூஜைகள் செய்வதற்கும் விசேஷ தீட்சை அதிகாரம் அளிக்கின்றது.

நிர்வாண தீட்சை பெற்றவன் பிறவிப் பெருங்கடல் கடந்த நிலையை எய்துகிறான். யோகங்களை அனுஷ்டித்து சிவஸாயுஜ்யம் பெறத் தகுதி படைத்தவனாகிறான். நிர்வாண தீட்ஷிதனான சிவாசார்யனே, ஆலயங்களில் ப்ரதிஷ்டை, மஹோத்ஸவம், நீங்கலாக, சாந்தி ஹோமங்கள் உள்ளிட்ட, அனைத்துச் சிறப்பு வழிபாடுகளிலும் பங்குபற்றும் தகுதி பெற்றவன்.

அந்த மரபில் பிறந்ததால் சிவாச்சார்யார்கள் என்று அழைக்கப்பட்டாலும், அவர்கள் நிர்வாண தீட்சை பெற்று, நியதியுடன் அனுஷ்டானங்களைக் கடைப்பிடித்து அனுபவம் பெற்ற பிறகே, ஆச்சார்ய அபிஷேகம் செய்து கொள்ளலாம். ஆசார்ய அபிஷேகம் செய்து கொண்ட பிறகே, சிவாச்சார்யார் என்ற தன் பெயருக்கேற்ற பட்டம், பெருமை தகுதி இவற்றை மேற்கொண்டு அவர்கள் தனித்து விளங்குகின்றனர். அவர்களுக்குத்தான் மற்றவர்களுக்கு தீட்சை அளிக்கத் தகுதி உண்டு. ஆலயங்களில் ப்ரதிஷ்டை, மஹோத்ஸவம் உள்ளிட்ட அனைத்து கார்யங்களுக்கும் அவர்களுக்கு அதிகாரம் உண்டு.

சூழ்நிலையால் வேறு பணிக்குச் செல்லும் சிவாச்சார்ய பரம்பரையினர் கூட, குறைந்த பட்ஷமாக சமய தீட்சையாவது செய்து கொண்டு சைவானுஷ்டானம் பழகிக் கொள்ளல் வேண்டும். அவர்கள் செய்ய வேண்டிய சைவ ஸந்த்யாவந்தனத்துக்கு ஐந்து நிமிஷங்களே போதுமானது. வைணவர்களுள் ஒரு சாரார் தங்கள் மார்க்கத்தில் உள்ள பாஞ்சராத்ர தீட்சை ஆனபிறகே. விவாஹமாகி வீட்டுக்கு வந்த புது மருமகளை சமையலறையில் அனுமதிக்கும் பழக்கம் இன்றும் உள்ளது என்பது கவனிக்கத்தக்கது.

சிவாகமத்தில் சிவதீட்சை பெற்றவர்களைப் பற்றி மிக உயர்வாகக் கூறப்பட்டுள்ளது. நிர்வாண தீட்சை பெற்றவர்களுக்கு மறுபிறவி என்பதே கிடையாது. இறுதியில் சிவஸாயுஜ்யம் உண்டு எனவும் அவர்கள் சிவஸ்வரூபமானவர்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட சிவ தீட்சையை சிவாச்சார்ய மரபில் வந்த ஆண்,பெண் அனைவரும் அவரவர் தம் பக்குவத்திற்கு ஏற்றபடி ஆச்சார்யார் மூலம் தீட்சை பெற்று சிவனின் பூரண அனுக்ரஹத்திற்கு பாத்திரர் ஆக வேண்டும்.

தீட்சை நிகழ்ச்சிகள் ஆச்சார்யனுக்கும் சிஷ்யனுக்கும் அமைதியாகப் பாலம் ஏற்படுத்தி, ஞானமார்க்கத்திற் வழிகாட்டுவதற்காக உண்டானவை. அவற்றை அதிகமான ஆரவாரங்கள் இல்லாமல், இறை வயப்படும் நிகழ்ச்சியாக, மிகவும் வேண்டியவர்களாக உள்ள ஒரு சிலரோடு கூடி நின்று செய்விப்பதே சரியெனத் தோன்றுகின்றது. ஆனால் சமயம், விசேஷம், நிர்வாணம் என்ற மூவகை சிவதீட்சைகளும் தகுதி உடையவர்களுக்கு இறுதியாக செய்விக்கப்பெறும் ஆசார்ய அபிஷேகமும், சமீப காலங்களில் ஒன்றாகவே சேர்த்து அனைவரையும் கூட்டி வைத்து கோலாஹலமான விழாவாகச் செய்யப்படுவதைக் காணமுடிகிறது.

சமய தீட்சை பெற்றுக் குறிப்பிட்ட காலம் ஆன பிறகே விசேஷ தீட்சையும், பிறகு பக்குவப்பட்ட பின்னரே நிர்வாண தீட்சையும் செய்யச் சொல்லி ஆகமங்களும் பத்ததிகளும் கூறுகின்றன. எனவே அவற்றை ஒன்றாகச் சேர்த்து சடங்குகள் செய்யும் போது குழப்பங்கள் மேலிடுகின்றன.

நிர்வாண தீட்சையானது மிக உயர்வானது. சந்நியாசிகளை விட உயர்வான தகுதியைப் பெற்றுத்தர வல்லது. இப்பிறவியிலிருந்து விடுவித்து சிவகர்ப்பத்திலிருந்து வந்த உயர் பிறவியாக ஆக்கும் வாய்ப்புக்கள் நிர்வாண தீட்சைக்கு உள்ளதாக ஆகமம் கூறுகின்றது.

நிர்வாண தீட்சை முடிவில் பத்ததியின்படி யாக்கேச்வர கும்ப ஜலத்தினாலும் அஸ்த்ர கும்ப ஜலத்தினாலும் சிஷ்யனுக்கு (தீட்சிதனுக்கு)அபிசேகம் செய்வதாலேயே, அவன் பாசநீக்கம் பெற்று பின்னர் ஆசார்யான் ஆகக்கூடிய தகுதியையும் அடைகிறான் என்பது ஆகமக்கூற்று. ஆசார்ய அபிஷேகத்துக்குப் பிறகு சிஷ்யன் ஹோமம் செய்ய வேண்டும். எனவே யாகசாலை கலைக்கப்படக்கூடாது. அதாவது அஸ்த்ர கும்பத்தை எடுக்கக்கூடாது. ஆனால் நிர்வாண தீட்சையில் அஸ்த்ர கும்பத்தை எடுத்து அபிஷேகம் செய்ய வேண்டும் என்பது விதி. நிர்வாண தீட்சையும் ஆசார்ய அபிசேகம் சேர்ந்து நடக்கும் போது அஸ்த்ர கும்பங்களை அபிஷேகம் செய்யாமலேயே முன்பே பூசித்த ஆசார்ய அபிஷேக கலசங்களால் மாத்திரம் அவனுக்கு அபிஷேகம் செய்து வைக்கிறார்கள். அது நிர்வாண தீட்ஷாபத்ததியின் படி முறையானதாகாது. நிர்வாண தீட்சை ஒரு நாளும் பின்னொரு நாளில் ஆசார்ய அபிசேகத்திற்காகத் தனியாக மண்டல, அக்னி கார்யங்களோடு கிரியைகளும் செய்து வைத்தால் இந்தப் பிரச்சினை வராது. அல்லது நிர்வாண தீட்சையையும் ஆசார்ய அபிஷேகத்தையும் ஒன்றாகச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் இருக்குமேயானால் ஆசார்ய அபிஷேக முகூர்த்தத்திற்கு முந்திய முகூர்த்தத்தில் பத்ததியின் படி அக்னி மண்டலங்களில் உள்ள மூர்த்தியை யாக- யாகேச்வர கும்பத்தில்ஒடுக்கி. நிர்வாண தீட்சையின் அங்கமான அஸ்த்ராபிஷேகத்தை முடித்து, மறுபடியும் யாக - யாகேச்வர கும்பங்களை ஸ்தாபனம் செய்து, மண்டலத்திலும் அக்னியிலும் முறைப்படி பூஜைகளைச் செய்து பிறகு ஆசார்ய அபிஷேகத்துக்கு உண்டான கும்பங்களை அபிஷேகம் செய்வது உத்தமம்.

தீட்சையில் குறைவு வந்தால் அந்த தீட்சை பயன் அடையாது என ஆகமங்கள் வலியுறுத்துவதால், நிர்வாண தீட்சையினுடைய அஸ்த்ர கும்பங்களால் அபிஷேகம் செய்த பிறகே, பஞ்ச சாதாக்ய கலசங்களை அபிஷேகம் செய்தல் வேண்டும். சந்தர்ப்பவசத்தால் ஒன்றாகச் செய்யும் போது கூட முறை மாறாது செய்தால் பூரண பலன் உண்டு.

**'தேசமான்ய', "பண்டிதர்**
**கலாநிதி து-கு-ஜெகதீஸ்வரக்குருக்கள் J.P**
**அறங்காவலர் மீனாட்சியம்பாள் திருக்கோயில்**
**மதுரையம்பதி – ஈவினை**
**புன்னாலைக்கட்டுவன்.**

## விழா நாயகர் கும்பாபிஷேகம் செய்த கோயில்கள்




செல்லக் கதிர்காம கோயில்
நீர்வேலி



இராஜ இராஜேஸ்வரி அம்பாள்
நீர்வேலி



காளி அம்பாள் கோயில்
நீர்வேலி




மீனாட்சி அம்பாள்
மாசுவன், நீர்வேலி

## விழா நாயகன் கும்பாபிஷேகம் செய்த கோயில்கள்



மாணிக்கப் பிள்ளையார்
போயிட்டி



பராசக்தி காளி அம்மன்
நீர்வேலி வடக்கு



எள்ளு முள்ளுவைரவர்
நீர்வேலி



மாலை வைரவர்
நீர்வேலி மேற்கு

## பிரம்மஸ்ரீ சிவசுப்பிரமணியஐயர் சிவராமகிருஸ்ண சர்மா தொகுத்தளித்த கட்டுரைகள்

- விநாயகர் தத்துவம்
- வேதம் என்றால் என்ன?
- வியாகரண மண்டபம்
- ஆலயமும் அர்ச்சகர்களும்
- அர்ச்சனையின் பெருமை
- எந்தெந்த யாகத்தால் என்ன பலன் கிடைக்கும்?
- ஆன்மீக உணர்வு என்றால் என்ன?
- எது பிரம்மஞானம்?
- உட்சபட்ஷ பரிகாரம்
- கும்பாபிஷேக வகைகள்
- சாஸ்திரம் என்ன சொல்கிறது?
- சிவபெருமானின் அங்கங்களும் விளக்கங்களும்

# விநாயகர் தத்துவம்

**விநாயகப்பெருமானை பற்றிய பல அறிந்த அறியாத விஷயங்கள்.**

விநாயகர் என்பதன் பொருள் /நாதமும் விந்துவும்

விநாயகர் என்ற சொல்லுக்கு "வி" இல்லாமை. "நாயகன்" தலைவன். விநாயகர்- மேலான தலைவர். தனக்கு மேல் தலைவன் இல்லாதவர் என்று பொருள்.

ஓம் அநீஸ்வராய நம: என்னும் மந்திரத்திற்கு தனக்கு மேல் ஒரு ஈஸ்வரன் இல்லாதவர் என்பதே பொருள். ஸ்ரீ ஆதி சங்கரர் தாம் அருளிய கணேச பஞ்சரத்னத்துள் "அநாயகைக நாயகம்" என்று கணபதியை போற்றுகின்றார். அநாயக-ஏக-நாயகம்ஸ்ரீ அதாவது தனக்கு மேலோரு நாயகரில்லாமல் தானே ஏக நாயகனாக இருப்பவர் என்பது இதன் பொருள். வழிபடுவோரின் விக்கினங்களை /இடையூறுகளை போக்குபவராதலின் இவருக்கு விக்னேஸ்வரன் என்றும் கணங்களுக்கு தலைவராயிருப்பதால் கணநாதன், கணபதி என்று அன்புடன் வணங்கப்படுகிறார்.

**விநாயகர் வடிவத்தின் தத்துவம்.**

விநாயகருடைய வடிவம் விந்தையானது. யானைத் தலையும், பெறுவயிறும், மனித உடலும். ஐந்து திருக்கைகளும் கூடிய வடிவமும், இடையின் கீழே மனித உடம்பும், இடைக்குமேல் கழுத்துவரை தேவ உடம்பும். மேலே விலங்கின் தலை /யானைத்தலை பூதப்பெருவயிறு. ஒரு பக்கம் கொம்பு - ஆண் தன்மை. மற்றொரு பக்கம் பெண் தன்மை. அஃறிணை.உயர்திணை அம்சங்கள் பொருந்திய இந்நிலையை உற்று நோக்கின் விநாயகப்பெருமான்- தேவராய், மனிதராய். பூதராய். விலங்காய், ஆணாய். பெண்ணாய். எல்லாமாய்த் திகழ்கிறார் என்பது புலனாகும்.

**விநாயகரின் ஐந்து திருக்கரங்கள்.**

விநாயகருக்கு ஐந்து திருக்கரங்கள் உள்ளன.

1. துதிக்கையில் அமிருத குடம்.

2.பின் இரண்டு கைகளில் பாசம். அங்குசம்.

3. முன் கைகளில்  வலக்கையில் ஒடிந்த கொம்பு/தந்தம்

4. இடக்கையில் மோதகம் /அமுத கலசம் என்றும் கூறப்படும்.

திருமூலர் "ஐந்து கரத்தனை,ஆனை முகத்தனை" எனக் கூறுகிறார். இவரது துதிக்கையில் குடம் இருக்கிறது. இக்குட நீரால் தாய்,தந்தையரை நீராட்டி வழிபடுகிறார். தாய்,தந்தையரிடம் இவருக்கு இருக்கும் பக்தி இதனால் நன்கு விளங்குகிறது. பின்னிரண்டு கைகளில் பாசம்,அங்குசங்களை வைத்திருக்கிறார். யானையை அடக்க யானைப்பாகன் பாசாங்குசங்களை வைத்திருப்பான். விநாயகரோ அவற்றைத் தன் கைகளில் வைத்துக்கொண்டிருக்கிறார். ஒரு யானைப்பாகன் யானையை படுகுழிகளில் விழாமல் தடுத்து நேர்வழியில் நடத்துவது போல உயிர்களாகிய நாம் ஆசாபாசங்களாகிய படுகுழிகளில் விழாமல் தடுத்து நல்ல வழியில் நடத்தி நம்முடைய ஆசாபாசங்களை அவரது கையிலிருக்கும் பாசத்தால் கட்டி அங்குசத்தால் வெட்டிப் பாச நீக்கம் செய்து முக்திப்பேற்றை அருளுகிறார்.

முன்கைகளில் வலது கையில் ஒடிந்த கொம்பினை வைத்திருக்கிறார். இது கயமுகாசுரனைக் கொன்று தேவர்களைக் காப்பாற்றியதன் அறிகுறியாகும். இடது கையில் மோதகத்தைத் தாங்கி இருக்கிறார். இது அமிருத கலசம் என்றும் கூறுவர். மோதகத்தில் இவருக்கு விருப்பம் அதிகம். மோதகம் என்பதன் பொருள் அழிவற்ற தன்மை அல்லது நிஜாநந்தம் என்பது ஆகும்.

ஐந்து கரங்களில் ஒரு கையைத் தாய் தந்தையருக்கும், மற்றொரு கையை தேவர்களின் நலத்தின் பொருட்டும், ஒரு கையைத் தன் பொருட்டும் ஆக்கி, இரு கைகளை ஆன்மாக்களாகிய நமக்கு உதவுவதன் பொருட்டு வைத்து கொண்டிருக்கிறார். இக்கருத்தை

"பண்ணியம் ஏந்தும் கரம் தனக்காக்கிப்<br>
  பானிலா மருப்பமர் திருக்கை<br>
விண்ணவர்க் காக்கி அரதனக்கலச வியன்கரம்<br>
  தந்தை தாய்க் காக்கிக்<br>
கண்ணிலாணவ வெங்கரி பிணித்தடக்கிக்<br>
  கரிசினேற் கிருகையுமாக்கும்<br>
அண்ணலைத் தணிகை வரைவளர் ஆபத்சகாயனை<br>
  அகந்தழீஇக் களிப்பாம்"

என்ற தணிகைப் புராணப் பாடல்களில் அறியலாம். விநாயகருடைய உருவம் பல அரிய உண்மைகளை உணர்த்துகிறது. முன்னே சொல்லியபடி அவர் ஆணல்லர் பெண்ணுமல்லர், அலியோ எனில் அதுவுமல்லர், யானைத்தலை,தேவ உடல் இவற்றைக் கொண்டிருப்பதால் இவர் மிருகமும் அல்லர், மனிதரும் அல்லர். தொந்தி வயிற்றோடும் சப்பைக் காலோடும் இருக்கிறார். இவற்றால் விநாயகர் நாம் காணும் எவ்வகை இனத்தையும் சாராதவர் என்று உணர்கிறோம்.

யானைக்கு மதஜலம் ஒழுகுவது போல் இவருக்கும் வலப்பக்கம் அறக்கருணையும், இடப்பக்கம் மறக்கருணையும் பொழிகிறது. இதனை பரஞ்சோதி முனிவர் "கருணை யென்னும் வெள்ளமதம் பொழி சித்தி வேழத்தை நினைத்து வரும்வினைகள் தீர்ப்பாம்" என்று கூறுகிறார்.

சிவனுக்குப் பிள்ளையார்,முருகர்,வீரபத்திரர் என்று மூன்று குமாரர்கள் உண்டு.இவர்களில் விநாயகரே சிவனுடைய பிள்ளைகளில் முதன்மையானவர் என்பதைப் "பிள்ளையார்" என்ற சிறப்பு பெயரால் அறியலாம். பிள்ளையாரை வணங்குவதால் மும்மலங்கள் விலகும், திருமகள் வந்துறைவாள், இடையூறுகள் அகலும், இருள்வினை நீங்கும்.

விநாயகரே குருவாக வந்து அருள் புரிவார் என்பதனை ஔவைப்பிராட்டியார்

"குருவடிவாகிக் குவலயந் தன்னில்,திருவடி வைத்து"

எனக்கூறுவதால் அறியலாம். அவரே முக்தியும் தருபவர் என்பதை ஔவைப்பிராட்டியார். "இருத்தி முத்தி இனிதெனக் கருளி" என்ற வாக்கியம் நமக்கு உணர்த்துகின்றது.

ஔவைப்பிராட்டியாரை விநாயகப்பெருமான் தனது துதிக்கையால் தூக்கிக் கைலாசத்தில் சேர்த்தார் என்ற வரலாறும் இதனை வலியுறுத்துகின்றது.

**பிரணவத்தின் வடிவம்.**

கணபதி திருவுருவை வலது காது முதல் தொடங்கி தலையை சுற்றி வளைத்து இடது காது வரை கொண்டு வந்து தொங்கும் தும்பிக்கை வரை நீட்டிக்கொண்டு கழித்தால் ஓம் என்ற பிரணவ வடிவம் புலப்படும். கொஞ்சம் விரிவாக பார்ப்போம்.

சிவபெருமானிடத்திலிருந்து "ஓம்" எனும் நாதம் ஆதியில் பிறந்தது. ஓம் என்பதை பிரணவம் எனக் கூறுவர். ப்ர + நவ என்று பிரித்து என்றும் புதியது எனப் பொருள் கூறுவர். விநாயகர் பிரணவ வடிவினர். "ஓம் பிரணவனான தேவாய நம:" என்று அவரது மந்திரங்களில் ஒன்று. ஓம் எனும் பிரணவத்தின் வரி வடிவமே விநாயகர் வடிவம் அதன் ஒளி வடிவமே நாத பிந்துவாகும். மேல்சுழி இருக்குமிடம் விநாயகரது ஒடிந்த கொம்பு இருக்குமிடம். அது அங்கிருந்து வலது கை வழியாக மேலேறிக் கிரீடத்தைச் சுற்றி இடக்கைப் பாசம்வரை வந்து வளைந்து நெற்றிப் பொட்டு வரையிலும் சென்று துதிக்கை வழியாகக் கீழ் இடக்கை வரை வந்து கால்வரை இறங்குகிறது. இடக்கையும் அதிலிருக்கும் மோதகமும் /கலசமும் என்பதைக் குறிக்கிறது.ஆதலின் ஓம் எனும் வரி வடிவமே விநாயகரது வடிவமாகும்.

**பிள்ளையார் சுழியின் பொருள்**

பிள்ளையார் சுழி என்பது அகரம்,உகரம்,மகரம் /அ,உ,ம் ஆகிய மூன்றையும் அடக்கியுள்ள நாதப்பிரமமாகிய "ஓம்" என்னும் பிரணவத்தின் ஆரம்ப வடிவம். அதில் உள்ள வட்ட வடிவம் சிவசக்தி பீடம். கோடு சிவலிங்கம் என்றும் சொல்லப்படும் எழுதத் தொடங்குமுன் பிள்ளையார் சுழியை எழுதுவது. எழுத மேற்கொள்ளும் செயல் இடையூறின்றி முடிய ஸ்ரீ மஹா கணபதியை நிறுத்தி வழிபடுவதைப் போன்றதாகும்.

**கணபதி வழிபாடு தத்துவம்.**

உயிர்களின் உடம்பில் உள்ள ஆறு ஆதாரங்களில் மூலாதாரத்தில் சுருண்டுகிடக்கும் குண்டலினி சக்தியின் மூலக்கனலை எழுப்பி பிரம்மத்துடன் ஆக்ஞையில் ஒன்றிடச்செய்வது. /யானை-

பிரணவ வடிவம் பிள்ளையாரின் மூல வடிவம் ஓம். ஓம்கார வடிவம் ஓம் என்பது தெய்வீக ஒளிவடிவம். வாழ்க்கை என்பதே தெய்வீக ஒளிவடிவில் அடங்கும் விஷயம்தான் என்பதை அறிந்துகொள் என்ற அறிவுரை.

**வாகனம் மூஷிகத்தின் தத்துவம்.**

ஆங்காரத்தின் வடிவமான பெருச்சாளி இருளை விரும்பும், கேடு விளைவிக்கும், கீழ்நோக்கும் அஞ்ஞானம் / அறியாமை ஆணவத்தின் அடையாளம். ஓங்கார வடிவான மேல்நோக்கும் மெய்ஞான வடிவமான பிள்ளையார் சிறிய பெருச்சாளியை தன் கால் கீழ் கொண்டு இருப்பது. அறியாமையையும், செருக்கையும் அடக்கி ஆள்பவர் என்பதையும் எல்லாவற்றிற்கும் ஆதாரமாகவும் தாங்குபவராகவும் விளங்குபவர் என காட்டுகிறது.

**விநாயகப்பெருமானின் ஆயுதங்கள்.**

பாசம், அங்குசம், தந்தம், வேதாளம், சக்தி, அம்பு, வில், கத்தி, கேடயம், சம்மட்டி, கதை, நாகபாசம், சூலம், குந்தாலி, மழு, கொடி, தண்டம், கமண்டலம், பரசு, கரும்பு வில், சங்கம், புஷ்பாணம், கோடாரி, அட்சரமாலை, சாமரம், கட்டுவங்கம், சக்கரம், தீ அகல், வீணை.

**தோப்புகரணம்.**

தோப்புகரணம் என்பது குண்டலினி யோகத்தின் ஒரு அங்கமாகும். அந்தக்கரணமாகிய மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற நான்கும் புறக்கரணமாகிய கை, கால், கண் முதலியன தூண்டப்பட்டு மனித உடலில் அடிவயிற்றின் கீழ் ஓங்காரவடிவத்தில் அமைந்து இருக்கும் சுஷீம்னா நாடி ஒட்டி எழுப்பப்படுகிறது. /மூலாதார சக்தியை சகஸ்ர தளத்தில் பாய்ச்சுவது.

**தேவியோடு திகழும் கணபதி ஷருபங்கள்.**

பிரம்மாவுக்கு கமலை,வல்லி என இரு பெண்கள் தோன்றி விநாயகரை மணந்தனர் என்று ஒரு புராணம் உண்டு.

1,சக்தி கணபதி,

2.மகா கணபதி,

3,ஊர்த்துவ கணபதி,

4.உத்தண்ட கணபதி,

5,சங்கடஹர கணபதி.

**விநாயகரும், பஞ்சபூத தொடர்புடைய இருக்கைகளும்.**

விநாயகர் இருக்குமிடங்கள்.

1.அரசமரம்-ஆகாயம்.
2,வாதாராயண மரம்-வாயு.
3,வன்னிமரம்-தேயு./அக்கினி

4,நெல்லிமரம்-அப்பு/நீர்

5,ஆலமரம்-பிருதிவி/மண் தொடர்புடையவை.

**விநாயகருக்கு உகந்த பத்திரங்கள் /இலைகள்**

| | | |
|---|---|---|
| 1,முல்லைப்பத்திரம் | 2,கரிசலாங்கண்ணி | 3,வில்வபத்திரம் |
| 4,ஊமத்தை இலை | 5, இலந்தை இலை | 6,வெள்ளறுகம்பூல் வேருடன் |
| 7,வன்னி இலை | 8,நாயுருவி பத்திரம் | 9,கண்டங்கத்தரி இலை |
| 10,அரலி இலை | 11,எருக்கி இலை | 12,மருதை இலை |
| 13,விஷ்ணுகிரந்தி இலை | 14,மாதுள இலை | 15,தேவதாரு இலை |
| 16,மருவு பத்திரம் | 17,அரசு இலை | 18,ஜாதி மல்லிகை இலை |
| 19,தாழை இலை | 20,அகத்தி கீரை முதலியன. | |

**கணபதி வழிபாட்டில் அர்ச்சனை செய்ய வேண்டிய 21 இலைகளின் பலாபலன்கள்.**

1. மாவிலை - அறம்,நீதி. 2.வில்வம் - சுகம். 3.அருகம் - சகலபாக்கியம்

4.இலந்தை - கல்வி.அறிவு. 5.நாயுருவி - வசீகரம். 6,அரலி - வெற்றி.

7.வன்னி - பல நன்மைகள். 8,கண்டங்கத்திரி - வீரம். 9.மருதம் - புத்திரபாக்கியம்.

10. துளசி - நுண்ணறிவு 11,மாதுளை - பெரும்புகழ். 12,நெல்லி - செல்வசெழிப்பு

13.விஸ்ணுகிரந்தி இலை - கடன் நிவர்த்தி 14,ஊமந்தை - பெருந்தன்மை குணம்

15.அரசு - உயர்பதவி,காரியவெற்றி. 16,தேவதாரு - இதய வலிமை

17,மரிக்கொழுந்து - இல்லறசுகம் 18,ஜாதிமல்லி- சொந்தவீடு, பூமிபாக்கியம்

19,தவனம் - திருமணதடை நிவர்த்தி.

20,கரிசாலங்கன்னி - இல்வாழ்க்கைக்கு தேவையான பொருள்.

21,எருக்கு - வம்சவிருத்தி,கருவில் உள்ள சிசுவிற்கு பாதுகாப்பு. .

**விநாயகருக்கு பிரியமான நிவேதனம்.**

சுண்டல், பொரி, கடலை, இளநீர், தேன், அப்பம், அதிரசம், முறுக்கு, கரும்பு, விளாம்பழம், கொழுக் கட்டை, மிளகுஅன்னம், சக்கரை பொங்கல், வடை, அவல், நாட்டுச்சக்கரை, கற்கண்டு, பேரிச்சை,திராட்சை.

விநாயகரும் அறுகம்புல் அர்ச்சனையும்... /தனிப்பதிவில் காண்க

**விநாயகரை வணங்கும் முறை...**

முதலில் வலக்கையால் முகத்துக்கு மேலாக இடப்பக்கத்திலும், இடக்கையால் வலப்பக்கத்திலும் தலையில் மூன்று முறை குட்டி. காதுகளைப் பிடித்துத் தோப்புக்கரணம் இட்டுக் கணபதியை வணங்க வேண்டும். உருண்டு திரண்ட நம் பாவங்கள் விநாயகர் அருளால் உடைத்து சிதறுவதாக நினைத்து தேங்காயை ஓங்கி அடித்துச் சிதற விட்டு நம் தீவினைகள் தொலைந்ததாக எண்ண வேண்டும்.

**விநாயகர் முன் தலையில் மூன்று முறை குட்டிக்கொள்வதின் பொருள்**

நமது தலையில் காதுக்கு அருகில் இருபக்கமும் அமிருதம் இருக்கிறது. தலையில் நாம் மூன்று முறை குட்டி கொள்ளும்போது அந்த அமிருதமானது நமது உடல் முழுவதும் பரவி குண்டலினியை எழுப்பி நமது உடலுக்கும் மனதுக்கும் உற்சாகத்தையும் கொடுக்க வல்லது. இது உண்மை என்று அறிவியல் ஒத்துக்கொண்டுள்ளது.

**வலம்புரி இடம்புரி விநாயகர்.**

விநாயகருடைய துதிக்கை வலப்புறமாக வளைந்திருப்பின் வலம்புரி விநாயகர். இடப்புறமாக வளைந்திருப்பின் இடம்புரி விநாயகர் என்றும் அழைக்கின்றோம். /வலம்புரியை விசேஷமாக கொள்வர்.

"கம்"மென்று இரு - காரியம் ஆகும்.

இது உலக வழக்கில் உள்ள ஒரு பழமொழி. சும்மா இருந்தால் காரியமாகிவிடும் என்பது பொருளன்று. "கம்" என்பது கணபதி மந்திரத்தின் மூல மந்திரமாகும் கணபதியைப் பற்றிக்கொள் காரியம் கைகூடும் என்பதே இதன் பொருள்.

**"சங்கட ஹர சதுர்த்தி"**

ஒவ்வொரு மாதத்திலும் பௌர்ணமி கழித்து நான்காம் நாள் சங்கடஹர சதுர்த்தி எனப்படும். இந்நாளில் விநாயகரை வழிபடின் எல்லாச் சங்கடங்களும் நிவர்த்தியாகும். இந்நாளில் இரவில் 9.மணிக்கு மேல் சந்திரனைப் பார்த்த பிறகே விநாயகர் வழிபாடு நடைபெறும். மாசி.ஆவணி மாதத்தில் வருவது மஹா சங்கடஹர சதுர்த்தி எனப்படும். அதுவும் செவ்வாய்க் கிழமையில் பொருந்தி வருமாயின் மிகவும் விசேஷமாகும்.

**அரசமர, வேப்பமர விநாயகரும், பிரதக்ஷிணமும்**

பிரதக்ஷிணம் யார் வேண்டுமானாலும் செய்யலாம். ஸ்நானம் செய்து மடியாக ஆண்கள் பெண்கள் இருவரும் வீபூதி குங்குமம் இட்டுக்கொண்டு காலை 7.மணிக்குள் 5,7,அல்லது 11 தடவையாவது பிரதக்ஷிணம் செய்ய வேண்டும். எள்,வெல்லம் நிவேதனம் செய்யலாம். வெள்ளி, சனிக்கிழமைகளில் அவசியம் பிரதக்ஷிணம் செய்வது மிகவும் விசேஷமாகும். காலை 8 மணிக்கு மேல் அரசமரத்தை வலம் வரக்கூடாது. தினமும் அரசமரத்தையும் அங்கு இருக்கும் விநாயகப்பெருமானுக்கும் தீபம் ஏற்றி நீர் அபிஷேகம் செய்தல் நாகதோசம், புத்திரதோசம்,தாரதோசம் போன்றவைகள் விலகும் என்பது திண்ணம்..

**விநாயகருக்குரிய விரத நாட்கள்.**

வெள்ளிக்கிழமை. விநாயக சதுர்த்தி. சங்கடஹர சதுர்த்தி.

விநாயகர் நடனம் - காஞ்சியில் விகடக்கூத்து. திருப்பழுவூரில் ஆனந்த நடனம். /கயாமுகசுரனை அழித்த பின்பு

விநாயகர் சிவ பூஜை -திருச்செங்காட்டங்குடி.

திருவெண்ணை நல்லூர் - மெய்கண்டதேவருக்கு 5 வயதில் ஞான உபதேசம் செய்தார் விநாயகப்பெருமான்.

திருவெண்காடு - விநாயகர் அகோர மூர்த்திக்கு உபதேசம். /காணாபத்யம் மதத்தினர்க்கு குருநாதர் அகோர மூர்த்தி

மனிதமுக விநாயகர் - நிலதர்ப்பணபுரி /ஆதி விநாயகர்

4-வீதி விநாயகர் - திருக்கடவூர், பூவனூர், திருச்செங்காட்டங்குடி.

விநாயகர் அறுபடை வீடு.

1. திருவண்ணாமலை - நுழைவு வாயில் வடக்கு பார்த்த வினைதீர்க்கும் விநாயகர்.
2. விருத்தாசலம் - கோயில் நுழைவு வாயில் ஆழத்து பிள்ளையார்.
3. திருக்கடவூர் - கள்ளவாரண பிள்ளையார்.
4. மதுரை மீனாக்ஷி - சன்னதி நுழைவு மண்டப சித்தி விநாயகர்.
5. காசி - துண்டி விநாயகர்.
6. திருநாரையூர் - பொல்லாப்பிள்ளையார்.

ஓம் கம் கணபதயே நம:

வட மொழி எழுத்துக்கள் ஐம்பதும் தனித்தனியே விஷேட பலனை தனது உச்சார விஷேடத்தால் அடைவிக்கும் திறனுடையது என்பது ஆகம கருத்து.

ஓம் - புத்தி, முத்தி, லோக வசியம்.
கம் - க - இடையூறுகளை நீக்கும்.
ண - விரும்பும் சித்திகளைத் தரும்.
ப - விரும்பியன நிறைவேறலோடு ஜ்ரம் முதலிய நோய் நீக்கம்.
த - வெற்றியைத் தரல்.
யே - ய்ஏ உச்சாடன பலத்தை தந்து சர்வார்த்த சித்தியோடு வசீகரத்தைத் தரும்.
நம - பாவ நாசமும் வெற்றியும்.

இம் மகாகணபதி மந்திர ஜபம் சர்வ சித்தியைத் தருவதோடு இடையூறுகளையும் நோய்களையும் நீக்கி எவ்வகை மன விருப்பங்களையும் அனைத்து வசீகரத்தையும் வழங்கி முடிவில் முத்திப் பேற்றினையும் அளிக்க வல்லது எனும் பொருள் தருகிறது.

**விநாயகரை தண்ணீரில் கரைப்பது ஏன்?**

விநாயகர் சதுர்த்தி தினத்தில் விரதம் இருந்து, "மிருக்திகை"/மண் கொண்டு செய்யப்பட்ட விநாயகருக்கு பூஜை செய்ய வேண்டும் என்று வேதத்தில் கூறப்பட்டுள்ளது. அந்த மண்ணில் புகழ், கீர்த்தி, பாப நிவர்த்தி, தேக புஷ்டி சர்வமும் கிடைப்பதாக வேதங்கள் கூறுகின்றன. விநாயகர் சதுர்த்தி தினத்தில் மட்டும் மிருக்திகை கொண்டுதான் விநாயகர் சிலைகளை செய்ய வேண்டும். மண்ணினால்

செய்யப்பட்ட சிலைகள் நீண்டநாள் தாக்கு பிடிக்காது. இதனால் பூஜை முடிந்த பிறகு 4.வது நாளில் தண்ணீரில் கரைக்கலாம். தண்ணீரில் கரைப்பதால் மணல் தண்ணீரோடு கரைந்து விடுகிறது. விநாயகர் சிலையில் இருந்த மணல் மற்றவர் காலில் படாது. தோஷமும் நீங்கும் இதனால்தான் விநாயகர் சிலைகள் பஞ்ச பூதங்களில் ஒன்றான தண்ணீரிலோ, கடலிலோ, குளத்திலோ, கிணற்றிலோ, கரைக்கப்படுகிறது. விநாயகர் கரைக்கப்படுவதை வேதத்தில் “அமிருத ஏவ ஸ்வர்கே லோகே ப்ரபித் விஸ்பதி” என்று கூறுகின்றன.

**சோடஷ /16 கணபதிகளின் வடிவங்கள் விபரம்.**

**1, பால கணபதி.**

வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், கரும்பு ஆகியவற்றைத் தமது நான்கு கைகளிலும் தரித்துக் கொண்டு ஐந்தாவது கையான துதிக்கையில் மோதகத்தை வைத்துக் கொண்டிருப்பவரும் இளம்பரிதிக்கு நிகரான திருமேனியை உடையவரும், எங்கும் ஒளியுடன் விளங்குபவர் பால கணபதி.

**2. தருண கணபதி.**

கயிறு, மாவெட்டி, அபூபம்,/அப்பம் விளாம்பழம், நாவற்பழம் தம்முடைய ஒற்றைக்கொம்பு, நெற்கதிர், கரும்பு ஆகியவற்றைத் தமது எட்டுக் கைகளிலும் எப்பொழுதும் தரித்துக் கொண்டு தருண சூரியனை நிகர்த்த காந்தியோடு விளங்கும் ஒப்பற்ற பெருமை வாய்ந்தவர் தருண கணபதி.

**3. பக்த கணபதி**

தேங்காய், மாம்பழம், வாழைப்பழம், வில்லத்தாலான பாயசம் நிறைந்த பாத்திரம் ஆகியவற்றைத் தமது நான்கு கைகளிலும் தரித்துக் கொண்டுள்ளவரும், சரத் காலத்தில் தோன்றும் நிறைமதியைப் போன்ற திருமேனியை உடையவர் பக்த கணபதி.

**4. வீர கணபதி**

வேதாளம், வேல், பாணம், வில், சக்ராயுதம், கத்தி, கேடயம், சம்மட்டி, கதை, மாவெட்டி, நாகம், கயிறு ஆகியவற்றையும் சூலத்தையும், குந்தம், கோடாரி, கொடி என்பவற்றையும் தமது பதினாறு கைகளில் தரித்துக்கொண்டவரும் செந்நிறப்பொலிவுடன் விளங்குபவர் வீர கணபதி.

**5. சக்தி கணபதி.**

பச்சை நிறம் தோய்ந்த திருமேனியையுடைய தேவியைத் தழுவிய வண்ணம் ஒருவர்க்கொருவர் தழுவிக் கொண்டுள்ள இருப்பையுடையவரும், ஸந்தியாகாலம் போன்ற செந்நிறம் தோயப் பெற்றவரும், கயிறு மாவெட்டி என்ற இரண்டையும் தம் கைகளில் தரித்துள்ளவரும், அச்சத்தை நீக்குகிறவர் சக்தி கணேசர்.

**6. த்விஜ கணபதி**

புஸ்த்தகம், ருத்ராக்ஷமாலை, தண்டம், கமண்டலம் ஆகியவற்றின் சோபையினால் ஒளிருகின்ற கைகளின் அலங்காரத்தை உடையவராகவும், நான்கு யானைமுகம் கொண்டவர் த்விஜ கணபதி.

**7. ஸித்தி கணபதி**

நன்கு பழுத்த மாம்பழம், பூங்கொத்துக்கள், கருப்பங்கழி, எள்ளாலான மோதகம் ஆகியவற்றுடன் பரசுவையும் முறையே தமது நான்கு கைகளிலும் தரித்துக்கொண்டு, ஸ்ரீ ஸம்ருத்தி என்ற தேவியுடன் வீற்றிருப்பவர் ஸித்தி கணபதி.

**8. உச்சிஷ்ட கணபதி**

குவலை மலர், மாதுளம்பழம், வீணை, நெற்கதிர், கயிறு, ருத்ராக்ஷ மாலை ஆகியவற்றைத் தம்முடைய ஆறு கைகளிலும் முறையே தரித்துக்கொண்டு கரும்பச்சை நிறமுடைய திருமேனியுடன் விளங்குகிறார் உச்சிஷ்ட கணபதி.

**9. விக்ன கணபதி**

சங்கு, கரும்பு, வில், மலர், பாணம், கோடாரி, கயிறு, சக்கரம், தமது கொம்பு, மாவெட்டி, நெற்கதிர், சரம், முதலியவற்றினாலும் பன்னிரண்டு கைகளிலும் ஆஸ்ரயித்துள்ள ஆயுதங்களினாலும் சுற்றிலும் விரும்பப் பெற்ற அலங்காரங்களினாலும், மிக்க சோபையோடு விளங்குகிறவரும், ஸ்வர்ண நிற திருமேனி கொண்டவர் விக்ன கணபதி.

**10. க்ஷிப்ர கணபதி**

கொம்பு, கற்பகக்கொடி, கயிறு, மாவெட்டி ஆகியவற்றை முறையே தமது நான்கு கைகளிலும், ஐந்தாவதான துதிக்கையில் இரத்தினமிழைத்த தங்கக்குடத்தையும் வைத்துக்கொண்டு விளங்கு பவராய், செம்பருத்தி மலரென மனத்தைக் கவரும் காந்தியுடையவர் க்ஷிப்ர கணபதி.

**11. ஹேரம்ப கணபதி**

இரண்டு கைகளிலும் அபய முத்திரையையும் வரத முத்திரையையும், மற்ற எட்டு கைகளில் முறையே கயிறு, தந்தம், அக்ஷமாலை, மாவெட்டி, கோடாரி, இரும்பாலான உலக்கை, மோதகம், பழம், ஆகியவற்றையும் தரித்துக் கொண்டுள்ளவரும், சிங்கத்தின் மீது அமர்ந்துள்ளவரும், ஐந்து யானை முகங்களுடையவர் ஹேரம்ப கணபதி.

**12. லக்ஷ்மி கணபதி**

கிளி, மாதுளம்பழம் இணைந்த மாணிக்கமான குடம், மாவெட்டி, கயிறு, கற்பக கொடி, கத்தி ஆகியவற்றினால் ஒளிமயமாகி வெண்ணிறப் பெருக்கையுடையவரும், நீல வர்ண ஆம்பல் மலர்களைக் கையில் கொண்ட இரு தேவியரை அருகில் அமர்த்திக் கொண்டுள்ளவரும், வரம் தரும் கையையுடையவர் லக்ஷ்மி கணபதி.

**13. மஹா கணபதி**

சிறந்த யானையின் முகத்தையுடையவரும் சென்னியில் பிறையைச் சூடியவரும், சென்னிறம் தோய்ந்தவரும், முக்கண்ணரும், தமது மடியில் கையில் தாமரை மலருடன் அமர்ந்துள்ள அன்புக்குரிய நாயகியினால் தழுவப் பெற்றவரும் மாதுளை, கதை, கரும்பு, வில், ஒளிதரும் சக்கரம், தாமரை மலர்,

கயிறு, நெய்தல், நெற்கதிர், தமது கொம்பு ஆகியவற்றை முறையே தமது பத்துத் திருக்கரங்களிலும் பதினோராவது துதிக்கையில் ரத்தின கலசத்தைத் தரிசித்துக் கொண்டுள்ளவர் மஹா கணபதி.

### 14. விஜய கணபதி

கயிறு, மாவெட்டி, தன் கொம்பு, மாம்பழம் ஆகியவற்றையுடையவரும், மூஷிக வாகனத்தை உடையவரும் செந்நிறம் கொண்டவருமான விஜய விநாயகர் நம்முடைய இடையூறுகள் யாவற்றையும் அழிப்பராவார்.

### 15. ந்ருத்த கணபதி

பாசம், அங்குசம், அப்பம், உலக்கை, தந்தம் ஆகியவற்றைத் தமது ஐந்து கைகளிலும் தரித்துக் கொண்டு ஆறாவதாக அசைகிற துதிக்கையினால் செய்யப்பெற்ற சிறந்த மோதிரம்போல் வளைந்துள்ள நிலையுடையவரும், மஞ்சள் நிறப்பொலிவுடன் இலங்கும் திருமேனியுடையவரும், ந்ருத்த என்ற பதத்தைத் துணையாகக் கொண்டவர் ந்ருத்த கணபதி.

### 16. ஊர்த்வ கணபதி

நீலோத்பலம், நெற்கதிர், தாமரைமலர், கரும்பு, வில், பாணம், நீண்ட தந்தம், கதை ஆகியவற்றை முறையே தமது எட்டுக் கைகளிலும் தரித்துக் கொண்டு பொன்னிறப் பொலிவுடன் இயங்கும் திருமேனி உடையவரும், பச்சை நிறத்திருமேனியுடன் விளங்கும் தேவியோடு தழுவப் பெறுவதற்கு விழையுடன் உயர்த்திய கையையுடையவர் ஊர்த்வ கணபதி.

# வியாகரண மண்டபம்

வேதபுருஷனுக்கு இரண்டாவது அங்கமாக வரும் வ்யாகரணம் முகம். முகம் என்றால் இங்கே வாய். வ்யாகரணம் என்பதே இலக்கணம். பாஷையின் 'லக்ஷண'த்தைச் சொல்வதால் 'இலக்கணம்'. லக்ஷ்மணன் என்பது இலக்கு மணன் என்றாவது போல, லக்ஷணம் என்பது இலக்கணமாகிறது. பாஷைக்கு வாய்தானே முக்கியம்? வியாகரணங்கள் பல இருக்கின்றன. முக்கியமாகப் பிரசாரத்தில் இருப்பது பாணினி மஹரிஷி செய்த வியாகரணம். அந்த வியாகரண ஸூத்திரங்களுக்கு ஒரு வார்த்திகம் (விரிவுரை மாதிரியானது) இருக்கிறது. அதைச் செய்தவர் வரருசி. வியாகரணத்திற்கு பாஷ்யம் செய்தவர் பதஞ்சலி. இந்த மூன்றும் முக்கியமான வியாகரண சாஸ்திரங்கள்.

மற்ற சாஸ்திரங்களுக்கும் வியாகரணத்திற்கும் ஒரு வித்தியாசம் உண்டு. மற்றவைகளில் பாஷ்யத்தைவிட ஸூத்திரங்களுக்குத்தான் கௌரவம் அதிகம். வியாகரணத்தில் அப்படியில்லை. ஸூத்திரத்தைவிட வார்த்திகத்திற்கு மதிப்பு அதிகம். அதைவிட பாஷ்யத்திற்கு அதிக மதிப்பு. ஆறு சாஸ்திரங்கள் என்று ஒரு பிரிவு உண்டு. அந்தப் பிரிவில் வியாகரணமும் ஒன்று. நான்கு சாஸ்திரங்கள்மிக்க பிரஸித்தி உடையவை. அவை தர்க்கம், மீமாம்ஸை, வியாகரணம், வேதாந்தம் என்பவை. அவைகளிலும் வியாகரணம் ஒன்றாக இருக்கிறது. பாணினியின் வியாகரணம் ஸூத்திர ஸ்ரூபமாக இருக்கிறது. சிறு சிறு வார்த்தைகளால் சுருக்கமாகச் செய்யப்பட்டது ஸூத்ரம்.

விரித்துச் சொல்லாமல் சூசனையாகவே புரிந்து கொள்ளும்படி சுருக்கிச் சொல்வதே ஸூத்ரம். ஒவ்வொரு சாஸ்திரத்துக்கும் பாஷ்யம் உண்டு. அவைகளை எல்லாம் இன்ன இன்ன பாஷ்யம் என்று குறிப்பிட்டுச் சொல்வதுண்டு. வியாகரண பாஷ்யத்தை மட்டும் மஹா பாஷ்யமென்று சொல்வார்கள். அதனாலேயே அதனுடைய பெருமை தெரிய வருகின்றது. அந்த பாஷ்யம் மஹரிஷி பதஞ்சலியால் இயற்றப்பட்டது. சிவன் கோயில்களில் "வ்யாகரண தான மண்டபம்"என்னும் பெயருடைய மண்டபம் ஒன்று இருப்பதுண்டு. "வக்காணிக்கும் மண்டபம்"என்று திரித்துச் சொல்வார்கள். அத்தகைய மண்டபம் திருவொற்றியூரிலும் இருக்கிறது. சோழ நாட்டில் பல கோயில்களிலும் இருக்கிறது.

எதற்காகச் சிவன் கோயில்களில் வியாகரண தான மண்டபம் இருக்கிறது? ஏன் விஷ்ணு கோயிலில் இல்லை. சிவனுக்கும் பாஷைக்கும் என்ன சம்பந்தம்? பேச்சே இல்லாத தட்சிணாமூர்த்தியாக இருக்கிறவரல்லவா சிவன்?

நிருத்தாவஸானே நடராஜ ராஜோ நநாத டக்காம் நவபஞ்ச வாரம்;
உத்தர்துகாம:ஸனகாதி ஸித்தான் ஏதத் விமர்சே சிவ ஸூத்ர ஜாலம்;;
என்று ஒரு ஸ்லோகம் இருக்கிறது. இதைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுகிறேன்.

பேசாத சிவன் ஆடாமல் அசங்காமலிருப்பார். அவரே ஒரே ஆட்டமாக ஆடுகிறபோதுதான் பாஷா சாஸ்திரமே பிறந்தது. இதை மேற்படி ஸ்லோகம் தெரிவிக்கிறது. நடராஜர் என்பது ஆடும் பரமேசுவரனுடைய பெயர். நடன், விடன், காயகன் என்ற உல்லாச கலைக்காரர்களில் நடன் நாட்டியம் செய்பவன். அந்த நடர்களுக்கெல்லாம் ராஜா நடராஜா. யாரைக் காட்டிலும் உயர்ந்த நடனம் செய்யமுடியாதோ அவன்தான் நடராஜா. மஹா நடன் என்று அவன் சொல்லப்படுகிறான்.

"மஹாகாலோ மஹாநட :" என்று ஸம்ஸ்கிருத அகராதியான "அமரகோசம்"சொல்கிறது. ' அம்பலக் கூத்தாடுவான் ' என்று தமிழில் சொல்லுவார்கள். அம்பலக்கூத்தாடுவான் பட்டன் என்பது பிராமணர்களுக்கு உரிய பெயராக இருந்ததென்று சாஸனங்களால் தெரிய வருகிறது. ஆதியில் பிராம்மணர்களும் இப்படி நல்ல தமிழ்ப் பெயராக வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

'நிர்ணயஸாகரா பிரெஸ்'என்று பம்பாயில் ஒரு அச்சுக்கூடம் இருக்கிறது. அதில் பழைய காலத்தில் இயற்றப்பட்ட சிறு காவியங்கள் 'Kavyamala Series' என்னும் பெயரில் வரிசையாக வெளியிடப்பட்டன. அந்த மாலையில் 'பிராசீன லேகமாலை'என்னும் பெயருடைய சில புஸ்தகங்கள் இருக்கின்றன. பழைய காலத்து ஸம்ஸ்கிருத சாஸனங்கள் அதில் இருக்கின்றன. அந்த சாஸனங்களுக்குள் வேங்கி நாட்டு சாஸனம் ஒன்று இருக்கிறது. வேங்கிநாடு என்பது, கிருஷ்ணா நதிக்கும் கோதாவரி நதிக்கும் நடுவில் இருப்பது. அந்த நாட்டில் அகப்பட்ட தாம்ர சாஸனம் ஒன்றை அந்தப் புஸ்தகத்தில் வெளியிட்டிருக்கிறார்கள். அந்தத் தெலுங்குச் சீமையில் அரசாட்சி செய்து வந்த கீழைச் சாளுக்கிய ராஜாக்களுக்கும் நம்முடைய தஞ்சாவூர் சோழ ராஜாக்களுக்கும் விவாஹ ஸம்பந்தம் இருந்தது.

பிருஹதீச்வர ஸ்வாமி கோயிலைக் காட்டிய ராஜராஜ சோழனுடைய புத்ர வம்சம் பௌத்ரர் களோடேயே முடிந்து போய்விட்டது. அவனுடைய தௌஹித்ரி (பெண் வழிப் பேத்தி) அம்மங்கா தேவி வாழ்க்கைப்பட்டிருந்தது ராஜராஜ நரேந்திரன் என்ற கீழைச்சாளுக்கிய ராஜாவுக்குத்தான். அவர்களுடைய பிள்ளையான குலோத்துங்கன்தான் அப்புறம் சோழ நாட்டுக்கும் ராஜா ஆனது. அவன் ஆந்திர தேசத்தில் வேதாத்தியயனம் விருத்தியடைய வேண்டுமென்று எண்ணித் தமிழ்நாட்டிலிருந்து 500 பிராமணர்களைக் கொண்டுபோய் வேங்கிநாட்டில் குடியேற வைத்தான். ஆந்திரதேசத்தில் உள்ள திராவிடலு என்ற பிரிவினர் இந்த 500 பிராமணர்களுடைய வம்சஸ்தவர்களே.

அந்த 500 பிராமணர்களுடைய பெயர்களும், கோத்திரங்களும், அந்த சாஸனத்தில் சொல்லப்படுகின்றன. இன்ன இன்ன சாஸ்திரத்தில் வல்லவர், இன்ன இன்ன காரியங்கள் செய்ய வேண்டியவர் என்பவைகளைப் போன்ற பல விவரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஊரில் மொத்தமுள்ள நிலத்தில் அவர்களில் இன்னார் இன்னாருக்கு இந்த இந்தப் பூமி தானம் தரப்படுகிறது என்பதும். அந்தப் பூமியின் எல்லை முதலியவைகளும் அதில் காட்டப்படுகின்றன. சிஷ்யராக வருகிறவர்களுக்கு அவர்கள் தங்களுக்குத் தெரிந்த வேதங்களையும் சாஸ்திரங்களையும் சொல்லி வைக்கவேண்டும் அதற்காகவே அவர்களுக்கு நிலங்கள் மானியமாக விடப்பட்டிருக்கின்றன.

ஷரூபாவதார வக்து : ஏகோ பாக :

என்று அதில் ஒரு வாக்கியம் இருக்கிறது. அதாவது 'ஷரூபாவதாரம்' சொல்லுபவருக்கு ஒரு பாகம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 'ஷரூபாவதாரம்' என்பது ஒரு வியாகரண சாஸ்திரம்தான்.

திண்டிவணத்தருகில் உள்ள 'எண்ணாயிரம்'என்ற ஊரில் இருந்த 340 மாணார்களைக் கொண்ட வித்யாசாலையில், 40பேர் ஷரூபாவதாரம் படித்ததாக முதலாம் ராஜேந்திர சோழனின் சாஸனம் இருக்கிறது. பாண்டிச்சேரி ராஜ்யத் திரிபுவனத்தில் ராஜாதிராஜன் (A.H.1050 ) போஷித்த பாடசாலையிலும் ஷரூபாவதாரம் போதிக்கப்பட்டிருக்கிறது. வீரராஜேந்திர தேவனின் A.H. 1067-ம் வருஷத்திய சாஸனத்திலிருந்து, காஞ்சிக்கு அருகேயுள்ள திருமுக்கூடல் வித்யாசாலையில் இந்த நூல் கற்பிக்கப்பட்டதை அறிகிறோம்.

ஸித்தாந்த கௌமுதி என்று ஒரு வியாகரணம் இப்பொழுது அதிகமாக பிரசாரத்தில் இருந்து வருகிறது. அடையபலம் என்ற ஊரில் அவதாரம் செய்தவர்களும், 104 கிரந்தங்களை எழுதினவர்களும், சைவகிரந்தங்களை அதிகமாகச் செய்தவர்களும், 'குவலயானந்தம்' என்னும் அலங்கார சாஸ்திரத்தை எழுதினவர்களுமாகிய அப்பைய தீக்ஷிதரவர்களுடைய சிஷ்யராகிய பட்டோஜி தீஷிதர் என்பவர் அந்த 'ஸித்தாந்த கௌமுதியைச் செய்தவர். அது பாணினியின் ஸூத்ரத்திற்கு வியாக்கியான ஷரூபமாக உள்ளது.

"அர்த்த மாத்ரா லாகவேன புத்ரோத்ஸவம் மன்யந்தே வையாகரணா:"என்று, வியாகரணமானது பண்டிதர்களுக்குத் தரும் பரமானந்தத்தைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. "அரை மாத்திரை லாபம் கிடைத்தால், அது வியாகரண சாஸ்திரம் அறிந்தவர்களுக்கு, நிரம்ப நாள் பிள்ளையில்லாதவனுக்கு ஒரு புத்திரன் உண்டானதுபோல ஸந்தோஷத்தைக் கொடுக்கும்" என்பது இதன் அர்த்தம். 'அ'என்பதை 'ஆ' என்று நீட்டினால், அப்படி நீட்டினதற்குப் பலன் சொல்ல வேண்டும். அதுவே மாத்திரை லாபம். ரத்ன சுருக்கமாகவே ஸூத்ரம் இருப்பதால் அதிலே சிக்கல்கூட ஏற்பட்டு மாத்திரைகள் பற்றி அபிப்ராய பேதங்களும் உண்டாகும். அப்போது வியாக்யானந்தான் தெளிவுபடுத்தித் தந்து, புத்ரோத்ஸவ ஆனந்தத்தைத் தருவது!

அதற்காக வியாக்யானம் வளவள என்று இருக்க வேண்டியதில்லை நறுக்குத் தெறித்த மாதிரி சுருக்கமாயிருந்தும் தெளிவு பண்ணமுடியும் என்பதற்கு "கௌமுதி" எடுத்துக்காட்டு. ஸூத்திரத்தில் எழுத்துக்களெல்லாம் மிகவும் கணக்காக இருந்தால் ஸித்தாந்த கௌமுதியில் வியாக்கியானமும் கணக்காக இருக்கும் வளவளப்பே கிடையாது. ஸூத்திரத்தில் அதிகம் இருந்தாலும் இருக்குமோ என்னவோ?இதில் இராது. அந்தக் கௌமுதி இப்பொழுது பிரஸித்தி அடைந்திருக்கிறது. அது சற்றேறக் குறைய 400 வருஷங்களுக்கு முன் செய்யப்பட்டது. இப்பொழுது அதைத்தான் ஸம்ஸ்கிருத வியாகரணம் வாசிக்கிறவர்கள் முதலில் வாசிக்கிறவர்கள் இந்த வியாகரணத்தைச் செய்த பட்டோஜி தீக்ஷிதரென்பவரே 'தத்வகௌஸ்துபம்'என்ற ஒரு கிரந்தம் செய்து, அதைக் குருவுக்குக் காணிக்கையாக அர்ப்பணம் செய்தார்.

அந்தப் புஸ்தகத்தில் பிரம்மத்தை விட வேறுண்டென்று சொல்வது உபநிஷத்துக்களோடு ஒட்டாது என்றும், அத்வைதந்தான் உண்மையானது என்றும் தீர்மானம் செய்திருக்கிறார். மத்வமத கண்டனமாக 'மத்வமத வித்வம்ஸனம்'என்ற கிரந்தம் ஒன்றும் அப்பைய தீக்ஷிதரவர்களுடைய ஆக்ஞையின் மேல் செய்திருக்கிறார். அதெல்லாம் ஸித்தாந்திகளுக்குள் சண்டையை உண்டாக்குவது.

எல்லா ஸித்தாந்திகளுக்கும் பொதுவானது வியாகரண வியாக்யானம்) அவர் செய்த ஸித்தாந்த கௌமுதிக்கு முன்பு, முன்சொன்ன 'ஷரூபாவதாரம்'என்னும் வியாகரண சாஸ்திரமே பிரஸித்தமாயிருந்தது. 'ஷரூபம்' என்பதற்கு இங்கே சப்தத்தின் 'முழு ஸ்வஷரூபம்'என்று அர்த்தம். அவதாரம் என்றால் இறங்குதல் அதாவது, வரலாறு. இந்த ஷரூபாவதாரத்தை பிரஸிடென்ஸி காலேஜில் உபாத்தியாயராயிருந்த ரங்காசாரியார் என்பவர் பிரசுரம் செய்தார்.

அந்த ஷரூபாவதாரத்தைச் சொல்லி வைக்கிறவர்களுக்குத் தனியே ஒரு பாகம் ராஜமானியங்களிலிருந்து கொடுக்கப்பட்டதென்பது முன்னே சொன்ன சாஸனத்திலிருந்து தெரிய வருகிறதால், வியாகரணம் எவ்வளவு முக்கியமாக நினைக்கப்பட்டு வந்தது என்றும் புரிகிறது.

(சங்கதம் ஆ.ர்.: இந்த ஷரூபாவதாரம் என்பது பௌத்த மத குருவான தர்மகீர்த்தி என்பவரால் இயற்றப்பட்டது, பாணிநீய இலக்கணத்தில் வேத மந்திரங்களுக்கு உரிய இலக்கண விதிகள், வைதிக ஸ்வரங்கள், சந்தஸ் பற்றியும் உண்டு - இதெல்லாம் பௌத்தர்களுக்கு அவசியம் இல்லை என்பதால் ஷரூபாவதாரத்தில் இவை மட்டும் நீக்கப்பட்டு ஏனைய மற்ற சம்ஸ்க்ருத இலக்கண விதிகள் கொடுக்கப்பட்டதாக தெரிகிறது. சித்தாந்த கௌமுதி நூல், பாணிநீய இலக்கண விதிகள் ஒன்று கூட விடாமல் முழுமையாக இயற்றப்பட்டுள்ளது).

அந்த வேங்கி சாஸனம் ஏறக்குறைய 850 வருஷங்களுக்கு முன் ஏற்பட்டது. அதில் தானம் பெற்ற ஒவ்வொரு பிராம்மணனுடைய பேரும் இருக்கிறது. ஷடங்கவித் என்ற பட்டம் அந்தப் பிராம்மணர்களில் பல பேருக்கு இருக்கிறது. அவர்களுடைய பேர்களில் பல தமிழில் இருக்கிறது. அம்பலக் கூத்தாடுவான் பட்டன், திருவரங்கமுடையான் பட்டன் என்பவை போன்ற பல பெயர்கள் அதில் வருகின்றன. ஒன்று சிவக்ஷேத்திரங்களில் "கோயிலாக"இருக்கப்பட்ட சிதம்பர (அம்பல) சம்பந்தமுடைய பேர்இன்னொன்று வைஷ்ணவ க்ஷேத்திரங்களின் "கோயிலான" ஸ்ரீரங்க சம்பந்தமுடைய பேர்!

இங்கே சைவம், வைஷ்ணவம் என்று நான் சொன்னாலும், அவர்கள் எல்லாரும் ஸ்மார்த்தர்களே. சிவபக்தியும் விஷ்ணுபக்தியும் எந்த காலத்திலும் இருந்தது. அதனால்தான் சிவன் பெயரும் விஷ்ணு அவர்கள் வைத்துக் கொண்டிருந்தார்கள். வடதேசத்திலும் மலையாளத்திலும் இப்பொழுதும் ஸ்மார்த்தர்களே பெருமாள் கோயில்களில் பூஜை செய்கிறார்கள். திருவரங்கமுடையான் பட்டன் என்றால், வைஷ்ணவரென்று நினைக்கவேண்டாம். 'திருவரங்கமுடையான்'என்பதை ஸம்ஸ்கிருதத்தில் 'ரங்கஸ்வாமி' என்போம். உடையான் என்றால் ஸ்வாமி. 'ஸ்வம்'என்றால் உடைமை.

திருவம்பலக் கூத்தாடுவானென்பது நடராஜாவுடைய தமிழ்ப்பெயர். அவருக்கும் வியாகரணத்துக்கும் உள்ள ஸம்பந்தத்தைத்தான் சொல்ல வந்தேன். "ந்ருத்தாவஸானே" ச்லோகத்தின் விஷயம் இதுதான். அவர் பெரிய கூத்து ஆடுகிறார். நாமெல்லாம் ஆடவேண்டிய கூத்தைச் சேர்த்து வைத்து அவர் ஆடுகிறார். அந்த நடராஜ விக்கிரஹத்தின் தலையில் படர்ந்தாற்போல் ஒன்று இருக்கும். அது இரண்டு பக்கத்திலும் நீண்டு இருக்கும். அதில் சந்திரன் இருக்கும். கங்கையும் இருக்கும் அது என்ன? அதுதான் நடராஜாவுடைய ஜடாபாரம். இந்தக் காலத்தில் போட்டோ எடுக்கிறார்கள். அதில் "ஸ்நாட்-ஷாட்" என்பது ஒன்று. ஒரு வஸ்து சலனத்தில் இருக்கும்பொழுதே, திடீரென்று ஓர் அவஸரத்தில் போட்டோ எடுப்பது அது. நடராஜா வெகு வேகமாக நர்த்தனம் பண்ணுகிறார். பண்ணி நிறுத்தப் போகிற ஸமயத்தில் ஜடாபாரம் இரண்டு பக்கங்களிலும் நீட்டிக்கொண்டு இருக்கும். அந்த நிலையை அந்தக் காலத்துச் சிற்பி மனஸிலே எடுத்த ஸ்நாப்-ஷாட் தான் அந்த ஸ்வஷரூபம்.

நடராஜாவுடைய கையில் ஒரு உடுக்கு இருக்கிறது. அது குடுகுடுப்பாண்டி வைத்திருப்பதைவிடப் பெரியது, மாரியம்மன் கோயிற் பூஜாரி வைத்திருப்பதைவிடச் சிறியது. அதற்கு டக்கா என்றும் டமருகம் என்றும் பெயர்கள் உண்டு. பாதத்தின் தாளத்தை அநுஸரித்து, அந்த டமருக தாளமும் இருக்கும். இதன் ஒலியைத்தான் மேலே ச்லோகத்தில்'நநாத டக்காம்' என்று சொன்னது.

வாத்தியங்களில் முக்கியமானவை மூன்று வகை. அவைசர்ம வாத்தியம் (டக்கா, மேளம், கஞ்சிரா,மிருதங்கம் போலத் தோல் சேர்ந்த வாத்தியம்), தந்திரி வாத்தியம் (வீணை, ஃபிடில் போலத் தந்தி போட்டது), வாயுரந்திர வாத்தியம் (நாயனம்,புல்லாங்குழல் முதலிய துளை போட்டுக் காற்றை ஊதும் கருவிகள்) என்பவை. இவைகளில் சர்ம வாத்தியம் தண்டத்தாலோ ஹஸ்தத்தாலோ அடிக்கப்படும். அந்த வாத்தியத்தை நிறுத்தும்பொழுது சாப்புக் கொடுப்பது, அதாவது, சேர்ந்தாற்போலச் சில அடிகள் அடிப்பது வழக்கம். அதுபோல நடராஜருடைய டமருகத்தில் நடனம் முடியும் காலத்தில் - ந்ருத்த அவஸானே- ஒரு சாப்புத் தொனி உண்டாயிற்று. அதைப்பற்றித்தான் முன்சொன்ன ச்லோகம் ஆரம்பிக்கிறது.

நடராஜா நிருத்தம் செய்கிறார். ஸனகாதிகள், பதஞ்ஜலி, வியாக்கிரபாதர் முதலியவர்கள் சுற்றி நின்று கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மஹா தபஸ்விகள் ஆகையால் அந்த நிருத்தத்தைக் கண் கொண்டு பார்க்க முடிந்தது. நடராஜாவுடைய நடனத்தை ஞானநேத்திரம் உடையவர்கள்தாம் பார்க்க முடியும். ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய விச்வ ஸ்வரூபத்தைத் தரிசிக்கும் சக்தியை பகவானே அர்ஜுனனுக்குக் கொடுத்தார். இதே சக்தியை வியாஸர் ஸஞ்சயனுக்கும் கொடுத்து, அவனையும் விச்வஸ்வரூபத்தைக் கண்டு திருதராஷ்டிர மஹாராஜாவுக்கு வர்ணிக்கும்படிப் பண்ணினார். அந்த ஸ்வஸ்வரூபத்தை அவர்களால் மட்டும் பார்க்க முடிந்தது. குருக்ஷேத்ர யுத்த பூமியில் இருந்த மற்ற வர்களால் பார்க்க முடியவில்லை. தேவதைகளும், ரிஷிகளும், யோகிகளும் ஸ்ரீ நடராஜ மூர்த் தியின் தாண்டவத்தைப் பார்ப்பதற்காகப் பலப் பிரயத்தனம் செய்து, அதற்கு வேண்டிய பார்வையைப் பெற்றார்கள். அந்தப் பார்வை திவ்விய திருஷ்டி என்று சொல்லப்படும். 'திவ்ய சக்க்/ஸ்' என்று கீதையில் பகவான் சொல்கிறார்.

நிஜமான கண்களைக் கொண்டு ஸனகாதிகள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நடராஜாவின் டான்ஸ் கச்சேரியில் விஷ்ணு மத்தளம் கொட்டிக் கொண்டிருக்கிறார். பிரம்மா தாளம் போட்டுக் கொண்டிருக்கிறார். நிருத்தம் முடிகிற ஸமயத்தில், டமருகத்தில் சாப்பு கிடுகிடுவென்று 14 சப்தங்களாக உதிர்ந்தது. ச்லோகத்தில் சொன்ன 'நவ பஞ்சவாரம்'என்றால் ஒன்பதும் ஐந்தும் சேர்ந்த பதினான்கு நநாத டக்காம் நவபஞ்சவாரம்.

அந்தச் சப்தங்களின் கணக்குப் போலவே வித்தைகளின் கணக்கு 14 ஆகத்தான் இருக்கின்றது! ஹிந்து மதத்துக்கு ஆதாரம் சதுர்தச வித்யா என்கிற 14 என்றால், நடராஜாவின் சாப்பும் பதினாலு சப்தத்தையே கொடுத்தது! அந்தப் பதினான்கு சப்தம் ஸனகாதிகளை உத்தாரணம் செய்வதற்காக உண்டாயின என்கிறது ச்லோகம். தக்ஷிணாமூர்த்திக்குப் பக்கத்தில் வயதில் முதிர்ந்த நாலு பேர்கள் இருப்பதாகக் கோயிலில் பார்க்கிறோமே, அவர்தாம் ஸனகாதிகள். தேவாரம், திருவாசகம் மட்டுமின்றி ஆழ்வார் பாட்டிலும், பல இடங்களில் "அன்றாலின் கீழிருந்து அறம் நால்வருக்கு உரைத்த" விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நால்வர்தம் ஸனகாதிகள்.

அப்படி எழுந்த சப்தங்கள் சிவஸ்வஷரூபத்தை ஏகபோகமாக அநுபவிப்பதற்கு மார்க்கமாக இருந்தன. அந்த சப்தங்களை "மாஹேச்வர ஸூத்திரம்" என்று வைத்து, அவைகளுக்கு நந்திகேச்வரர் 'காரிகா' (காரிகை) என்கிற பாஷ்யம் எழுதினார். அப்பொழுது அங்கே இருந்தவர்களுள் பாணினி மஹரிஷி என்பவர் ஒருவர். அந்தப் பாணினி என்பவருடைய கதை "பிருஹத் கதை"என்ற புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த பிருஹத் கதையானது, ஸம்ஸ்கிருதத்தின் பேச்சு மொழிக் கொச்சைகளான பிராகிருத பாஷைகள் ஆறில் ஒன்றாகிய பைசாச பாஷையில் குணாட்யர் என்பவரால் செய்யப்பட்டது.

பிருஹத் கதையின் ஸங்கிரஹத்தை (சுருக்கத்தை) க்ஷேமேந்திரர் என்பவர் ஸம்ஸ்கிருதத்தில் எழுதினார். அதை அநுசரித்து ஸோமதேவ பட்டர் "கதாஸரித்காரம்" என்று ஒன்று எழுதியிருக்கிறார். அரேபிய இரவுக் கதைகள் (Arabian Night Tales) ஈஸாப் கதைகள் (Aesop Fables) , பஞ்ச தந்திரக் கதைகள் முதலியவைகளுக்கெல்லாம் மூலம் அதில் இருக்கிறது. தமிழிலும் "பெருங்கதை" என்று ஒன்று இருக்கின்றது. 'ப்ருஹத் கதை'என்ற வார்த்தையின் நேர் தமிழாக்கம் தான் 'பெரும் கதை'.

'கதாஸரித்ஸாகர'த்தில் பாணினியின் கதை சொல்லப்பட்டிருக்கிறது. மகத தேசத்தில், இப்பொழுது பாட்னாவென்று வழங்கும் பாடலிபுத்ரத்தில் வர்ஷோபாத்யாயர், உபவர்ஷோபாத்யாயர் என்ற இருவர் இருந்தார்கள். உபவர்ஷோபாத்தியாயர் இளையவர்.அவர் பெண் உபகோஸலை. வர்ஷோபாத்தியாயரிடம் வரருசி என்பவரும் பாணினியும் பாடம் கேட்டு வந்தார்கள். பாணினிக்குப் படிப்பு வரவில்லை. அதனால் அவரை வர்ஷோபாத்தியாயர், "ஹிமாசலத்திற்குப் போய் தவம் பண்ணு" என்று அனுப்பி விட்டார். அவர் அப்படியே போய்த் தபஸ் செய்து ஈச்வர கிருபையை அடைந்தார். நடராஜாவுடைய தாண்டவத்தைப் பார்க்கும் சக்தியைப் பெற்றார். நடராஜ தாண்டவத்தின் அவஸான (முடிகிற) காலத்தில் உண்டான 14 சப்தங்களையும் கொண்டு, அவற்றை பதினான்கு ஸூத்திரங்களாக வியாகரணத்துக்கு மூலமாக வைத்துக் கொண்டு, "அஷ்டாத்யாயி"யை எழுதினார். வியாகரண மூலநூல் இதுவே. எட்டு அத்தியாயம் கொண்டதால் "அஷ்டாத்யாயி" எனப்படுகிறது.

அந்த பதினான்கு ஸூத்ரங்களையும் ஆவணியவிட்டம் பண்ணுகிறவர்கள் கேட்டிருப்பார்கள். மஹேச்வரனின் டமருவிலிருந்து உண்டானதால், அவை மாஹேச்வர ஸூத்ரம் எனப்படும். மநுஷ்யனின் கையால் அடிக்கப்படுகிற, அல்லது மீட்டப்படுகிற, அல்லது ஊதப்படுகிற வாத்யங்களிலிருந்து அக்ஷரங்கள் இல்லாத வெறும் சப்தந்தான் வருகிறது. நாதப்பிரம்மம் சப்தப் பிரம்மமுமாக இருக்கப்பட்ட பரமேச்வரனுடைய ஹஸ்த விசேஷத்தால், அந்த டமருகத்தின் சாப்புகளோ பதினாலு விதமான அட்சரக் கோவைகளுக்காகவே ஒலித்தன!அவற்றைத்தான் ஆவணியவிட்டத்தில் கேட்கிறோம்:

1. அ இ உண்:
2. ருலுக்:
3. ஏ ஓங்:
4. ஐ ஔச்:
5. ஹயவரட்
6. லண்
7. ஞம ஙண நம்
8. ஜ2 ப4ஞ்

9. க ட த ஷ்

10. ஜ ப க ட த ஸ்2

11. க ப ச ட த சடதவ்

12. கபய்

13. சஷஸர்

14. ஹல் - இதிமாஹேச்வராணி ஸூத்ராணி.

ஆவணி அவிட்டத்தில் இதைச் சொல்கிற போது வேடிக்கையாகச் சிரித்துக்கொண்டே கேட்டிருப்பீர்கள். அது எந்த விஷயத்தைச் சொல்கிறது என்று தெரியாமலே ஒப்பித்திருப்பீர்கள். பரமேச்வரன் உடுக்கை அடித்துக்கொண்டு கிர்ர், கிர்ர் என்று சுற்றி ஆடி முடித்தபோது கொடுத்த சாப்புகள் தான் இவை. சலங்கை 'ஜல் ஜல்' லென்று சப்திக்கிறது டமாரம் 'திமுதிமு' என்று அதிர்கிறது:மேளத்தில் 'டம் டம்' என்று ஒசை வருகிறது என்கிறோம் அல்லவா?

வாஸ்தவத்தில் இதே சப்தங்களா அவற்றிலிருந்து வருகின்றன? ஆனாலும் கிட்டத்தட்ட வருவதால்தான் இப்படிச் சொல்கிறோம். 'பிப்பீ'என்று நாயனம் ஊதினதாகச் சொல்லுவோமேயொழிய, 'பிப்பீ' என்று தவில் வாசித்தான் என்போமா?'டம்டம்'என்று தவில் வாசித்ததாக சொல்லுவோமேயொழிய, 'டம்டம்'என்று நாயனம் ஊதியதாக சொல்வோமா?அடிக்கிற வாத்யங்களுக்குள்ளேயே மேளத்தை 'டம் டம்' என்றும் மிருதங்கத்தை 'திம்திம்'என்றும் சொல்லுகிறோம். ஊதுகிறவாத்யங்களுக்குள்ளேயே நாயனத்தைப் 'பிப்பீ' என்றால், சங்கை 'பூம் பூம்'என்று ஊதினான் என்றுதான் சொல்கிறோம். வீணை மாதிரி மீட்டுகளை 'டொய்ங் டொய்ங்'என்கிறோம். ஆகையால், எல்லா வாத்தியங்களிலுமே ஸ்பஷ்டமாக அக்ஷரங்கள் வராவிட்டாலும் அக்ஷரம் மாதிரியான ஒலி வருகிறது என்றே ஆகிறது. மனிதர்கள் வாசிக்கிற வாத்தியங்களிலேயே இப்படியென்றால், ஸாக்ஷாத் நடராஜா, பஞ்ச கிருத்யம் செய்யும் பரமேச்வரன், அடிக்கிற உடுக்கிலே ஏன் ஸ்பஷ்டமாக அக்ஷரங்கள் வராது?

இப்படிப் பதினாலு எழுத்துக் கூட்டங்கள் வந்தன. இந்த எழுத்துக்களைப் பாணினி எப்படி உபயோகப்படுத்திக் கொண்டார்? எழுத்துக்களைச் சேர்த்துச் சொல்ல ஒரு சுருக்கமான ஸம்ஜ்ஞையை (சமிக்ஞையை) இந்த ஸூத்ரங்களிலிருந்து பாணினி ஏற்படுத்திக் கொண்டார். 14 ஸூத்ரங்களில் ஒன்றின் முதலெழுத்தையும் மற்றொன்றின் கடைசி எழுத்தையும் சேர்த்துச் சொன்னால், நடுவில் இருக்கிற எல்லா எழுத்தையும் அது குறிக்கும் என்று பண்ணிவிட்டார். உதாரணமாக,'ஹயவரட்' என்பதில் முதல் எழுத்தான ஹ-வையும், 'ஹல்' என்பதில் முடிவான 'ல்'லையும் சேர்த்தால் 'ஹல்' என்றாகிறது. அது இடையிலுள்ள மெய்யெழுத்துக்கள் எல்லாவற்றையும் குறிக்கும். இப்படியே 'அ இ உண்'ஆரம்பமான 'அ'-வை 'ஔச்'முடிவான 'ச்'- உடன் சேர்ந்த 'அச்'என்பது உயிரெழுத்துக்களைக் குறிக்கும்.

பதினாலு கோவைகளுக்கும் முதலெழுத்தாகிய 'அ-வையும், கடைசி எழுத்தாகிய 'ல்' லையும் சேர்த்து, 'அல்'என்றால் அது அத்தனை எழுத்தையுமே சேர்த்துக் குறிக்கும். அலோந்த்யஸ்ய என்பது அஷ்டாத்யாயியில் ஒரு ஸூத்திரம். 'அல்' என்றாலே எழுத்து என்று அர்த்தம் வந்துவிட்டது. எல்லா பாஷைகளுக்குமே அகரம் ஆதியாயிருக்கிறது. உருது பாஷையில் 'அலீப்'என்பது முதலெழுத்து. கிரீக்கில் 'ஆல்ஃபா' என்பது முதலெழுத்து. இந்த இரண்டும் எழுத்துக்களையெல்லாம் குறிக்கும் 'அல்' என்பதிலிருந்து வந்ததுதான். லோகம் பூராவும் வைதிக மதம் இருந்ததற்கு இதுவும் ஒரு அடையாளம்.

இவ்வாறு வியாகரணத்திற்கு மூலகாரணமாயிருந்தது நடராஜாவினுடைய டமருகத்தில் இருந்து உண்டாகிய மாஹேச்வர ஸூத்திரங்களென்று தெரிகிறது. லோகத்தில் சப்த சாஸ்திரங்களை ஏற்படுத்தியதற்குக் காரணமாக இருந்தவர் பரமேச்வரராகையினால்தான் சிவன் கோவிலில் வியாகரணதான மண்டபம் அமைககபபட்டிருக்கிறது. பெருமாள் கோவிலில் இல்லை. நடராஜாவுக்கருகில் பதஞ்சலி, வ்யாக்ரபாதர் என்னும் இருவர் இருக்கிறார்கள். எந்தக் கோயிலிலும் அவர்களுடைய பிம்பங்களை நடராஜாவினுடைய பிம்பத்துக்குப் பக்கத்தில் பார்க்கலாம்.

சீர்க்காழிக்கருகில் ஒரு க்ஷேத்திரத்திற்குப் போயிருந்தேன். அங்கே கோயிலில் நடராஜாவுக்குப் பக்கத்தில் பதஞ்சலி, வியாக்ரபாதர் இவர்களுடைய உருவங்களுக்குக் கீழே அவர்களுடைய பெயர்கள் எழுதப்பட்டிருந்தன. எழுதுகிறவன் நன்றாக தெரிந்துக் கொள்ளாமையால் 'பதஞ்சலி' என்னும் பெயரைப் 'பதஞ்சொல்லி'என்று எழுதியிருந்தான். அந்தப் பெயரும் அவருக்குப் பொருந்தியதை நினைத்து அறியாமையிலும் ஒரு தத்துவம் இருக்கிறதென்று ஸந்தோஷம் அடைந்தேன்!"பதஞ்சொல்லி" என்பது வியாகரணத்திற்கே ஒரு பெயர். பதவாக்ய ப்ரமாண என்கிறபோது 'பதம்' என்பதற்கு வியாகரணம் என்பதுதான் அர்த்தம். ஆகவே பதஞ்சொல்லி என்பதற்கு வியாகரணம் சொன்னவர் என்று அர்த்தமாகிறது.

பதஞ்ஜலி வியாகரண பாஷ்யம் செய்தவர் என்பதை முன்பே சொன்னேன் அல்லவா? 'பதஞ்சொல்லி' என்று தப்பாக எழுதினதே பதஞ்ஜலிக்குப் பொருத்தமாயிருப்பதைப் பார்த்த போது, இன்னொன்று நினைவு வந்தது. ஸம்ஸ்கிருதத்தில் 'குணாக்ஷர நியாயம்' என்று ஒன்று சொல்லுவார்கள். 'குணம்'என்றால் செல்லு முதலான பூச்சிக்குப் பெயர். அது மரத்தையோ ஏட்டுச் சுவடியையோ அரித்துக் கொண்டே போயிருக்கும். சில சமயங்களில் இப்படி அரித்திருப்பதே எழுத்துக்களைப் பொரித்த மாதிரி இருக்கும். பூச்சி பாட்டுக்கு அரித்தது அக்ஷரங்களின் வடிவத்தில் அமைந்துவிடும். செல்லுப் பூச்சி உத்தேசிக்காமலே இப்படி ஏற்பட்டு விடுவதுண்டு. இம்மாதிரி உத்தேசிக்காமலே ஏதோ ஒன்றைப் பண்ணி அதிலும் ஒரு அர்த்தம் ஏற்பட்டு விடுவதை 'குணாக்ஷர (குணஅக்ஷர) நியாயம்'என்பார்கள். பதஞ்ஜலி பதஞ்சொல்லியானதும் குணாக்ஷர நியாயம்தான் என்று தோன்றியது.

இது இருக்கட்டும். தஞ்சாவூர் ராஜ்யத்தில், நானூறு வருஷங்களுக்கு முன் நாயக வம்சத்தைச் சேர்ந்த ரகுநாத நாயக்கர் ஆண்டபோது ஏற்பட்ட ஸாஹித்ய ரத்னாகரம் என்ற காவியத்தை நான் பார்க்க நேர்ந்தது. அதை எழுதிய யக்ஞ நாராயண தீக்ஷிதர் பெரிய சிவபக்தர். அவர் அதிலே ஓரிடத்தில் சொல்லியுள்ள ஈச்வர ஸ்தோத்திரம் ஒன்றிலும் வியாகரணத்தைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆதௌ பாணிநிநாததோ (அ) க்ஷர ஸமாம்னாயோபதேசேனஸ்ய:
சப்தானாம் அநுசாஸநான்யகலய:சாஸ்த்ரேண ஸஷைத்ராத்மனா:
பாஷ்யம் தஸ்ய ச பாதஹம்ஸகரவை: ப்ரௌடாசயம் தம் குரும்
சப்தார்த்த ப்ரதிபத்தி ஹேதும் அநிசம் சந்த்ராவதம்ஸம் பஜே (ஸாஹித்ய ரத்னாகர காவியம்)

இந்த ச்லோகத்தில் வரும் 'அக்ஷர ஸமாம்னாயம்' என்பது வ்யாகரணத்திற்குப் பெயர். அக்ஷரங்களைக் கூட்டமாகச் சேர்த்து வைத்த இடம் என்று அர்த்தம். ஈச்வரனுடைய மூச்சுக்காற்று வேதம். அவருடைய கைக்காற்று அக்ஷர வேதம். அதாவது மாஹேச்வர ஸூத்திரம். "சப்தானுசாஸ

னம்"என்பதும் அதன் பெயர். 'பாணினி நாதத:'என்பதற்குப் "பாணினிகளால் (கைகளால்) சப்தம் பண்ணினாய்"என்றும், "பாணினிக்குச் சப்தம் ஏற்பட்டது"என்றும் சிலேடையாக இரண்டு அர்த்தங்கள் உண்டாகின்றன.

அதாவது ஈச்வரன் கையிலிருந்து உண்டான சப்தத்தை வைத்துக் கொண்டு பாணினி வியாகரணம் பண்ணினார் என்னும் கருத்து இதில் குறிக்கப்படுகிறது. "கையாட்டியதால் வியாகரண ஸூத்திரங்கள் ஏற்பட்டன. காலையாட்டியதால் அதற்கு பாஷ்யத்தை உண்டு பண்ணினாய்" என்று ச்லோகம் சொல்லுகிறது. மஹாபாஷ்யத்தைச் செய்த பதஞ்ஜலி ஆதிசேஷாவதாரம். ஆதிசேஷன் பரமேச்வரன் காலில் பாதரஸமாக இருக்கிறார்! இதை நினைத்துத்தான் காலாட்டி பாஷ்யத்தை உண்டு பண்ணினார் என்று கவி சொன்னது! "சப்தமும் அர்த்தமும் உன்னாலேயே ஏற்பட்டது"என்று அவர் முடிக்கிறார். வியாகரணத்திற்கு இப்படிப் பல காரணங்களால் பரமேச்வரன் மூல புருஷனாய் இருப்பதால், அவருடைய கோயிலில் வ்யாகரண தான மண்டபங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்று தெரிந்து கொண்டேன்.

இங்கே பரமேச்வரனைக் கவி "சந்த்ராவதம்ஸன்"என்கிறார். அப்படியென்றால் சந்திரனைத் தலையணியாக, சிரோபூஷனமாகக் கொண்டவன் என்று அர்த்தம். "சந்திரசேகரன்", "இந்துசேகரன்" என்றாலும் இதே பொருள்தான். வியாகரண சாஸ்திரங்களில் இரண்டுக்கு ஆச்சரியமாக இந்த 'இந்துசேகரப் பெயர் இருக்கிறது. ஒன்று, 'சப்தேந்து சேகரம்'வியாகரணத்தில் இந்த நூல் வரைக்கும் ஒருத்தன் படித்து விட்டால், "சேகராந்தம் படித்தவன்"என்று பாராட்டிச் சொல்வார்கள். 'இன்னொரு புஸ்தகம், "பரிபாஷேந்து சேகரம்"என்பது.

சிக்ஷா சாஸ்திர நூல்கள் சுமார் முப்பது இருப்பது போல், வியாகரணத்திலும் ஏராளமான கிரந்தங்கள் இருக்கின்றன. அவற்றில் பாணினி ஸூத்ரம், அதற்குப் பதஞ்ஜலி பாஷ்யம், வரருசி வார்த்திகம் ஆகிய மூன்றும் தலைமை ஸ்தானத்தில் இருக்கின்றன. வரருசியும் காத்யாயனரும் ஒருத்தரே என்ற அபிப்ராயத்தில் இங்கே நான் சொல்லியிருக்கிறேன். அவர்கள் வெவ்வேறு பேர் என்றும் சிலர் சொல்கிறார்கள்.

விக்ரமாதித்தன் ஸபையிலிருந்த 'நவரத்ன'ங்களில் ஒருத்தர் வரருசி. இலக்கண புஸ்தகங்கள் எழுதினவர். வார்த்திகம் பண்ணின காத்யாயனர் இவரா இல்லையா என்பதில் அபிப்ராய பேதம் இருக்கிறது. பர்த்ருஹரியின் "வாக்யபாதீயம்"என்ற நூலும் முக்கியமான வியாகரண புஸ்தகங்களில் ஒன்றாகும். 'நவ வ்யாகரணம்'என்பதாக ஸம்ஸ்கிருதத்தில் ஒன்பது இலக்கண நூல்கள் குறிப்பிடப் படுகின்றன. ஆஞ்ஜநேய ஸ்வாமி ஸூர்ய பகவானிடமிருந்து இவற்றைக் கற்றுக் கொண்டார். பிற்பாடு ஸ்ரீராமரே ஆஞ்சநேயரை "நவவ்யாகரண வேத்தா" என்று புகழ்கிறார். நவ வியாகரணங்களில் ஒன்று "ஐந்திரம்" - இந்திரனால் செய்யப்பட்டதால் இப்படிப் பெயர். தமிழ் இலக்கணத்துக்கு மூலமான "தொல்காப்பியம்" இந்த ஐந்திரத்தை மூலமாகக் கொண்டு அந்த வழியிலேயே செய்தது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

# வேதம் என்றால் என்ன?

**எதற்கு?**

இந்தியப் பண்பாட்டுக்குப் பழமையான ஆதாரமான முதல்நூல் வேதம்.

உலகிலேயே மிகவும் பழமையான நூல் வேதம் என்பதைச் சரித்திர வல்லுனர்கள் அனைவரும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

வேதம் என்றால் ஞானம். பரம்பொருளை அறிவிக்கும் வழி. பேரறிவைப் பார்த்தல் என்ற பல பொருள்கள் உண்டு.

இவ்வுலக நன்னெறியையும் தெய்வீக நெறியையும் அறிவிக்கும் நூல் வேதம்.

அந்தந்த ஸ்வரங்களைத் தவறாமல் உச்சரித்தால் பயன்தரக்கூடிய வல்லமை பெற்ற மந்திரங்களைக் கொண்ட பழநூலே வேதமாகும்.

மாந்தர் நல்வழியில் வாழ்ந்து விரும்பியவற்றை பெறவும் தீமைகளை விலக்கவும் தெய்வீகமான உபாயங்களை அறிவிக்கும் கிரந்தமே வேதம்.

"இஷ்டப்ராப்தி - அநிஷ்டபரிஹாரயோ:, அலௌகிகம் உபாயம் யோ க்ரந்தோ வேதயதி ஸ வேத:" என்று வேத பாஷ்யகாரரான ஸாயணர் என்ற மஹரிஷி வேதத்துக்கு லக்ஷணம் கூறியிருக்கிறார்.

மாந்தரைத் தெய்வீக நெறியில் வாழ வழி கூறுவது வேதம். இன்னும் வைணவர்கள் ஒருவரை ஒருவர் " தேவரீர் " என்று சொல்லி வழங்குவதைப் பார்க்கிறோம். மாந்தரை மனிதராக வாழ வழிகாட்டுபவை. வேத ரிஷிகள் அல்லாத பிறர் இயற்றிய நூல்கள் மாந்தரை விலங்கு வழியில் செலுத்தும் நூல்களையும் இன்று சிலர் எழுதுவதைக் காண்கிறோம்.

" பகவத் ஸங்கல்பம் - இறைவனது திருவுள்ளம் என்பதை மையமாகப் பற்றிக் கொண்டு நன்னெறியில் வாழ்ந்துள்ள பலரை நாம் நேரில் கண்டிருக்கிறோம். நல்ல வாழ்வுக்கு வழிகாட்டும் வேதத்தையே அவர்கள் நடைமுறையில் கடைப் பிடித்திருந்தார்கள்.

யுகம் யுகமாக என்றும் நிலைத்துள்ள வேத மந்திரங்களை ரிஷிகள் நெடும் தவத்தினாலும் மன ஆற்றலினாலும் கண்டார்கள்.

மிகவும் நுட்பமான அறிவு வடிவில் இருக்கும் வாக்கே "பரா" என்பது: இதுதான் வேதம். ரிஷிகள் இதைக் கண்டதும் இந்த வாக்கு "பஸ்யந்தி" என்ற பெயர் பெற்றது. சொல் வடிவாகத் தோன்றும் வேதம் இது. இதற்கு இடம் நாபி /தொப்புல் இது ஸ்தூல வடிவம் கொள்ளும் போது " மத்யமா வாக்கு" ஆகிறது.

இதற்கு இடம் இருதயம். இதுவே நெஞ்சு வழியாக வெளிவரும்போது ஒலி வடிவம் பெற்று "வைகரீ வாக்கு" ஆகிறது.

வேதம் அநாதி, என்றும் உள்ளது. இறைவனின் மூச்சுக் காற்று இது. வானத்தில் எப்போதும் ஒலிவடிவமாக இது மறைந்துள்ளது.

"மலைக் குகைகளிலும், ஆறுகள் சங்கமிக்கும் இடங்களிலும் பேரறிவு வாய்ந்த ரிஷிகள். வேத மந்திரங்களை வெளியிடப் பிறந்தார்கள்." உபஹ்வரே கிரீணாம், ஸங்கதே ச நதீநாம், தியாவிப்ரோ அஜாயத- என்று ரிக்வேதம் கூறுகிறது. நம் சமயப் பெரியோர்கள் யாவரும் இத்தகைய புனித இடங்களிலேயே அவதாரம் செய்துள்ளதை நாம் கவனிக்க வேண்டும்.

"வேதம் முழுவதுமே மாந்தரின் நற்கடமையைப் போதிக்கிறது" என்பது ஜைமினியின் கொள்கை / மீமாம்ஸா ஸூத்ரம். 1-2

"ரிஷிகள் வேத மந்திரங்களைக் கண்டவர்கள். இயற்றியவர்களல்லர்" என்று நிருத்தம் கூறுகிறது. அந்தந்தக் காலத்தில் முன்பு இருந்தபடியே வேத மந்திரங்கள் முனிவர் வாயிலாக வெளிவருகின்றன.

அளவற்று ஒன்றாக இருந்த வேதத்தை வியாச மஹரிஷி உலக நன்மைக்காக மந்திரங்களைத் தொகுத்து நால்வகையாக வகுத்தார்.

"ரிக், யஜுர், சாம, அதர்வண " என்று வேதம் நான்காக வகுக்கப் பெற்றதைப் புருஷ ஸூக்தம் தெரிவிக்கிறது.

இந்த நான்கு வேதங்களும் ஒன்றுடன் மற்றொன்று தொடர்பு கொண்டவை.

ரிக் வேதம் தேவர்களைப் பற்றிய துதிகளின் தொகுப்பு
யஜுர் வேதம் வேள்வி முறைகளை வர்ணித்து உரைப்பது
ஸாம வேதம் வேத மந்திரங்களை இசைத்துப் பாடுவது

அதர்வண வேதம் மாந்தர் இந்த உலகில் நோயின்றி நீண்ட வாழ்வு வாழ உதவும் மூலிகை களைப் பற்றியும், மருத்துவம் பற்றியும், ஆயுளை நீடிக்கும் மந்திரங்கள் பற்றியும் விரிவாக கூறுவது. ஜோதிடம், மாந்திரீகம், தாந்திரீகம் எல்லாம் இதில் அடக்கம்.

இந்த வேதங்களுக்கும் அவற்றின் அங்கங்களுக்கும் உரை இயற்றிய வேத பாஷ்யகாரர்கள் எழுபது பேர் விளங்குகிறார்கள்.

வேதப் பகுதிகளில் ஐயத்துக்கு இடமான பொருள்களை நன்கு விளக்குவது - பிராம்மணம் என்ற நூல்.

மூல நூலான ஒவ்வொரு வேத சமிதைக்கும் அதைச் சார்ந்த பிராம்மணம் உண்டு.

வேதவ்யாக்யா நஷரூபத்வாத் ப்ராஹ்மணஸ்ய - வேதத்துக்கு உரையாக விளங்குவது ப்ராஹ் மணம் என்று ஸாயனர் கூறுகிறார்.

பிராம்மணத்துடன் இணைந்தது ஆரண்யகம் என்ற பகுதி.

ஆற்றங்கரையில் தவ வனங்களில் ரிஷிகள் ஆராய்ந்து மிக்க அமைதியுடன் கண்ட உண்மை களை ஆரண்யகம் அறிவிக்கிறது.

ஆரண்யகத்தின் கடைசியில் வருவது உபநிஷத- முடிந்த முடிவான ஆராய்ச்சி உண்மைகளைக் கூறுவது. இதனால்தான் உபநிஷத்துக்கு "வேதாந்தம் " என்று பெயர். இந்த விதிக்கு விலக்காக, சுக்ல யஜுர் வேதத்து வாஜஸ்னேய ஸமிதையின் விளங்குவது - ஈசாவாஸ்ய உபநிஷதம்.

சதபதப் பிராம்மணத்தின் கடைசியில் ஆரண்யகமும் உபநிஷதமுமாக விளங்குவது பிருக தாரண்யகோபநிஷத்.

வேத மந்திரங்களுக்குப் பொருள் விளங்கவில்லை என்றால் அது மந்திரங்களின் குற்றமல்ல. குருடனுக்கு எதிரே இருக்கும் கம்பம் தெரியாவிட்டால் அது கம்பத்தின் குற்றமல்ல. குருடன் இயற்றிய குற்றமாகும். என்று யாஸ்கர் உரைக்கிறார்.

வேத மந்திரங்களுக்கு முதன்முதலாக உரை வகுத்தவர் யாஸ்கர். அவர் பழமையான ஸ ம்ஸ்கிருத மொழி இலக்கணத்தில் மிகவும் வல்லவர்.

ரிக் வேத ஸூக்தங்கள் ஒரே பரம்பொருள் தெய்வீக நெறியில் கடமைகளை ஆற்றுவதற்காக அக்கினி, இந்திரன், சோமன், வருணன், விஷ்ணு முதலிய பல வடிவங்களில் தோன்றுவதை வர்ணிக்கின்றன.

அக்கினி வானத்தில் சூரியனாகவும், இடைவெளியில் வாயுவாகவும் பூவுலகில் நெருப்பாகவும் விளங்குகிறான். அவனே வீட்டைக் காக்கும் தெய்வம்.

வருணன் கடல்வாழ் தெய்வம் மாந்தரின் பாவ புண்ணியங்களை அவன் காண்கிறான் வருணபாசம் பாவிகளைக் கட்டுப்படுத்துகிறது.

மூவடியினால் மூவுலகங்களிலும் வியாபித்த விஷ்ணு கடுமையான இடங்களிலும் மலைக் குகைகளிலும் திரிகிறான். இவனுடைய ஈரடிகளை மாந்தர் இவ்வுலகில் காண இயலும். மூன்றாவது திருவடி, மிகவும் உயர்ந்த விண்ணுலகில் விளங்குகிறது. வெள்ளத்தைப் பருகிப் பேரானந்தம் எய்துகின்றனர்.

வாயுதேவன் காதைச் செவிடுபடுத்தும் இடியோசையை உண்டாக்கி மின்னலுடன் மழையைப் பொழியத் தூண்டுகிறான். புயற்காற்றினால் பெரிய பெரிய மரங்கள் ஆடி வேரற்று விழும்போது

இவனுடைய கடும் வடிவத்தை நாம் காண்கிறோம்.

இந்திரன் தெய்வ உலகுக்கு அரசனாக விளங்கி மாந்தரின் நலனுக்காக மழையைப் பொழிகிறான். தனக்கு இடையூறு இழைக்கும் பாவ வடிவினனான விருத்திரனை அழித்து அவன் வெற்றிவாகை சூடுகிறான்.

நோய்வாய்ப்பட்ட மக்களுக்கு மருத்துவமும் ஆயுதச் சிகிச்சையும் செய்து உதவுகிற தெய்வீக மருத்துவ இரட்டையர் - அஸ்வினி தேவர் ஆவர்.

இவ்வாறு தேவர்கள் பல வடிவங்களில் உலகுக்குக் காப்பாக இருந்து துணைபுரிகின்றனர்.

கிடைக்கும் பொருளைக் கொண்டு போதுமென்ற மனதுடன் அமைதியாக வாழ்வாயாக - வித்தே ரமஸ்வ ப/ஹமந்யமாந: என்று வேதம் கூறுகிறது.

சூதாட்டம் வேண்டாம், வேளாண்மை செய்து தொழில் செய்து பிழைப்பாயாக - அக்ஷைர் பா திவ்ய:, க்ருஷிமித் க்ருஷஸ்வ என்கிறது வேதம்.


"தன்னிடம் மிகுதியாக உள்ளதை மாந்தர் பிறருக்குக் கொடுத்து உதவ வேண்டும். பட்டினி இருந்து சாவதற்காகத் தேவர்கள் பசியை படைக்கவில்லை. ஈயாப் பித்தனும் ஒரு நாள் இறந்தே போவான். பிறருக்குக் கொடுப்பவனது செல்வம் என்றும் குறைவதில்லை. பிறருக்குச் சோறு இடாதவனுக்கு ஆபத்தில் உதவ ஈ காக்கையும் வராது. எனவே கொடை என்பது சிறந்த பண்பு அனைவருக்கும் இந்த பண்பு இராது. இரண்டு கைகள் ஒரே ஆற்றலுடன் வேலை செய்வதில்லை இரட்டையராக இருப்பினும் ஒருவருக்கு உள்ள ஆற்றல் மற்றொருவருக்கு இருப்பது இல்லை அண்ணன் தம்பியராயினும் ஒருவரைப் போல் மற்றவர் கொடுப்பதில்லை" என்று ரிக் வேதம் / 10-1-17 கூறுகிறது.

வேதம் நமது என்றும் அழியாத பெருஞ்செல்வம். அதைக் காத்துப் போற்றி மகிழ்வது நமது இன்றியமையாத கடமை பேரின்பம் நல்கும் கடமையும் கூட.


## விழா நாயகர் கும்பாபிஷேகம் செய்த கோயில்கள்



முத்துமாரி அம்பாள்
நீர்வேலி மத்தி



சிறுப்பிட்டி மேற்கு
ஞானவைரவர்




ஒல்லை வைரவர்
நீர்வேலி தெற்கு



புதுத்தோட்டம்
நெல்லியடி
ஸ்ரீ விநாயகர்



நீர்வேலி மத்தி
பூவரசடி ஞான வைரவர்





முழக்கம்பிட்டி நாச்சிமார் கோயில்
கும்பாபிஷேகத்தின் காட்சிகள்





சிறுப்பிட்டி ஞான வைரவர் ஆலய
திருவிழாக் காட்சி

# ஆலயமும் அர்ச்சகர்களும்...

ஆலயத்தைப் பற்றிய இவ்விஷயத்தில் அர்ச்சகரைப் பற்றியும் சொல்ல வேண்டியது அவசியம்.

இறைவனுக்கும், பக்தனுக்கும் நடுவில் தரகரைப் போல அர்ச்சகர் எதற்கு என்று ஒரு சில அறிவு ஜீவிகள் கேள்வி கேட்கிறார்கள். இவர்கள் ஆலயத்தில் அர்ச்சகரின் பங்கு என்ன என்பதைப் புரிந்து கொள்ளவில்லை. ஏனெனில் தரகர் என்பவர் ஒரு பொருளை வாங்குபவருக்கும் விற்பவருக்கும் இடையில் செயல்படுபவரே. அப்படியானால் ஆலயத்தில் விற்கப்படும் பொருள் என்ன? விற்பவர் யார்? என்பதெல்லாம் தெரியவில்லை.

மற்றொரு சாரார் அர்ச்சகர்கள் தாங்கள் உலக நன்மையின் பொருட்டு பூஜை செய்கிறோம் என்று கூறுகிறார்கள் அவர்கள். எங்களை காப்பாற்றிக் கொள்ள எங்களுக்கு தெரியும் எங்களுக்காக அர்ச்சகர்கள் பூஜை செய்ய வேண்டாம். நாங்கள் செய்து கொள்கிறோம் என்கிறார்கள். இவர்கள் உலகம் என்பது இவர்கள் மட்டுமே என்று நினைப்பார்கள் போலும்.

உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே என்ற காரணத்தினாலோ என் னவோ? ஆனால் ஆலய வழிபாட்டிற்கு அடிப்படையாக விளங்கும் ஆகமங்கள் அர்ச்சகரைப் பற்றியும், ஆலய வழிபாட்டின் நோக்கத்தை பற்றியும் தெளிவாக விளக்குகின்றன.

**ஆலய வழிபாட்டின் நோக்கம்.**

सर्वेशाम् रक्षणार्थाय ग्रामाधशि वसिशध:
स्थापधिम् वढिनि लनि्गम् सुरैर्वा मुनबिर्निरै:
स्वयमुध्बूथ लनि्ग्नज प्रथमिान्जैस्वराथ्मकम्
थथ्परार्थम् समाक्याथम् सर्वेशाम् आथ्मन: फलम्.

சர்வேஷாம் ரக்ஷணார்த்தாய, க்ராமாதி/ விசேஷத:.
ஸ்தாபிதம் விதிநா லிங்கம், சுரைர்வா முநிபிர்நரை:.
ஸ்வயமுத்பூத லிங்கஞ்ச ப்ரதிமாஞ்சேஸ்வராத்மகம்..
பொருள்.

உலகிலுள்ள அனைவரின் நல்வாழ்வின் பொருட்டு கிராமம் /நகரம், பட்டணம் போன்ற இடங்களில் விஷேசமான முறையில் தேவர்களாலோ, முனிவர்களாலோ, அல்லது மனிதர்களாலோ முறைப்படி ஸ்தாபிக்கப்பட்ட லிங்கத்தினையோ, தான் தோன்றியாகிய ஸ்வயம்பு லிங்கத்தினையோ, இறை தன்மை பொருந்திய சிலைகளையோ பூஜை செய்வது என்பது பரார்த்தம் எனப்படும். /அந்த பரார்த்த பூஜையின் பலன் அனைத்து உயிர்களுக்கும் உரியதாகும்.

**அர்ச்சகர் யார்? அவரது பணி என்ன?**

சிவாலயங்களில் பூஜை செய்யும் அர்ச்சகர்களுக்கு ஆதிசைவர்கள், சிவப்ராஹ்மணர், சிவேதியர், சிவ விப்ரர், சிவாசார்யர் போன்ற பல பெயர்கள் உண்டு. அவர்கள் பரார்த்த பூஜை எனும் திருக்கோயில் பூஜை செய்தவர்கள் பொருட்டு சிவபெருமானால் நேரடியாக தீக்ஷிக்கப் பெற்ற கௌசிகர் முதலான ரிஷிகளின் வம்சத்தில் வந்தவர்கள் என்றும் பூஜையானது அவர்களாலேயே செய்யப்பட வேண்டும் என்பதும் ஆகமங்களும் பெரிய புராணமும் கூறும் செய்தி.

"பரார்த்த யஜனம் கார்யம், சிவ விப்ரைஸ்து நித்யச:"~ சிவாகமம்.

परार्थम् यजनम् कार्यम्> सवि वप्रिैस्थु नथि्यस:

பரார்த்த பூஜை எனும் திருக்கோயில் பூஜையானது ஆதிசைவரான சிவவிப்ரராலேயே தினமும் செய்யப்பட வேண்டும்.

எப்போதும் இனியபிரான் இன்னருளால் அதிகரித்து
மெய்ப்போத நெறிவந்த விதிமுறைமை வழுவாமே,
அப்போதைக் கப்போதும் ஆர்வமிகும் அன்பினராய்
முப்போதும் அர்ச்சிப்பார் முதற்சைவராம் முனிவர்.~ சேக்கிழார் ஸ்வாமிகள் /பெரிய புராணம்

தெரிந்துணரின் முப்போதும் செல்காலம் நிகழ்காலம்
வருங்காலமானவற்றின் வழிவழியே திருத்தொண்டின்,
விரும்பியவர்ச்சனைகள் சிவவேதியர்க்கே உரியன அப்
பெருந்தகையார் குலப்பெருமை யாம் புகழும் பெற்றியதோ.~ சேக்கிழார் ஸ்வாமிகள் /பெரிய புராணம்

மேற்கூறிய கருத்துக்களின் மூலம் அர்ச்சகர் தரகர் அல்ல என்பதும் அவர் சிவபெருமானின் ஆணையால்தான் உலக நன்மைக்கான பரார்த்த பூஜைகளைச் செய்கிறார் என்பதும் தெளிவாக விளங்குகிறது.

இனி ஆலய பூஜையில் அர்ச்சகரின் பங்கு என்ன என்பதைப் பார்ப்போம்.

திருகோவிலுள் ப்ரதிஷ்டை செய்யப்படும் மூர்த்திகள் /விக்ரஹங்கள் மூன்று காரணங்களால் தெய்வத்தன்மையை அடைகிறது என்று ஆகமங்கள் கூறுகின்றன.

"அர்சகஸ்ய ப்ரபாவேந அர்சநஸ்யாதி சாயநாத், ஆபிருப்யாச்ச பிம்பாநாம் சிலாபவதி தேவகி"

अर्शकस्य प्रभावेन> अर्शस्याथी सायानाथ्

आभरिप्यास्स बम्बिानाम्> सलिाभवथी धेवकी.

அர்ச்சகருடைய மனோபாவனையாலும், அர்ச்சனையின் சிறப்பாலும், விக்ரஹத்தின் அழகினாலும் சிலையானது தெய்வத்தன்மை அடைகிறது.

இறைவனது ஸாந்நித்யம் நிலை பெறுவதற்கு ஆச்சார்யனின் தவ வலிமையே காரணம் என்கிறது.

மற்றொரு வாக்யம்

"அர்சகஸ்ய தபோயோகாத், தேவ சாந்நித்ய ம்ருச்சதி:"

अर्शस्य थपोयोगाथ्> धेव सान्नध्यि म्रुछथी.

மூர்த்திகளை /விக்கிரஹங்களை எண்ணை தேய்த்து, நீராட்டி, வஸ்த்திரம் சாற்றி தன் குழந்தையைப் போல கவனிக்கும் ஆச்சார்யன் /அர்ச்சகர் தன்னை பல்வேறு நேரங்களில் எவ்வாறு நினைத்துக் கொள்ள வேண்டும் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

"ஆவாஹனாதி காலேது ஆசார்யோ குரு ஷரூப த்ருத்

அபிஷேகாத்யலங்காரே ஆசார்யோ மாத்ரு ஷரூபவாநு,

நைவேத்ய தூப தீபாதௌ அர்ஸ்நே மந்த்ர ஷரூபவாநு

ஸ்தோத்ர ப்ரதக்ஷிணே காலே ஆசார்யோ பக்த ஷரூபவாநு. "சிவாகமம்.

आवाहनाथी कालेधु आशार्यो गुरु रूप ध्रुक्
अभशिकाध्यलन्गारे थ्वाशार्यो माथ्रु रूपवानु
नैवेध्य प्रधक्षणि कालेथ्वाशार्यो भक्थ रूपवानु.

ஆவாஹனம் முதலான காலத்தில் ஆச்சார்யன் குரு ஷரூபமாகவும், அபிஷேக, அலங்கார காலத்தில் தாயைப் போலவும், நைவேத்யம் முதலான சமயத்தில் மந்த்ர ஷரூபமாகவும், ஸ்தோத்ரம், மற்றும் ப்ரதக்ஷிண காலத்தில் பக்தனைப்போலவும் ஆச்சார்யன் /அர்ச்சகர் தன்னை பாவித்துக் கொள்ள வேண்டும்.

மற்றொரு வாக்யமோ இன்னும் ஒரு படி மேலாக 7 வித லிங்கங்களில் அர்ச்சகனும் ஒன்று என்று கூறுகிறது.

"கோபுரே சிகரே த்வாரே, ப்ராகாரே பலி பீடகே.
அர்ச்சகே மூல லிங்கேச சப்த லிங்கஸ்ய தர்ஸநம்."

गोबुरे सखिरे ध्वारे प्राकारे बलपिूटके
अर्श्के मूल लन्गिेश सप्थ लन्गिस्य धर्स्नम्.

அதையே "அர்ச்சகஸ்து ஹரஸ்ஸாக்ஷாத்" அதாவது அர்ச்சகர் சிவபெருமானே என்று ஒரு பழமொழி தெளிவுபடுத்துகிறது.

இவ்வளவு பெருமை கொண்ட அர்ச்சகர்கள் இன்று கூலிக்கு வேலை செய்பவர்களாக சித்தரிக்கப் படுகிறார்கள். அது அவர்கள் பிழை அல்ல. காலத்தின் கோலமே என்பதையும் அதன் காரணத்தையும் கீழ்க்காணும் திருக்குறள் உணர்த்துகிறது.

"ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல் மறப்பர்,

காவலன் காவான் எனின்" திருக்குறள்.

இதையே பாரதியும் சொன்னான்

"பேய்கள் அரசாண்டால் பிணம் தின்னும் சாஸ்த்திரங்கள்" என்று. அது உண்மையே என்பதை நம்மால் நிதர்சனமாக காணமுடிகிறது. என்ன நடந்தாலும் நடக்கட்டும் ஆண்டவனே துணை என்பதை உணர்ந்து அர்ச்சகர்கள் தன் கடமையை செவ்வனே செய்யட்டும்.

**பெண்களுக்குச் சிறப்புக் குறிப்புக்கள்**

- பெண்கள் எப்போதும் மூன்று இடங்களில் குங்குமம் இடவேண்டும். மாங்கல்யம், நெற்றி, முன் வகிடு மத்தியில். இது தெய்வீகப் பண்பு களைப் பெற்றுத் தரும்.

- ஸ்டிக்கர் பொட்டு வைக்க வேண்டாம். குங்குமப் பொட்டு வைத்தலே உடலுக்கு நல்லது. தாலியை நூலாகிய சரட்டில் கோர்த்து அணிவது தான் சிறப்பு. அத்துடன் தேவையான சங்கிலி முதலியவற்றை அணியலாம். நூலாகிய தாலி சரட்டிற்குப் பஞ்சபூத சக்திகள் அதிகம். தங்கச் சங்கிலியில் தாலியைக் கோர்த்து அணிந்தால் பஞ்சபூதசக்திகள் கிடைப்பதில்லை.

- கோயில்களில் பிரார்த்தனையாக மற்றவர் ஏற்றி வைத்த தீபத்திலிருந்து நாம் நம்மு டைய தீபத்தை ஏற்றக்கூடாது. நாம் தனியாகத் தீப்பெட்டி கொண்டு சென்றுதான் நம் விளக்கை ஏற்ற வேண்டும். பிறர் தங்கள் தோஷநிவர்த்தியாக வேண்டிக் கொண்டு ஏற்றிவைக்கும் விளக்கில் நம் விளக்கை ஏற்றினால் நமக்குத்தான் தோஷம் ஏற்படும்.

- காதில் தோடு, மூக்கில் மூக்குத்தி, கையில் வளையல், காலில் மெட்டி முதலியவை அணிகலன்களாக இருந்தாலும் மங்கலப் பொருட்களாக கருதப்படுகின்றன. இவை இல்லாமல் ஒரு பெண் இருக்கக் கூடாது.

- தாலி என்பது ஒரு மங்கலப்பொருள். எனவே அணிகலன்களைப் போல் தினமும் அதைக் கழற்றி வைப்பதும் மறுநாள் எடுத்து அணிந்துகொள்வதும் தவறு. அது எப்பொழுதும் கழுத்திலேயே இருக்க வேண்டும்.

# அர்ச்சனையின் பெருமை..

பாகவதத்தில் பக்த சிரோமணி பிரஹ்தாரின் அருள்வாக்கு இது. பகவானை வழிபட்டு அருளைபெற பக்திதான் சிறந்தது. பக்தியே பக்தியை வளர்க்கும். இதற்கு ஒன்பது வகை சாதனங்கள் உள்ளன. அவை என்னவெனில் சிரவணம், கீர்த்தனம், ஸ்மரணம், பாதஸேவனம், அர்ச்சனம், வந்தனம், தாஸ்யம், ஸ க்யம், ஆத்ம நிவேதனம். இவை முறையே ஆண்டவனின் பெருமையைக் காதால் கேட்பது, பாடிப் பரவசமடைவது, தியானித்து /நினைத்து இருப்பது, திருத்தொண்டு செய்வது, அர்ச்சனை /பூஜை செய்வது, தண்டனிட்டு வணங் குவது, ஆண்டவனுக்கு அடியவன் நான் என்ற தீர்மானத்துடன் அவன் பணியே செய்து வருவது, நட்புணர்வோடு ஒன்றி வழிபடுவது, தன்னையே பகவானுக்கு அர்ப்பணிப்பது, இந்த ஒன்பது வகை சாதனங்களில் ஏதாவது ஒன்றின் மூலம் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் எல்லாம் பகவானுக்கே அர்ப்பணம் என்ற திட நம்பிக்கையோடு பக்தி புரிவதுதான் உத்தமமான உபாசனை ஆகும்.

இவைகளில் அர்ச்சனைக்குத் தனிச்சிறப்பு உண்டு. பகவானுடைய மூர்த் தியை நமக்கு ஏற்றவகையில் அமைத்துக்கொண்டு பக்தி பரவசத்துடன் அர்ச்சிக்க வேண்டும். ஆலயத்திலும், இல்லத்திலும், அர்ச்சா மூர்த்தியை பூஜிக்கலாம். அபிஷேகம், அலங்காரம், நைவேத்தியம், தூப-தீப ஆராதனை என்று பலவகை உபசாரங்கள் /பணிவிடைகள் அர்ச்சனைக்கு உட்பட்டவை.

பகவானின் அர்ச்சாமூர்த்திகள்தான் சாஸ்த்திர விதிப்படி எட்டு மூர்த்திகளை முக்கியமாக கருதுகிறது. அவை சைலி /கற்சிலை வடிவம் தாருமயீ /மரத்தால் பிரதிமை லௌஹீ /உலோக விக்ரஹம் லேப்யா /மெழுகினால் ஆன மூர்த்தி லேக்யா / ஓவிய வடிவம் ஸைகதி ஜமண் வடிவம் மனோமயி / மானசீகமான ஷரூபம் மணிமயீ / நவரத்தினங்களில் ஒன்றால் உருவாக்கிக் கொண்டது.

இவை பக்தர்களின் சௌகர்யத்திற்காக அமைந்தவை. எந்த இடத்தில் எந்த மூர்த்தி கிடைக்கிறதோ அதை ஏற்று பூஜிக்க வேண்டும். முக்கியமாக நாம் பூஜிக்கும் மூர்த்தியை சர்வேஸ்வரனாகவே நம்பி மதித்து ஆராதிக்க வேண்டும். அதன் மூலப்பொருள் பற்றிய சிந்தனையே இருக்கக்கூடாது. நம் பக்திப் பரவசம் அர்ச்சனை வழிபாடு மூலம் அந்த உருவத்திற்கு தெய்வசான்னித்யம் ஏற்பட்டு

விடுகிறது. இதைதான் ஆன்றோர்கள் "அர்ச்சகஸ்ய பிரபாவேன சிலா பவதி சங்கர்" அதாவது அர்ச்சனை செய்யும் பக்தனின் பக்தி மகிமையால் கற்சிலையும் சிவபிரானாகி விடுகிறது என்றார்கள்.

திடமான ஆழ்ந்த பக்திதான் முதல் தகுதி. இதைதான் "தேவிபூத்வா தேவம் யஜேத்" /தெய்வ சொரூபமாகத் தன்னைப் பாவித்துக் கொண்டு தெய்வ மூர்த்தியைப் பூஜிக்க வேண்டும் என்று சாஸ்த்திரம் கூறுகிறது. இதைதான் கண்ணபிரான் பகவத்கீதையில் உபதேசிக்கிறார். "பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி. ததஹம் பக்தியுபஹ்ருதயம் அஸ்னாமி ப்ரயதாத்மன" / பக்த சிரத்தையுடன் எனக்கு சமர்ப்பிக்கும் எளிய பொருளையும் அது இலையோ, மலரோ, கனியோ, நீரோ எதுவாக இருந்தாலும் தூய பக்திக்காணிக்கையாக மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறேன் என்கிறார்.

**தாய், தந்தையைப் பேணல்**

- பெற்றோர்களைச் சரிவர நடத்தாதவன் வாழ்க்கையில் தோல்வியையே சந்திப்பான். அவன் சந்ததியும் விருத்திக்கு வராது. எனவே பெற்றோர்களை அவர்கள் மனம் புண்படாதவாறு பாதுகாத்து வர வேண்டும்.
- அவர்கள் மனம் நோக எதையும் பேசவேண்டாம். வீட்டில் உள்ள சிறுவர்களிடமும் பெரியவர்களிடமும் மரியாதையாகவும் அன்பாகவும் பாசத்துடனும் இருக்கப் பழக வேண்டும்.
- நேரம் கிடைக்கும் போதெல்லாம் அவர்களுடன் சிறிது நேரம் பேசுங்கள்.
- அவர்கள் தவறு செய்தாலும் மூப்புக் காரணமாக குறைகூறிக்கொண்டிருந்தாலும் அதைப் பொருட்படுத்தக்கூடாது. அவர்கள் கூறுவது காதில் விழாததுபோல் அந்த இடத்தைவிட்டு அகல வேண்டும். அவர்கள் சொல்வதற்கெல்லாம் எதிர்ச்சொல்கூறிச் சண்டையிட்டுக் கொண்டிருக்கக்கூடாது. அவர்களைத் துன்பத்தில் ஆழ்த்தி நாமும் துன்பப்படக்கூடாது. இது போன்ற சமயங்களில் மௌனம் நன்று.
- தாய், தந்தையரைக் கவனிக்காமல் தவிக்கவிட்டு விட்டுப் பிறருக்குத் தானம் கொடுத்தால் அது பலனளிக்காது.
- தாயை நமஸ்காரம் செய்யுங்கள். இல்லாவிட்டாலும் தாயின் மனது நோக எதையும் எந்நாளும் செய்யாதீர்கள்.

# எந்தெந்த யாகத்தினால் என்னென்ன பலன்கள் நமக்கு கிடைக்கப் பெறும்

| | |
|---|---|
| காரிய சித்திக்கு | - கணபதி யாகம். |
| க்ரஹ ப்ரீதிக்கு | - நவக்ரஹ யாகம். |
| ஐஸ்வர்யத்துக்கும்,தனப்ராப்திக்கும் | - மஹா லக்ஷ்மி யாகம். |
| ஆயுள் விருத்திக்கு | - அமிருத முருத்யுஞ்ஜய யாகம் |
| ஆரோக்யமான வாழ்விற்கு | - ஆயுர்தேவதா,மற்றும் ஆயுஷ்ய ஹோமம். |
| சத்ரு உபாதைகள் நீங்க | - சுதர்சன யாகம் மற்றும் சத்ரு சம்ஹாரயாகம். |
| கல்விக்கு | - மஹா சரஸ்வதி யாகம், மற்றும் ஹயக்ரீவர் யாகம். |
| செய்வினை,மாந்ரீக வினை நீங்க | - ப்ரத்யங்கிரா மற்றும் சூலினி யாகம். |
| சகல கார்ய வெற்றிக்கு | - மஹா சண்டி யாகம். |
| பித்ரு தோஷம் நீங்க | - தில ஹோமம் |
| நாக தோஷம் நீங்க | - சர்ப்ப சாந்தி. |
| திருமண தடை நீங்க | - ஹரித்ரா கணபதி யாகம். |
| ஆசைகள் பூர்த்தி அடைய | - வாஞ்சா கல்ப கணபதி யாகம். |
| புத்ர சந்தானம் கிடைக்க | - புத்ர காமேஷ்டி யாகம். |
| சகல தோஷமும் நீங்கி நலமடைய | - ஸ்ரீ.ருத்ர யாகம், |
| அம்பிகை அருள் பரிபூர்ணமாக கிடைக்க | - ஸ்ரீ.வித்யா யாகம். |
| ஆபத்து,விபத்துகள் அகல | - அஸ்த்ர ஹோமம். |

தகுந்த ஆசார்யர்களை கொண்டு செய்தால் நிச்சயம் பலன் உண்டு என்பது பல சமயம் நிரூபிக்கப்பட்ட உண்மை...

# ஆன்மீக உணர்வு என்றால் என்ன?

"மேதா நாடி" என்று ஒரு நாடி இருக்கிறது. அது உயர்ந்த, ஆழ்ந்த ஆன்மீக உணர்வுகளை ஒருவரிடம் தோற்றுவிக்கிறது.

"நான் யார்?" என்ற கேள்வியில் தொடங்கி, நானே ஆன்மா எல்லாம் ஆன்மாக்கள். எனவே எல்லாமே ஒன்று" என்ற மெய்ஞ்ஞான நிலையை நாம் பெறுவதற்கு இந்த மேதா நாடி நமக்கு உதவுகிறது.

"மேதா " என்ற சொல் மூளையின் தனிப்பட்ட ஒரு பேராற்றலைக் குறிக்கும். இந்த ஆற்றலால் சூட்சுமமான உயர்ந்த ஆன்மீக உண்மைகளை அறிந்து கொள்ளும் திறமை / INTUITION வெளிப்படுகிறது.

ஒருவன் பத்து அல்லது பன்னிரண்டு ஆண்டுகள் பிரம்மசரியத்தை ஒரு தவமாகவே மேற்கொள்வானேயானால், அதன் விளைவாக ஆன்மீக ஆற்றல் அவனுள் மலர்ந்தெழுகிறது. இதை நாளடைவில் அவன் அனுபவத்தில் தெளிவாக உணர்கிறான். உணரமுடியும் இது உறுதி.

மனிதர்களாகப் பிறந்த எல்லோரிடமும் இந்த தெய்வீக மயமான ஞானம் சூட்சுமமாக இருக்கத்தான் செய்கிறது. என்றாலும் அது உறங்கிய நிலையில் இருக்கும். இதைப் பற்றி இங்கே கொஞ்சம் குறிப்பிடுகிறேன்.

எதையும் ஆராய்ந்து, பரிசோதித்துப் பார்ப்பது மக்களின் இயல்பு. ஆனால் இவற்றைக் கடந்து திடீரென்று நமக்குள் தோன்றி வெளிப்படும் சூட்சும அறிவு /உணர்வுத்திறன் ஒன்று. இது அவ்வப்போது நாம் சற்றும் எதிர்பாராத வகையில் மின்னல் போன்று தோன்றி வெளிப்படும். இதை முதலில் தட்டியெழுப்ப வேண்டும். பிறகு இதனை நிரந்தரமாக்கி தமது இயல்பாகவே ஆக்கிக்கொள்ள வேண்டும். இதுதான் ஆன்மீக வாழ்க்கையில் ஈடுபடும் சாதகர்கள் எல்லோருடைய முதல் இலட்சியமாகும்.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரும் ஸ்வாமி விவேகானந்தரும் இதைப் பற்றி மிகவும் விளக்கமாகவே சொல்லியிருக்கிறார்கள்.

இது ஒரு தத்துவம். இந்த தத்துவம் வெறும் ஒரு கொள்கை Theory அல்ல. ஆன்மீக ஆராய்ச்சிசாலையில் பரிசோதனையில் பரிசோதிக்கப்பட்டு - அனுப வித்து உணர்ந்து நிரூபிக்கப்பட்ட உண்மை ஆகும்.

பிரம்மசரியம் மூளையைப் போற்றி வளர்க்கிறது. அதன் வலிமையை வளம்படுத்தி உயிர்த்துடிப்புடன் பிரகாசிக்கும்படி செய்கிறது.

பிரம்மசரியம் பேணாதவர்கள் தியானம் பழகும்போது மூளை விரைவில் சூடேறிவிடுவதை நாம் பார்க்கலாம்.

மூளை திடமாகவும் குளிர்ச்சியாகவும் இருந்தால்தான், தியானம் தொடர்ந்து இயல்பாக நடைபெறுவதற்கு வசதியாக இருக்கும்.

மணிக்கணக்காகத் தியானம் செய்வதால் உள்ளுக்குள் ஏற்படும் விரைப்பை, உட்புயலைப் பிரம்மசரியம் பேணாதவர்கள் மூளையில் தாங்கிக்கொள்ள முடியாது.

சுருக்கமாகச் சொன்னால். உயர்நிலை ஆன்மீக சாதனைக்கு மிகவும் உயர்ந்த ஆன்மீக வாழ்க்கைக்கு பிரம்மசரியம் முற்றிலும் இன்றியமையாதது.

முதன் முதலில் ஆன்ம சாதனையில் நுழைய விரும்புபவர்களுக்கு இதைப் பற்றியெல்லாம் ஆரம்பத்திலேயே வெளிப்படையாகச் சொல்லும் வழக்கமில்லை. அப்படிக் கூறினால் அவர்கள் ஆன்மீக சாதனையில் உற்சாகம் குன்றிப் போவார்கள். ஆன்மீக வாழ்க்கைக்கு பயந்து ஒதுங்கிவிடுவார்கள். என்றாலும் உண்மை உண்மைதான். அதாவது மனம், வாக்கு, காயம் மூன்றிலும் விடாப்பிடியான தன்னடக்கம் தூய்மை கண்டிப்பாக தேவை. அது இல்லாமல் உயர்ந்த வகையைச் சேர்ந்த தெய்வீக வாழ்க்கை ஒருவருக்கு இயல்பானதாக அமைவதில்லை.

இருந்தாலும் மக்களுடைய ஆர்வத்தைக் குலைத்துவிடக் கூடாது என்பதற்காக சில விஷயங் களை நாங்கள் வற்புறுத்தவில்லை. பிரம்மசரியம் பேணுவதில் உள்ள நுணுக்கங்கள் அப்படிப்பட்ட சில விஷயங்களாகும். அவற்றை அழுத்தம் திருத்தமாக வலியுறுத்திச் சொல்லாமல் எளிய முறையில் விளக்குவதுதான் மரபாக இருந்து வருகிறது.

சேதன உணர்வின் / Consciousness உயர்நிலை மையங்களைக் கிளர்ந்தெழச் செய்வது ஆன்மீக சாதனையின் முதல் படியாகும்.

உயர்நிலை மையங்களில் ஏதாவது ஒன்றின் மீது மனதைக் குவித்துத் தியானம் பழக வேண்டும். இந்தப் பயிற்சிக்கு ஆரம்பமாக ஆன்மீக /உணர்வு மையத்தை விழிப்படையச் செய்ய வேண்டும். ஆனால் இப்படி விழிப்படையச் செய்வதற்கு முன்னால் கீழ்மட்ட /உணர்ச்சி மையங்களை ஒடுக்கியாக வேண்டும். தாழ்ந்த உணர்ச்சிகளைத் தோற்றுவிக்கும் கீழ்மட்ட மையங்கள் எல்லாம் ஒன்றுகூடி இயக்கும்போது மேல் மையங்களில் /தெய்வீக உணர்வுகளில் நாட்டம் செல்லாது. ஏனென்றால் நமது மனதின் ஆற்றல்கள் கீழ்மைய இயக்கங்களிலேயே செலவழிந்து போயிருக்கும். எஞ்சி இருக்கும் ஆற்றல் உயர்தர ஆன்மீக மையங்கள் செயல்படுவதற்கு போதாமல் போய்விடும். அந்த அளவுக்கு நமது மொத்த மனதின் ஆற்றல் குறைந்து போயிருக்கும். எனவே கீழ்மட்ட மையங்கள் /தாழ்ந்த உணர்ச்சிகள் இயக்குவதை ஆன்மீக சாதகர்கள் ஒடுக்க வேண்டும்.

அப்படிச் செய்யாவிட்டால் உயர்ந்த ஆன்மீக உயர்வு மட்டத்தில் நம்மை நிலைநிறுத்திக் கொள்ள முடியாமல் நாம் தவிக்க வேண்டும்.

இந்த விஷயத்தில் யார் என்ன சொன்னாலும் சரி, யார் என்ன நினைத்தாலும் சரி, கீழ்மட்ட உணர்வு மையங்களை அடக்கி ஒடுக்கத்தான் வேண்டும். இது தவிர்க்க முடியாதது. இதைவிட்டால் பிரம்மசரியத்துக்கு வேறு ஒரு வழியும் கிடையாது.

எனவே கீழ்மட்டத்திலுள்ள தாழ்ந்த உணர்ச்சி மையங்களைச் செயல்படாமல் ஒடுக்கி வையுங்கள். அப்படிச் செய்யாவிட்டால் மேள்தள ஆன்மீக உணர்வு மையங்கள் ஒழுங்காகச் செயல் புரிய இயலாது. தரை மட்டத் தளத்தில் எல்லாக் குழாய்களும் திறந்திருக்கும்போது கட்டடத்தின் மேல் தளங்களுக்குத் தண்ணீர் பாயுமா? இது அது போன்றதுதான்.

கடும் பிரம்மசரியம் நோற்காத ஏதோ ஒரு சிலருக்கு தெய்வீக அனுபவங்கள் அல்லது தெய்வீகக் காட்சிகள் ஆங்காங்கே சில மினுக்கொளிகளாக அவ்வப்போது கிடைத்திருக்கலாம். எனினும் அவர்கள் உயர்ந்த ஆன்மீக உணர்வு மையங்களில் தொடர்ந்து நீடித்து நிற்பார்கள் என்று சொல்ல முடியாது. உயர்நிலை மெய்ஞானம் அடைவதில் அவர்கள் வெற்றி கண்டிருக்க முடியாது என்றும் நாம் திட்ட வட்டமாக சொல்ல முடியும்.

ஆகவே ஆன்மீகத்தில் எப்படிப்பட்ட உயர்ந்த நிலையை அடைய விரும்பினாலும் மெய்ஞ்ஞானத்தின் எந்தத் தளத்தை எட்டிப்பிடிக்க வேண்டுமானாலும் எந்த வகையிலும் எல்லா வகையிலும் புலனடக்கம் பழகித்தான் ஆகவேண்டும்.

இதைவிட்டால் வேறு வழியுமில்லை.

ஆன்மீக துறையில் இந்தக் கருத்து வெட்டவெளிச்சமாகத் தோன்றும் ஒரு கசப்பான உண்மை. ஆனால் நீண்ட நெடிய அனுபவம் கற்றுத் தந்த ஒரு பெரிய உண்மை இது.!

முழுமையான ஒரு பிரம்மசரியனுக்கு வாக்கு பலிதம், எதிலும் வெற்றி, சீக்கிரம் மந்திரம் சித்தியாகுதல், உடல் ஆரோக்கியம், நீண்ட ஆயுள், தெய்வ சான்னித்தியம் போன்ற அதிசயத்தக்க பல சக்திகள் இயல்பாக கிடைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை...

# எது பிரம்ம ஞானம்?

ஒருவர் பிறவியில் பிராமணராகப் பிறந்திருக்கலாம். ஆனால் பிரம்மஞானம் பெற அவர் முயற்சி செய்யாதவராகவே இருந்தால், அவரைப் பிராமணன் என்று இந்து மத சாஸ்த்திரங்கள் ஏற்றுக்கொள்வதில்லை.

மாறாக ஒருவர் க்ஷத்திரியராகவோ, வைசியராகவோ பிறந்திருந்தாலும் பிரம்ம ஞானம் பெறுவாரானால் அவரை பிராமணன் என்றே இந்து மதம் அங்கீகரிக்கிறது.

விஸ்வாமித்திரர் பிறவியில் க்ஷத்திரியர்.ஆனால் அவர் பிரம்மஞானம் பெற விரும்பினார். தம்மைப் பிரம்மரிஷி என்று பிறர் மதிக்க வேண்டும் என்று நினைத்தார்.எனவே அவர் காடு சென்றார், கடுந்தவம் புரிந்தார். இந்த நிலையில் ஒரு நாள் அவருக்கு தாம் பிரம்மஞானம் எய்தியிருப்பது போன்ற எண்ணம் ஏற்பட்டது. உடனே அவர் வசிஷ்டரிடம் சென்று அவரை வணங்க நினைத்தார்.

அந்த காலத்தில் ஒருவரை ஒருவர் வணங்குவதில் பல கருத்துக்கள் இருக்கும்.பிரம்மஞானம் எய்திய பிராமணரைப் பிரம்மரிஷி என்று சொல்வது மரபு. அத்தகைய பிரம்மரிஷியை ஒருவர் வந்து வணங்குகிறார் என்று வைத்துக் கொள்வோம். வணங்க வந்தவர் தமக்குச் சமமாகப் பிரம்மஞானம் பெற்றி ருந்தால் பிரம்மரிஷி அவரைப் பதிலுக்கு வணங்கலாம். அப்படி இல்லாமல் வணங்கியவர் பிரம்மஞானம் பெறாதவராக இருந்தால் அவரை பிரம்மரிஷி தமது கைகளை உயர்த்தி ஆசீர்வதிக்க வேண்டும்.

இதை மனதில் கொண்டுதான் விஸ்வாமித்திரர் வசிஷ்ட மகரிஷியை வணங்கச் சென்றார். வசிஷ்டர் தம்மைப் பதிலுக்கு வணங்கினால், அதன்மூலம் அவரே தம்மைப் பிரம்மஞானியாக அங்கீகரிக்கிறார் என்பது விளங்கிவிடும் என்று எதிர்பார்த்தார் விஸ்வாமித்திரர்.

விஸ்வாமித்திரர் வசிஷ்டரின் ஆசிரமத்திற்கு வந்தார்.அவரை வணங் கினார். தம்மை வணங்கிய விஸ்வாமித்திரரை வசிஷ்டர் பதிலுக்கு வணங்க வில்லை. மாறாக அவர் தம் கைகளை உயர்த்தி விஸ்வாமித்திரருக்கு ஆசி கூறினார்.

வசிஷ்டரின் இந்தச் செயல் விஸ்வாமித்திரருக்குக் கோபத்தை ஏற்படுத்தியது. என்ன இது! நான் எவ்வளவோ கடுந்தவம் செய்து பிரம்மஞானம் அடைந்திருக்கிறேன்! அப்படியிருந்தும் இவர் என்னைப் பிராம்மணன் என்று ஏற்றுக்கொள்ளாமல் இப்படி ஆசீர்வதிக்கிறாரே! என்ற எண்ணம் அவரது உள்ளத்தைப் புண்ணாக்கியது. எனவே மனம் நொந்த நிலையில் அவர் ஆசிரமம் திரும்பினார். மீண்டும் தவத்தில் ஈடுபட்டார்.

சிலகாலம் சென்றது. விஸ்வாமித்திரரின் இஷ்டதெய்வம் ஒரு நாள் அவர் முன் தோன்றி விஷ்வாமித்திரா! நீ போய் வசிஷ்டரை வணங்கு. அவர் மீண்டும் பதிலுக்கு உன்னை வணங்காவிட்டால் உடனே அவரது தலை சுக்கல் சுக்கலாக வெடிக்க வேண்டும் என்று சாபம் கொடுத்துவிடு என்று கூறி மறைந்துவிட்டது.

விஸ்வாமித்திரர் வசிஷ்டரைக் காண வந்தார். முன்பு போலவே வசிஷ்டரை வணங்கி நிமிர்ந்தார். வசிஷ்டரும் தம்மை வணங்கிய விஸ்வாமித்திரரை எந்தவித மாற்றமுமின்றி முன்பு போலவே கையை உயர்த்தி ஆசீர்வதித்தார்.

நிமிர்ந்த விஸ்வாமித்திரருக்குக் கோபம் பொங்கி எழுந்தது. என்ன! இவ்வளவு தவம் செய்தும் என்னைப் பிரம்மஞானம் அடைந்தவன் என்று ஏற்றுக்கொள்ளாத உங்களையும். உங்களைச் சேர்ந்தவர்களையும் நான் என்ன செய்கிறேன் பாருங்கள்! என்று ரஜோ குணத்தின் வேகம் பொங்கிப் பெருகி பூதாகாரமாக வடிவெடுத்து வெடிக்கத் தயாராயிற்று. அவரது இஷ்ட தெய்வம் கூறியதும் அவரது நினைவுக்கு வந்தது.

ஆனால் திடீரென்று அவரிடம் ஒரு மாற்றம். அவர் இவ்வளவு காலம் செய்த தவஆற்றல் முழுவதும் நல்ல எண்ணங்களாக எழுந்தன.

இப்போது வசிஷ்டர் பதிலுக்கு என்னை வணங்கிப் பிரம்மஞானம் அடைந்தவன் என்று என்னை ஏற்றுக்கொள்ளாவிட்டால்தான் என்ன? நான் ஏன் இவ்வளவு கோபப்பட வேண்டும்! கோபம் பாவத்திற்கு வழிகாட்டி அல்லவா! கோபத்தால் புத்தி தடுமாறுகிறது. புத்தி தடுமாற்றத்தால் எல்லோரையும் சபிக்க நினைத்த சண்டாளனாக, பாவியாக நான் சிறிது நேரம் மாறி விட்டேனே! கோபம். பொறாமை, மற்றவர்களுக்குத் தீங்கு நினைப்பது போன்ற தீய எண்ணங்கள் என் உள்ளத்தில் உடனே எழுந்து விட்டனவே! இவ்வளவுகாலம் தவம் செய்தும் இன்னும் என் மனதில் இந்த தீய எண்ணங்கள் இருக்கின்றனவே: நான் என்ன பிரம்மஞானம் அடைந்திருக்கிறேன்.?

உண்மையான தவம் என்றால் மற்றவர்களுக்குத் தீங்கு செய்யும் எண்ணமே வரக்கூடாது அல்லவா! ஐயோ! இத்தனை காலம் பாடுபட்டுச் சேமித்த தவ ஆற்றல் அனைத்தும் வீணாகி விட்டதே!

எவ்வளவு அற்பமானவனாக மாறிவிட்டேன்.! எல்லோரும் நன்றாக இருக்க வேண்டும். என்னிடமுள்ள அதே ஆத்மாதான் உயர்ந்தவையும் தாழ்ந்தவையுமான எல்லா உயிர்களிடமும் குடிகொண்டிருக்கிறது என்று நினைத்தார்.

கணநேரம் உணர்ச்சிக்குப் பலியாகிவிட்ட தம் மனநிலையை எண்ணி அவர் வெட்கினார். பிறகு மீண்டும் காடு சென்று தவம் புரிய நினைத்தார். தலை குனிந்தபடி தன் ஆசிரமம் நோக்கி நடக்க ஆரம்பித்தார்..

விஸ்வாமித்திரர் இரண்டடிதான் நடந்திருப்பார். உடனே வசிஷ்டர் சற்று நில்லுங்கள் முனிவரே! நான் உங்களை வணங்க வேண்டாமா? திரும்பிப் பாருங்கள் தாங்கள் பிரம்மஞானம் அடைந்த பிராமணர் அல்லவா? தங்களை வணங்கி உங்கள் வணக்கத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். என்று கூறினார்.

விஸ்வாமித்திரருக்கு ஒரே வியப்பு. ஆச்சரியத்துடன் அவர் திரும்பிப் பார்த்தார். வசிஷ்டர் தம்மை வணங்கி நிற்பதைக் கண்டார். அவரருகில் சென்றபோது வசிஷ்டர் விஸ்வாமித்திரரை தம் மார்போடு அணைத்துக்கொண்டார். இருவரும் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவிக்கொண்டார்கள்.

பிறகு வசிஷ்டர் கூறினார். பிரம்ம ரிஷியே! தங்களின் பிறவிக் குணமான ரஜோகுணங்கள் சம்ஸ்காரம் தாங்கள் என்னை முதலில் வணங்கியபோது தங்களிடம் இருந்தது. ஆனால் இப்போதோ தங்கள் முகத்தில் பிரம்மஞானம் அடைந்தவரின் ஒளியைக் காண்கிறேன். ரஜோகுணம் முற்றிலும் நீங்கிச் சுத்த சத்துவ குணத்தின் தேஜஸ் தங்கள் முகத்தில் திகழ்கிறது. எனவே நீங்கள் இப்போது பிரம்மஞானம் அடைந்த பிராமணர். தாங்கள் உண்மையான பிரம்மஞானி என்றார்.

**அறிந்துகொள்ள வேண்டிய**

**ஆன்மீகத் தகவல்கள் செய்யக்கூடாதவை**

- நம்மைவிடப் பெரியவர்கள் முன் கால்மேல் கால் போட்டு அமரக்கூடாது. முகர்ந்து பார்த்த பூவைத் தலையில் சூடக்கூடாது. பிறரிடம் பேசும்போது உடலை ஆட்டுதல், நெளித்தல், காது குடைதல், மூக்கைச் சிமிண்டுதல் போன்ற துர்ப்பழக்கங்கள் கூடாது.
- உட்கார்ந்திருக்கும்பொழுது காலாட்டுதல், துடையை ஆட்டுதல் கூடாது. அதனால் நம் சக்தி விரயமாகின்றது. பெரியவர்களிடம் பேசும்பொழுது கைநீட்டிப் பேசுதலோ, உரத்துச் சத்தமிட்டோ பேசக்கூடாது. பெரியவர்களிடம் எதையும் பெற்றுக் கொள்ளுமுன் எழுந்துநின்று பெற வேண்டும். உட்கார்ந்த நிலையிலேயே பெறக் கூடாது.
- பெருமூச்சு விடுவது மிகப்பெரும் தவறு. அதனால் துன்பங்கள்தான் அதிகரிக்கும். பெருமூச்சு விடுபவரின் மூச்சுக் காற்று அருகில் உள்ளவர்கள்மேல் படக்கூடாது. பட்டால் அவருக்கும் கெடுதல். இலவசமாக யாரிடமும் எள் பெறக்கூடாது.

# ஒரு மனிதன் தன் வாழ்நாளில் செய்யும் உட்சபட்ச பரிகாரம் என்ன?

ஒரு மனிதன் தன் வாழ்நாளில் செய்யும் உட்சபட்ச பரிகாரம் என்ன?

ஹோமம் தான்.

கோவிலுக்கு போறது, சாமி கும்பிடுறது, அர்ச்சனை செய்றது,அபிசேகம் செய்றது, மொட்டை போடுறது, அலகுகுத்திக்கிறது, தீ மிதிக்கிறது எல்லாமே பரிகாரத்தின் ஒரு வடிவமாக இருந்தாலும் ஹோமம் தான் கடைசி.

இதுக்கு மேலே பரிகாரம் செய்யணும்னா தவம்தான் செய்யணும். ஒரு மலை உச்சியா பார்த்து ஏறி உட்கார்ந்து தவம் செய்தால் பரமசிவன் வந்து குழந் தாய் என்ன வரம் வேண்டும் என்று கேட்டாலும் கேட்கலாம். போகட்டும்.

சரி...சொல்லுங்க.

ஒரு ஹோமம் செய்றிங்க. ஐயர் நெருப்பு வளர்க்கிறார். மந்திரம் சொல்றார்.

என்னென்னமோ காயி, வேரு,இல்லை, பட்டைன்னு அக்கினியில் போடுறார். அதை பற்றி கொஞ்சமாவது தெரியுமா?

அட ... மந்திரம் தெரியுமான்னு கேட்கலை. அங்கே என்ன செய்றாங்கன்னு தெரியுமா?

தெரியாதுல்ல.

நீங்களும் கண்ணை கட்டி காட்டில் விட்ட மாதிரி, என்னமோ நடக்குதுன்னு எதுவுமே புரியாம உட்கார்ந்து இருக்கீங்க.

அதை பற்றி முழுமையாக தெரிஞ்சுக்கலைன்னாலும், ஹோமம் செய்யும் போது செய்யப்படும் சடங்குகள் என்னென்ன?

அது எதற்காக செய்யப்படுகிறது, என்பதை இப்போ சொல்றேன். கொஞ்சமாவது அதை பற்றி தெரிஞ்சுக்கோங்க.

முதலில் கணபதி ஹோமம்.

எந்த காரியம் செய்தாலும் முதலில் கணபதியை வணங்கனும். செய்யும் காரியத்தில் விக்கினங்கள் வராமல் இருக்க விநாயகர் வழிபாடு.

அதிலும் ஹோமமம் மாதிரி உயர்ந்த பரிகாரங்கள் செய்யும் போது, அரக்க சக்திகள் அதை தடுக்க பார்க்கும் என்கிறது புராணங்கள்.

உண்மைதான். ஹோமத்தின் வழி அந்த பலனை பெற வேண்டும் என்ற விதியமைப்பு இல்லைனா, பல தடைகள் வரும்.

நீங்களே பாருங்க. ஹோமத்திற்கு தேதி குறிச்சிருப்பாங்க. அந்த நாள் நெருங்கும் போது,வீட்டில் இருக்கும் பொம்பளைங்க யாராவது தீட்டுன்னு குண்டை தூக்கி போடும்.

வர்ற 20 ம் தேதிதான் குளிக்கிற கெடு. சனியன் இப்பவே வந்துட்டு என்பார்கள்.

ஹோமத்திற்கு நாள் குறித்திருப்பார்கள். அந்த நாள் நெருக்கும் போது நெருங்கின பங்காளி ஒருத்தர் சிவலோக பதவியை அடைஞ்சுடுவார்.

பங்காளி இறப்பு பதினாறு நாள் சூதகம்ன்னு ஹோமத்தை ஒத்தி வைக்கிற மாதிரி வந்துடும்.

ஹோமத்திற்கு நாள் குறிச்சுருப்பாங்க. அந்த நாள் நெருங்கும் போது கையிலே பணமே இல்லாமே திண்டாட வேண்டிவரும்.

அட கடவுளே இவ்வளவு சோதனை வருமா?

எல்லாருக்கும் இல்லை ராஜா. ஒரு சிலருக்கு. சரி.. முதலில் கணபதி பூஜை. துர்தேவதைகளாலோ, துஷ்ட்ட சக்திகளாலோ எந்த இடையூறும் இல்லாமல் நடப்பதற்கு வினைகளை வேரறுக்கும் விநாயகர் பூஜை.

அடுத்து சங்கல்ப்பம்.

கோடான கோடி மக்கள் வாழக்கூடிய இந்த பிரபஞ்சத்தில் வாழ்கிறோம். சரியான முகவரி எழுதப்பட்ட தபால் எப்படி குறிப்பிட்ட நபரை சென்றடைகிறதோ, அதைபோல் செய்யக்கூடிய இந்த ஹோமங்கள் குறுப்பிட்ட இலக்குகளை சென்றடையக்கூடியதாக இருக்க வேண்டும்.

அந்த இலக்கு என்பது யாகத்தின் தலைவராக இருப்பவருக்கு. அதாவது யாருக்காக செய்கிறோமோ அவருக்கு முழுமையாக கிடைக்க வேண்டும் என்பதற்காக பிரார்த்தனை செய்யப்படுவது.

அடுத்து குலதெய்வ பூஜை.

இது பெரும்பாலான ஹோமங்களில் செய்யப்படுவதில்லை. சுக்குக்கு மிஞ்சிய மருந்தும் இல்லை. குலதெய்வத்திற்கு மிஞ்சிய கடவுளும் இல்லை என்பார்கள். உலகத்தில் எத்தனை சாமிகள் இருந்தாலும் குலதெய்வம் முக்கியமானது.

நம் முன்னோர்கள் காலத்தில் குலதெய்வ பூஜை என்பதை குறையில்லாமல் செய்தார்கள்.

எந்த காரியமாக இருந்தாலும் முதலில் குலதெய்வத்தை வேண்டினார்கள். வருடத்திற்கு ஒரு முறை விழாஎடுத்தார்கள் .

வீட்டில் ஒரு சுபகாரியம் நடந்தாலும் முதல் பத்திரிகை சாமிக்கு வைத்தார்கள். ஆக குல தெய்வத்தோடு அவர்களுக்கு இருந்த நெருக்கம் அதிகம்.

இது எந்திர யுகம். காரில் போகும்போது ஹாய் முருகா என்று ஒரு கை தூக்கிவிட்டு போகுற அளவிற்குத்தான் நேரம் இருக்கிறது.

என்ன செய்ய..... எப்படி இருப்பினும் , அடுத்து செய்ய வேண்டியது குலதெய்வ பூஜை. குலதெய்வத்தின் அருளை பெறுவதற்கு செய்யப்படும் பூஜை.

ஆகமத்தில் இடம் இல்லையே என்று அலச்சியம் செய்யக்கூடாது.

அடுத்து செய்யப்படுவது பிதிர் பூஜை.

இது ஒன்னும் அமாவாசை தர்ப்பணம் இல்லை. தெய்வமாகி போன நம் முன்னோர்களை தேடிபிடித்து வணங்குவது.

நீத்தார் உலகம் என்று சொல்லக்கூடிய இடத்தில் நம் மூன்று தலைமுறையை சேர்ந்த முன்னோர்கள் இருப்பார்களாம்.

வருடத்தில் ஒரு நாள் மட்டும் வெளியே வருவதற்கு அனுமதி உண்டு. அது திதி நாள். அன்று அவர்களுக்கு உரிய திதி கடமைகளை சரிவர செய்தால் மகிழ்ந்து வாழ்த்திவிட்டு செல்வார்களாம்.

ஒன்றுமே செய்யவில்லை என்றால், வந்தவர்கள் நல்ல மனது உள்ளவராக இருந்தால் மனக் குறையோடும், கெட்ட மனது உள்ளவராக இருந்தால் சபித்து விட்டும் போய்விடுவார்களாம்.

அது போன்ற குறைகள் இருந்தால் அவற்றை நீக்கி அவர்கள் ஆசியை பெறுவதற்காக செய்யப்படுவது பிதிர்பூஜை.

இதுவும் பெரும்பாலான ஹோமத்தில் தவிர்க்கப்படுகிறது. இது முறையல்ல.

எந்த தேவதையை குறித்து ஹோமம் செய்கிறோமோ அந்த தேவதையை கும்பத்தில் நிலைநிறுத்தல்.

கும்பம் என்பது உடல். அதன் மேல் வைக்கப்படும் தேங்காய் என்பது தலை. கும்பத்தில் சுற்றப்படும் நூல் நாடி நரம்புகளை குறிக்கும். உள்ளே இருக்கும் தண்ணீர் ரத்தத்தை குறிக்கும்.

தர்ப்பை என்பது ஆகர்ஷசன சக்தி நிறைந்தது. காந்தத்தை எப்படி இரும்பு கவர்ந்து இழுக்கிறதோ, அதைபோல் தெய்வீக சக்தியை கவர்ந்து இழுக்கும் தர்ப்பையை கலசத்தில் வைக்கிறார்கள்.

ஆக கலசத்தில் நம் பிரதான தேவதை பிரச்சனமாக இருக்கிறார் என்பதை சொல்வதுதான் அதன் தார்பரியம்.

என்ன ஹோமம் செய்கிறோம்? அதாவது எந்த தெய்வத்தை நினைத்து செய்கிறோமோ. அந்த தெய்வத்தை கும்பத்தில் நிலை நிறுத்துவதுதான் ஆஹாவனம் என்று பெயர்.

அடுத்து செய்யப்படுவது நவக்கிரக தோஷ பரிகாரம்.

ஜெனனி ஜென்ம சௌக்கியனாம்

வர்த்தினி குல சம்பதாம்

பதவி பூர்வ புண்ணியனாம்

லிக்கியதே ஜென்ம பத்திரிகா என்பது ஜோதிட வாக்கு.

நம் வாழ்க்கையில் நடக்கும் நல்லது கெட்டது அனைத்திற்கும் காரணம் நவக்கிரகங்கள்.

நம்புகிறோமோ இல்லையோ, ஏற்றுக் கொள்கிறோமோ இல்லையோ, அவர்கள் தங்கள் பணியை செய்கிறார்கள்.

இதைதான் வாங்கி வந்த வரம் என்கிறார்கள். இவர்கள் நம் வாழ்க்கையில் புகுந்து விளையாடுவதால்தான் நாம் பரிகாரம் செய்கிறோம். அதனால் நவக்கிரகங்களை வணங்கி பூஜிக்க வேண்டும்.

இதை ஹோம நிறைவுக்கு முன் செய்வதும் உண்டு. இனி ஹோமமம் ஆரம்பம்

இது நடைபெறும்போதுதான் வேத பாராயணங்கள் செய்யப்படுகிறது. வேத பாராயணங்கள் என்பது இறைவனை ஆராதிப்பது என்று பொருள்.

பொதுவாக பாராயணங்கள் என்பதே இறைவனை புகழ்ந்து பாடி, அவர் அருளை பெறுவதுதான்.

ஒவ்வொரு தெய்வத்திற்கும் மூலமந்திரம், வேதமந்திரம், காயத்திரி மந்திரம், பிரார்த்தனை மந்திரம் என்ற நான்கு உண்டு.

உதாரணமாக மூல மந்திரம் என்பது பீஜாச்சரம் கொண்டு சொல்வது. அது ஓம் ஸ்ரீம் ரீம் என்று வரும். வேத மந்திரம் என்பது ஒலி அலைகளால் நன்மை பெறுவது.

காயத்திரி மந்திரம் என்பது எந்த தெய்வத்தை நோக்கி ஹோமமம் செய்கிறோமோ அவரின் புகழுரைகளை சொல்வது.

பிரார்த்தனை மந்திரம் என்பது நம் வேண்டுதல் பலிப்பதற்காக சிரம் தாழ்த்தி, கை கூப்பி, மனதார பிரார்த்திப்பது என்று பொருள்.

பாராயண முடிவில் சமகம் சொல்லப்படுகிறது. இதை பற்றி தனியே ஒரு கட்டுரை எழுதுகிறேன். இப்போதைக்கு படம் மட்டும். வசுவதாரா கொண்டு நெய் ஊற்றும் போது சொல்லப்படும் மந்திரம் சமகம்.

இது ஹோமத்தின் நிறைவு பகுதி. பட்டு துணியில் வாசானாதி திரவியங்கள் சேர்த்து, எட்டு கண் விட்டெரிக்கும் அக்னி தேவனுக்கு சமர்ப்பணம் செய்வதுதான் பூர்ணாஹுதி எனப்படுவது.

இந்த அவிர் பாகத்தை பெற்றுக்கொள்ள தேவலோக தேவேந்திரனே வருவாராம். இதை செய்து முடித்ததும் ஹோமமம் நிறைவு பெறுகிறது.

# கும்பாபிஷேகத்தின் வகைகள்.

1. **ஆவர்த்தம் -** ஓரிடத்தில் புதிதாக ஆலயம் அமைத்துப் பிரதிஷ்டை செய்யப் படும் மூர்த்திகளுக்குக் கும்பாபிஷேகம் செய்யப் படுவது.

2. **அனாவர்த்தம் -** பூஜை இல்லாமலும் ஆறு,கடல் இவற்றால் சிதிலமடைந் திருந்தாலும் அக்கோயிலைப் புதிதாக நிர்மாணம் செய்து கும்பாபிஷேகம் செய்வது.

3. **புனராவர்த்தம் -** கருவறை.பிரகாரம்,கோபுரம் முதலியன பழுதுபட்டிருந்தால் பாலாலயம் செய்து அவற்றை புதுப்பித்து அஷ்ட பந்தனம் சார்த்தி பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்வது.

4. **அந்தரிதம் -** கோயிலுள் ஏதேனும் தகாதன நேர்ந்து விடின் அதன் பொருட்டு செய்யப்படும் சாந்தி.

கும்பாபிஷேகத்தில் விக்ரகப் பிரதிஷ்டையில் மேற்கொள்ளப்படும் அவசியமான கிரியைகள் பற்றிய விளக்கம்.

1. **அனுக்ஞை** /அனுமதி வாங்குதல் செயல்களைச் செய்யும் ஆற்றல்மிக்க ஓர் ஆசாரியனைத் தேர்ந்தெடுத்து இச்செயலைச் செய்வதற்கு இறைவன் அனுமதி பெற்று நியமனம் செய்தல்.

2. **சங்கல்பம் -** இறைவனிடத்தில் நமது தேவைகளை கோரிக்கையாக வைத்தல்.

3. **பாத்திர பூஜை -** இறைவனுக்காக செய்யப்படும் பூஜைக்குண்டான பூஜா பாத்திரங்களை சுத்தம் செய்யும் பொருட்டு அந்தந்த பாத்திரங்களுக்குரிய தேவதைகளை பூஜை செய்தல்.

4. **கணபதி பூஜை -** செயல் இனிது நிறைவேற கணபதியை வழிபடுதல்.

5. **வருண பூஜை -** அவ்விடத்தை சுத்தம் செய்யும் பொருட்டு வருண பகவா னையும் சப்த நதி தேவதைகளையும் வழிபடுதல்.

6. **பஞ்ச கவ்யம் -** ஆத்ம சுத்தி செய்யும் பொருட்டு பசு மூலமாக கிடைக்கும் பால், தயிர், நெய், பசுநீர், பசுசானம் முதலியவைகளை வைத்து செய்யப்படும் கிரியை.

7. **வாஸ்து சாந்தி** - தேவர்களை வழிபட்டுக் கும்பாபிஷேகம் எவ்வித இடையூறுமின்றி இனிது நிறைவேறி செயலுக்கும் செய்பவர்க்கும் இடையூறு வராதபடி காக்கச் செய்யும் செயல்.

8. **பிரவேச பலி -** எட்டுத் திக்கிலும் உள்ள திக் பாலகர்களுக்கு உரிய பிரீதி செய்து அவர்களை அந்தந்த இடத்தில் இருக்கச் செய்தல் /துர் தேவதைகளை வரவிடாமல் காக்கும் பொருட்டு.

9. **மிருத்சங்கிரஹணம்** /மண் எடுத்தல் அஷ்ட திக்கு பாலகர்களிடம் அனுமதி பெற்று சுத்தமான இடத்திலிருந்து மண் எடுத்து அப்பள்ளத்தில் அபிஷேகம் செய்தல்./ ஆலயம் நிர்மாணம் செய்ய பூமி தாயான பூமாதேவியை கஷ்டபடுத்தியதன் காரணமாக பூமா தேவியை மகிழ்விக்க செய்யப்படும் கிரியை

10. **அங்குரார்ப்பணம்** /முளையிடுதல் எடுத்த மண்ணை பாலிகைகளில் விதைகளையிட்டு முளை வளர செய்தல். இதில் 12 சூர்யர்கலான் வைகர்த்தன், விவஸ்வதன், மார்த்தாண்டன், பாஸ்கரன், ரவி, லோகபிரகாசன், லோகசாட்சி, திரிவிக்ரமன், ஆதித்யன், சூரியன், அம்சுமாலி, திவாகரன் போன்ற இவர்களையும் சந்திரனையும் வழிபடுதல்.

11. **ரக்ஷாபந்தனம்** /காப்புக்கட்டுதல் கிரியைகளைச் செய்யும் ஆசாரியனுக்கும் செய்யும் கர்த்தா வுக்கும் எவ்வித இடையூறுகள் வராதபடிக் காத்தற் பொருட்டு. அவன் கையில் மந்திர பூர்வமாகக் காப்பு /கயிறு கட்டுதல்.

12. **கும்பலங்காரம்** கும்பங்களை /கலசம் இறைவன் உடம்பாக பாவித்து அலங்காரம் செய்தல்.

13. **கலா கர்ஷணம்** /சக்தி அழைத்தல் விக்ரஹத்தில் இருக்கும் சக்தியை கும்பத்திற்கு மந்திர பூர்வமாக அழைத்தல்.

14. **யாகசாலா பிரவேசம்** கலசங்களை யாகசாலைக்கு அழைத்து வருதல்.

15. **சூர்ய,சோம பூஜை** யாகசாலையில் சூர்ய சந்திரனை வழிபடுதல்.

16. **மண்டப பூஜை** அமைக்கப்பட்டிருக்கும் யாகசாலையை பூஜை செய்தல்.

17. **பிம்ப சுத்தி** விக்ரகங்களை மந்திரபூர்வமாக சுத்தம் செய்தல்.

18. **நாடி சந்தானம்** யாகசாலை இடத்திற்கும் மூல திருமேனிக்கும் தர்பைக் கயிறு. தங்க கம்பி, வெள்ளிக் கம்பி, அல்லது பட்டுக் கயிறு இவற்றால் இணைப்பு ஏற்படுத்துதல். / இறைவனின் சக்தியில் ஒரு பகுதியை இந்த இணைப்பு மூலமாக விக்ரஹங்களுக்கு கொண்டு சேர்த்தல்

19. **விசேஷ சந்தி-** 36 தத்துவ தேவதைகளுக்கும் அர்க்யம் தருவது, உலகத்தில் உள்ள அனைத்து ஆத்மா பித்ருக்களுக்கு அர்க்யம் தருவது.

20. **பூத சுத்தி -** இந்த பூத /மனித உடம்பை தெய்வ உடம்பாக மந்திர பூர்வமாக மாற்றி அமைத்தல்.

21. **ஸ்பர்ஷாஹுதி** 36 தத்துவங்களை யாகத்திலிருந்து மூல விக்ரகங்களுக்கு கொண்டு சேர்த்தல்.

22. **அஷ்ட பந்தனம்** எட்டு பொருள்களால் ஆன இம்மருந்தினால் மூர்த்தியையும், பீடத்தையும் ஒன்று சேர்த்தல். இதை மருந்து சாத்துதல் என்பர்.

23. **பூர்ணாஹுதி** யாகத்தை பூர்த்தி செய்தல்.

24. **கும்பாபிஷேகம்** /குடமுழுக்கு யாகசாலையில் மூர்த்திகளுக்குரியதாக வைத்துப் பூஜிக்கப்பட்ட குடத்து நீரை அந்தந்த மூர்த்திகளுக்கு அபிஷேகம் செய்தல். இதனால் அந்த மூர்த்தி அந்த விக்ரகத்தில் எழுந்தருள்கிறார்.

25. **மஹாபிஷேகம்** கும்பாபிஷேகம் முடிந்த பிறகு மூல விக்ரஹத்திற்கு முறைப்படி அபிஷேகம் அலங்காரம் செய்தல்.

26. **மண்டலாபிஷேகம்** பிறந்த குழந்தையாக விக்ரஹத்தில் வீற்றிருக்கும் இறைவனை 48.நாட்கள் விஷேச அபிஷேக பூஜைகள் செய்து முழு சக்தியுடன் இருக்கச் செய்வது.

மற்றும் சில.

| | |
|---|---|
| ஏக குண்டம் | - ஒரு குண்டம் அமைத்தல். |
| பஞ்சாக்னி | - ஐந்து குண்டம் அமைத்தல். |
| நவாக்னி | - ஒன்பது குண்டம் அமைத்தல். |
| உத்தம பக்ஷம் | - 33 குண்டம் அமைத்தல். |

கும்பாபிஷேகத்திற்கு செய்யப்படும் யாகங்களை எத்தனை தடவை செய்ய வேண்டும் என்று விதிமுறை உள்ளது. அது 2காலம், 4காலம், 8காலம், 12காலம் வரை செய்யும் முறை வழக்கத்தில் உள்ளது.

## கும்பத்தை நம் சரீரமாக சொல்லப்படும் காரணம்.

யோகஜம் என்ற சிவாகமம் சரீரமாக கும்பத்தை எவ்வாறு கற்பிக்க வேண்டும் என்பதற்கு விபரமாகச் சொல்லுவதாவது.

கும்பமாகிய குடம் மாமிசமாகும், குடத்திலுள்ள தண்ணீர் இரத்தமாகும், கும்பத்தினுள் போடப்படும் ரத்தினங்கள் சுக்ளமாகும், கும்பத்தின் உள்ளே தர்பையினால் செய்யப்பட்ட கூர்ச்சம் நாடியாகும், குடத்தின் மேலே நெருக்கமாகச் சுற்றப்பட்டுள்ள முப்புரி நூல்களே நரம்புகளாகும், கும்பத்தை சுற்றி போர்த்திக் கட்டியுள்ள வஸ்த்திரமே தோல் ஆகும், குடத்தின் மேல் இருக்கும் தேங்காய் சிரசாகவும்,முகமாகவும் கூறப்படுகிறது. தேங்காயின் மேலே விரித்துள்ள தர்பையினால் செய்யப்பட்ட லம்ப கூர்ச்சம் சிகை /குடுமி ஆகவும், தேங்காய்க்கு அடியில் போடப்படும் மாவிலைகள் ஸ்வாமியின் ஜடாபாரங்கள்.உச்சரிக்கப்படும் மந்திரங்களே பிராணனாகும் என்று அங்க கற்பனை சிவாகமத்தில் கூறப்படுகின்றது.

# சிவபெருமானின் அங்கங்களும் அதன் விளக்கங்களும்..

1. திருமுடி - திருவருளை அனுபவிக்கும் போது தற்செயல் தோன்றாமல் பரவசப்படுவதே சிவனது திருமுடியாம்.

2. திருமுகம் - உலகில் காணும் அனைத்தையும் இறைவனின் அனுக்ர ஹமாகவே கண்டு அனுபவிப்பது அவரது திருமுகம்.

3. இருதயம் - முக்தி பெறுவதற்குரிய பக்குவ ஆன்மாக்களுக்கு மெய்ஞ் ஞானத்தை உணர்த்தும் திருவருட்சக்தி இருதயமாகும்.

4. திருவடி - யான் எனது என்னும் அகங்கார மமகாரமாய் நிற்கும் பொய்யறிவு நீங்கத் திருவருள் ஞானம் பிரகாசித்து நிற்றலையே சிவனுடைய திருவடி என்பர்.

5. வித்யா தேகம் - ஆன்மாக்கள் செய்யும் கன்மத்திற்கு ஈடாக ரட்சிக்கும் குணமாகிய சதாசிவ மூர்த்தியினுடைய திருமேனி மந்திரம் ஆகையால் மந்திர ஷரூபமாகிய ஞான சக்தியே வித்யா தேகம் எனப்படும்.

6. திரிநேத்ரம் - சூரியன், சந்திரன், அக்கினி என்னும் முச்சுடர்களையும் அடக்கி யாள்பவர் தாமே என்பதையும் ஆகவனீயம், காருகபத்யம், தக்கிணாக் கினியம் என்னும் மூன்று வேள்விகளும் தம்மிடத்தே பொருந்தியுள்ளன என்பதையும். எல்லாச் செயல்களையும் அறிந்து செய்யும் இச்சை, ஞானம், கிரியா சக்திகளையுடையவர்தாம் என்பதையும் இம்மூன்று கண்களும் குறிக்கின்றன.

7. திரிசூலம் - ஆரணி, செனனி, ரோதயித்திரி என்னும் முச்சக்தி வடிவினதாகிய சூலப்படையானது முத்தொழிலையுடையவர், மும்மலங்களை நீக்குபவர் தாமே என்பதைக் குறிப்பது.

8. மழு - லய சிவமாக இருப்பவர் தாம் என்பதைக் குறிக்க லயஸ்தானமாகவுள்ள மழுவை ஏந்தியுள்ளார்.

9. வாள் - பிறவி வேரின் கொடியை அறுப்பவர்தாமே என்பதை அறிவிப்பதற்காக ஞான வடிவமாகிய வாளை ஏந்தியுள்ளார்.

10. குலிசம் - ஒருவராலும் கெடுத்தற்கு இயலாத சுத்தமாயை ஆளும் பேத குணத்தையுடையவர் தாம் என்பதை அறிவித்தற்காக துஷ்டர்களைப் பேதிக்கின்ற குணமாகிய குலிசத்தை ஏந்தினார்.

11. அபயகரம் உலக துன்பத்திற்குப் பயப்பட வேண்டாம் என்று அனுக்ரஹம் செய்யும் குணத்தைக் குறிக்கிறது.

12. வரத கரம் - ஆன்மாக்களின் கன்மத்துக்கு ஈடாகப் போக முத்திகளைக் கொடுப்பவர் /வரமளிப்பவர் தாம் என்பதை அறிவித்தற்காகக் கொண்டது வரத கரம்.

13. அக்கினி - ஆன்மாக்களின் பாசங்களை நீக்குபவர் தாம் என்பதை உணர்த்தும் பொருட்டுச் சம்ஹார வடிவாகிய அக்கினியைத் தாங்கியுள்ளார்.

14. அங்குசம் - மறைப்பினை /திரோபாவம் செய்பவர் என்பதை அறிவிப்பது.

15. மணி - நாத் தத்துவத்திற்குத் தாமே தலைவர் என்பதைக் குறிக்கிறது.

16. ஸர்ப்பம் /பாம்பு - பாம்பினுடைய விரிவு, சுருக்கம் போல உலகின் தோற்றம் ஒடுக்கம் இருந்தலால், உலகிற்கு நிமித்த காரணர் தாம் என்பதை அறிவித்தற்காகக் குண்டலினி சக்தி ஷரூபமாகிய பாம்பை ஏந்தியுள்ளார்.

17. பாசம் - ஆன்மாக்களுக்கு பலத்தை ஊட்டுபவர் தாம் என்பதை அறிவித்தற்காக மாயா ஷரூபமாகிய பாசத்தை திருக்கரத்தில் ஏந்தியுள்ளார்.

18. மான் - மானினது நான்கு கால்களும் நான்கு வேதங்களாகையால் வேதப் பொருளாக உள்ளவர் தாம் என்பதை உணர்த்துவதற்காக மானை ஏந்தினார்.

19. புன்முறுவல் - சஞ்சிதம் முதலான மூவகைத் துயரத்தையும் போக்கி அருளுவதற்காக இளமையான புன்சிரிப்பைக் கொண்டுள்ளார்.

20. உபவீதம் பூணூல் சிவஞானப் பொருளாக இருப்பவரும் அதைத் தருபவரும் தாமே என்பதை உணர்த்துவது.

21. சிகை /தலைக்குடுமி - ஞான வடிவமாக உள்ளவர் தாமே என்பதையும் அறிவிக்கவே ஞான அடையாளமாகிய சிகையைக் கொண்டுள்ளார்.

22. சிலம்பு - பக்குவ ஆன்மாக்களைப் பேரின்பத்தின் அழுத்துதற்குச் சாதனமாக அருட்சிலம்பு விளங்குகிறது.

23. வீரக்கழல் - ஆன்மாக்களை வசப்படுத்தும் முன் வினையை வென்று, பிறவித் துன்பத்தைப் போக்கும் காரணர் தாம் என்பதை உணர்த்துவது.

24. கங்கை - உலகை அழிக்குமாறு வந்த கங்கையை அதன் வேகத்தைக் குறைத்து அடக்கி உலகை காத்து இன்பத்தைத் தந்ததால். ஆன்மாக்களை ஆனந்தக்கடலில் திளைக்கச் செய்ததற்கு அடையாளமாகக் கங்கையை தந்துள்ளார்.

# சாஸ்த்திரம் என்ன சொல்கிறது ?

கேள்வி - பெண்கள் எத்தகைய அணிகலன்களை முக்கியமாக அணிய வேண்டும்? இன்றைய ஆபத்தான நிலையில் தாலியைத் தங்கச் சங்கிலியில் கோர்த்து அணிந்து செல்வது முறையாகுமா? இவை இல்லாவிட்டால் பெண்களின் மங்கல நிலை பாதிக்கப்படுமா?

பதில் - "சௌந்தர்யலஹரி" என்ற நூலில் ஆதிசங்கரர் பார்வதியை ஸ்தோத்திரம் செய்யும்போது, உன்னுடைய காதணியான தோட்டின் மகிமையினால்தான் ஸ்ரீபரமேஸ்வரர் சமுத்திரத்திலிருந்து உண்டான ஆலகால விஷத்தைச் சாப்பிட்டும்கூட அவருக்கு எதுவும் ஆகவில்லை என்கிறார்! எல்லா கோயில்களிலும் உள்ள அம்மனைத் தரிசிக்கும்போது பார்க்கலாம். தோடு இல்லாமல் தாடங்கம் இல்லாமல் இருக்க மாட்டாள். தோடு என்பது மங்களகரமானது. மங்களத்தை அளிக்கக்கூடியது. ஆகவே பெண்கள் முக்கியமாக சுமங்கலிகள் காதில் தோடில்லாமல் இருக்கக்கூடாது. காதில் தோடு, மூக்கில் மூக்குத்தி, கையில் வளையல், காலில் மெட்டி முதலியவை அணிகலன்களாக இருந்தாலும் மங்கலப் பொருட்களாகவே கருதப்படுகின்றன. தற்காலத்தில் ஒரு கையில் வளையலும், இன்னொரு கையில் கடிகாரமுமாக அணிந்து, பெண்கள் செல்லுகிறார்கள். அதனால் பல சௌகரியங்கள் இருந்த போதிலும், மங்களம் பெறுவதில் அரைப்பங்கு குறைந்து விடுகிறது. ஆகவே வினைப்பயனால் வரும் துன்பம் ஒரு முறை நாமே இதுபோன்ற காரியங்களினால் வரவழைத்துக் கொள்ளும் மற்றொரு முறை என்று ஏற்பட்டு விடுகிறது. கல்யாணத்தில் முக்கியமானது தாலி கட்டுவது என்பது. அதைத்தான் மங்கள் சூத்திரம், மங்கல நாண் என்பார்கள். ஆகவே இந்தத் தாலி கட்டுவது என்பது மூன்று முடிச்சுகளைப் போடக்கூடிய மங்கலக் கயிற்றினால் செய்யப்படுவதாகத்தான் இருக்க வேண்டும் என்று தெரிகிறது. ஆனால் தற்காலத்தில் பலர் தங்கச் சங்கிலியை வாங்கி அதில் தாலிபதக்கத்தைக் கோர்த்து விடுகிறார்கள். தாலி கட்டும்போது சொல்லக்கூடிய மந்திரத்தில் "கழுத்தில் தாலி கட்டுகிறேன்" என்றுதான்

இருக்கிறதே தவிர "சங்கிலியில் கோர்த்து கழுத்தில் போட்டு விடுகிறேன்" என்று இல்லை. மேலும் தாலி என்பது ஒரு மங்கலப்பொருள். அதை அணிகலன்களைப் போலக் கழற்றுவதும், உள்ளே எடுத்து வைப்பதும் தவறு. தாலி எப்போதுமே ஒரு சுமங்கலியின் கழுத்தில் இருக்க வேண்டும். தாலிக்கயிற்றில் அது இருப்பதுதான் விஷேசம். சில புண்ணிய காலங்களில், தாலிக்கயிறு நைந்து போகும்போது. வேறு கயிறு மாற்றிக் கொள்ளலாம். ஆனால் அணிகலன்களைப் போல அவ்வப்போது மாற்றிக் கொள்ளக்கூடாது.

குத்து விளக்கில் தீபம் ஏற்றுவதன் பலன்கள்

ஒரு முகம் ஏற்றினால் - மத்திம பலன் கிடைக்கும்

இரு முகம் ஏற்றினால் - குடும்ப ஒற்றுமை பெருகும்

மூன்று முகம் ஏற்றினால் - புத்திரசுகம் தரும்

நான்கு முகம் ஏற்றினால் - பசு, பூமி, பாக்கியம் தரும்

ஐந்து முகம் ஏற்றினால் - செல்வம் பெருகும்

தீபம் எரிந்து கொண்டிருக்கும் போது விளக்கை வாயால் ஊதி அணைப்பதோ, திரியைக் கையால் நசுக்கி அணைப்பதோ கூடாது. மெல்லத்திரியைப் பின்னுக்கு இழுத்து அது எண் ணெய்க்குள் அமிழ்ந்து சமனப்படுமாறு செய்யவேண்டும். இப்படிச் செய்யு முன் இரண்டு சொட்டுப் பாலை தீபத்தின் இருபுறமும் வைக்கவேண்டும்.

எரியும் விளக்கு, கற்பூரம், மெழுகுவர்த்தி ஆகிய வற்றை வாயால் ஊதி அணைக்கக் கூடாது.

திருவிளக்கு, ஏற்றும் பொழுது ஒருதட்டில் அரிசியை நிரப்பி அதன்மேல் விளக்கினை வைத்து மஞ்சள், குங்குமம், பூ வைத்து தீபம் ஏற்றித் தீப வழிபாடு செய்தல் சிறப்பு

நீர் நிரப்பிய பாத்திரத்தை பூஜைஅறையில் வைப்பது சிறப்பு

வீட்டில் நறுமணம் தரும் ஊதுவர்த்திகளை ஏற்றி வைத்தால் தீய எண்ணங்கள், தோஷங்கள், திருஷ்ஷ, காற்று கறுப்பு ஆகியவை வீட்டை நெருங்காது. இரண்டு ஊதுவர்த்தி ஏற்றி வைத்தால் அதன் ஆன்மீக சக்தி மூன்று மணி நேரம் வீட்டில் நிலவும். காலையில் விளக் கேற்றியதும் வாசல் நிலையின் மேல் சுத்தமான குங்கு மத்தை (மஞ்சள், குங்குமம்) தினமும் இடுவது சிறப்பு. இதனால் வீட்டிற்குள் எந்தத் துர்தேவதைகளும் நுழைய முடியாது.

# கதிர்காமப் பண்பாடு.. ஒரு காட்சி

ஆகமம்சார் வழிபாடுகளிற்கு அப்பால்.. இவற்றின் தாக்கங்களுக்கு அப்பால்.. தாங்கள் இந்துக்கள் என்றே சொல்லிக் கொள்ளாத மக்களிடத்தும்.. வேடுவப் பழங்குடியினரிடத்தும்.. புதிய புதிய வெவ்வேறுபட்ட விதவிதமான சடங்குகள், சம்பிரதாயங்களுடன் இலங்கையில் பின்பற்றப்பட்டு வரும் முக்கிய வழிபாடு கதிர்காமமுருகன் வணக்கம்..

யாவரையும் கவரும் கதிர்காமம். பல்லின- பல்மத மக்களின் சங்கமமாக அன்றைக்கும் இன்றைக்கும் விளங்கிக் கொண்டிருக்கிறது இலங்கையின் கதிர்காம முருகன் ஆலயம். இலங்கைத் தீவின் தென்கிழக்குக் கரையில் ஊவா மாகாணத்தின் புத்தளப் பிரிவிலுள்ள 'தியனகம' என்ற காட்டின் நடுவில் இந்தக் கதிர்காமத்தலம் இருக்கிற கதிர்காம மலை உள்ளது.

இந்தக் கதிர்காமத்தின் பண்பாட்டு மூலம் தொன்மையுள் அமிழ்ந்திருக்கிறது. கண்டு கொள்வதற்கு மிகவும் சிரமமான முறையில் சமூக- மானிட- அரசியற் காரணிகளால் இது மூடப்பட்டுக் கிடக்கிறது. உதாரணமாக, கதிர்காமத்தை தமிழில் கதிர்காமம் என்று அழைத்தாலும், சிங்களத்தில் கதரகம என்று அழைக்கிறார்கள். இப்படி இத்தலத்திற்குப் பெயர் வந்தமைக்கான காரணமும் பெரும் புதிராகவே இருக்கிறது.

கார்த்திகேய கிராம, கஜரகம என்பவற்றின் திரிபே கதிர்காம என்று கொள்வோரும், இல்லை இது கதிர் (ஒளி) காம (அன்பு) நிறைந்த இடம் என்று தூயதமிழ்ச் சொல்லாகப் பொருள் கொள்வோரும், கதிரு என்ற சிங்களச் சொல்லின் மரூஉ எனக் கொள்வோரும், இன்னும் பலவாறாகச் சொல்வோரும் உளர். இங்கு கூட ஆய்வாளர்கள் தமது இனத்துவ அடையாளமாக கதிர்காமத்தைக் காட்ட முயற்சிப்பதையே காண முடிகிறது.

இன்றைக்குச் சிங்களவர்களும் தமிழர்களும் இஸ்லாமியர்களும் சென்று வழிபடும் திருக்கோவிலாக விளங்குகிற கதிர்காமத்தை தங்களின் தொன்மையான குடியேற்றங்களுள் ஒன்றாக சிங்கள பௌத்தர்கள் அடையாளப்படுத்துகிறார்கள். சிங்கள மொழி இலக்கியமான 'ஸ்கந்தஉபாத' என்கிற நூலில் தமிழரசனான எல்லாளனை வெல்வதற்கு துட்டகைமுனு மன்னனுக்கு கதிர்காமக் கடவுள்

அருள் செய்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இலங்கை வரலாறு பேசும் சிங்கள இலக்கியமான மகாவம்சமும் கதிர்காமத்தை சிறப்பித்துச் சொல்கிறது. இவற்றின் காரணமாக, இன்றைக்கும் கதிர்காமம் பௌத்தமத ஆலய பரிபாலன சட்டத்தின் கீழேயே நிர்வாகம் செய்யப்பட்டு வருகின்றது.

ஆனாலும், இலங்கையில் வாழும் தமிழ் இந்துக்கள் தங்களின் தனிப்பெருங்கடவுளாக கதிர்காம ஆண்டவனைக் கருதுகிறார்கள். கந்தபுராணத்திலுள்ள ஏமகூடப்படலத்தில் இந்தக் கதிர்காமச் சிறப்புச் சொல்லப்பட்டிருக்கின்றமையும், இன்னும் அருணகிரிநாதரால் திருப்புகழ்கள் பாடப்பெற்றிருப்பதும் இன்ன பிறவும் இந்த பற்றுக்கும் பக்திக்கும் முக்கியகாரணமாகும்.

தொல்காப்பியம் பேசும் கந்தழி வணக்கமுறையான வாய்கட்டி வழிபாடு செய்யும் முறைமை இன்று வரை கதிர்காமத்தில் இருப்பதைச் சுட்டிக் காட்டும் தமிழறிஞர்கள் திருமுருகாற்றுப்படை பேசும் ஐந்தாம் படை வீடும் கதிர்காமமே என்று குறிப்பிடுகிறார்கள். இவற்றின் காரணமாக, 1908ஆம் ஆண்டு முதலாக தமிழ் இந்துக்கள் தம்மிடம் இக்கோவிலை ஒப்படைக்க வேண்டும் என்று கோரிக்கைகளை முன்வைத்து வந்தார்கள் என்றாலும், அவைகள் எவையும் சாத்தியமாகவில்லை.

இன்றைக்கு கப்புறாளைமார் என்கிற சிங்கள இனத்தவர்களே வாய்கட்டி திரைக்குப் பின்னால் முருகனுக்கு இங்கு பூஜை செய்கிறார்கள். இதனை விட அதிசயம் என்ன என்றால் இங்கே திரைக்குப் பின் ஒரு பெட்டிக்கு வழிபாடு நடக்கிறது. பெட்டியில் இருப்பது என்ன என்று இதுவரை பரமரஹஸ்யமாகவே இருக்கிறது. ஆனால்?, இவ்வகை வழிபாடுகளுக்கு அப்பால் இன்றைக்கும் காவடி எடுத்தல், கற்பூரச்சட்டி எடுத்தல், அங்கப்பிரதட்சணம் செய்தல், அடியழித்தல், தேங்காய் உடைத்தல், தீ மிதித்தல், முள்ளு மிதியடி என்று இந்து மத வணக்க முறைகள் அங்கே பல்லின மக்களாலும் விருப்போடு ஆற்றப்பெற்று வருகின்றன. ஆங்கே ஒரு மலையிலிருந்து கிடைக்கும் வெள்ளைக் கட்டிகள் (திருமண் போன்றது) திருநீறு என்று கதிர்காமம் வரும் பல்லின மக்களாலும் பக்தியுடன் அணியப் படுகிறது.

சிங்கள மக்கள் 'கதிரகம தெய்யோ' என்று வழிபாடாற்றுகிறார்கள். இவற்றினை தடுக்க இயலாதவர்களாக பௌத்த குருமார்களே இவற்றைச் செய்வதற்கு தம் மத மக்களுக்கு ஆசி வழங்க வேண்டிய நிலையிலிருக்கிறார்கள் என்றால் கதிரையாண்டவனின் ஆலயத்தின் பேரில் மக்களுக்குள்ள நம்பிக்கையின் வெளிப்பாட்டை என் என்பது..? அங்கே வாழும் பழங்குடிகளான வேடுவர்களுக்கும் முருகன் பேரில் அலாதி பக்தி இருக்கிறது. தங்கள் மாப்பிள்ளைக் கடவுள் என்று இவனைப் போற்றுகிறார்கள். வள்ளி திருமணம் நடந்த இடம் கதிர்காமம் என்று இவர்கள் நம்புகிறார்கள். இப்படியே சிங்கள, தமிழ் மக்களின் நம்பிக்கையும் இருக்கிறது. இலங்கையின் இருமொழி இலக்கியங்களிலும் கதிர்காம வள்ளி கல்யாணம் பற்றிய கதைகளைக் காணலாம்.

முருகனின் வட இந்திய மனைவியான தெய்வானை வள்ளியோடு இங்கு தங்கி விட்ட கந்தக் கடவுளை மீட்டுச் செல்ல முயன்றதாயும், ஆனாலும் அந்த முயற்சி தோற்றுப் போகவே அவளும் இங்கேயே தனிக்கோயில் கொண்டு விட்டதாகவும் இப்போதைய ஐதீகக் கதைகள் சிலவும் உள்ளன. இறைவன் குமரனின் மலைக்கு அருகில் வள்ளி மலை இருக்கிறது. அங்கே வள்ளியம்மை கோயிலும் உள்ளது. தனியே தேவசேனா கோயிலும் உள்ளது. என்றாலும் வள்ளியம்மைக்கே எல்லாவிடத்தும் முதன்மையும் சிறப்பும் தரப்படுவது அவதானிக்கத்தக்கது.

ஆரம்ப காலத்தில் கதிர்காமத்தில் ஆகம பூர்வமான வழிபாடுகள் சில நடைபெற்றது என்பதும் இந்துக்கள் சிலரின் நம்பிக்கை. எனினும் இன்றைக்கு கதிர்காமத்தில் அவற்றிற்கு எல்லாம் இடமே இல்லாமல் போன பிறகு.. தமிழ் இந்துக்கள் அதிகம் செறிந்து வாழும் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அதிகளவில் கதிர்காம ஆலயங்கள் தோற்றம் பெற்றுள்ளன. அங்கெல்லாம் கதிர்காம மரபிலான வழிபாடுகள் கொஞ்சம் சிவாகமச் சார்பு பெற்று தமிழியற் செழுமையோடு ஆற்றப்பெற்று வருகின்றன.

யாழ்ப்பாணத்து புலோலி உபய கதிர்காமம், நல்லூர் பாலகதிர்காமம், காரைநகர் கதிர்காமம், நீர்வேலிச் செல்லக்கதிர்காமம், செல்வச்சந்நதி இன்னும் மட்டக்களப்பு சின்னக்கதிர்காமம், உகந்தை மற்றும் மண்டூர், வெருகல் கந்தசுவாமி கோவில்களை இவற்றிற்கு உதாரணங்களாகச் சொல்லலாம். இந்தக் கோவில்களின் வரலாறும் வழிபாடும் கதிர்காமத்தலத்துடன் நெருக்கமான பிணைப்போடு அமைந்துள்ளன. இவற்றில் பலவற்றிலும் கதிர்காம மஹோற்சவ காலமாகிய ஆடிப்பூரணையை ஒட்டிய திருவோணத் திருநாளை தீர்த்தவாரியாக.. மஹோற்சவ நிறைவாகக் கொண்டதாக 16 நாள் விழா நடக்கவும் காணலாம்.

### வேடர் பூசை

அருணகிரியார் கதிர்காமத் திருப்புகழில் 'வனமுறை வேடன் அருளிய பூசை மகிழ் கதிர்காமம் உறைவோனே' என்று பாடுகிறார். இன்றைக்கும் கதிர்காமத்தில் பூசை செய்யும் பூசகர்களான சிங்கள மொழி பேசும் கப்புறாளை என்போர் தாங்கள் வள்ளி நாயகியின் வழித்தோன்றல்கள் என்று சொல்லிக் கொள்வதில் பெருமிதமடையக் காணலாம்.

இதை விட 1960களில் இலங்கை அரசு கதிர்காமத்தை புனிதநகராகப் பிரகடனம் செய்யும் வரை இக்கோயிலில் மான் இறைச்சி படைக்கும் வழக்கமும் இருந்து வந்துள்ளமை அறிய முடிகிறது. திருவிழாக்களில் கதிர்காமத்தில் திரைக்குப் பின் வைத்துப் பூசிக்கப்பெறும் புனித பெட்டி யானையில் உலா வருகிறது. இதனுள் சுப்பிரமண்யயந்திரம் உள்ளது என்று நம்பிக்கை.. இதனை விட செஞ்சந்தனக்கட்டையாலான ஆறுமுகப்பெருமானின் திருவடிவம் ஒன்று இருப்பதாகவும் இன்னும் பலவாறாகவும் சொல்லுவார்கள்.. ஆனால் அது கதிர்காம ரஹஸ்யமாக இன்னும் இருக்கிறது.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற இடங்களிலிருந்து கதிர்காமத்திற்குப் பாதயாத்திரை செய்யும் வழக்கம் இன்றும் நிலவி வருகின்றது. எத்தனையோ வாகன வசதிகள் ஏற்பட்டு விட்ட போதும் பல மாதங்களை ஒதுக்கிப் பாத யாத்திரை செய்து வழிபாடாற்றும் பண்பு பேணப்பட்டு வருகின்றமை ஈழத்தவர்களின் முருக பக்திக்குச் சான்று பகர்கின்றது எனலாம்.

எது என்னவாயினும், கதிர்காமத்தில் ஏதோ ஒரு அபரிமிதமான சக்தி பரவியிருப்பதைக் அங்கு செல்லும் அன்பர்கள் உணர்கிறார்கள். அந்த சக்தியின் வெளிப்பாடு யாவரையும் கவர்ந்திழுப்பதை எவராலே வெல்ல முடியும்?.. தமிழறியாத பண்டி ஹோத்தோ என்கிற வேடுவர் தலைவன் (1997) சொல்வதை கேளுங்கள்.. 'வள்ளி எனது அக்கா.. கந்தன் எனது மைத்துனன்.. வள்ளி பரம்ப ரையில் வந்தவர்கள் நாங்கள்.. அக்காவை மணம் முடித்த கந்தனுக்கு வருடம் தோறும் எடுக்கும் பெருவிழாவில் கலந்து கொள்வது எங்கள் கடமை. ஒரு திருவிழாக் காலமது.. இரவு நல்ல தூ

க்கத்திலிருந்தேன். என் கனவில் தோன்றிய வள்ளியக்கா, 'என்ன நீ இங்கே தூங்குகிறாய் அங்கே உன் மைத்துனன் கந்தனுக்குப் பெருவிழா நடக்கிறது. அங்கே சென்று உனது ராஜமரியாதையைச் செய்' என்று கட்டளையிட்டார். அங்கே சென்று எனது பணி முடிந்ததும் காட்டுக்குத் திரும்பி விடுவேன்' (தினகரன் வாரமஞ்சரி- 1997 ஜூலை)

ஆக, கதிர்காம நியமங்களுக்கும் ஆசாரங்களுக்கும் பக்திக்கும் முதன்மை தந்து ஏனைய மதங்கள் நெகிழ்ச்சியுறுதலும், என்ன தான் பெரும்பான்மை இன சமூக எழுச்சி ஓங்கும் போதும், அவற்றை எல்லாம் வெல்ல வல்ல வன பக்திச் சக்தி விரவியிருப்பதும், கதிர்காமத்தின் தனித்துவமாக, இந்து மதத்தின் இன்னொரு பரிமாணமாகக் கருதப்படத்தக்கனவாயுள்ளன.

வேட்டையாடலும், உணவு சேமித்தலும் என்ற பெருங்கற்பண்பாட்டுக் காலத்திற்கும் முந்தைய சமூகக் கூட்டுறவின்.. தோற்றமாய்.. இனத்துவ சமயத்துவ வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட மக்கள் சமயம் என்ற காட்சிப்படுத்தலாய், அனைத்துப் பண்பாட்டுக் கூறுகளையும் அரவணைத்து.. உயர்ந்து.. விரிந்து கதிரமலை நிற்கிறது.. தானே ஒரு தனிப்பண்பாட்டுப் பேரெழுச்சியாக.. இது தான் ஸ்கந்தனின் ஹேமகூடகிரியல்லவா..?

**நீர்வை தி.மயூரகிரிசர்மா**

# ஆரோக்கியவாழ்வுக்கு உளநலம்

ஆரோக்கியமான வாழ்க்கைக்கு நோயற்ற வாழ்வும் மன அமைதியுமே சிறந்த வழி என்று பெரும்பாலான மனிதர்கள் தம் உடலையும் சுற்றுப்புறச் சூழலையும் சுத்தமாக வைத்திராததால் தங்களுக்கும் கேடு விளைவிக்கும் விதத்தில் தம் வாழ்வை அமைத்து கொண்டு உடல் உள ரீதியாக ஆரோக்கி யத்தினை இழந்துவிடுகின்றனர். இதனால் வாழ்வை ஓர் துன்பம் தரும் விடயமாக நினைத்து தொலைத்துவிடுகின்றனர். மனநிம்மதியினையும் இழந்து விடுகின்றனர்.

நோயற்ற வாழ்வே மனிதனின் அனைத்து உடல் உள செயற்பாடுகளுக்கும் உந்து கோலாக அமைகிறது. தனியொருவரின் உடல் உள சமூக நிலை ஆகியன நல்ல நிலையில் இருக்கும் நிலையே ஆரோக்கிய நிலை என உலக ஆரோக்கிய ஸ்தாபனம் வரையறுத்துள்ளது. மேலும் ஒருவருக்கு நோயற்ற நிலையை மட்டும் இது குறிப்பதல்ல எனவும் கூறப்பட்டுள்ளது. ஆரோக்கியம் என்பது ஒவ்வொரு நாள் வாழ்வில் மூலப்பொருள் எனவும் இதுவே தனிப்பட்ட, சமூக மூலப்பொருளாகவும் அமைவதாகவும் குறிப்பிட்டுள்ளது. தனியொருவருக்கும் அதனூடே சமூகத்திற்குமான நல்ல நிலையை பெறுவதற்குமான நன்மை நோக்கிய குறியாகும். வாழ்வதன் நோக்கமே ஆரோக்கியம் என்றில்லாமல் நல்ல வாழ்வினை தரும் மூலப்பொருள் ஆரோக்கியமாக அமையவேண்டும்.

உளநலம் என்றால் என்ன? என்ற கேள்வி பொதுவாக நம் அனைவரி டத்திலுமே எழும் ஒன்றாகும். உடல் ரீதியாக நோய் அற்றிருத்தல் மட்டுமே என்றுமே ஆரோக்கியமாகாது. அதேவேளை மனநோய் அற்றிருத்தல் மட்டும் உளநலன் ஆகாது. உடல் பருமனான ஒருவர் எவ்வித உடல் நோய்களும் இன்றி இருக்கலாம். ஆனால் அவரை ஆரோக்கியமானவர் என்றுகருதிவிடமுடியுமா?

இதை போன்று உளநலம் என்பது உளவியல் ரீதியாக முழுமையாக நல்ல நிலையில் இருப்பதாகும். அதாவது தனிநபர் தன்னை எவ்வாறு மதிப்பிடுகின்றார், உறவுகளினை எவ்வாறு பேணிக்கொள்கிறார் மன எழுச்சிகளினை எவ்வாறு கையாளுகிறார், பிரச்சனைகளை எவ்வாறு சமாளிக்கிறார் என்பனவற்றினை உள்ளடக்கியுள்ளது. தமது உளநலத்தில் ஆரோக்கியமுள்ள மனிதர் எப்பொழுதும் எல்லா விடயங்களிலும் திருப்தி காண்பவராகவும், சந்தோஷ உணர்வுடனும்,

நகைச்சுவை பாங்குடனும், சவால்களினை பிரச்சனைகளை தைரியமாக எதிர்கொள்பவராகவும் இருப்பர். அதுமட்டுமன்றி தமது வாழ்வு அர்த்தம் பொருந்தியதாகவும், உறவுகளினை தமது வாழ்வினை மேம்படுத்தும் முக்கிய கூறுகளாகவும் கொள்வர். மேலும் உலக மாற்றங்களிற்கும் புதுப்புது அனுபவங்களிற்கும் தம்மை திறந்து வைத்திருப்பர். வாழ்வில் வரும் நிகழ்வுகளில் இருந்து பல்வேறு பாடங்களினை கற்றுக்கொள்பவராகவும் இருப்பர்.

உடலில் ஏற்படும் பாதிப்புக்களை வெப்பமானி கொண்டு இலகுவாக அறியலாம். ஆனால் உளப்பாதிப்புக்களை அவ்வளவு சுலபமாக அறிந்து கொள்ள முடியாது. மனிதனது மிக முக்கியமான நடத்தைக் கூறுகளைக் கொண்டே தீர்மானிக்க முடியும். அன்புசெலுத்துதல், வேலைசெய்தல், பொழுதுபோக்குதல், பொறுப்பு வகித்தல், சமூக அக்கறையுடன் இருத்தல், பிறர் நலம் பேணல். வாழ்வு பற்றிய திருப்தி, கடவுள் நம்பிக்கை ஆகிய நடத்தைகளில் சீராகவும் இயல்பாகவும் இருக்கும் ஒருவர் உளநலத்துடன் இருப்பதாக நாம் கொள்ளலாம்.

உளநலம் என்பது ஒரு நன்நலம் மிக்க நிலை ஒருவர் தனது திறன்களை நன்றாக உணர்ந்து சாதாரண வாழ்க்கையில் ஏற்படுகின்ற நெருக்கீடுகளுக்கு முகம் கொடுத்து தனக்கும் தனது சமூகத்திற்கும் உபயோகமான ஒரு வாழ்க்கை கோலத்தை கொண்டிருக்கும். அதாவது நன்நலம் மிக்க நிலை என்பதை ஒருவர் தனது தொழிற்பாடுகளில் வெளிப்படுத்தக்கூடிய அதிஉச்சக்கட்ட நிலை என விளங்கிக் கொள்ளலாம். இது தேங்குநிலையன்று. மாறாக இது ஒரு இயங்குநிலையாகும். அதாவது காலத்தின் மாற்றத்திற்கு ஏற்ப தானும் மாறுகின்ற நிலையாகும். ஒருவர் நலமுடன் வாழும் போது அவரை நெருக்கீடுகள் பாதிக்கின்ற அளவு குறைகின்றது. ஒரு சமூகத்திலே உளச்சமூக நிலை சமமாக பேணப்படும் போது தனிநபர் ரீதியிலும் நன்நலம் மிக்க நிலை பேணப்படுகின்றது. மாறாக சமூக மட்டத்தில் உளச்சமநிலை பாதிக்கப்படுமாயின் அது ஒரு தனிநபரையும் பாதிக்கும். எனவே ஒருவர் உடல் உள சமூக மட்டத்திலே உளச்சமநிலையினை முறையாக எதிர்கொள்பவராயின் அவர் பூரணநன்நலம் மிக்கவராவார்.

பொதுவாக தாங்குதிறன் குறைவானவர்கள் உளநலம் பாதிப்பிற்கு உட்படுகின்ற சாத்தியக் கூறுகள் அதிகம். அவ்வாறானவர்களாக கர்ப்பிணிப்பெண்கள் விதவைகள் தனியான தாய்மார்கள் போரில் ஈடுபடுபவர்கள் வெட்டிப்பொழுது கழிப்பவர்கள் அனாதைகள் போசாக்கு குறைந்தவர்கள் பராமரிப்பினை இழந்தவர்கள் மிக வறுமையான மக்கள் உளப்பேரதிர்வுக்கு முகம் கொடுப்பவர்கள் மனநலக்குறைபாடுடையவர்கள் சமூகத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் காணப்படுகின்றனர்.

இவர்கள் அனைவரும் பாதிக்கப்படுவார்கள் எனக்கூறமுடியாது. ஆனால் அவர்கள் பாதிப்புக்கு உள்ளாகின்ற சாத்தியங்கள் அதிகம். எனவே உளநலத்தைக் கட்டியெழுப்புவது எம் கையில் தான் உள்ளது. நாள்தோறும் உடற்பயிற்சிகள். உள் உணர்வுகளை ஒழுங்குபடுத்த சிறிது நேரம் தியானம், அளவான உணவு. உறக்கம் இருந்தால் நல்லது. வாய்விட்டு சிரித்தால் நோய்விட்டு போகும் அப்படியே நோய் வந்தாலும் அதனை மனவலிமையோடு எதிர்கொண்டால் இருந்த இடம் தெரியாமல் போய்விடும். முதுமையில் கவலை இயலாமையால் ஏற்படும். சினம் எல்லாம் வராமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் உளநலம் மேம்பாடடைகின்றது. உளநலத்தை மேம்பாடடையச் செய்யும் வழிமுறைகள் சில பின்வருமாறு

- மிக குறைந்தளவு ஒரு நாளைக்கு ஒரு மணித்தியாலம் சரி ஓய்வெடுத்தல்
- உங்களுடைய வழக்கமான வேலை முறைகளை உருவாக்குதல்
- ஏமாற்றங்களை நண்பர் ஒருவருடன் பகிர்ந்து கொள்ளல்
- சலுகைகளை முறைமையாக பெற்றுக்கொள்ளல்
- இயற்கையோடு ஒன்றித்து வாழுதல்
- வாழ்க்கை முறைமையை மாற்றியமைத்தல்
- போசாக்கான உணவுப் பழக்கவழக்கங்களினை உருவாக்கல்
- புன்னகைத்தல், சிரித்தல், வேடிக்கையான புதுமையான கதைகளை வாசித்தல், நகைச்சுவைகளை பார்த்து, ரசித்தல்
- மனஅழுத்தத்தை குறைக்க பயிற்சிகள் செய்ய வேண்டும்
- வாழ்க்கையில் இலக்குகளினை அமைத்துக் கொள்ளுங்கள்
- உங்களுக்கு சந்தோசம் தரும் விடயங்களில் முழுமையாக ஈடுபடுங்கள்
- சிந்தனைகளினை நேரானவையாக மாற்றுங்கள்

உங்களால் நல்ல ஆரோக்கியம் பேணப்பட்டு கொண்டிருந்தால் வாழ்க்கையில் அனைத்து விடயங்களினையும் திருப்திகரமாக அனுபவிக்க முடியும். உங்களது உடலைப்பற்றி கவனமெடுத்து உடல்நிலையை ஆரோக்கியமாக வைத்திருப்பதன் மூலம் உங்களுடைய உளநலத்தை மேம்படுத்த முடியும். இது பூரணமான உண்மை எனவே உளநலத்தை மேம்பாடடையச் செய்வதன் மூலம் பூரண ஆரோக்கியத்தை ஏற்படுத்தி பெறுமதி மிக்க சமுதாயம் ஒன்றை கட்டியெழுப்புவோம்.

## References

•Keith Tudor “Mental health promotion” Psychology press 1996.

•Horald G.Koeing “Handbook of Religion and Mental Health” Elesvier press 1998.

•Elite Sorel “21st Century Global Mental Health” Jones and bartlet publishers2012

**திருமதி மேனகா சிவகரன்,**
**விரிவுரையாளர்,**
**உளவியல்துறை,**
**யாழ் பல்கலைக்கழகம்.**

# அவைதீக மதங்களில் விநாயக வழிபாடு

வேத உபநிடதக் கருத்துக்களை ஏற்று எழுச்சி பெற்றவை வைதீக நெறி எனவும் வேத உபநிடதக் கருத்துக்களை மறுத்து எழுச்சி பெற்றவை அவை தீக நெறி எனவும் அழைக்கப்படுகின்றன. இவ்வகையில் சைவம். சாக்தம், காணா பத்தியம், கௌமாரம், சௌரம், வைஷ்ணவம் ஆகிய அறுவகை சமய நெறி களிலும் காணாபத்திய நெறி முதன்மை பெற்று விளங்குகின்றது. இவ்வாறு சிறப்புற்று விளங்கும் கணபதி வழிபாடு அவைதீக மத நெறிகளான சமணம், பௌத்தம், முதலியவற்றிலும், முதலிடம் பெறுவதனை அவதானிக்க முடிகின்றது. பௌத்தர்கள் "கணபதி தெய்யோ" எனவும் சமணர்கள் அருக நாயகர் எனவும் கணபதியை வழிபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் புத்த மதத்தைப் பரப்புவதற்காக அரசமரக்கிளையைக் கொண்டு வந்த சங்கமித்தை மிகப்பெரிய விநாயகர் சிலை ஒன்றையும் கொண்டு வந்ததாகக் கூறப்படுகின்றது. சங்கமித்தை இளவயதில் விநாயகப் பெருமா னிடத்து பேரன்பு கொண்டு நேபாளத்தில் அவருக்கு பெரிய ஆலயம் ஒன்றை அமைத்துள்ளார்.

கௌதம புத்தர் தனது எண்பதாவது வயதில் இரண்யவதி எனும் நதிக்கு அப்பால் சாலா மரங்கள் அடர்ந்த சோலையில் ஒரு பாறாங்கல்லின் மீது படுத்து உறங்கினார். பரிபக்குவமுற்றுப் படுத்திருந்த நிலையில் புத்த பெருமானுக்கு விநாயகப் பெருமான் சிங்க வாகனத்தில் தோன்றி உபதேசம் செய்தருளினார் என்று நம்பத்தக்க வரலாறு உள்ளது.

அநுராதபுரத்தில் உள்ள பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் 'கண', 'கணச', 'கணகச', 'கணகுட்டச் 'கணதத' போன்ற குறிப்புக்கள் கணங்களின் தலைவனாகிய. கணநாதனாகிய கணபதியையே சுட்டி நிற்கின்றன எனக் கருதப்படுகின்றது. தென்னிந்தியாவில் அமராவதிப் பௌத்த அழிபாடுகளில் விநாயகர் சிலை காணப்படுகின்றது. இதன் காலம் கி.பி. 2ஆம் நூற்றாண்டாகும். ஈழத்தில் கண்டக சைத்தியாவில் கணங்களின் சிற்பமொன்று காணப்படுகின்றது. இவற்றில் ஒன்று யானை முகத்துடன் விளங்க ஏனைய கணங்கள் இதன் இரு மருங்கிலும் காணப்படுகின்றன. இதே போன்ற வடிவங்களே அமராவதியில் காணப்படுவதால் மிகுந்தலையிற் காணப்படும் இவையும் சமகாலத்தனவாக இருக்கலாம் என எண்ணத் தூண்டுகின்றது.

ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுக்களில் 'பூத'மொன்றின் குறியீடு காணப்படுகின்றது. இத்தகைய உருவம் தமிழகத்தின் பெருங்கற்காலச் சின்னங்களிற் காணப்படுவதால் விநாயக வழிபாடு கூடப் பூத வழிபாட்டிலிருந்தே தோன்றியிருக்கலாம் எனக் கருதத் தூண்டுகின்றது. இத்தகைய கருத்தைச் சிலப்பதிகாரத்தில் பூத வழிபாடு பற்றி வரும் குறிப்புக்கள் உறுதி செய்கின்றன.

ஈழத்தில் நிலவிய யக்ஷ வழிபாட்டின் ஓரம்சம் இதுவாகும். இதனால் பௌத்தம் வருமுன்பே தமிழகத்தைப் போல் இவ்வழிபாடு இங்கு நிலைத்திருந்ததென்பதும் பின்னர் பௌத்த வழிபாட்டில் இது இடம்பெற்றிருந்ததென்பதைப் பௌத்த அழிபாடுகளில் காணப்படும் யக்ஷ வழிபாட்டு எச்சங்களும் மிகிந்தலையிற் காணப்படும் கணங்களின் சிற்பங்களும் எடுத்துக்காட்டுகின்றன. இன்றுவரை பௌத்தர்கள் மத்தியில் கணபதி வழிபாடு செல்வாக்குற்றிருப்பது நோக்கற்பாலது.

பௌத்த மன்னர்களால் வெளியிடப்பட்ட நாணயங்களில் எருது, யானை, குதிரை, சூரியன், பிறை, புறா, சுவஸ்திகா, மயில், மீன், மரம் முதலியன கண்டெடுக்கப்பட்டுள்ளன. இச் சுவஸ்திகா சின்னம் பிள்ளையார் வழிபாட்டையே வெளிப்படுத்தி நிற்கின்றது.

கம்பளை இராச்சியத்தில் அமைக்கப்பட்ட இலங்காதிலக விகாரையில் பௌத்த கடவுளரோடு இந்துக் கடவுளருக்கும் சிலைகள் அமைக்கப்பட்டிருந்தமையை இலங்கா திலகக் கல்வெட்டு விரித்துரைக்கின்றது. இதில் மைத்திலி, லேகேஸ்வர, நாத, சுயாம, சந்து சிற்ற, சக்ர, பிரமா, விஷ்ணு, மகேஸ்வர, எனும் தெய்வங்களும் அவர்களுடைய தேவியரும் மற்றும் உப்புலவன்,சுமண, விபிஷ ணன், கணபதி, ஸ்கந்த ஆகியோரும் குறிக்கப்பட்டுள்ளனர். பின்னர் கூறப்பட்டுள்ள ஐவருக்கும் சிறுசிறு மாடங்கள் இலங்காதிலக விகாரையின் சுற்றுப் பிரகாரத்தில் உண்டு. லங்காதிலக, கடலாதெனியா போன்ற பிரசித்திபெற்ற பௌத்த ஆலயங்கள் முதலாகக் கிடைக்கும் கணேச விக்கிரகங்களும், லங்காதிலக செப்பேடு, லங்காதிலக கல்வெட்டு ஆகியவற்றில் இங்குள்ள கணேசசிலைகள் பற்றி வரும் குறிப்புக்களும் சந்தேஸ இலக்கியச் செய்திகளும் பௌத்தத்தில் விநாயக வழிபாடு பெற்ற சிறப்பினை எடுத்தியம்புகின்றன.

கி.பி. மூன்றாம் நூற்றாண்டளவில் இலங்கையில் பௌத்தர் மத்தியில் கணபதிக்கு இருந்த செல்வாக்கினை மிகிந்தலையில் உள்ள புடைப்புச் சிற்பங்கள் காட்டுவதாக அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்கு முன்னர் கிடைப்பனவற்றுள் மிகிந்தலை சைத்தியத்தின் "வாகல்கட" எனும் வாசற்புறத் தூணில் இடம்பெறும் பிள்ளையார் (கணேசர்) சிற்பம் குறிப்பிடத்தக்கது. மிகிந்தலைக்கு அண்மையில் உள்ள கண்ட தேசிய ஸ்தூபியினைச் சேர்ந்த சிற்பங்களிலே யானை முகம் உள்ள உருவம் உண்டு. துதிக்கை இடம்புரியாகவே உள்ளது. இது வக்கிரதுண்டர் உருவமாக இருக்கலாம் என்று கூறப்படுகின்றது. 1938 இல் அநுராதபுரத்திலுள்ள அரசமரத்தின் முன் கணேசர் சிலை ஒன்று இருந்தது என்றும் அதற்கு பௌத்தர்கள் வணக்கம் செலுத்தி வந்ததாகவும் அறியப்படுகின்றது.

கி.மு.3ஆம், 2ஆம் நூற்றாண்டிற்குரிய ஈழத்தின் மிகப் பழைய கல்வெட்டு ஒன்றில் கணபதி பற்றிய குறிப்பு உண்டு. இக் கல்வெட்டு அனுராதபுர மாவட்டத்திலுள்ள வனசிம்ஹ விகாரையில் உள்ளது. இதில் "கணலை வெணௌஸக்ஸ என்ற குறிப்பு உண்டு. இதனை மொழி பெயர்த்த பரணவிதான "ஸ கஸ" என்றால் தானாக வழங்கப்பட்ட குகை என்று அதற்கு விளக்கம் அளித்தார். கணங்களின்

வழிபாட்டின் வழிவந்த கணபதியே மேற்கூறிய கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கலாம் என்பதனை மிகிந்தலையில் உள்ள கண்டக சேத்தியத்தில் உள்ள கணபதியின் சிற்பம் குறிக்கின்றது. ஈழத்தின் பழைய தாது கோபுரங்களில் ஒன்றான கண்டக சேத்தியத்தின் அலங்காரப் பொருளாக விளங்கும் கணபதி சிற்பம் கி.மு.1ஆம், 2ஆம் நூற்றாண்டிற்குரியது என பரணவிதான கூறுகின்றார்.

கும்பகோணம் நாகேசுவர சுவாமி திருமஞ்சன வீதியில் உள்ள ஒரு விநாயகர் ஆலயத்தில் பகவரிஷி எனும் பெயருள்ள ஒரு புத்தர் உருவம் உண்டு. பகவான் என்பது புத்தர் பெயர்களில் ஒன்று. புத்தருக்கு விநாயகன் என்னும் பெயர் உண்டென்று நிகண்டு நூல்கள் கூறுகின்றன. புத்தர் கோயில்கள் பல பிற்காலத்தில் விநாயகர் கோயில்களாக்கப்பட்டன. இங்குள்ள விநாயகர் கோயிலும் அதில் உள்ள புத்தர் உருவமும் விநாயக வழிபாடு பௌத்த சமயத்திற் பெற்ற செல்வாக்கினையே எடுத்துக்காட்டுகின்றன.

பல்லாவரம் எனும் ஊருக்கு அண்மையிலுள்ள கணிகிலுப்பை எனும் ஊரில் புத்தர் உருவச் சிலை ஒன்று ஏரிக்கரையில் உள்ளது. இவ்வுருவம் இவ் ஏரிக்கரைக்கு வருமுன்னர் அவ்வூர் விநாயகர் கோயிலுக்குப் பக்கத்தில் இருந்தது. விநாயகர் கோயிலுக்கு பக்கத்தில் இந்தப் புத்தர் உருவம் இருந்த கருங்கல் பீடம் அழியாமல் இருக்கிறது.

துடித லோகத்தில் எழுந்தருளியிருந்த அவலோகிதர் எனப்படும் போதி சத்துவர் புத்தராக மாயாதேவியின் திருவயிற்றில் வந்து அமர்ந்த போது வெள்ளையானைக் கன்று உருவமாக விநாயகர் வந்தார் என்று பௌத்த நூல்கள் கூறுகின்றன. பௌத்த மதச் செல்வாக்குக் குறைந்த பிற்காலத்தில் விநாயகர் எனும் பெயர் உடைய புத்த கோயில்கள் விநாயகர் ஆலயங்களாக மாற்றப்பட்டன.

தாய்லாந்தின் நகொன்சிறி தமறட் எனும் இடத்தில் பல பௌத்த கோயில்களுக்கு இடையே இந்துக் கோயில்கள் காணப்படுகின்றன. இக் கோயில்களில் ஒன்றில் நடராஜரோடு கூடிய உமையும் விநாயகரும் காணப்படுகின்றன.

இமயமலைச் சாரல்களிலும் திபெத்திலும் நேபாளத்திலும் பௌத்தப்பிள்ளையார் - பௌத்த கணபதி வழிபாடு நடைபெற்று வருகின்றது. அவற்றை அந்நாட்டு மக்கள் கணபதி இருதயம் எனக் குறிப்பர். புத்தர் பெருமான் தமது சீடரான ஆனந்தருக்குக் கணபதி மந்திரம் சொல்லிக் கொடுத்தார் என அவர்கள் கொள்கிறார்கள். இப்போதும் திபெத்திலும் பௌத்தர்கள் கணபதி இருதய மந்திரத்தைத் தொடங்குகையில் "நமோ பகவதே ஆரிய கணபதி இருதய" எனக் கூறுகின்றனர். இலங்கையிலும் பௌத்தர்கள் "கணபதி தெய்யோ" எனக் குறிப்பிடுவதனைக் காணலாம். கணபதியைப் போற்று வதற்காக புத்தரே "கணபதி ஹ்ருதயம்" எனும் துதியினை இயற்றியதாகக் கூறப்படுகின்றது.

புத்தர் தனது சீடனாகிய ஆனந்தனுக்கு ராஜகிருகத்தில் கணேசரின் ஹ்ருதய அனுபூதி மந்தி ரத்தை அருளியதாகக் கூறப்படுகின்றது. அம் மந்திரத்திற்குரிய வடிவம் பின்வருமாறு அமைகின்றது. முக்கண் பன்னிருகரங்கள் அவற்றில் பல்வேறு ஆயுதங்கள் நடனநிலை ஆகியவை ஆகும். அந்த மந்திரம் "நமோ பகவதே சூர்ய கணபதி ஹ்ருதயாய" என்று அமையும். இம்மந்திரம் நேபாளத்தில் வழக்கில் உள்ளது. மகாயான பௌத்தர்களிடையே நேபாளத்தில் கணேசர் சிங்கத்தில் அமர்ந்தவராக ஹேரம்ப கணபதியாக விளங்கும் வடிவம் சிறப்புடையதாகும்.

திபெத்து நாட்டில் காணப்படும் பிள்ளையார் உருவங்களிலே நடன நிலையிலுள்ள உருவங்கள் ஏறக்குறைய ஆறு ஏழு வகையிலான உள்ளன எனத் தெரிகிறது. திபெத்தியர்கள் கணேச சக்தியினை "கணேசாயனி" என அம்மை உருவத்திலும் வழிபடுவதுண்டு. மாகாலன் எனப்படும் திபெத்திய மாதேவருக்கு பூசை செய்வதன் முன் பிள்ளையார் பூசையே அங்கு இடம்பெறும். இந்தியாவிலுள்ள நடன கணபதி மஞ்சள்நிறமுள்ளவராகக் காணப்படினும் திபெத்திலுள்ள நடன கணபதி சிவப்பு நிறமுள்ளவராகக் காணப்படுகின்றார். அவர் திருக்கையில் சிந்தாமணி இருக்கின்றது. அவருக்குப் பச்சை நிறமான பெருச்சாளி உண்டு. திபெத்தில் 'சூரிய விநாயகர்' எனப்படும் 'சபாநாயக கணபதி' கோயிலும் உண்டு. அக்கோயிலில் பஞ்ச விநாயகர் நடுவில் வீற்றிருப்பவரே சூரிய விநாயகர் எனப்படுவார். பௌத்த மதத்தின் தருமபாலர் போல மண்டையோடு என்பு மாலை ஆகியவற்றுடன் மார்பில் சிந்தாமணி மாலையும் முழங்கால் வரை நீண்டதாகப் பெற்றிருப்பவர் அந்தச் சூரிய விநாயகர் எனப்படுவார். அவர் திருக்கைகளில் செபமாலையும் உடைந்த தந்தமும் கோடாரியும் கமண்டலமும் மோதகமும் உள்ளன. திபெத்திலும் மங்கோலியா நாட்டிலும் கீர்த்தி மகுடமும் திருக்கையில் திரிசூலமும் பெற்றவராகக் கணபதி காட்சி தருகின்றார்.

பௌத்தர்களின் கோட்பாட்டின்படி கணபதி யோக நிலையில் புத்தி தரும் தெய்வமாகவும் சித்தி தரும் தாதாவாகவும் காவற்தெய்வமாகவும் விளங்குகின்றார். சீனாவின் பௌத்த சன்னியாசிகள் தாந்திரிக அடிப்படையிலான செயல்முறைகளையும் மூல நூல்களையும் பரப்பிய போது அவற்றிலிருந்து சேர்க்கப்பட்ட பகுதிகளில் விநாயகருக்குரிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது. சீனாவிலும் யப்பானிலும் இருவகையான விநாயகர் அமைக்கப்படுகின்றனர். முதலாவது தனிவடிவமாகவும் இரண்டாவதில் இருவடிவமாகவும் அமைவது குறிப்பிடத்தக்கது. இந்தோனேசியாவில் பஞ்சமுக கணபதியாகவும் திபெத்தில் நிருத்திய கணபதியாகவும் விளங்கும் நிலை உள்ளது.

கி.பி. 9ஆம் நூற்றாண்டு வரை கணபதியைப் பற்றி யப்பானியருக்கு ஒன்றுமே தெரியாது. சீனத்துப் பழைய சுவடி ஒன்றினைப் படித்த பௌத்த பிக்குவான கோபோ என்பவர்தான் இவ்வணக் கத்தைப் புகுத்தியவர் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். சுக்கைசி என்னும் இடத்தில் அமைந் திருந்த காமதேரா எனும் கோயிலில் இருந்து மா வைரோக்கண சூத்திரங்களைப் படித்தே இப் பிக்கு கணபதியைப் பற்றி யப்பானியருக்கு உபதேசித்தார் எனத் தெரியவருகின்றது. விக்கினத்தைப் போக்கு பவரே கணபதி என்பதும் யப்பானியரது நம்பிக்கை ஆகும். பௌத்தமதத்தைக் காத்தவர் கணபதி என்கின்ற கதைகள் பல யப்பானிய மக்களிடையே வழக்கிலுள்ளன. யப்பானிய மொழியில் "சோடன்" விநாயக்கா, குவான்சன்கோ ஆகிய பெயர்கள் மட்டுமன்றி வச்சிரசின்ன வச்சிரபாக்கன, வச்சிரமுகா, காக்கு சென்சோ முதலிய பெயர்களும் கணபதியைக் குறிக்க வழங்கி வருகின்றன. அதிஷ்ட தேவதை எனக் கொண்டாடும் யப்பானியர் அவரைக் கொன்கிற்றின் எனப் போற்றுகின்றனர். இவர் ஷே ாதேன் ஷீ மந்தரா என்றும் அழைக்கப்படுகிறார். காகுஸென் சோ என அவர் மூன்று தலைகளுடன் காணப்படுகின்றார். அவரது ஒவ்வொரு முகத்திலும் மூன்று கண்கள் உண்டு. மலைமீது அமர்ந்த தோற்றத்தில் அவர் 'கஜேந்திரன்' என அழைக்கப்பட்டு வழிபடப்படுகிறார்.

யப்பானிய மன்னர்களின் அரண்மனையில் தொடர்ந்து விநாயக வழிபாடு முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. ஏராளமான மக்கள் இன்றும் தமக்குப் பல நன்மைகளை வேண்டி விநாயகரை வணங்குகின்றனர். விநாயகர் திசைகளைக் காக்கும் தெய்வமாக வழிபடப்படுகின்றார். சீனாவில்

உள்ள குடை வரை கோயில்களில் செதுக்கப்பட்ட கணேச சிற்பங்கள் துன் ஹுவாங் (Tun-Huang) என்ற இடத்தில் கிடைத்துள்ளன. அதே போன்று குங் -சியான் (Kung -H sein) என்ற இடத்தில் குகைக் கோயிலிலும் கணேச சிற்பம் உள்ளது.

நேபாளத்தில் பௌத்தர் கணபதியை 'சித்திதாதா' என அழைக்கின்றனர். மேலும் அவர்கள் எதிர்முக கணேசன் எனவும் யப்பானியர் வினாயக்ஷர் எனவும் பர்மா தேசத்தவர் மகாபிணி எனவும் கம்போஷய தேசத்தவர் மபிரஹ கணேஸ் எனவும் சீனர் குவான் ஙியாங் எனவும் வழிபடுகின்றனர்.

சமணக் காப்பியமான சிலப்பதிகாரத்தில் வெள்ளானைக் கோட்டம் எனக் குறிப்பிடப்பட்ட கோயில் விநாயகர் ஆலயம் எனக் கூறப்படுகின்றது. சமணர் விநாயகரை அருக நாயகர் எனவும் போற்றுகின்றனர்.

இவ்வகையில் ஷண்மதங்களுள் ஒன்றான காணாபத்திய நெறியானது வைதீக நெறியில் மட்டுமன்றி அவைதீக நெறிகளிலும் செல்வாக்குப் பெற்று இன்று வரை அந்நெறிகளில் போற்றப்பட்டு வருவதனைக் கண்கூடாகக் காணமுடிகின்றது.

**உசாத்துணை நூல்கள்**


1. சிற்றம்பலம், சி.க. "ஈழமும் இந்து மதமும் அனுராதபுர காலம்" சிந்தனை தொகுதி II இதழ் I யாழ்.பல்கலைக்கழக வெளியீடு, பங்குனி 1984

2. சிற்றம்பலம் சி.க. "ஈழமும் இந்து மதமும் பொலநறுவை அரசுக்கு பிற்பட்ட போர்த்துக்கேயர் வருகைக்கு முற்பட்ட காலம் (கி.பி. 1250-1505)"

   சிந்தனை தொகுதி II, இதழ் III யாழ். பல்கலைக்கழக வெளியீடு. கார்த்திகை 1984

3. குலரத்தினம் க.ச. "வழிபாட்டு முதன்மை," காரைநகர் மருதடி சிறீ சித்தி விநாயகர் ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேக விழா மலர்

4. கோபால கிருஷ்ணஐயர் ப., "காலந்தோறும் கணபதி வழிபாடு" ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம் (புங்குடுதீவு மேற்கு இறுப்பாட்டி பெரியபுலம்) கும்பாபிஷேக மலர் -2006



செல்வி சிவானதி செல்வநாயகம் B.A.(Hons)
மேலதிக மாவட்டப் பதிவாளர்,
பிரதேச செயலகம்,
கரவெட்டி.

விழா நாயகருடன் உறவினர்கள்



## உக்ரரத சாந்தி விழாவின் பொழுது...









ஸ்ரீவித்யா காந்தி சம்பிராப்தை
சேவே தந்தா வழாநநம்
தம்பத்யோ ஜெகதாம்பத்யோ
சிவயோ ரக்ஷ"பாயநம்

பொருள் :- உலகுக்கு நாயக நாயகி ஆக விளங்கும் சிவசக்தி பார்வையை சந்தோசப்படுத்தும் கல்வி அழகாய் விளங்கும் விநாயகரை நான் நமஸ்கரிக்கிறேன்.

वागर्थाविव संपृक्तौ वागर्थप्रतिपत्तये।
जगतः पितरौ वन्दे पार्वतीपरमेश्वरौ॥

வாக[3]ர்தா[2]விவ ஸம்ப்ருக்தௌ வாக[3]ர்த[2]ப்ரதிபத்தயே|
ஜக[3]த: பிதரௌ வந்தே[3] பார்வதீபரமேஸ்[2]வரௌ||

பொருள் :- சொல்லும் பொருளும் என இணைந்த தொல்லுலகின் தாய் தந்தையரை, பார்வதி பரமேஸ்வரரை, சொல்லையும் பொருளையும் அறிந்திடவேண்டிப் பணிகிறேன்.

ANDRA Printers, Jaffna - 021-221 7279